# இலக்கிய ஏந்தல்கள்



டாக்டர். சி. பாலசுப்பிரமணியன்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✸✸✸

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✸✸✸

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

முதற் பதிப்பு : மே, 1992

உரிமை பதிவு

விலை : ரூ. 40-00

விற்பனை உரிமை :
பாரி நிலையம்,
184, பிரகாசம் சாலை,
சென்னை-600 108.

மாருதி பிரஸ்,
173, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை - 600 014.

# முன்னுரை

நாடு நலம்பெறத் தாம் வாழ்ந்த விழுமிய—எடுத்துக்காட்டான வாழ்வால் தொண்டாற்றிய தூயோர் பலராவர். தமிழ்மொழி வாழவும், தமிழினம் செழிக்கவும், தமிழ்நாடு தழைக்கவும் பாடுபட்ட பெருந்தகையினர் பலராவர். அன்னாருடைய பீடுநிறைந்த பெருவாழ்வினையும், இலக்கியத் தொண்டினையும் அறிந்துகொள்வதனால் தமிழர்க்கு நலம் விளைதல் உறுதி. கொள்கைப் பற்றும், தொண்டுள்ளமும், பண்பாடு போற்றும் வாழ்வும் கொண்டு இலக்கியம் தழைக்க இனிய வாழ்வினை மேற்கொண்ட இலக்கிய ஏந்தல்கள் சிலரின் பீடுசான்ற பெருவாழ்வினை உற்று நோக்கித் தமிழர் பெறவேண்டிய உணர்வுகள் பல. எனவே தமிழர் வாழ்வு தழைத்திடத் தன்னிகரற்ற தொண்டு ஆற்றிய தூயோர் சிலரின்—இலக்கிய ஏந்தல்கள் சிலரின் வாழ்க்கையினையும், தொண்டினையும் காணும் போக்கில் இந்நூல் அமைந்துள்ளது. நன்றியுள்ள தமிழினம் இலக்கிய ஏந்தல்கள் சிலரைப் பற்றி இந்நூலால் அறிந்து பயன் கொள்வதாகுக.

பா. சி.

# இலக்கியத்தின் பணி

## முன்னுரை

இலக்கியம் வாழ்க்கையின், சமூகத்தின் ஒரு விளக்கமேயாகும். இலக்கியம் சமூகத்திலிருந்து, சமூகத்திற்காக, சமூகத்தின் அங்கமாகிய தனி மனிதர்களால் படைக்கப்படுவதுதான். நாட்டுக்கு நாடு மொழிகள் வேறுபட்டாலும், அவ்வவ் மொழிகளில் படைக்கப்படும் இலக்கியங்கள், அந்த அந்த நாட்டவரின் வாழ்க்கையைச் சித்திரித்து, அவர்களின் வாழ்க்கைச் செம்மைக்கே பாடுபடுகிறது. அழகுணர்ச்சி மிகுந்த ஆசிரியன் ஒருவனது உள்ளத்தில் உணர்ச்சியாயும், கருத்தாயும் அரும்பி, அவன் அறிவில் வளர்ந்து, பலர் சுவைத்து மகிழ, வல்லதொரு மொழியுருவம் பெற்றுத் தோன்றுகிற இவ்விலக்கியம் ஆற்றும் பணிகளை இனி விரிவாகக் காண்போம்.

## இலக்கியத்தின் வளர்ச்சி

மனிதன் புற—அக அனுபவங்களைக் கற்பனையின் துணையோடு, மொழிகளின் போர்வை போர்த்து, இலக்கியமாக்கினான். மனிதனின் சிந்தனை செம்மைப் பட்ட காலமே, இலக்கியத்தின் தோற்ற காலமாகும். அவ்வாறு அவன் படைத்த இலக்கியம் அவனுடைய பண்புகள், சமூக, சமய, நாகரிக, நிலைகள், வாழ்க்கை ஆகிய வற்றையொட்டி எழுந்தது. அவனுடைய வாழ்வும் பண்புகளும் அறிவாற்றல்களும் வளம்பெறப் பெற, அவனது இலக்கியமும் வளம் பெறலாயிற்று. பண்டை மனிதன்

இயற்கை நிகழ்ச்சிகளின்பால், தான் கொண்டிருந்த வியப்பையும், அச்சத்தையும் மொழி மூலம் வெளியிட்டான். பல தெய்வங்களை வணங்கி வந்த அவன் ஒரே கடவுள் என்ற கொள்கையைத் தழுவி, அறவுணர்ச்சி, அழகுணர்ச்சி, இறை அன்பு, ஆகியவற்றில் வளர்ச்சி யடைந்தபோது, அவனது இலக்கியமும் அந்த வளர்ச்சியை வெளிப்படுத்தியது காதல், போர், வீரதீரச் செயல்கள் ஆகியவற்றையே பாடி வந்தவன் மெல்ல மெல்ல ஏனைய சுவைகள்கொண்ட பலவகை இலக்கியங்களைப் படைத்துக் கொள்ளலானான். கரடுமுருடாயிருந்த மொழி பலவகை களிலும் இனிமையும், நலங்கள் பலவும், ஆழ்ந்த கருத்து களை வெளியிடும் ஆற்றலும் பெற்று விளங்கலாயிற்று, இன்று இலக்கியம், கவிதை, காவியம், நாடகம், புதினம், சிறுகதை முதலிய பல சுவைகளை உடையதாயும், வாழ்க்கையின் பல துறைகளையும் தழுவி நிற்பதாயும், நிகழ்ந்த உண்மை மட்டுமன்றிக் கற்பனையுண்மையையும் கொண்டதாயும் விரிந்து விளங்குகின்றது. இன்றைய இலக்கியம் இன்றைய மனிதனையும் மனித வாழ்க்கையை யும் இனிது எடுத்துக்காட்டுகிறது.

## இலக்கியத்தின் பணி

நம் பண்டைப் பெரியோர்கள் மனிதன் அடைய வேண்டிய உறுதிப் பொருள்களை 'அறம், பொருள், இன்பம், வீடு' என வகுத்து, அந்நான்கையும் எய்துவதற்கு இலக்கியம் வழிகாட்ட வேண்டும் என்று கூறியுள்ளனர். இவ்வுலக வாழ்வில் எங்கும் ஊடுருவியுள்ளனவும், ஆயினும் இலைமறை காய் போல நம் கண்களுக்கு எளிதில் புலனாகாதனவுமான அழகிய உண்மைகள் மிகப் பல, இலக்கியம் அவற்றைக் கண்டுபிடித்து நமக்குப் புலப்படுத்து கின்றது அது நம் மனத்தைப் பண்படுத்தித் தூய

சிந்தனைகளை வளர்க்கின்றது; நம் உள்ளத்தில் குமுறும் உணர்ச்சிகளையும் வெறிகளையும் வெளிப்படுத்தி, அவற்றின் நன்மை தீமைகளை அறிவுறுத்துகின்றது. அவாவறுத்தல், புலனடக்கம், தான் எனும் அகந்தையை ஒழித்தல் ஆகியவற்றை மறைமுகமாக எடுத்துக் கூறி, இறுதியான உறுதிப் பொருளான வீட்டை எய்தவும் அது உதவுகின்றது.

வீடு என்று ஒன்று, முன்னோர் அறிவுறுத்திச் சென்ற ஒன்று. அதில் கருத்து வேறுபாடுகள் இன்று நிறைய இருப்பினும், வையத்து வாழும் நல்வாழ்விற்கே இன்று இலக்கியம் ஆற்றும் பணி, பெரிது என்பதை யாரும் மறுக்க இயலாது. கலைஞன், அநீதிகளை எடுத்துரைப்பதும், அவற்றை ஒழிக்க வேண்டுவதும், தம் கடமை இல்லை என எண்ணியிருந்த காலமெல்லாம் இன்று மலையேறி, செல்வர்களின் பொழுதுபோக்குக்காக இருந்து வந்த இலக்கியம், இப்போது பெரும்பான்மையான மக்களின் வாழ்விற்குரியதாகி விட்டது இன்று எழுத்தாளர்களில் பலர் வாழ்க்கைப் போராட்டத்தில் நேராக ஈடுபட்டும், வாழ்க்கைச் சிக்கல்களைத் தம் நூல்களில் சித்தரித்துக் காட்டியும், தொண்டுகள் செய்து வருகின்றனர். குழந்தைகள் மணம் நீக்கவும், விதவைகள் மணம் ஊக்கவும், சாதி நோயைக் களையவும், சமய ஒருமை ஓங்கவும், எல்லார்க்கும் கல்வி, எல்லார்க்கும் உணவு, எல்லார்க்கும் எல்லாம் எனும் பொதுவுடைமைக் கொள்கை பூக்கவும் இன்றைய இலக்கியங்கள் ஆற்றி வரும் பணிகள், உள்ளங்கை நெல்லிக்கனி அல்லவா?

## தமிழிலக்கியத்தின் பணி

கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்திலேயே தோன்றிய தொன்மை இலக்கியம் தமிழிலக்கியம்

என்பர். நம் பண்டைத் தமிழ் இலக்கியங்கள் நம் முன்னோர்களின் வாழ்க்கையினையும் பண்புகளையும் சமய சமூக அரசியல் நிலைமைகளையும் பளிங்கு போலக் காட்டுகின்றன. காதலும் வீரமும் கொடையும் பண்டைத் தமிழரின் தனிச் சிறப்புகள். அகநானூறு போன்ற அகத்துறை நூல்களும், புறநானூறு போன்ற புறத்துறை நூல்களும் அச்சிறப்புகளை நன்கு வெளிப்படுத்துகின்றன. பின்னர் அறவுணர்ச்சியும் சமய உணர்ச்சியும் மேலோங்கியபோது, திருக்குறள், நாலடியார் போன்ற அறநூல்களும், உறுதிப் பொருள்கள் நான்கினையும் கதையின் மூலம் எடுத்துரைத்த பெரும், சிறு காப்பியங்களும் தேவாரம், திருவாசகம், திவ்வியப் பிரபந்தம் முதலான பக்தி நூல்களும் வெளிவந்தன. இடைக்காலத்தில் தோன்றிய கம்பராமாயணம் ஒப்புயர்வற்று விளங்கியது. பின்னர் வாழ்க்கையில் ஒருவகைத் தேக்கம் ஏற்படவே, படைப்பாற்றல் குன்றித் தல புராணங்களும் ஏனைய புராணங்களும் புற்றீசல் போல் கிளம்பின. இறுதியில் செல்வர்களை மகிழ்வு செய்வதற்காகச் சிறுபிரபந்தங்களும், பாமர மக்களை மகிழ்வுறுத்த பள்ளு, குறவஞ்சி நூல்களும் வெளிவந்தன. பிறகு, ஆங்கிலேயர் தொடர்பினாலும், மேலைநாட்டிலக்கியங்களின் செல்வாக்கினாலும் வாழ்க்கையின் பல துறைகளிலும் கிளர்ச்சியும் கொந்தளிப்பும் ஏற்பட்டன. பாரதியார் தோன்றிப் புரட்சி செய்தார். பெண்ணடிமை தீரப் பெருந்தொண்டாற்றிய பெருந்தகை அவர் அன்றோ! தமிழ் இலக்கியம் இன்று பாரதியார், அவர் வழிவந்த பாரதிதாசன் முதலானோரைப் பின்பற்றிப் பல துறைகளிலும் முன்னேறி வருகின்றது. இன்றைய இலக்கியம் புது உலகிற்கும், புது வாழ்விற்கும் வழிகாட்டியாய் நிற்கின்றது. அது இன்று ஏளிய மக்களின் வாழ்க்கையையும் படம் பிடித்துக் காட்டு

கின்றது; சமூக அநீதிகளையும், கொடுமைகளையும் அம்பலப்படுத்திச் சமதருமத்தைப் போதிக்கின்றது. தமிழ் இலக்கியமும், அவற்றின் படைப்பாளிகளும் இவ்வகையில் இன்று பெருந்தொண்டாற்றி வருகின்றனர்.

## இலக்கியத்தின் பணி பற்றிய அறிஞர் கருத்துகள்

"பூங்காவினைப் போல் அழகும் கவர்ச்சியும் தருவது மட்டுமின்றிக் காய்கறித் தோட்டங்களைப் போல் நல்ல பயனும் தருவதே இலக்கியம்" என்று கூறுகிறார் வில்லியம் டெம்புள் என்ற அறிஞர். சமூகத்திற்குப் பயன்படாத இலக்கியம் வெறும் ஒலிக்கூட்டமே என்று கருதும் ஐ. ஏ. ரிச்சர்ட்ஸ் அவர்கள், "பண்பாடு, சமயம், ஆழ்ந்த கருத்துக்களைத் தருதல், வேகமான உணர்ச்சிகளையும் பலனையும் அடங்கச் செய்தல், வாழ்க்கையின் நன்மைகளை மிகுதிப்படுத்தல் இவை எல்லாம் இலக்கியத்தின் பணிகள்" என்று கூறுகிறார். ஆபர்கிராம்பி என்னும் அறிஞரும் அவ்வாறே, "இலக்கியக் கலையைக் கற்பனையின் துணையோடு ஆக்கும் உலகின் தலையாய குறிக்கோள், நமது வாழ்க்கையில் என்றும் கண்டு, கடைப்பிடிக்க வேண்டிய உயர்ந்த குறிக்கோளை உணர்தற்கே ஆகும்" என இலக்கியத்தின் தலையாய பணியைக் கூறியுள்ளார். நம் இருபதாம் நூற்றாண்டு இணையற்ற கவிஞர் பாரதியாரும்,

"வெள்ளத்தின் பெருக்கைப்போல் கலைப்பெருக்கும்
கவிபெருக்கும் மேவுமாயின்
பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெலாம்
விழிபெற்றுப் பதவி கொள்வார்"

என்று பாடி, இலக்கியத்தின் பணி, பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரை விழிபெறச் செய்வதே என்பதை

உணர்த்தியுள்ளார். சமூகத்திற்குப் பயன்படாத எந்த இலக்கியமும், சமூகத்தில் நிலைபெறாது என்பதையே மேற்காட்டிய அறிஞர்களும், பலரும் வற்புறுத்தி வருகின்றனர். "கலை வாழ்க்கைக்காகவே'' எனும் கோட்பாட்டினைக் கொண்ட இவர்களேயல்லாமல் "கலை கலைக்காகவே'' எனும் கோட்பாட்டினைக் கொண்டிருக்கும் சிலரும் உள்ளனர். அவர்கள் இலக்கியத்தில் பிரச்சாரம் இடம்பெறக் கூடாது என்று வற்புறுத்தியுள்ளனர். அவ்வாறு கூறியவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் ஏ. சி. பிராட்லே எனும் அறிஞரும், வால்டர் ஹொரேசியோ எனும் அறிஞரும் ஆவார்கள். கலைக்கருவியைச் சமயப் பிரச்சாரங்களுக்கும், அரசியல் பிரச்சாரங்களுக்கும் கலைஞர்கள் பயன்படுத்தி, இலக்கியங்களை வெறும் கொள்கைகளைத் தாங்கி நிற்கும் வண்டிகளாக மாற்றியதையே, அவர்கள் கண்டித்தார்கள் எனலாம். கருத்துகள் இன்றி இலக்கியமே இல்லை. இலக்கியத்தில் இடம்பெறும் கருத்துகளும், கொள்கைகளும் எந்த அளவு இடம்பெற்றுள்ளன என்பதையே ஆய்தல் வேண்டும். கருத்துகள், கலையழகுடன் கூறப்படுதல் வேண்டும். மூன்று கருத்துகளை வலியுறுத்த எழுந்த சிலப்பதிகாரம், அதன் கலையழகால் முத்தமிழ்க் காப்பியமாய்த் திகழ்கிறது அல்லவா! ஆனால் மணிமேகலையோ புத்த மதப் பிரச்சாரத்தை மிகுதியாகக் கொண்டு, அதன் இலக்கியத் தன்மையை இழந்துவிடுகிறது. கலையிலே கருத்துகளைக் கதைகளாய் இழைத்து, படிப்பவரை அவர்களையும் அறியாது, அழைத்துச் சென்று அக்கருத்துகளில் திளைக்கச் செய்யும் கலைஞரே சிறந்தவராகிறார். உணவில் உப்பைப் போல, இலக்கியத்தில் கருத்துகளை இருப்பது தெரியாமல் இட்டுச் சமுதாயத்தை நல்வழிப் படுத்த வேண்டும். ஹட்சன் எனும் அறிஞர் கூறுமாறு

போல, "கதை அமைப்பினிடையே நீதிகள் இழைந்திருக்க வேண்டும். தத்துவக் கருத்துகள் கரைந்திருக்க வேண்டும். இலக்கியப் படைப்பாளி, ஒரு கணமேனும் பிரச்சாரம் செய்பவராகவோ, உபதேசக் குருவாகவோ மாறிவிடாமல், படைப்பாளியாகவே இருந்து, சமூகத்தைப் பண்படுத்தும் பணியைச் செய்ய வேண்டும்''

## முடிவுரை

இதுகாறும் கூறியவற்றால், இலக்கியம் இன்பம் ஊட்டலே அன்றி இன்னும் பலவற்றைச் செய்கிறது என்பதும், அவற்றுள்ளும் மனித வாழ்வினைச் செம்மைப் படுத்தும், ஆசிரியத் தொழிலையும் செய்கிறது என்பதும் தெளிவாகிறது. ஆகவே, அத்தகு ஆசிரியத் தொழிலைச் செய்யும் படைப்பாளி, படைப்பாளியாக நின்று சமூகத் தைப் பண்படுத்த முயல வேண்டுமே தவிரப் பிரச்சார கனாய் மாறி, நீதிகளைக் கூறக்கூடாது இலை மறைவு காயாக இலக்கியத்தில் மறைந்துள்ள கருத்துகளுக்குப் புதிய ஆக்க உலகினை ஆக்கும் ஆற்றல், இயல்பாகவே உள்ளதெனலாம்.

# கலை இலக்கியம்

## கலை

கலை என்னும் சொல் முதலில் செயல் திறமையைக் காட்டுவதும், அழகு ஏற்படும் வகையில் செய்வதும், சுவை பயக்க வல்லதும் பற்பல செயல்களுக்கு உதவுவதுமான அறிவையும் ஆற்றலையும் குறித்தது. கலையில் செயல், பயன், திறமை, அழகு, சுவை என்னும் கூறுகள் உள்ளன. பயன்கூறு அதிகப்படுமானால் அது பயன்கலை என்றும், அழகுக்கூறு அதிகமானால் அஃது அழகுக்கலை என்றும் வழங்கப்படும். இக் கலைகளின் வாயிலாகவே நாகரிகமும் பண்பாடும் தோன்றி வளர்ந்தன எனக் கூறலாம்.

சொற்களின் பொருள் கால அளவில் விரிவதும் சுருங்குவதும் மேம்படுவதும், தாழ்வதும் மொழிஇயல்பு இந் நெறிப்படி கலை என்னும் சொல்லும் ஒருவகைப் பொருட் பெருக்கையும் வேறுபாடுகளையும் பெற்றிருக்கின்றது. கலை என்னும் சொல்லுக்கு முதலில்வழங்கியபொருள்கள் மறந்து போய் சாத்திரம், கணிதம் முதலானவற்றைக் குறிக்கும் விரிவு ஏற்பட்டது. கலைச்சொற்கள் என்னும்போது கலை என்னும் சொல் இன்னும் அதிகமான விரிவை அடைகின்றது.

கலைகள் அறுபத்து நான்கு என்று பொதுவாகக் கூறப்படுகின்றது. 'ஆய கலைகள் அறுபத்துநான்கு' என்பது உலக வழக்கு.

கலை கருத்தின் உறைவிடம்; அழகின் பிறப்பிடம், இன்பம் இதன் பயன். இரவீந்தரநாத்தாகூர் கூறியுள்ள

படி, கலையாவது தன்னலமும் பழிபாவங்களும் நிறைந்த உலகை விட்டு நம்மை அப்பால் அழைத்துச் செல்வது. இக்கூற்று இலக்கியக் கலைக்கு முற்றிலும் பொருந்துவதாகும். எவ்வாறெனில் இந்தியக் கலை குறிப்பாக இலக்கியக்கலை அளிக்கும் அழகு வெறும் செயற்கை அழகன்று; ஆழ்ந்த, உயர்ந்த கருத்துகள் மேவியது. இக் கலை மனித இனத்தின் வழிமுறை அனுபவத்தைக் காட்டுவதோடு வாழ்வின் நோக்கத்தையும் நிறைவேற்றுகின்றது.

கவிஞன் தான் படைக்கும் இலக்கியத்தைப் பற்றி, அதன் பொருள், உத்தி, அமைப்பு முதலியவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். அவனுடைய சிந்தனை சிதறி விட்டால் அவன் படைக்கும் கலையும் குறைவுபடும். கலைஞனும் கலையும் ஒன்றவேண்டும்.

இந்நோக்கோடு பார்க்கின் கலையாக்கத்திற்கு இன்றியமையாத சில நிபந்தனைகள் உள்ளன என்பது புலனாகும். முதலாவதாகக் கலைஞன் இயற்கை அமைப்புகளை நன்கு கவனித்தறிய வேண்டும்; இரண்டாவதாகப் பொருள்களின் பல்வேறு இயல்புகளையும் அவைகளுக்கு உள்ள பொருத்தத்தையும் நன்கு அறியவேண்டும். மூன்றாவதாகப் பொருளை அதன் சூழலைவிட்டுத் தனித்து நோக்கி, அப்போது தன் மனத்தில் தோன்றும் மாறுதலைக் கவனிக்கவேண்டும். நான்காவதாக முன்னர்க் கவனித்தவைகள் வேண்டும்போது தாமாகவே நினைவுக்கு வரும்படி நினைவாற்றலைப் பெருக்கியிருக்கவேண்டும். ஐந்தாவதாக, அவன் தன் மனக்காட்சியைக் கலையின் மொழியாகிய கோடுகளாலும் உருவ அமைப்புகளாலும் காட்டப் பழகியிருக்கவேண்டும். ஆறாவதாக, அவன் தன் ஆக்கவேலையில் தன் மகிழ்ச்சியையும் அருமையையும்

நிறைவையும் கலந்து, தன் மனக்காட்சிக்குச் சிறிது சிறிதாகப் புறவடிவம் அளிப்பதற்கு ஏதுவாக ஆழ்ந்த சிந்தனையில் மூழ்கித் தியான நிலையில் தனக்குரிய பொருளை அகக்கண்ணால் காணப்பழகியிருக்கவேண்டும். கடைசியாகக் கலைஞன் கலையின் பொருளையும் வாழ்க்கையின் ஒழுகலாற்றையும் நன்கு அறிந்து தெளிந்திருக்க வேண்டும். இதையெல்லாவற்றையும் ஒருங்கே பெற்றிருந்தால்தான் கலைஞன் தன் கலையில் வெற்றி பெறமுடியும் என்பார். இக்கூற்று இலக்கியக் கலைக்கு மிகவும் பொருத்தம் உடையதாகும்.

## சிறப்பு

சிலர் கலைகளுள் இசை மிகச் சிறந்தது என்பர்; இலக்கியமே மிகச் சிறந்தது என்பர் சிலர். அறிவின் கலப்பு இல்லாத காரணத்தாலும் கேட்டார் யாரையும் பிணிக்கும் தன்மையாலும் இசையே சிறந்ததென்பர். மனிதன் படைத்துக்கொண்ட நாகரிகக் கருவிகளுள் மிகச்சிறந்தது மொழி. மனித நடவடிக்கைகள் அனைத்திற்கும் அடிப்படை மொழியே ஆகும். அத்தகைய மொழியை ஊடு பொருளாகக்கொண்டு அமைவது இலக்கியம். ஆகையால் அது கலைகளில் சிறந்தது என்று கூறலாம்.

உலக வரலாற்றை மாற்றியமைப்பதில் மற்ற எல்லாவற்றையும் விட இலக்கியம் ஆற்றல் மிக்கது எனலாம். ஏனெனில் அறிவுத்துறைகள் மனிதரின் மூளைக்கு மட்டும் எட்டி இயங்குவன. ஆனால் உணர்ச்சிக்கு வடிவங்களான இலக்கியத்துறைகள் மூளையை மட்டும் அல்லாமல் மனத்தால் வாழும்வாழ்வு முழுவதையுமே இயக்குவன. மனிதன் அறிவால் அறிந்து வாழும் பகுதியைவிட, விரும்பியும் வெறுத்தும், நம்பியும் சேர்ந்தும், போற்றியும் தூற்றியும்

வாழும் பகுதியே மிகுதியாகும். ஒரு சமுதாயத்தின் விருப்பு வெறுப்பு, நம்பிக்கை முதலியவற்றை வளர்த்துப் பண்படுத்துவதும் அந்தச் சமுதாயத்தின் இலக்கியமே. ஆகையால் அதுவே மனிதவாழ்வைப் பெரிதும் மாற்றியமைப்பது என்பர். ஆகவே சட்டம், அறிவியல் முதலியவற்றை விடப் பெரிய கருவியாய்ச் சமுதாயத்தை உருவாக்குவது இலக்கியம் எனலாம். அதனால் பாட்டு, காவியம், நாடகம் கதை முதலியன இயற்றித்தரும் புலவர்கள் சட்டம் இயற்றும் ஆட்சியாளரைவிட ஆற்றல் மிக்கவர்கள்.

## அழகு நிலைபெறல்

நிலையில்லாமல் மாறும் அழகின்பத்தை நிலைபெறச் செய்து வேண்டும்போது கிடைக்கச் செய்வது கலை இலக்கியத்தின் பயன் ஆகும். 'மன்னா உலகம்' என்றும், நிலையாமையே உலகின் இயற்கை என்றும் சான்றோர் உரைப்பர். யாக்கை, இளமை, செல்வம் முதலியவற்றின் நிலையாமையைப் புலவர் சிலர் உணர்ந்து உணர்ந்து பாடியிருக்கின்றனர். அவை மட்டுமல்லாமல் அழகு உணர்ச்சி என்பதும் நிலையில்லாததே. மேற்கு வானில் மாலையில் காணப்படும் அழகு நொடிக்கு நொடி மாறிக்கொண்டே இருக்கின்றது. உள்ளம் வியந்து போற்றும் அழகுமிக்க சிறந்த காட்சியை வானத்தில் கண்டு மகிழ்கின்றோம். சிறிது நேரத்திற்குப் பிறகு மீண்டும் அதைக்கண்டு மகிழ விரும்பினால் அந்த அழகு புலன்களுக்கு எட்டாத ஒன்றாக ஆகிவிடுகின்றது. நிலையில்லாமல் மாறிப்போகும் அந்த அழகையும் உணர்ச்சியையும் மீண்டும் பெற்று மகிழ விரும்பினால் அதற்காகக் கலையின் உதவியை நாட வேண்டியிருக்கின்றது. அதற்கு உற்ற கருவியாய் இருந்து உதவுவது கற்பனையே ஆகும்.

ஓரிடத்தில் கண்ட அழகையும் பெற்ற உணர்ச்சியையும் மற்றோரிடத்தில் பெற விரும்பினால் அந்த அழகையும் உணர்ச்சியையும் கற்பனை வடிவத்தில் படைத்துக் காக்க வேண்டும். மறைந்து போகும் மாலைக் கதிரவனின் அழகை ஓவியம் மறையாமல் காத்துத் தருகின்றது. வளர்ந்து மாறும் குழந்தையின் அழகைச் சிறபக் கலை என்றும் உள்ளதாக்கிக் காட்டுகின்றது. இலக்கியம் சொற்களால் விளக்கிக் காட்டுகின்றது.

## கலையும் இலக்கியமும்

கலைகளுள் ஒன்று இலக்கியம் என்பதையும், கலை, கலைஞன், இலக்கியம் என்பது குறித்தும் மேலே கண்டோம். இனி மற்றக் கலைகளுக்கும் இலக்கியத்துக்கும் உள்ள தொடர்பு பற்றியும், மற்றக் கலைகளுக்கு இலக்கியம் எவ்வாறு துணையாக அமைகின்றது என்பது குறித்தும் இனிக் காணலாம். மற்றக் கலைகளுக்குள் உள்ள உறவைவிட, மற்றக் கலைகளுக்கும் இலக்கியத்துக்கும் உற்ற உறவும் தொடர்பும் நெருக்கமானதும் மிகப்பழமையானதும் பிரிக்கமுடியாததும் ஆகும். இலக்கியம் தோன்றியபோது ஆடலுடனும் இசையுடனும் தோன்றி, பின் காலப்போக்கில் ஆடலைவிட்டு, ஓசைநயத்துடன் இன்றும் இயங்கி வருகின்றது. நாட்டியக்கலை இசை, இலக்கியம் ஆகியவற்றைப் பெரிதும் சார்ந்தே உள்ளது.

## கலை இலக்கியம்

இலக்கியத்தை நேர்வு இலக்கியம், சார்பு இலக்கியம் என்னும் இருகோணங்களில் பகுத்தறியலாம். இந்நோக்கம் பழங்காலம் முதலே தமிழகத்தில் நிலவி வந்ததாகும். சிலப்பதிகாரம் பண்டைத் தமிழ்நாட்டின் கலைநிலையை விரிவாக விளக்குகின்றது.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு
—திருக்குறள் : 392.

என்னும் குறட்பா உரையில் "எண்ணென்பது கணிதம்; அது கரவியும் செய்கையுமென இருவகைப்படும்" என்று பரிமேலழகர் உரை எழுதியிருப்பதிலிருந்து சார்புத் தன்மை பற்றித் தமிழர்கள் அறிந்திருந்தனர் என்பதை அறியலாம். இந் நிலையை இலக்கியத்துக்கும் கொண்டு பொருத்திப் பார்த்தனர். இதனால் இலக்கியத்திற்காக இலக்கியம், பிற கலைகளுக்காக இலக்கியம் என்னும் இரு நெறிகளைக் கைக்கொண்டனர்.

இலக்கியம் பிறகலைகளையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ளது. தானும் மற்றக் கலைகளுக்கு நிலைக்களனாகவும் வளர்ச்சி வாய்ப்புக்களனாகவும் அமைந்துள்ளது.

இசை தோன்றுதற்கு நிலைக்களனாகவும் இசைத்துறை வளர்ச்சி பெற இசைப்பாக்களைக் கொண்டும் இலக்கியம் சிறப்படைகின்றது. அதுபோலவே நாடகக் கூறுகளை உட்கொண்டு அதாவது சுருங்கச் சொல்லல், இசை, ஆட்டம், பாட்டு இவற்றை உறுப்பாகக்கொண்டு விளங்கி நாடகத்துறை வளர்ச்சிக்கு வாய்ப்பாக அமைகின்றது.

பாடல்களில் புனையப்படும் பல வண்ணனைகள் ஓவிய ஆக்கத்திற்குத் துணைபுரிவனவாக உள்ளன. சங்க இலக்கியக் காட்சிகள் பலவற்றை உயிருள்ள ஓவியமாக்கியுள்ளனர்.

நாடகத்தின் வளர்ச்சிபெற்ற துறையான திரைபடக் கலைக்கு இலக்கியக்கலை சிறப்பான தொண்டாற்றி

யுள்ளது. கதை, பாடல், உத்திகள் என்னும் நிலையில் திரைப்படக் கலைக்கு இலக்கியம் சிறப்பான பணியாற்றி வருகின்றது.

பேச்சுக்கலை வளர்ச்சியில், உணர்ச்சி பூர்வமான, அழகான பேச்சுக்கு இலக்கியம் சிறந்த கருத்துப் பெட்டகமாக அமைந்து விளங்குகிறது.

எல்லாவற்றிற்கும் மேலாக வாழ்க்கைக்கலைக்கு இலக்கியம் சிறப்பாகத் தொண்டுபுரிந்து வருகின்றது. 'இலக்கியம் வாழ்க்கைக்காகவே' என்னும் கொள்கை இலக்கியத்தின் சமூகத் தன்மையை—பொறுப்பை விளக்கிக் கூறுகின்றது. 'வையத்துள் வாழ்வாங்கு வாழும்' கலையை உணர்த்துவதே இலக்கியத்தின் தலையாய குறிக்கோள் எனலாம்.

இவ்வாறாக இலக்கியம் இலக்கிய வளர்ச்சிக்காக மட்டுமல்லாமல் பிறகலைகளின் வளர்ச்சிக்காகவும் வாழ்க்கை முன்னேற்றத்திற்காகவும் பெரும்பாடுபட்டு வருகின்றது.

# இக்காலக் கவிதைப் போக்குகள்

“உள்ளத்துள்ளது கவிதை—இன்பம்
உருவெடுப்பது கவிதை
தெள்ளத் தெளிந்த தமிழில்—உண்மை
தெரிந்துரைப்பது கவிதை”

என்னும் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் குரல் மறுமலர்ச்சிக் கவிதையுலகில் தனியிடம் பெற்றுள்ளது. கவிதைக்கு உருவம் அமையும்போதே இன்பம் விளைகின்ற தென்றும், உண்மையைத் தெரிந்துரைப்பதில் குறிக்கோள் நிறைவேறுமென்றும் கவிமணி கவினுறவே உணர்த்து கின்றார்.

எல்லாம் அற்புதப் பொருளாகக் கவிஞன் பார்வை யிற்படும்போது ‘அறம் பொருள் இன்பம் வீடு’ என்பவையே அன்றியும் எளியன எனக் கருதப்படும் எவையுமே கூடக் கவிஞனின் பார்வையில் ஒளி பெறும். எப்பொருளையும் பாடும் பொருளாகக் கொள்ளலாம் என்பது மறுமலர்ச்சி இலக்கிய உலகில் கோலோச்சும் கொள்கையாயிற்று. ‘கிழிந்த பழம்பாய்’ பெ. தூரன் கருத்தில் ஒரு கவிப் பொருளாயிற்று. ‘தொலைபேசி’ கே பி. எஸ். அமீதுக்குரிய பாட்டுச் செய்தியாயிற்று. ‘ஒற்றையடிப் பாதை’ சிதம்பர ரகுநாதன் கவிப் பார்வையில் பாட்டுப் பொருளாயிற்று; ‘பட்ட மரம்’ தமிழ் ஒளிக்குப் பசுமைக் கற்பனை தந்தது.

கட்டடக் கலையில், போர் முறையில் வாழ்வின் பல துறைகளில் புதுமை இடம் பெற்றது போலவே

கவிதையிலும் இடம் பெற்றது; இடம் பெறுகின்றது. மரபில் ஊன்றிய புதுமையும் தமிழ்க் கவிதைகளில் உண்டு; மரபைப் பெரியதோர் அடிப்படையாகக் கொள்ளாத படைப்புகளும் உண்டு

பாடல்களில் திரைப்பாடல்கள் மக்களின் கருத்தை விரைவிலும் எளிமையிலும் கவர்கின்றன. இத்துறையில் முற்காலத்தில் பாபநாசம் சிவன், டி.கே. சுந்தரவாத்தியார், கம்பதாசன் ஆகிய கவிஞர்கள் சிறப்பிடம் பெற்றனர். அண்மைக்கால வளர்ச்சியில் கண்ணதாசனும் பட்டுக் கோட்டை கலியாணசுந்தரமும் குறிப்பிடத் தகுந்த பணியாற்றிப் புகழுக்குரியோர் ஆயினர்.

திரைப்பாடல்களில் கவியரசு கண்ணதாசன் பழந் தமிழ் மரபுச் செல்வத்தை விடாது அமைத்துப் போற்றிப் புதுவடிவமாக்கியதைச் சில சான்றுகளில் காணலாம்.

**அன்று வந்ததும் அதே நிலா**
**இன்று வந்ததும் அதே நிலா**

என்று பாடுங் கவிஞர்,

**அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்**
**எந்தையும் உடையோம் எம்குன்றும் பிறர்கொளார்**
**இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவில்**
**வென்றெறி முரசின் வேந்தர் எம்**
**குன்றும் கொண்டார் யாம்எந்தையும் இலமே**

—புறநானூறு: 112

எனவரும் புறநானூற்றுப் பாடலை மறவாது பாடி யுள்ளார்.

அன்றொரு நாள் அவனுடைய பேரைக் கேட்டேன்
அடுத்த நாளில் அவனுடைய ஊரைக் கேட்டேன்

என்னும் திரைப்பாடல்,

முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணங் கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர் கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி யானாள்
அன்னையையும் அத்தனையும் அன்றே நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமங் கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன் தாளே.

—ஆறாம் திருமுறை; திருவாரூர்த் திருத்தாண்டகம்

எனும் திருநாவுக்கரசர் பெருமான் வாக்கின் மறுகுரலாக ஒலிக்கின்றது. தமிழினத்தின் தொன்மை குறித்துப் பேசுவோர்,

கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே வாளோடு
முன்தோன்றி மூத்தகுடி

என்ற புறப்பொருள் வெண்பாமாலை அடிகளைக் குறிப்பிடுவர். இதனை மறவாது கண்ணதாசன்,

கல்தோன்றி மண்தோன்றுமுன் தோன்று தமிழே
கவிமழையில் ஆடிவரும் கன்னி இளமயிலே

என்று தமிழ், முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்ப் பெயர்ந்தொளிரும் பெற்றியினைப் புலப்படுத்தியுள்ளார்.

**எனக்கும் உனக்கும் இசைந்த பொருத்தம்**
**என்ன பொருத்தமோ**

என்று இராமலிங்க அடிகளார் பாடிய பாடல்,

**அவர்க்கும் எனக்கும் உறவு காட்டி**
**அருள்புரிந்தது கதையா**

என்று மீண்டுமொரு வடிவந்தாங்கி வந்துள்ளது, இக்குரல்,

**உனக்கும் எனக்கும் உறவு காட்டி**
**உலகம் சொன்னது கதையா?**

என்ற இசைப்பாடலில் மேலும் தெளிவாக ஒலிக்கக் கேட்கலாம்.

திரைப்பாடல்களின் மூலம் புயல்வேகப் புகழ் எய்திய பாட்டுக்கோட்டையாராம் பட்டுக்கோட்டை கலியாண சுந்தரம் குறிப்பிடத் தக்கவர்; பாவேந்தர் பாரதி தாசனாரின் வழியேற்றுப் பாடிய பாவலர்.

**விதியென்னும் குழந்தை கையில் உலகந்தன்னை**
**விளையாடக் கொடுத்திட்டாள் இயற்கையன்னை**

என்று பாடும் பட்டுக்கோட்டையார் தத்துவ நோக்கிலும் பாடி மக்கள் மொழி நடையில் மக்களின் இதயங்களைக் கவர்ந்து காலம் மறவாப் பெருமைக்குரிய பாவலரானார்.

**இரைபோடும் மனிதருக்கே**
**இரையாகும் வெள்ளாடே**

என்று பட்டுக்கோட்டையார் பாடிய திரைப்பாடல் அரும் வாழ்க்கைத் தத்துவம் கொண்டு திகழ்கின்றது. இரை யுண்ணும் வெள்ளாடு இரையாகும் அவலம் போலவே,

மனிதரும் உணவு தேடியுண்டு காலனுக்கு உணவா கின்றனர். இதனைப் பாட்டுக்கொரு புலவர் என நாட்டு மக்கள் நலமுற நவிலும் நற்றமிழ்க் கவிஞராம் பாரதியார்,

தேடிச் சோறு நிதந்தின்று—பல்வகு
சின்னஞ்சிறு கதைகள் பேசி—மனம்
வாடித் துன்பமிக வுழன்று—பிறர்
வாடப்பல செயல்கள் செய்து—நரை
கூடிக் கிழப்பருவம் எய்தி—கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் சில
வேடிக்கை மனிதரைப் போலே—நானும்
வீழ்வேன் என்று நினைத்தாயோ?

—பாரதியார் கவிதைகள்

என்று கவிதைக் குரலாக்கினார். தேடிச் சோறு நிதந்தின்று கூற்றுக் கிரையெனப் பின் பாயும் மனித குலத்தின் அவலமும் வெள்ளாட்டின் வேதனை மிக்க வரலாறும் ஒரு வகையே என்னும் உண்மையை இரு பெரும் புலவரும் பாடிய நோக்கையுணர்ந்தால் நாம் பாராட்டி வியக்கலாம்

செய்யுந் தொழிலே தெய்வம்—அந்தத்
திறமைதான் நமது செல்வம்
கையுங் காலுந்தான் உதவி—கொண்ட
கடமைதான் நமக்குப் பதவி

என்னும் பட்டுக்கோட்டையாரின் பாடலடிகள் உழைப் பாளரின் உயரிய வேதமாகின்றது; எளிய திரைக்கீதமா கின்றது. "உலகத் தொழிலனைத்தும் உவந்து செய்வோம்" என்று பாரதியார் பாடிய செய்தியில் (Dignity of Labour) தொழிலின் கண்ணியம் மட்டும் உணர்த்தப்பட்டது;

பட்டுக்கோட்டையாரின் மேற்காணும் பாடலில் உழைப் பாளரின் உள்ளக் குரல் புத்துலகிற்கேற்ப இசைக்கின்றது.

**இறைவா! நீ இருட்டைப் படைத்தாய் —நாங்கள்**
**விளக்கை யுருவாக்கிக் கொண்டோம்; நீ**
**மணலைப் படைத்தாய்; நாங்கள்**
**பளிங்கைப் படைத்துக் கொண்டோம்.**

என்று இக்பால் பாடிய பாடலில் மனித மேன்மை பேசப் பட்டதுபோல் பட்டுக்கோட்டையார் பாடலிலும் சந்திர னைத் தொட்ட மனித சக்தி புகழப்பட்டுள்ளது வாழ்வின் உண்மைகளோடு தத்துவங் கலக்கும் பட்டுக்கோட்டையார் மனிதன் ஒவ்வொருவனுக்கும்

**சட்டப்படி பார்க்கப்போனா**
**எட்டடிதான் சொந்தம்**

என்று உருகப் பாடினார் உவமைக் கவிஞர் சுரதா இதே செய்தியைப் பாடும்பொழுது,

**ஆடியடங்கும் வாழ்க்கையடா**
**ஆறடி நிலமே சொந்தமடா**

என்று நயமுறப்பாடி, பாடையைக் 'காலில்லாக் கட்டில்' என்றும் மரபுணர்த்தி இசைத்தார்.

இற்றை நாட் கவிதையுலகம் உழைப்பவர் உயர்வு பாடினாலும், சமுதாய மாற்றங் குறித்துப் பாடினாலும், மறுமலர்ச்சி, மொழிப்பற்று, மனிதநேயம் ஆகிய எத்துறை பற்றிக் குரல் தந்தாலும் அக்குரல் வழியே நேரடியாகவோ மறைமுகமாகவோ புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார் வகுத்த புதுமரபே தலையெடுத்துச் செம்மாந்து நின்று

தொடர்ந்து நிலவக் காண்கிறோம். பாரதியாருக்குப் பின் சீரிய செல்வாக்கு பாரதிதாசனாரின் பாக்களுக்கே உண்டு.

பிரமதேவன் கலையைத் தொழிலாளரே நடத்து கின்றனர் என்று பாரதியார் தெளிந்து பாடினார். பாரதிதாசனார்,

**காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான் அங்கே**
**காணத் தகுந்தது வறுமையாம்**
**பூணத் தகுந்தது பொறுமையாம்**

என்று முழங்கினார்; மனிதநேயக் கருத்துக்களை வழங்கி னார். கடவுள் நம்பிக்கையும் சமயங்களும் தொழில் உலகந் தழைக்கச் செய்து புத்துலகம் படைக்க உதவுந் தொழிலாளர்க்கும், உழைப்பாளர்க்கும் உரிய பலன், உரிமை ஆகியவற்றைத் தருவதில்லை, எனக் கருதினார்; ஆகவே,

**கடவுளென்ற கட்டறுத்துத்**
**தொழிலாளரை யேவுவோம்**

என்று பாடினார். பாரதிதாசனாருக்குப் பின் மூத்தவர்களில் கம்பதாசனும், தற்போது வாழுங் கவிஞரில் சாலை இளந்திரையன் அவர்களும் மானுடம் பாடிய புலவர்களாகப் புகழெய்தியுள்ளனர்.

சாலை இளந்திரையன் 'பூத்தது மானுடம்' என்றே தனியொரு நூலைத் தந்துள்ளார். 'வீறுகள் ஆயிரம்" எனும் நூலில், 'உலகத் தோற்றம்' என்ற கவிதையில் புதுமனப்பான்மையை, சமுதாய மாறுதல் விழையும் சோசலிசத்தை வரவேற்பதும் அறிமுகமாக்கலுமாகப் பாடுங்கருத்து, அமைந்துள்ளது.

நெஞ்சுகளின் மறுபிறப்பு
சோசலிசம்
திறம்பாத ஒருமைநலம்
சோசலிசம்
வஞ்சகத்தின் மென்னியிலே
புதுயுகத்தின்
வலியகரம் விழுவதுவே
சோசலிசம்

என்று சோசலிசக் கட்டியங் கூறுகின்றது. சாலையாரின் பாடல் சாலை இளந்திரையன் பாடல்களில் வேண்டாத பழமை, மூடநம்பிக்கை ஆகியவற்றை முறியடிக்கும் வலிமை முத்தாய்ப்பாகக் கருத்தை வெளிப்படுத்தத் துணை நிற்கின்றது.

எழுதிவைத்த புத்தகத்தில்
மூழ்கிப் போவாய்
எதிரிருக்கும் மானுடனைப்
படிக்க மாட்டாய்!

என்ற அடிகள் சிந்தனைக்குரியவை.

கம்பதாசன்,

சூரியனும் ஒரு தொழிலாளி—தினம்
சுற்றும் உலகும் தொழிலாளி
வாரிதி தானும் தொழிலாளி—எதிர்
வந்திடும் காற்றும் தொழிலாளி
மாரியதுவும் தொழிலாளி—விண்
மலரும் உடுக்கண் தொழிலாளி
பாரில் தொழிலாளர் சக்தியின்றேல்— இந்தப்
பாரும் உண்டோ? ஒரு சீரும் உண்டோ?

என்று பாடி மானுட உயர்வும் தொழிலாளர் மேன்மையும் துலங்கப் பாடினார். மேலும் தொழிலாளர் தம்முள் ஒருவராகவே நின்று குரல் தரும் கம்பதாசன்,

தண்ணீரதனில் தணலெழுங்கால்
சாவின் நிழலில் பிறப்பெழுங்கால்
மண்ணில் பொன்தரும் தொழிலாளர்
மதியில் புவியாள விழியெழாதோ?

எனக் கேள்வி தொடுக்கும் பான்மை, அவர் பின் வந்த கவிஞர்க்கும் வழிகாட்டும் வகைபெற்றுச் சிறக்கின்றது.

## தன்னுணர்ச்சிப்பாவகை

பாவினங்களில் 'லிரிக்' (Lyric) தன்னுணர்ச்சிப் பாக்கள் ஒரு வகையாகும். கிரேக்க இலக்கியத்திலும் ஆங்கிலத்திலும் இக்கவிதை வடிவங்கள் சிறந்தன. Lyric என்னும் இசைக்கருவின் இசைத் துணையோடு பாடித் தனிமையில் களிக்கும் பாவகை Lyric ஆயிற்றென அறிஞர் கருதுகின்றனர்.

இசையுடையது 'லிரிக்' என்னும் கருத்தோடு குறுகிய அளவினதென்றும் கூறுவதுண்டு. குறுகிய பாக்கள் யாவும் 'லிரிக்' வகையைச் சார்ந்தவை என முடிவு கொள்ள இயலாது. ஏனெனில் மற்றொரு செய்தியும் (உள்ளுறை) 'லிரிக்' (Lyrical poems) வகையை நிறுவுகின்றது. இசை வடிவாகி நிற்பதோடு பொருளமைதியால் தன்னுணர்ச்சி உள்ளுறையாக வருவது (Lyrical poems) எனப்படும். கவிஞன் யாருடைய 'தன்னுணர்ச்சியையும் தனது அனுபவமாகப் பாடும் 'லிரிக்' ஒருவகைப்பட்டது. கவிஞன் தன் வாழ்வின் அனுபவத்தையே தன்னுணர்ச்சி வெளியீடாகவும், இசைப்பாங்குடனும் உருவாக்குவது மற்றொரு வகையாம்.

தன் வாழ்வினின்றும் முகிழ்த்த பட்டறிவு வெளிப்பாடாக இசைத்த தன்னுணர்ச்சிப் பாவுக்குப்

(Lyrical poems) பெருங்கவிஞர் பாரதியாரின் 'நல்லதோர் வீணை செய்தே' எனும் பாடல் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

இவ்வகையில் கவிஞர் தமிழ் ஒளி,

மூத்து நரை திரை வந்திட ஆயுள்
முடிந்தது நாமறிவோம்—எனில்
கோத்து நமக்குக் கொடுத்திட்ட மாலையின்
கோலம் அழிந்திடுமோ?
வஞ்சகக் காலன் வருவதும் போவதும்
வாழ்க்கை நியதியடா! எனில்
செஞ்சொற் கவிதைகள் காலனைவென்று
சிரிப்பது இயற்கையடா!

என்று பாடுந்திறனில் கவிஞர் வாழ்வினும், கவிதைக்கலை காலத்தை வென்று பெருமிதங் கொண்டு சிரிக்கும் செம்மாப்பு நன்கு தெளிவாகின்றது,

'லிரிக்' வடிவிற்குப் பாவேந்தர் பாரதிதாசனாரின் பாடல்களில் சிறந்த சான்றுகள் உள்ளன. 'இசையமுது' கவிதை நூலில் ஒரு பாமணி கோக்கப்பட்ட திறன் வருமாறு.

அதோ பாரடி அவரே என்கணவர்
புதுமாட்டு வண்டி கட்டிப்
போகிறார் எனைவாட்டி
இருப்பவர் உள்ளே முதலாளி செட்டி
ஏறுகால் மேல்தான் என் சர்க்கரைக்கட்டி
தெரியவில்லையோடி தலையிலேதுப் பட்டி
சேரனே அவரென்றால் அதிலென்ன அட்டி

இப்பாடலில் தலைவி, தன் தோழியிடம் தனைமணந்த கணவனைக் காட்டிப் பேசுவது கிராமிய (இற்றூர்)ச்

சூழலையும் இனிதே விளக்குவதாகின்றது. இக்கவிதை 'லிரிக்' (Lyric) எனப் பாகுபாடு செய்யப்படலாம் எனினும், "அதோ பாரடி,' என்று தோழியை முன்னிலைப்படுத்துவதால் 'Dramatical Lyric' என்று வகைப்படுத்துதல் சாலவும் பொருந்தும்.

கவிஞர்கள் வாழ்வில் அவர்களைக் கவரும் அனுபவங்கள், அவர்களை அலைக்கழிக்கும் நிகழ்ச்சிகள் யாவுமே 'லிரிக்' வடிவில் வெளிப்பட்டு நிலைபேறடைகின்றன.

'ஏன், ஏன்?, என்று மனத்தைக் குடையும் கேள்வியையே ஆழ்ந்து வடித்துக் கவிஞர் 'சோமு' அவர்கள் பின்வரும் பாடலில் தந்துள்ளார்.

**மலரே ஏன் நீ உதிர்கின்றாய்**
**மங்கையே ஏன் நீ முதிர்கின்றாய்**
**பகலே ஏன் நீ மாய்கின்றாய்**
**பால்நிலா ஏன் நீ தேய்கின்றாய்**
**கடலே ஏன் நீ இரைகின்றாய்**
**காற்றே ஏன் நீ அலைகின்றாய்**
**நதியே யாரை நாடுகின்றாய்**
**நாளே எங்கே ஓடுகின்றாய்**

இவ்வினாக்கள் நிலைத்துவிட்ட வினாக்கள். தன்னுணர்ச்சிக்கவிதைகளில் இப்பாடல் நிகரற்றது.

தம் வாழ்வின் முற்பகுதியில் தம்மை உலுக்கிய காதலிழப்பைக் கவிஞர் கம்பதாசன்,

**பாட்டு முடியுமுன்னே**
**மீட்டிய வீணையைப்**
**பக்கம் வைத்தே நடந்தாய்**

எனவரும் கவிதையில் நிலைபேறுடைய நெஞ்சக் குமுறலாக்கி விட்டார்.

தன்னுணர்ச்சியும் குறையாமல் தத்துவமும் குன்றாமல் வரும் கவிஞர் 'சோமு'வின் பாட்டுக் குரல் இதோ :

இதயக் கூண்டில் ஒரு பறவை
இறைதா வென்று கூப்பிடுதே
இதயக் கூண்டில் ஒரு பறவை!

நினைவுக் காட்டில் சுற்றியபின்
நிலவின் அணைப்பில் அயராமல்
கனவுக் குமைப்பில் மோனத்தில்
கண்ணைமூடித் தனிமையிலே...

இதயக் கூண்டில் ஒரு பறவை, அயர்வுக்குப் பின் ஆறுதல் பெறும் நம்பிக்கையைக் கவிஞர்,

பொழுது புலருமடி—மனப்
பூவும் மலருமடி!
அழுத இருளெல்லாம்—கண்ணே
அகலும் அகலுமடி!

என்னும் அடிகளில் தோற்றுவிக்கின்றார்.

## இயற்கை

இயற்கை ஒரு வற்றாக் களஞ்சியம். காலந்தோறும் கவிஞர்க்கு வாய்த்த கற்பனை நிதியம். சங்கப் புலவர்க்கு முதலாகிக் கருவாகி முன்னின்றது. செஞ்சொற் புனை மாலை பாடிய ஞானசம்பந்தப் பெருமானுக்கும் சமய குரவர் பிறர்க்கும் கண்டறியாதன காட்டியது. பின்னரும் காவியப் பிரபந்தப் படைப்புகளில் மிளிர்ந்து தவழ்ந்தது. இந்நாளையப் புலவர் பெருமக்கட்கும் விருந்தாகி விஞ்சி நிற்பது.

இயற்கைப் புணைவில் சமுதாயக்கருத்துகளை மிடைதல் பாரதிதாசனாரின் திறன். சான்றாக நிலவைப் பாடுந்

கவிஞர் நித்த நித்தம் உழைத்தலுத்துச் சோற்றுக்கு ஏங்கித் தவிக்கும் எளிய மக்களையும் மறக்கவில்லை. எனவே,

உனைக்காணும் போதினிலே என்னு ளத்தில்
ஊறிவரும் உணர்ச்சியினை எழுது தற்கு
நினைத்தாலும் வார்த்தைகிடைத் திடுவ தில்லை
நித்திய தரித்திரராய் உழைத்து ழைத்துத்
தினைத்துணையும் பயனின்றிப் பசித்தமக்கள்
சிறிதுகூழ் தேடுங்கால் பானைஆரக்
கனத்திருந்த வெண்சோறு காணும் இன்பம்
கவின்நிலவே உனைக்காணும் இன்பந் தானோ!

—புரட்சிக்கவி

என்று பாடினார். அதனைப் பின்பற்றி 'வாணிதாசர் முகில்' என்னும் பாடலில் முகில் வேறுபாடற்ற மாண்மை கொண்டதென்று விளக்குகின்றார்.

விளைவயல், பொட்டல் என்ற
வேற்றுமை கருதாதென்றும்
அளித்துயிர் ஓம்புகின்றாய்!
அன்னையே முகிலே வாழி!
விளைவினை மக்களெல்லாம்
பொதுவாகத் துய்க்கும் மேன்மை
முளைத்திடில் தமிழர் நாட்டில்
முளைத்திடும் இன்ப வாழ்வே

இத்துடன் நிலவைப்பற்றி முடியரசன் பாடும்,

பொதுவுடைமை ஆட்சியினை யிரவுப்போதில்
புரிகின்ற முழுமதியே

என்ற அடியை இயைபுபடுத்திப் பார்த்தல் பயன் தரும்.

ஆங்கிலப் புலவர்களில் சிலர் நகர்ப்புற வருணனை புரிவோர் போப் (Pope) எனுங்கவிஞரை Poet of Township என்பர். ஆயினும் எப் புலவராயினும் சிற்றூர்சேரி முதலியவற்றின் இயற்கையழகுகளை விழைந்து பாடுவர். வாணிதாசர், சேரியில் தாம் கண்ட காட்சியை மெய்ம்மை (Realism) குன்றாது பாடிய திறம் பின்வருமாறு :

சேரி

அடுப்பினில் புளிக்காக் கூழே
    கொதித்திடும்; அழும் பிள்ளைக்குத்
துடுப்பினைத் தூக்கிக் காட்டித்
    தேற்றுவாள்; இடதுகையின்
மடிப்பினில் தலையை வைத்து
    வயிரொட்டித் தூங்கும் ஆளன்
நெருப்பினில் உழைத்த தோளில்
    நெஞ்சமும் கண்ணும் சேர்ப்பாள்!

பாரதிதாசனாரின் நேர் மாணவர்களில் ஒருவாரம் 'தமிழ் ஒளி' இயற்கைப் பாவகையில் தனிப் பெருந்திறன் கொண்ட கவிஞராவர். அவர்தம் 'பட்டமரம்' எனுங் கவிதை இயற்கை வருணனையில் அவருக்குரிய கற்பனைத் திறன், சொல்லாட்சி முதலியனவற்றை நிறுவுவதாகும்.

முதலில் மனித மனம் போல் மரமும் பெருமூச்சும் விசனம் அடைகின்றது.

பட்ட மரம்

மொட்டைக் கிளையொடு
    நின்று தினம்பெரு
    மூச்சு விடும் மரமே!

வெட்டப் படும்ஒரு
நாள்வரு மென்று
விசனம் அடைந்தனையோ?

அடுத்த இரண்டு அடிகளில் பட்டுப்போகுமுன் இருந்த நிலையும், பட்ட பின்னர் அடைந்த கோலமும் பேசும் கவிஞர்,

குந்த நிழல்தரக்
கந்த மலர்தரக்
கூரை விரித்த இலை!
வெந்து கருகிட
இந்த நிறம்வர
வெம்பிக் குமைந்தனையோ?

என்றிசைக்கின்றார். எழில் முற்றும் இழந்ததை,

கட்டையெனும் பெயர்
உற்றுக் கொடுந்துயர்
பட்டுக் கருகினையோ!
பட்டை யெனும்உடை
இற்றுக் கிழிந்தெழில்
முற்றும் இழந்தனையே!

காலப் புயலிற்பட்ட மனிதன் கைநீட்டுவதுபோல் மரம் தோற்றமளிக்கின்றது. பின்னர், பழநாளின் பசுமைத் தோற்றம் வெறும் கனவான திறம்,

பாடும் பறவைகள்
கூடி உனக்கொரு
பாடல் புனைந்ததுவும்

மூடு பனித்திரை
யூடு புகுந்தொரு
மோகங் கொடுத்ததுவும்

ஆடுங் கிளைமிசை
ஏறிச் சிறுவர்
குதிரை விடுத்ததுவும்

ஏடு தருங்கதை
யாக முடிந்தன!
இன்று வெறுங்கனவே;

இப்பாடலின் இறுதியும் கற்பனையும் உணர்வுத்தழலும் குன்றாது விளங்குவது கவிஞர் தமிழ் ஒளியின் இலக்கியத் திறனுக்கு உரைகல்.

மழைத்துளி எனும் பாடல் தூற்றலின் சந்தமே வாய்த்தாற்போல் நம்மை மயக்குவது; கற்பனைப்பார்வை உடையது.

'தந்ததன' மென்று பந்தலில்—மலர்ப்பந்தலில்
வந்துவிழுந்தது நீர்த்துளி—மழைநீர்த்துளி
பச்சைப் பசுந்தழைக் காட்டிலே—இலைமேட்டிலே
தைச்சுக் கிடந்தது புன்னகை—மழைமென்னகை!

இவ்வாறு சந்தவின்பம் மிக்கக் கவிதைகள் இக்காலக் கவிதைப் போக்குகளை வளப்படுத்தி நிற்கின்றன.

காதல்

காதல் காதல் காதல்
காதல் போயின்
சாதல் சாதல் சாதல்

என்று பாடினார் பாரதியார். மேலும் அவர்,

காதலினால் அறிவெய்தும்—அந்தக்
காதற் கவிதைப் பயிரை வளர்க்கும்

என்றும் பாடினார். காதலைப் பாடிப் பெருமைப் படுத்தாத கவிஞரில்லை. சங்க இலக்கியம் நுண்ணிய உணர்வுகள் இழையோடக் காதலைப் போற்றியது. முதுமையிலும் காதலைப் போற்ற வேண்டும் என்று முழங்கியது. ஏனெனில் உண்மையான காதல் முதுமையில் வளர்ந்து செப்பருற்றிருக்கும். தோழி தலைவியைத் தலைவன்பால் ஒப்படைக்கும்போது,

"இவளின் கட்டழகு கண்டு மனமுவந்த தலைவ! ஒரு காலத்தே இவள் ஏந்தெழில் மார்பகங்கள் தளரினும் நீ இவளைக் கைவிட வேண்டா. பொன் வண்ண மேனியைப் போர்த்துமாறு நீலமணி நிறக் கூந்தல் இன்று நெடியதா யிருந்து இவளழகை மேம்படச் செய்கின்றது. வருநாளில் இக்கூந்தல் வண்ணமிழந்து நரைபட்டு முடியப்படும் போதும் இந்நாளில் நின் நெஞ்சகத்தே நிலவும் ஈடுபாடு இத் தலைவிபால் என்றும் இருத்தல் வேண்டும்" என்று கூறுவதாக அமைந்துள்ள நற்றிணைப் பாடல் வருமாறு :

அன்னாந் தேந்திய வனமுலை தளரினும்
பொன்னேர் மேனி மணியின் தாழ்ந்த
நன்னெடுங் கூந்தல் நரையொடு முடிப்பினும்
நீத்தல் ஓம்புமதி பூக்கேழ் ஊர!
இன்கடுங் கள்ளின் இழையணி நெடுந்தேர்க்
கொற்றச் சோழர் கொங்கர்ப் பணீஇயர்
வெண்கோட்டு யானைப் போஎர் கிழவோன்
பழையன் வெல்வாய்த் தன்னநின்
பிழையா நன்மொழி தேறிய இவட்கே.

— நற்றிணை : 10

ஒப்பரிய காதலுணர்வு வயதால் முதுமையால் வாடுவதில்லை என்று பேசப்பட்ட இலக்கிய மரபு, மறுமலர்ச்சிக் காலத்தே பாவேந்தர் பாடலில் தனிவகையான சிறப்பாக மலர்ச்சி பெற்றுள்ளது. குடும்பவிளக்கில் 'முதியோர் காதல்' என்னும் பகுதியே மரபும் புரட்சியுமாகும். அப்பாடல் வருமாறு :

> புதுமலர் அல்ல; காய்ந்த
> புற்கட்டே அவள்உ டம்பு!
> சதிராடும் நடையாள் அல்லள்;
> தள்ளாடி விழும்மூ தாட்டி;
> மதியல்ல முகம் அவட்கு,
> வறள்நிலம்; குழிகள் கண்கள்!
> எதுஎனக் கின்பம் நல்கும்?
> இருக்கின்றாள் என்ப தொன்றே

காதற் கவிதைகளை இசைப்பாடல் வழியே கேட்கும் இக் காலத்தே,

> காதல் என்பது தேன்கூடு—அதைக்
> கட்டுவ தென்றால் பெரும்பாடு

என்று இசைக்கக் கேட்கின்றோம். கபிலரின் நற்றிணைப் பாடலில்,

> தாமரைத் தண்தாது ஊதி மீமிசைச்
> சாந்தின் தொடுத்த தீந்தேன் போல
>
> (நற்றிணை : 1)

எனவரும் கருத்தே மிளிரக் காண்கிறோம். காதலைப் போற்றும் வளமார்ந்த சொற்களில் பட்டுக்கோட்டையார்,

நெஞ்சில் கூடுகட்டி வாழும் குயிலோ

என வருணிப்பது பழமையான உணர்வுக்குப் புது வடிவம் தருவதாகும்.

சிறிய இதயத்தில் காதலாம் உணர்வு பெருகுவதனைக்,

கையளவு உள்ளம் வைத்துக்
கடல்போல் ஆசை வைத்து
விளையாடச் சொன்னானடி

என்னும் கண்ணதாசன் அடிகள் புலப்படுத்துகின்றன. கவிஞர் சுரதா காதலார்வமும் பிரிவுத் துயரமும் தோய்ந்திட,

செங்கதிர்ச் சுடர் போலே என்கரம்
நீண்டிருந்தால் அந்தச்
சிங்காரச் சிலையை நான்
இங்கிருந்தே தொடுவேன்
எண்ணமெல்லாம் ஓர் இடத்தையே நாடுதே

என்று பாடி உவமையாலும் உயர்ந்து திகழ்கின்றார்.

காதலன் வேட்கை புரியுமாறு "கண்ணம்மா" என்னும் தலைப்பில் பாடிய கவிஞர் தமிழ் ஒளி,

உள்ளம் எழுதிவிட்டாள்—கண்ணம்மா
ஊற்று நீரோடையிலே
கள்ளம் அழிந்துவிட்டேன்—அடியேன்
காதல் நீராடுகிறேன்

என்று பாடுங்குரல் காதலின் மாட்சி தெரியக் காட்டும்,

'சோமு'வின் பாடலில் இளநெஞ்சின் பேரார்வம் பின்வருமாறு ஒலிக்கின்றது.

**பின்னிய கார்நிறக் கூந்தலிலே—வைத்துப்**
**பின்னிணையோ இந்த நெஞ்சினையே**
**பின்னுமக் கூந்தலின் கொண்டையிலே – இசை**
**பின்னினை பாடல்கள் செய்தனையே**

— 'இளவேனில்' கவிதைத் தொகுதி

கூந்தலில் மலராகக் காதலிளைஞனின் மனமும் பின்னப்படுவதால் கன்னியின்பால் தன் மனம் சிக்கியிருப்ப தாக உணரும் இளநெஞ்சின் சித்திரம் இது. மற்றும் கொண்டை முடிந்தவாகு பற்பல நினைவூட்டும் அழகுப் பாடலாகத் தோன்றுகிறது என்று கவிஞர் உணர்த்து கின்றார். இக் கவிதையின் வண்ணத்தில் ஓரளவு மரபு படிந்திருக்கக் காண்கிறோம்.

**முருகிற் சிறந்த கழுநீரும்**
**முற்றா இளைஞர் ஆருயிரும்**
**திருகிச் செருகும் குழன்மடவீர்**
**செம்பொற் கபாடம் திறமினோ!**

— கலிங்கத்துப்பரணி; கடை திறப்பு

என வரும் கலிங்கத்துப் பரணியின் கடைதிறப்புப் பாடல், மறுமலர்ச்சிக் கவிதையின் அழகுக்குப் பின்புலமாகின்றது. 'வெண்ணிலா' என்னும் பாடலில் கவிஞர் 'சோமு' காட்டும் இசாமியக் காதலர் பேசுங்குரலில் ஆண்குரல்,

**முத்துப் போலும் நிலவதிலே (ஒன்)**
**மூக்குத்தியைக் கண்டாக்கா**
**பித்துப் பிடிக்குதடி—தங்கரத்தினமே**
**பேசமுடியுதில்லை – பொன்னுரத்தினமே**

எனப் பாடுந்திறம் சுவையானது. நிலவொளியே மயக்கும் எழில் வாய்ந்தது. காதலியின் மூக்குத்தியை அந் நிலா

வொளியில் பார்த்தால், அன்புப் பைத்தியமாகி நிற்கும் நிலை காதலனுக்கு ஏற்படுதல் இயல்பே. மாறாத இளமை உள்ள காதலி; சிறுமிபோல் சிரிக்கின்றாள். சிரிப்பிலே பலவகை. கன்னத்திலே குழிவிழும் மாயச் சிரிப்பு அவள் சிரிப்பு. அதை,

> சின்னப்பய மவ கெனக்கா
> செருக்கி நீயும் சிரிக்கையிலே
> கன்னத்திலே குளிவிளுது — தங்கரத்தினமே
> கண்டுமனம் களிக்குதடி — பொன்னுரத்தினமே

என்று கிராமியக் காதலன் பேசும் வண்ணத்திற் கேட்கிறோமே, அது சாலச் சிறப்புடைத்தாகும்.

இத்தகைய மயக்கும் காதல் கவிஞர் பெ. தூரன் பார்வையில் ஒரு கனவுக் காட்சி தந்து மயக்குகிறது.

> தேனிலா ஊறுகின்ற சேல்விழிகள் யான் கண்டேன்
> வேனிலான்வில் போன்ற மென்புருவச் சீர்கண்டேன்
> புன்சிரிப்புப் புதுரோஜாப் பூத்திருக்கும் எழில் கண்டேன்
> கன்னக் குழிக் கவிதை கண்டு களி கொண்டேன்
> மதனன் குடியிருக்கும் மார்பு கண்டேன் சென்றணைக்க
> அதிவிரைவிற் பாய்ந்தெழுந்தேன்
> அடடா நான் கண்விழித்தேன்.

சங்க இலக்கியம் முதல் பாரதியார் காலம் வரை போற்றப்பட்ட காதல், இக்காலக் கவிஞர் குரலிலும் சிறந்து ஒலித்து உணர்வில் ஓங்கி, மறுமலர்ச்சித் தமிழினை வளப்படுத்தி வருகின்றது. நாட்டையும் சமுதாய நிலையையும் மொழிப் பெருமையையும் பாடும் இக்காலப் புலவர்கள், காலம் மறவாக் காதலையும் பல்வண்ணக்

கோலமாகப் பார்த்து உணர்ந்து பாடல் யாத்து வருகின்றனர்.

## முடிவுரை

இவ்வாறாக இக்காலக் கவிதைப் போக்குகள் பல திறத்தவனாய் இலங்கக் காணலாம். பழமையில் வேர் விட்டுப் புதுமையிற் கிளை படர்ந்து செழித்து நிற்கும் ஆலமரமாய்க் கவிதை பிறங்குகின்றது. மரபுக் கவிதைகளில் காணலாகும் மாட்சிகளைக் காண்பதோடு, சமுதாய நோக்கமைந்த கீர்த்தியும் இக்காலக் கவிதைகளில் இலங்கிடக் காணலாம். காதலும் இயற்கையும் சங்க காலக் கவிதையின் பாடுபொருள்களின் பயனாக அமைய, இக்காலக் கவிதைகளில் சமுதாயப் படப்பிடிப்பு பாடுபொருளாய்த் துலங்கி, நெஞ்சில் சில அலைகளை ஏற்படுத்துகின்றது. சுருங்கக் கூறின் முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் இக்காலக் கவிதைகள் மக்கட் சிந்தனையார்வத்தினைத் தூண்டிவிடும் போக்கில் நிறைந்தொளிர்தல் காணலாம்.

# புதுக்கவிதையின் நிலைபேறு

தமிழிலக்கிய வரலாற்றில் காலந்தோறும் பாடுபொருளும், பாடல் வடிவமும் மாறி வருகின்றன. இருபதாம் நூற்றாண்டுக் கவிதையுலகில், புதுக்கவிதை என்ற ஒரு புதிய இலக்கிய வகை தோன்றியிருக்கின்றது. ஆங்கில இலக்கியத் தாக்கத்தால் தமிழில் உருவான புதிய துறை இது. பல்லாண்டு காலக் கவிதை வளர்ச்சியின் காரணமாகத் தமிழ்க்கவிதைக்கு யாப்பு இலக்கண மரபுகள் அமைந்துள்ளன. இவ் யாப்பு இலக்கணத்துக்கு மீறிய நிலையில் புதுக்கவிதைகள் தோன்றுகின்றன. இப் புதுக்கவிதை—உருவத்தை, வடிவத்தைவிட உள்ளடக்க மாகிய பாடுபொருளுக்கு முதன்மை தருகின்றன. இப் பாடுபொருள் செம்மையாக அமைந்திருக்கின்றதா? இன்றைய புதுக்கவிதைகள் புதுக்கவிதைத் துறையின் நிலைபேற்றுக்கு வழி வகுக்குமா? வடிவம் இல்லாக் கவிதைத்துறை நிலைபேறடைய முடியுமா? போன்ற வினாக்கள் பலரால் எழுப்பப்படுகின்றன. இதற்குக் காரணம், எதையும் பாடலாம் என்றும், எல்லாரும் யாரி வேண்டுமானாலும் எழுதலாம் என்றும் இன்று நிலவும் இன்றைய கவிதைத் துறைப் போக்கு எனலாம். இக் கட்டுரையின்கண் புதுக்கவிதையின் நிலை பேற்றுத் தன்மை குறித்து விளக்கப்படுகின்றது.

## புதுக்கவிதைத் தோற்றம்

ஆங்கில இலக்கியத்தில் அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மன் என்பவரால் புதுக்கவிதை தோற்றுவிக்கப்

பட்டது. அவர் எழுதிய 'புல்லின் இதழ்கள்' (Leaves of grass) புதுக்கவிதை உலகப் புகழ் பெற்றது. பலவகைக் கண்டனக் கணைகளுக்கும், திறனாய்வுக் கணைகளுக்கும் ஆளாகியும், உலகப் புகழ் பெற்றமையால் இக்கவிதையின் வடிவ அமைப்பு ஆங்கிலத்தில் நிலையான இடத்தைப் பெற்றது.

வால்ட் விட்மனைப் பின்பற்றி, எஸ்ராபவுண்டு கட்டுப்பாடற்ற கவிதை (verse libre) இயக்கம் ஒன்றைப் பரப்பத் தொடங்கினார். இவ் இயக்கத்திற்காக 1912இல் மூன்று கொள்கைகள் உருவாக்கப்பட்டன.

1. எழுதும் பொருளை நேர்முகமாக அணுகும் முறை.

2. கவிதையின் வெளிப்பாட்டுக்கு எந்த வகையிலும் பயன்படாத ஒரு சிறுசொல்லையும் சேர்க்காமல் இருத்தல்.

3. சொற்றொடர்களில் அமையும் இசை தழுவிய தொடர்ச்சி.

இவை கவிதை உருவாக்கத்தில் பின்பற்றப்பட வேண்டிய அடிப்படைக் கோட்பாடுகள் என ஏற்றுக் கொள்ளப்பட்டன.

எஸ்ராபவுண்டு தோற்றுவித்த இயக்கம், அவருக்குப் பின்னர் வந்த டி.எஸ். எலியட் போன்றோரால் மிகவும் சிறப்பாக வளர்க்கப்பட்டது. எலியட்டின் கட்டுப்பாடற்ற கவிதைகள் பல, ஆங்கில இலக்கியத்தை அணி செய்யத் தொடங்கின. தொடக்கத்தில் எலியட்டின் கவிதைகளுக்கு எதிர்ப்பு இருந்தது. ஆனால் பாழ்நிலம் (Waste land) என்ற அவரது கவிதை நோபல் பரிசைப் பெற்றபோது, மக்கள்

மத்தியில் இவருக்குப் 'பெருங்கவிஞர்' என்ற மதிப்பை உண்டாக்கியது. இத்தகைய ஆங்கிலத் தாக்கத்தால் முகிழ்த்து, பாரதியாரால் தோற்றுவிக்கப்பட்டது புதுக் கவிதை.

இனி, இப் புதுக்கவிதைகளின் நிலையை, அவற்றின் இலக்கியக் கூறுகள் வழி காண்போம். அவ்வாறு உள்ள நிலையை அறிந்தால்தான் இதன் நிலைபேறு பற்றி அறிய இயலும்.

## இலக்கியக் கூறுகள்

உருவம், உள்ளடக்கம், கற்பனை, உணர்ச்சி ஆகிய இன்றியமையாத இலக்கியக் கூறுகளுள் புதுக்கவிதையில் ஆளப்படும் பாங்கு இனிச் சுட்டப்படுகின்றது.

## வடிவம்

இலக்கியத்தின் வடிவம் என்பது வெளிப்பாட்டு முறையாகும். எதைச் சொல்வது, என்பது உள்ளடக்கமாகவும், எப்படிச் சொல்வது? என்பது வடிவமாகவும் கொள்ளப்படுகின்றது.

இலக்கியம் என்பது குறிப்பிட்ட யாப்பு வகைக்குள்ளாகவோ, குறிப்பிட்ட வடிவ அமைப்புக்குள்ளாகவோ எக்காலத்திலும் சிறைப்பட்டு நிற்பதில்லை; வளர்ந்து வரும் சமுதாயத்தின் உணர்வுக்கும், மாறிவரும் காலத்தின் தேவைக்கும் ஏற்ற வகையில் வடிவாலும் அமைப்பாலும் பொருளாலும் புதுப்புது வகையில் உருக்கொண்டு வளர்ச்சி பெறுதலே இலக்கியத்தின் இயல்பாகும். தொல்காப்பியனார் காலம் முதல் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் கவிதைக்கு நிகழ்ந்த மாற்றங்களையும் தோற்றங்களையும் நுணித்துணர்வார்க்கு இவ்வுண்மை தெளிவாகப் புலனாகும்.

சங்ககாலத்தில் ஆசிரியப்பா, கலிப்பா, பரிபாடல், வெண்பா முதலியன வழங்கி வந்தன.

அவரோ வாரார்—முல்லையும் பூத்தன
பறியுடைக் கையர் மறியினத் தொழியப்
பாலொடு வந்து கூழொடு பெயரும்
யாடுடை யிடைமகன் சென்னிச்
சூடிய வெல்லாஞ் சிறுபசு முகைய

—குறுந்தொகை. 221

என்ற குறுந்தொகைப் பாடலில் தலைவியின் பிரிவுத் துன்பம் உணர்ச்சிப் பாங்காக வடிக்கப்பட்டுள்ளது. இதற்கு ஆசிரியவடியும், அதனடிப்படையில் தோன்றிய ஓசையும் காரணம் எனலாம். ‘அவரோ’ என்ற சொல் இங்கு உணர்த்தும் பொருள் சிறப்பிற்குரியது.

சங்கம் மருவிய காலமாகிய சிலப்பதிகாரக் காலத்தில் பாக்களின் உருவ வளர்ச்சியில் பலவகை மாற்றங்கள் நிகழ்ந்தன. பல்வேறு புதிய யாப்பு வடிவங்களையும், துறை, தாழிசை, விருத்தம் ஆகிய பாவினங்களையும் புதுவகை இலக்கணச் சாயல், உருவமைப்பு ஆகியவற்றோடு இளங்கோவடிகள் படைத்து வழங்கினார். தன் காலத்துக்கு முன்னர் வழங்கிய சமுதாயப் பாடல்களுக்கு இளங்கோவடிகள் இலக்கியத் தகுதியையும் யாப்பு வடிவத்தையும் வழங்கினார்.

தம்முடைய தண்ணளியுந் தாமுந்தம் மான்றேரும்
எம்மை நினையாது விட்டாரோ விட்டகல்க
அம்மென் இணர அடும்புகாள் அன்னங்காள்
நம்மை மறந்தாரை நாமறக்க மாட்டேமால்

—சிலப்பதிகாரம்; கானல்வரி 32

என்பன போன்ற பாடல்களை இளங்கோவடிகள் ஓசை நயம்பட அமைத்துள்ளார். இதற்கு யாப்பமைப்பும், அதன் ஓசையமைப்பும் காரணம் எனலாம். பக்தி மறுமலர்ச்சிக் காலத்தில், இளங்கோவடிகளால் அறிமுகப் படுத்தப்பட்ட பாவினங்கள் மேலும் புதிய மெருகோடு வளர்ச்சியுற்றன. ஆழ்வார்களும் நாயன்மார்களும் பக்திச்சுவையோடு யாப்பு வடிவங்களை இசைத் தமிழாக்கித் தந்தனர்.

காப்பிய காலத்தில் பாவினங்களில் ஒருவகையாகிய விருத்தப் பாக்களின் வளர்ந்த வடிவ வேறுபாடுகளைக் காண்கிறோம். விரிந்து செல்லும் கற்பனைப் பெருக்கை விளக்க, அடிநீண்டு செல்லும் வடிவங்கொண்ட விருத்தப் பாவகையைப் புலவர்கள் தேர்ந்தெடுத்தனர். விருத்தப் பாக்கள் பலவகைச் சந்த வேறுபாடுகளால் பலவகை வடிவங்களில் எழுந்தன. பாக்களில் பயின்றுவரும் சந்த வேறுபாடு, ஒரே வகைப் பாவினத்தில் பலவகை வடிவ வேறுபாடுகளைத் தந்தது.

ஆழநெடுந்திரை ஆறுகடந்திவர் போவாரோ?
வேழநெடும்படை கண்டுவிலங்கிடும் வில்லாளோ?
தோழமை யென்றவர் சொல்லிய சொல்லொரு
சொல்லன்றோ
ஏழைமை வேடன் இறந்திலன் என்றெனை ஏசாரோ

—கம்பராமாயணம்; கங்கைகாண் படலம், 15

என்ற பாடலில் வன்மைச் சந்தம் மிகுந்திருப்பதையும், பாடலைப் பயிலும்போதே வீரவுணர்வு தெறிப்பதையும் அறிய முடிகின்றது.

பஞ்சிஒளிர் விஞ்சுகுளிர் பல்லவம் அனுங்கச்
செஞ்செவிய கஞ்சம்நிகர் சீறடியள் ஆகி

அஞ்சொலிள மஞ்ஞையென அன்னமென மின்னும்
வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்
—கம்பராமாயணம்; சூர்ப்பனகைப் படலம் 31

என்ற பாடலில் பெண் பாத்திரத்திற்கேற்ப மெல்லொலிகள் பயின்று, நடையழகை ஓசை நயத்துடன் விவரிக்கின்றது.

சிற்றிலக்கிய காலத்தில் கலிவெண்பா என்னும் பாவகை இடைவிட்ட அடிதோறும் இறுதியில் முதல் தொடைக்கு ஏற்ற தனிச்சொல் பெற்று, கண்ணி என்னும் பெயரால் கருத்து முற்றுப் பெறுங்காறும் வளர்ந்து செல்லும் ஒருவகை வடிவ அமைப்பைப் பெற்றது. உலா, தூது முதலிய சிற்றிலக்கிய வகைகளில் இத்தகைய புதிய வடிவுடன் கூடிய கலிவெண்பா வகைகளைக் காணலாம். குறவஞ்சி முதலான சிற்றிலக்கியங்களில் இராகம் தாளம் ஆகிய குறிப்புகளோடு கீர்த்தனங்கள் என்னும் இசைப்பா வகைகளின் வடிவங்களும் இடம் பெற்றுள்ளன.

வானரங்கள் கனிகொடுத்து மந்தியோடு கொஞ்சும்
மந்திசிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்
கானவர்கள் விழியெறிந்து வானவரை யழைப்பார்
கமனசித்தர் வந்துவந்து காயசித்தி விளைப்பார்
தேனருவித் திரையெழும்பி வானின் வழியொழுகும்
செங்கதிரோன் பரிக்காலுந் தேர்க்காலும் வழுகும்
கூனலிளம் பிறைமுடித்த வேணியலங்காரர்
குற்றாலத் திரிகூட மலையெங்கள் மலையே
—திருக்குற்றாலக் குறவஞ்சி, 44

என்ற பாடலில் ஓசைநயம் அழகுற அமைந்திருப்பதைக் காணலாம். இது யாப்பின் உதவியால் கிடைத்த பயனாகும்.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் ஆசிய சோதி,

**பின்னி முடிச்சிடம்மா பிச்சிப்பூச் சூட்டிடம்மா**
**என்னும் மொழிகளினி எக்காலம் கேட்பன்ஐயா**
**நெஞ்சில் கவலையெல்லாம் நிற்காமல் ஓட்டும் அந்தப்**
**புஞ்சிரிப்பைக் காணாது புத்திதடு மாறுதையா**

—*ஆசியசோதி; மலரும் மாலையும்*

என்று தாய் மகனையிழந்து புலம்புவதாகக் கூறும்போது, அதன் யாப்பமைப்பு சிறந்த சந்தத்தைக் கொண்டுள்ளது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் யாப்பு வகைகளில் பலவகை வடிவ மாறுபாடுகள் தோன்றின. சீகாழி அருணாசலக் கவிராயர், கோபாலகிருட்டிண பாரதியார், இராமலிங்க அடிகளார், வேதநாயகம் பிள்ளை ஆகியோர் மறுமலர்ச்சிக் கவிதைகளுக்குத் தங்கள் காலத்தில் வித்திட்டார்கள். மொழி எளிமை, உணர்ச்சி, இனிமை ஆகியவற்றோடு கலந்த கீர்த்தனைப் பாடல்களாகிய இசைப்பா வடிவங்கள் தோற்றம் பெற்றன. நந்தனார் சரித்திரக் கீர்த்தனை, இராமநாடகக் கீர்த்தனை, சர்வசமயக் கீர்த்தனை ஆகியன இப்புது இலக்கிய வடிவங்களில் அமைந்தன. இவற்றில் இடையிடையே அழகிய உரைநடைத் தொடர்களும் இடம் பெற்றன. பாரதியார் எளிமையான, இனிய சொற்களைப் பயன்படுத்திக் கவிதை யாத்தார். பேச்சு வழக்கிலுள்ள சொற்களைக் கையாண்டபோதும் பாடல் முறைக்கேற்ப அதை அமைத்தார்.

**ஆயிரங்களான நீதியவை உணர்ந்த தருமன்**
**தேயம் வைத்திழந்தான்; சிச்சீ! சிறியர் செய்கை செய்தான்**

—*பாரதியார் பாடல்கள்; பாஞ்சலி சபதம்:பா. 219*

என்ற அடிகளில் 'சீச்சீ' என்பதை கவிதையாகவே மாற்றி விட்டார் பாரதியார்.

இவ்வாறாக் காலம் காலமாகத் தமிழ் யாப்பு வடிவம் மாறி வந்துள்ளது. ஆயின் இம்மாற்றங்கள் யாப்பு மரபு கட்டுப்பட்டு வந்துள்ளன யாப்புக்குண்டான ஓசைநயத் துடன் வளர்ந்து வந்தன. புதுக்கவிதை முற்றிலும் யாப்பு மரபை மீறி வந்துள்ளது. இதனால் யாப்பால் கிடைக்கும் ஓசை இனிமையும், ஒலி ஒழுங்கும், பொருளுக்கேற்ற சந்த மும் புதுக்கவிதைகளில் அமைவதில்லை. கவிதையின் அடிப் படைக் கூறுகளில் ஒன்றான ஓசைநயம் புதுக்கவிதைகளில் அமையாததால் அவை படிப்பவர் மனத்தில் இடம் பெற முடியாமல் போகலாம். இதனால் உரைநடையாகவே புதுக்கவிதைகள் மதிக்கப்படக் கூடும். இந்நிலையிலிருந்து மாறி ஒலி ஒழுங்கும், ஓசைநயமும், பொருளுக்கேற்ற சந்தமும் அமையுமாறு புதுக்கவிதைகள் தோன்ற வேண்டியது இன்றியமையாததாகும். கவிதையில் அமையும் ஓசைநயமும் படிப்பவர் மனத்தைக் கவர இன்றியமையாததாகும். கம்பநாடனின் 'ஆழ நெடுந்திரை' என்ற பாடலைப் பொருள் தெரியாதவர் படித்தாலும் அதன் வீர, சின உணர்வை நன்கு அறிய முடியும், அது போலவே 'பஞ்சியொளிர்' என்ற பாடலைப் பொருள் தெரியாமல் படிப்பவர் அதன் மென்மைத் தன்மையை உணரமுடியும். இவ்வாறான அமைப்பு முறை கவிதைக்கு மிக இன்றியமையாததாகும். புதுக்கவிதைகள் ஓசை நயத்தோடு அமைய வேண்டிய முறை அதன் நிலை பேற்றுக்கு வழி வகுக்கும்.

'செவிநுகர் கனிகள்' என்றழைக்கப்பட்டுவந்த கவிதை உணர்வு கட்புலனுக்குரியதாகச் சில புதுக் கவிதைகளில் உருவம் மாற்றித் தரப்பட்டுள்ளன.

கி
யூ
வி
லே
ஒரே கூட்டம்

—புதுக்கவிதை போக்கும் நோக்கும், ப.417

மொழி நடை வகையில் ஆங்கிலச் சொற்களை ஆங்கில எழுத்துக்களிலே எழுதும்முறை வருத்தத்திற்குரியதாய் அமைந்து விடுகின்றது.

சில கவிதைகளில் ஆங்கிலச் சொற்கள், வடமொழிச் சொற்கள், கொச்சை மொழிகள், பேச்சு வழக்குகள் பயிற்று வருவதைக் காணலாம். இத்தகைய புதுக்கவிதைகள் பலருக்கு வெறுப்பை விளைவிக்கின்றன.

இவ்வாறான பிற்போக்கு நிலைகள் மாறி ஓசை நயமுடைய நடைச் செம்மை பெற்ற, உருவத்தில் சிறந்த புதுக்கவிதைகள் தோன்ற வேண்டும். அவ்வாறு தோன்றும் கவிதைகள் நிலைபேறடைய முடியும். மற்றவை தோன்றிய வுடன் மறைந்துவிடும். எனவே புதுக்கவிஞர்கள் உருவத்தாலும் சிறந்த கவிதைகளைப் படைக்க உறுதி கொண்டு, புதுக்கவிதைகளை நிலைபேறடையச் செய்ய முயலவேண்டும்.

### உள்ளடக்கம்

அறம், பொருள், இன்பம், வீடு முதலிய பாடுபொருள் களைக்கொண்டு இலக்கியம் அமைய வேண்டும் என்ற நிலை பண்டைக் காலத்தில் நிலவி வந்தது. இலக்கியங்களில்

படைக்கப்படும் கதைமாந்தர்கள் இன்னின்ன முறையில் அமையவேண்டும் என்ற வரையறையும் சுட்டப்பட்டது. அக இலக்கியங்களில் மாந்தரின் இயற்பெயர் சுட்டப்படக் கூடாது; தலைவன் தலைவி முதலியோர் இன்னின்ன பண்பு நலன் களை உடையவர்களாக இருக்க வேண்டும். குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்ட ஒழுக்கம் நிகழ்ந்த தாகப் பாட வேண்டும். பாத்திரங்களின் கூற்றுமொழியாக அமைய வேண்டும் போன்ற பல்வேறு மரபுகள் விதிக்கப் பட்டிருந்தன. அதுபோல் புறப்பொருட் பாடல்களுக்கும் திணை துறை அமைப்புகள் அமைக்கப்பட்டிருந்தன. தொல்காப்பியச் செய்யுளியலிலும், மரபியலிலும் பாடு பொருள் பற்றிய பல செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. இவையெல்லாம் இலக்கியம் குறிக்கோள் தன்மையில் அமைய வழி வகுத்தன. இன்றைய புதுக்கவிதையாளர்கள் இவைகளையெல்லாம் புறக்கணித்துவிட்டு மேலைநாட்டு இலக்கியப் பாணியில் மேனாட்டு இலக்கியங்களை அடியொற்றிக் கவிதை செய்கின்றனர். இனி, பாடு பொருள்கள் புதுக்கவிதையில் சுட்டப்பட்டுள்ள பாங்கி னைக் காணலாம்.

மறுமலர்ச்சிக் கவிதைக்கும் புதுக்கவிதைக்கும் மூலமாக விளங்கும் பாரதியாரின் கவிதையில் புதுக்கவிதையின் உள்ளடக்கம் பற்றிக் கூறப்பட்டுள்ளது.

> **சுவைபுதிது பொருள்புதிது வளம்புதிது**
> **சொற்புதிது சோதி மிக்க**
> **நவகவிதை எந்நாளும் அழியாத**
> **மகாகவிதை**
>
> —பாரதியார் கவிதைகள்

என்பது புதுக்கவிதைக்கு முழுதும் பொருந்தும் எனலாம்.

கருத்துக்கள் தம்மைத்
தாமே ஆளக்
கற்றுக் கொண்ட
புதிய மக்களாட்சி
முறையே புதுக்கவிதை

—மு. மேத்தா

என்ற புதுக்கவிதையாலும் உள்ளடக்கத்தின் புதுப் போக்குக் குறித்து அறிய முடிகின்றது. உருவத்தில் மட்டு மன்று உள்ளடக்கத்திலும் புதுப்போக்குடன் புதுக்கவிதை கள் தோன்றுகின்றன. பொதுவுடைமைத் தாக்கத்தால் புதுக்கவிதைகள் சமுதாய நிலைகளைச் சுட்டுகின்றன. இன்றைய சமுதாயத்தில், வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கினால் பல சமுதாய அவலங்களைக் காணலாம். சமயம், அரசியல், கட்சிகள், நம்பிக்கைகள், குடும்பம் இவைஒவ்வொன்றையும் அவ்வவற்றின் தோற்றமூல காரணங்களோடு சேர்த்துச் சிந்திக்கும் ஆற்றல் படைத் தவர்கட்கு, சமூகவியல் கண்கொண்டு நோக்குபவர்கட்கு, இந்தச் சமுதாயக் கேடுகள் தட்டுப்படாமல் போகாது.

இன்றைய புறவாழ்க்கையில் நாம் காணும் பல்வேறு பிரச்சனைகள், உண்மை நிகழ்ச்சிகள் புறவாழ்க்கையுடன் நின்று போவதில்லை. அவை நம்முடைய வறுமை, வளம், காதல், நட்பு, பக்தி, தத்துவ ஆய்வு ஆகியவற்றிலெல்லாம் மாற்றங்களை உண்டு பண்ணுகின்றன. படைப்பாளர்கள் நம் வாழ் மாற்றங்களை விளைவிக்கும் புறக்கூறுகளில் தம் சிந்தனையை விரிக்கின்றனர். எனவே சுதந்திரம், மக்களாட்சி, சமத்துவம், ஆட்சி அமைப்பு போன்ற நம் கட்டமைப்பை இன்று வழிநடத்தும் அரசியல், இதன் விளைவுகளான சமூகப் பொருளாதாரப் பிரச்சனைகள், இவற்றால் உருவாகும் நடைமுறை வாழ்க்கை ஆகியவை புதுக்கவிஞர்களின் பரிசீலனைக்குட்படுகின்றன.

**சுதந்திரம்**

சுதந்திரத்தைத் 'தேவியாக' உருவகித்து மகிழ்ந்தவர் பாரதியார். 'எங்கும் சுதந்திரம் என்பதே பேச்சு' என்று பள்ளுப் பாடிக் களித்தார். ஆயின் நாடு விடுதலை பெற்று நாற்பது ஆண்டுகளாகியும் முழுமையான சுதந்திரம் ஏற்படவில்லை என்ற சமுதாய நோக்கு புதுக்கவிதை கட்கு உள்ளடக்கமாகின்றது.

**இரவிலே வாங்கினோம்**
**இன்னும் விடியவே இல்லை**

—எ. அரங்கநாதன், விதி, ப. 118

என்ற கவிதை சுதந்திரத்தின் முழுப் பயனையும் அடைய வியலாத நிலையை விளக்குகின்றது.

இன்றைய அரசியல் சாக்கடையாக மாறிவிட்டதை,

**வியாபாரம் செய்பவன்**
**வியாபாரி**
**விபச்சாரம் செய்பவள்**
**விபச்சாரி**
**இரண்டையும் செய்பவன்**
**அரசியல்வாதி**

—முருகன்; கதம்பம், ப. 42

என்ற புதுக்கவிதை படம் பிடிக்கின்றது. அரசியல்வாதி களின் போலி நிலையைக் காட்டுகின்றது.

**வறுமை**

வறுமையைப் பற்றிச் சங்க இலக்கியங்கள் முதல் இன்றைய இலக்கியங்கள் வரை குறிப்பிடுகின்றன. வான் புகழ் வள்ளுவர்,

**இன்மையின் இன்னாதது யாதெனின் இன்மையின்**
**இன்மையே இன்னா தது**

—திருக்குறள் : 1041

என்று வறுமையின் கொடுமையை எடுத்துக்காட்டு கின்றார். புதுக்கவிஞர்களின் சிந்தனையோட்டமும் இதன் பால் செல்லுகின்றது. இதனை நிலைபேறு அடையச் செய்தவர்கள் அரசியல்வாதிகளே என்று அனைவரும் ஒருமித்த குரலோடு பேசுகின்றனர்.

**நாங்கள் நிர்வாணத்தை விற்பனை செய்கிறோம்**
**ஆடை வாங்குவதற்காக**

—நா. காமராசன்; கறுப்பு மலர்கள், ப. 78

என்ற புதுக்கவிதை பரத்தையரின் அவல, வறுமை நிலையினை விளக்குகின்றது. இவ்வாறு சமூகப் பிரச்சனை களை விளக்குமுகமாகப் பல புதுக்கவிதைகள் தோன்றி யுள்ளன.

## ஒருதலைக் காதல்

காதல் விகாரங்களையும், ஆபாச உணர்ச்சிகளையும் சில புதுக்கவிதைகள் கூறுகின்றன.

**கறுப்பு வளையல்**
**கையுடன் ஒருத்தி**
**குனிந்து**
**வளைந்து**
**பெருக்கிப் போனாற்**
**வாசல் சுத்தமாச்சு**
**மனம் குப்பையாச்சி**

—கல்யாண்ஜி, விதி, ப. 15

என்ற கவிதையில் காதலின் வக்கிரத்தை இதில் காணலாம் காதலை மன நோயாகக் கொண்ட ஓர் ஆண் வக்கிரம் இங்குக் காட்டப் பெறுகின்றது. இது உளவியல் தாக்கத்

தால் தோன்றிய கவிதையாகும். இக்கவிதையைப் படிப்பவர், வேலைக்காரியைப் பார்க்கும்போது காதல் விகாரமாகப் பார்க்க வாய்ப்புண்டு. கவிதை சமுதாயத்தைத் திருத்துவதாக, அறிவுரை கூறுவதாக அமைய வேண்டும். சமுதாயத்திலிருந்தும் குறைகளைக் காட்டி அவற்றைத் திருத்த முயலவேண்டும். அவ்வாறின்றிச் சமுதாயத்திற்கு ஊறுவிளைவிப்பதாக, குறைகளைச் செய்யத் தூண்டுவனவாக அமையக் கூடாது. இந்நிலையைப் புதுக்கவிதைகள் மாற்றிக்கொண்டு, நிலைபேற்றுக்கு உதவக்கூடிய சமுதாயப் பார்வையோடு வெளிவர வேண்டும்.

புதுக்கவிதைகள் பல எதிர்மறைக் கண்ணோட்டத்துடன் அமைந்துள்ளன. ‘தேசப்பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி’ என்ற தலைப்பிலமைந்த கவிதை பின்வருமாறு:

**சேரிகளில் மட்டுமே நீ**
**யாத்திரை செய்வாய்**
**என்பதைத்**
**தெரிந்து கொண்டதால்**
**உன்னை நேசித்தவர்கள்**
**தேசத்தையே**
**சேரியாக மாற்றி விட்டார்கள்!**

—மு. மேத்தா, கண்ணீர்ப் பூக்கள், ப. 28

இந்திய நாடே சேரிகளாக மாற்றப்பட்டுவிட்டன என்று புலம்புகின்றது இக்கவிதை. இவ்வாறான போக்குகள் நிறையப் புதுக்கவிதைகளில் காணப்படுகின்றன. தன்னம்பிக்கையையும், அறிவுரையையும் புகட்டி மக்களை மண்ணில் நல்ல வண்ணம் வாழவைக்கும் பணியைக் கவிதைகள் முதன்மை நோக்கமாகக் கொள்ளவேண்டும். அவ்வாறு இன்றி அவநம்பிக்கையூட்டி வாழ்க்கை மீது வெறுப்பை

உண்டாக்குவது நல்லதல்ல. மக்கள் வாழ்க்கைப் பிடிப்போடு வாழ்ந்தால்தான் சமுதாயம் நல்லமுறையில் அமையும், எனவே எதிர்மறைக் கண்ணோட்டத்தைப் புதுக்கவிஞர்கள் மாற்றிக் கொள்ள வேண்டும். பாடுபொருள் சிறப்பானதாகவும், சமுதாயத்திற்கு வழி காட்டக்கூடியதாகவும் அமையுமானால் புதுக்கவிதைகள் மக்களால் வரவேற்கப்படும். கற்பனையும், உணர்ச்சியும் நல்லதை நோக்கியதாக அமைக்கப்பட வேண்டும்.

## முடிவுரை

இலக்கிய வடிவம் காலந்தோறும் மாறிவந்தாலும், யாப்பு மரபுக்கு மீறிப் புதுக் கவிதைகள் அமைந்துள்ளன. நடை நல்லதமிழ் நடையாக அமையவில்லை. உத்திகள் என்ற நிலையில் படிமம், குறியீடு முதலியன பொருட்குழப்பத்துக்கு வழி வகுக்கின்றன. பெரும்பாலான புதுக்கவிதைகளில் ஒலிநயம் அமையவில்லை. உள்ளடக்கத்தில் சிறப்பான, தேவையான பொருள்கள் எடுத்துக்கொள்ளப்பட்டாலும், சில கவிதைகள் சொல்லடுக்குகளாக அமைந்துள்ளன. இந்நிலைகளெல்லாம் மாறி, சிறப்பான கவிதைகள் தோன்ற வேண்டும். மாற்றம் தேவைதான்; ஆனால் வளர்ச்சி நோக்கிய மாற்றமாக அமைய வேண்டும். பழமையை முற்றிலும் புறக்கணித்துப் பழமையில் ஒன்றுமே இல்லை என்ற மனப்பான்மை பல புதுக் கவிதைகளில் தென்படுகின்றது. அவ்வாறின்றி நிலைபேறுடைய மானிட மதிப்புகளை மதிப்பதும் நிலைபேறுடைய மானிட மதிப்புகளையுடையதாகக் கவிதை படைப்பதும் புதுக்கவிதைகள் நிலைபேறடைய இன்றியமையாத் தேவைகளாகும். படைப்புகள் சிறப்பாக அமையுமானால் அவை நிலைபேறடைவது உறுதி; ஆயினும் நிலைபேறு என்பது காலத்தால் அறியப்பட வேண்டிய நிலையாகும்.

# இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் படைப்புகளின் அடிப்படையில் மகளிரைப் பாதிக்கும் செய்திகள்

இருபதாம் நூற்றாண்டு, அறிவியல் விந்தைகள் பற்பலவற்றைப் படைத்துக் காட்டிய நூற்றாண்டு. ஏவுகணைகள், செயற்கைக்கோள்கள், இருதய மாற்றுச் சிகிச்சைகள், சோதனைக்குழாய்க் குழந்தைகள் என எண்ணற்ற புதுமைகள் பூக்கின்ற ஊழியாக இந் நூற்றாண்டு காட்சி தருகிறது. புற உலகில் விளைந்துள்ள பற்பல மாற்றங்களுக்கெல்லாம் மனிதனின் அரம்போலும் கூரிய அறிவே காரணம். இவ்வறிவு அகத்தின் வளர்ச்சிக் கும் செம்மைக்கும் துணைநின்றதா? போரும், பூசலும், கலகமும் மதவெறியும் சாதித்தினவும் மங்கிமடிந்தனவா? ஏழை செல்வர், ஆண் பெண், உயர்ந்தோர் தாழ்ந்தோர் பேதமற நிறுத்துகின்ற சமநிலை கண்ணுக்குத்தெரிகிறதா? கொலைகளும் கொள்ளைகளும் மணவிலக்குகளும் மன முறிவுகளும் அறிவுத்திரிவுகளும் குறைந்திருக்கின்றனவா? இல்லை இல்லை, இல்லை எனலாம்.

> அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
> மக்கட்பண் பிலாத வர்.

ஆம். மனிதன் அறிவைப் பெருக்கிய அளவுஉணர்வைப் பக்குவப்படுத்தவில்லை. அதற்குரிய கருவிகளை அவன்

வளர்த்துக்கொள்ளவில்லை. வானக்கூரையின் கீழ் சரிநிகர் சமானத்தராய் வாழும் வாழ்க்கை கைகூடுவது எந்நாளோ என்று ஏங்கினர் பாவலர். உலகம், நாடு, ஊர், சமுதாயம் என்ற நிலைகளில் சமத்துவமும், ஒப்புரவும், உருவாவதற்கு அடிப்படையான குடும்பத்தில் இவைகள் நிலவுகின்றனவா? பூவின் கிழத்தி, நாவின் கிழத்தி, திருமகள் மார்பன்' அர்த்த நாரீசர், உமையொருபாகன் என்றெல்லாம் நம் புராணங்கள் இந்தச் சமவுரிமையினையும், ஏற்றத்தாழ்வற்ற பால் பகுப்பினையும் காட்ட முயன்றிருக்க, கால வளர்ச்சியும் அறிவியல் நிகழ்வுகளும், பொருளாதார வளமும் நம் சிந்தனைப் பட்டறையில் கூரிய கருத்துகளை உருவாக்கிக் கொண்டிருக்க, ஆண்களும் பெண்களும் ஒருவரை ஒருவர் தாழ்த்தாத, ஒருவர் உரிமைக்கு ஒருவர் இடையூறாய் அமையாத சமுதாயத்தை உருவாக்கியிருக்கிறோமா? பெண்ணுக்கு உரிமை நல்குவது இருக்கட்டும்; பெண்ணைக் கேவலப்படுத்தாமல் இருக்கிறோமா? பெண்ணைப் பாதிக்கும் படைப்புகளை நம் தமிழ்த்தாயே கருத்தரித்தாள் எனும் போது துன்ப அலைகள் நம் நெஞ்சில் எழாமல் போகலாமா?

## பெண் பிறப்பு இழிவானதா?

"மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திட வேண்டுமம்மா" என்றார் கவிமணி. பாரதியும், பாரதிதாசனும், திரு.வி.க.வும் தம் படைப்புகளில் பெண்ணுரிமையை வற்புறுத்திப் பேசியுள்ளனர். எனினும் அறிவியல் வளர்ந்துள்ள இக்காலத்தில் பகுத்தறிவு வளர்ந்துள்ளதாகக் கருதும் இக்காலத்தில் பெண்பிறப்பு

இழிவானதாகவும், சுமையெனவும் கருதப்படுகிறது. தவமிருந்து பெண் பெற்றதாகக் கூறப்பட்ட நிலைமாறிப் பாவம் செய்ததனால் பெண் பிறந்தாள் என்று கூறும் சமுதாய நிலை உருவாகியிருக்கிறது. ஆசைக்குப் பெண், ஆஸ்திக்கு ஆண்; ஐந்து பெண்ணைப் பெற்றால் அரசனும் ஆண்டி எனப் பழமொழிகள் தோன்றிவிட்டன. வரதட்சணைக் கொடுமைகள், பெண்ணை வாழாவெட்டியாக்குகின்றன. நெருப்பில் கருக்குகின்றன. பெண் தற்கொலை செய்துகொள்கிறாள்; கொலை செய்யப்படுகிறாள். இந்த நிலையில் சமுதாயம் Scaner என்ற கருவிகொண்டு பிறக்க விருப்பது பெண் என்றால் கருவைக் கலைத்துவிடும் போக்கைக் கடைப்பிடிக்கிறது. குழந்தை நன்னிலையில் உள்ளதா எனக் கண்டறியத் தோன்றிய Scaner பெண்ணெணில் அழிக்க உதவுகிறது. உசிலம்பட்டி என்ற கிராமத்தில் பிறக்கவிருக்கும் எல்லாப் பெண் குழந்தைகளும் இவ்வாறு கண்டறியப்பட்டுக் கலைக்கப்படுவதாகத் திருச்சி வானொலி நிலைய நேர்முகம் நமக்குத் தெரிவிக்கிறது. இன்றைய இலக்கியங்கள் பெண்ணைக் கவர்ச்சியான வாணிகப்பொருளாக, பாலுணர்வின் குறியீடாகப் படைக்கின்றன. அட்டைப்படம் பெண்ணாகத்தான் இருக்கவேண்டுமென்று இந்த அடிப்படையில் பத்திரிக்கைகள் முடிவு செய்திருக்கின்றன. ஒரு காலத்தில் உள்ளிருக்கும் கதைக்கும் அட்டைப்படத்திற்கும் தொடர்பிருக்கும். இப்போது தொடர்பே இல்லாமல் அரைகுறை ஆடை உடுத்திய ஒரு பெண்ணை அட்டை காட்டுகிறது. நாவல்கள், சிறுகதைகள் எல்லாம் பெண்ணை ஆணுக்கு அடிமையாகவும், பிள்ளை பெறும் இயந்திரமாகவும், கவர்ச்சிப் பொருளாகவும் காட்டுகின்றன. ஜெயகாந்தனின் 'சில நேரங்களில் சில மனிதர்கள்' ராஜம் கிருஷ்ணனின் 'தோட்டக்காரி'

போன்றவை பெண்ணின் முன்னேற்றத்திற்குப் பெண்ணே எப்படித் தடையாகிறாள் என்பதை எடுத்து உணர்த்துகின்றன. அலர் தூற்றுதல், வம்புப்பேச்சு, ஆகியன எல்லாம் பெண்களைக் குறித்தே அமைகின்றன. 1955க்கு முன் மணவிலக்கு என்பது இந்தியாவில் ஒரு புதுமையான செய்தியாகும். இன்று டாக்டர்கள், வழக்கறிஞர்கள், பேராசிரியர்களிடையே மணவிலக்குகள் அதிகமாகியுள்ளன. இதனால் இவர்களின் குழந்தைகள் மனப் பாதிப்படைகின்றனர்.

## ஆணாதிக்க மனநிலை

தலைவன் தலைவி, நாயகன் நாயகி, பொன்னன், பொன்னி, திருடன் திருடி என்றெல்லாம் சமநிலைப் பாற் பெயர்கள் உள்ள சமூக வழக்கில், மனைவி, இல்லாள் என்பதற்கு ஆண்பாற் பெயர்கள் இல்லை. இவை அவளை வீட்டிலேயே இருத்துகின்ற நிலையைக் காட்டும் பெயர்கள். தலைவி என்பது காதல் நிகழ்ச்சியில்தானே தவிர அவைக்குரிய தலைவியாகக் கருதப்படும் நிலையில் இல்லை. Chairman, Cameraman, Manhood, Makeup man என்பனவெல்லாம் ஆணுரிமையின் மேலாதிக்கத்தைக் காட்டும் சொற்கள். பெண்கள் இன்று இத்துறையிலெல்லாம் ஈடுபடுவதற்கேற்பச்சொல்நிலையிலும் Chair Person, Camera Operator, Adult hood, Makeup Person எனப் பொதுமை வேண்டும். எழுதுவோர் இவ்வாறு எழுத வேண்டும். இந்தப் பணி ஆணுக்குரியது, இந்தப் பணி பெண்ணுக்குரியது என்ற பாகுபாடு நீங்கவேண்டும். எல்லா நாவல்களிலும் சிறுகதைகளிலும் சமைப்பவளாகப் பெண்தானே காட்டப்படுகிறாள். அவள் அலுவலகம் போகிறாள், காய்கறி விற்கிறாள், வீடு கட்டுகிறாள், சமைக்கிறாள், என்று எல்லாவற்றுக்கும் உரியவளாகும்

போது ஆண் ஏன் சமையல் செய்வதாகக் காட்டப்படக் கூடாது? நளபாகம், பீமபாகம் என்றெல்லாம் ஆண்சமூகம் கொடிபிடித்துக்கொள்ளும் சமையல் பணியைப் பெண்ணுக்கே ஒதுக்கியிருக்கிறதே ஏன்? சந்தையில் விற்கும் பொருள்களை எல்லாம் நம்முடைய தொலைக் காட்சி அழகாக விளம்பரப்படுத்த, மாப்பிள்ளைகள் அவற்றை மாமனார் வீட்டில் தேடி, கிடைக்காத சூழ் நிலையில் ஸ்டவ் வெடிக்கிறது. 20ஆம் நூற்றாண்டு அறிவியல் வெடிக்காத ஸ்டவ்களைத் தரமுடியவில்லை.

## பெண்வளர்ப்பு

பொருளாதார நிலையில் நடுத்தரக் குடும்பங்கள் பெண்ணின் வளர்ப்பில் சரியான அக்கறை காட்டுவ தில்லை. ஒரு முழுமையான ஆளுமை உள்ளவனாக உருவாக்கப்படாமல், பெற்றோரும் உறவினர்களும் அவளை வீட்டிற் பதுமையாக, தன்னையே நேசித்துத் தனக்குள்ளே குறுகி விடுபவளாக (narcist) ஆணினத்தை அவாவுபவளாக மாற்றப்படுகிறாள். பளபளப்புக்கு இரையாகிவிடுகிற விட்டில்களாக அவர்கள் இன்றைய இலக்கியங்களில் படைக்கப்படுகிறார்கள். ஜான் லாக் (John Locke) என்பார் கூறுவதுபோல், பண்பு, அறிவு, முறையான வளர்ப்பு இவற்றோடு இறுதியாகக் கல்வியும் அளிக்கப்பட வேண்டும். நம் கல்வி, வளர்ப்புமுறை, இலக்கியப் படைப்புகள் சமுதாயத்தைச் சீரழிக்கவே செய்யும். "கற்பென்று சொல்லி வைத்தார் அதை இரு கட்சிக்கும் பொதுவில் வைப்போம்" என்று பாரதி கூறியவாறு நடக்கை நியதிகள் இருவருக்கும் ஒருபடித் தானவை என்பதை இன்றைய இலக்கியப் படைப்புகள் அறிவுறுத்த வேண்டும். நாம் உணர்ச்சிகளுக்கு நம் வாழ்

வில் பேரிடம் அளிப்பதுபோல அறிவு அடிப்படையிலான சிந்தனைகளுக்கு அளிப்பதில்லை. தாயை இருட்டில் வைத்துவிட்டு அவள் காலில் விழுந்து வணங்குவதில் என்ன பயன்? அவளை ஒரு மனிதப் பிறவியாகக் கருதி அவளுக்குரியன செய்யவேண்டும். மனைவியாக ஒரு வீட்டில் குடியேறும் பெண்ணிற்கு ஏற்படும் தான் புறக்கணிக்கப்படுவதாகக் கருதும் உணர்ச்சிநிலை பக்குவமாகக் கையாளப்படவேண்டும். வயது பற்றிய உணர்வு ஆண்களைவிடப் பெண்களுக்கு அதிகமாக இருக்கிறது. பெரும்பாலான பெண்கள் உடலளவில் தாய்மை அடைகின்றனரே தவிர மனநிலையில் சமூக உணர்வு நிலையில் தாய்மை அடைவதில்லை. ஒரு பெண் மணப் பெண்ணாகக் கருதப்படுவதற்கு அவள் உடல் வளர்ச்சியே கருத்தில் கொள்ளப்படுகிறதே தவிர மனவளர்ச்சி, மனப்பக்குவம் கொள்ளப்படுவதில்லை. பருவம் அடைதல் வேறு, மனப்பக்குவம் அடைதல் வேறு என்பதுணர வேண்டும். ஆகவே திருமண வயது பதினாறிலிருந்து இருபதாகவோ இருபத்தைந்தாகவோ தள்ளிவைக்கப்பெற வேண்டும். நம் இலக்கியப் பண்புகள் திருமணப் பருவமாக இருபதுக்கு மேலான வயதையே காட்டவேண்டும்.

## பெண்மையின் பெருமை

பெண்மை வாழ்க என்று கூத்திடுவோமடா பெண்மை வெல்க என்று கூத்திடுவோமடா என்றும், வலிமை சேர்ப்பது தாய்முலைப் பாலென அறிவோம் என்றெல்லாம் பாடிப் பரவித் தாய்மை என்பதைப் பெண்ணின் உயர்ந்த நிலையாகக் காட்டினர். இருபதாம் நூற்றாண்டின் எழுத்தாளர்கள் பெண் சமூகத்தில் போராடிச் சீர்குலைத்து போவதைக் காட்டி நம் இரக்கத்தைத்

தூண்டிக் காசுபெறும் வித்தையாக எழுத்தைப் படைக்கின்றனர். நீச்சலுடைக் காட்சியில் ஒரு பெண் வரும் திரைப்படத்திலேயே மற்றொருத்தி முழு ஆடையில் நின்று நாகரிகத்தைப் பேசுகிறாள். தமிழ்ப் பண்பாடு, இந்தியப் பண்பாடு என்பனவெல்லாம் பெண்ணை வீட்டில் பூட்டி வைக்க ஏற்பட்டன அல்ல. 'தற்காப்பு' என்ற சொல்லுக்கு இருபதாம் நூற்றாண்டளவில், மனத்தாலும் நினைவாலும் தன்னைக் காத்தல் என்பது மட்டுமன்றி உடலளவிலும் கயமையை எதிர்த்துப் போராடும் திண்மை பெற்றவளாக அவள் மாறுவதை நம் படைப்புகள் காட்ட வேண்டும். ஜான்ஸிராணி சமூகத்தில் எப்போதோ தோன்றும் ஒரு விந்தைப் பிறவி என்ற கருத்து மாறி பெண் வனப்புடையவள் மட்டுமல்லள்; வலிமையும் உடையவள் என்ற கருத்து தோன்ற வேண்டும். இந்திராகாந்தியும், மார்கரெட் தாட்சரும், அக்கினோவும், ஒரு நாட்டின் ஆட்சியைப் பெண்கள் நடத்துவது விந்தைச் செயலன்று என நிறுவியவர்கள். ஆகவே பெண் எல்லாப் பணிகளுக்கும் உரியவள் என்ற மனப்பாங்கை நம் எழுத்தாளர்கள் வளர்க்கவேண்டும்.

## சமூகத்தை மாற்றுக

ஒரு சமூகத்தின் புத்தெழுச்சிக்கும், மறுமலர்ச்சிக்கும் எழுத்துத் துறை பெரிய துணையாக முடியும். இந் நூற்றாண்டில் இனிவரும் படைப்புகள் பெண்குலத்தின் பெருமை பேசினால் போதாது; அதன் துன்ப நிலைகள் மாறுதற்குரிய வழிவகைகளைக் கற்பிக்கவேண்டும். மாதர் தம்மை இழிவுசெய்யும் மடமை கொளுத்தப்பட வேண்டும். கைம்மை என்ற பெயரால் பெண்களை ஒதுக்கித்தள்ளி அருவருப்பான சமூக நிலைக்கு

ஆளாக்குதல் கூடாதென்பது வற்புறுத்தப் பெறவேண்டும். நாதசுர வித்வான் மதுரை பொன்னுத்தாயி ஆனந்த விகடனுக்களித்த நேர்முகம் ஒன்றில் தான் கைம் பெண்ணான பிறகு திருமணம் போன்ற மங்கல நிகழ்ச்சி களுக்குத் தான் அழைக்கப்படுவதில்லை எனக் கூறி யுள்ளார். இத்தகைய மூடத்தனமான கருத்துகளை இதழ்கள் கண்டிக்கவேண்டும். மறுமணம், எல்லா எழுத்தாளர்களாலும் முழுமனத்தோடு ஏற்கப்பட்டுப் பரப்பப்பட வேண்டும். பெண்களின் மனநிலைகளைப் பல்வேறு சமூகச் சூழல்களிலிருந்து படம்பிடித்து எழுது கின்ற உயிருள்ள எழுத்து உலா வரவேண்டும். (Wundt, Freud, Adler, Juny Jolman Skinner) போன்ற மேலை நாட்டு எழுத்தாளர்களைப் போல் உளவியல் பகுப்பாய்வு முறையில் சமூக நாடிகளை ஆராய்ந்து அவற்றை மாற்றுதற்கும், தீவிரப்படுத்துதற்கும், பெண் களாய் பன்னெறியில் முன்னேற்றுதற்கும் நம் எழுத்தாளர் கள் முயலவேண்டும். பருவம் வாரா இளமையில் மணம் என்ற பெயரில் பலிகொடுத்தல் வயது மூத்தவர்க்கு இளம் பெண்களை மணம் செய்துகொடுத்து அவர்களை மீளாத் துயரத்துக்கு ஆளாக்கல், பொன்னும் பொருளும் சொத்தும் உடையவர் எனக் கருதி மற்றவற்றைக் கருதாமல் மணம் செய்தளித்தல், ஆகியன பெண்ணுக்கு வாழ்வளிக்கும் முயற்சிகளல்ல என்பதைச் சமூகம் உணருமாறு எழுத்தாளர்கள் செய்யவேண்டும். நம் கல்விக் கூடங்கள் பெண்களுக்கு உரிமைகளையும், சட்ட அறிவையும், சமூகத்தில் அவர்களுக்குரிய பங்கையும், தீமைகளை எதிர்த்து நிற்கும் உரத்தையும் அளிக்க வேண்டும். பெண்களின் உள்ளக் குமுறல் வெடித்தெழும் இடங்களில் அதற்கு மதிப்பளித்துப் பொறுமையாக

கேட்கிற ஒரு பண்பை, இச்சமூகம் பெறவேண்டும். ஆக்ஸிஜனும், ஹைடிரஜனும் கலந்த கலப்பே தண்ணீராதல் போல ஆணும் பெண்ணும் சேர்ந்தமைவதே வாழ்க்கை எனக் கருதும் நடுவுநிலை மனம் எல்லார்க்கும் வேண்டும் 'நீயொரு பாதி இங்கு நானொரு பாதி இதில் யார் பிரிந்தாலும் வேதனை பாதி, என்று கூறுவது போல ஒருவரின தாழ்வு மற்றவரின் உயர்வு ஆகாது என உணரும் மனநிலை உருவாக நாம் குரல் கொடுப்போம்

# புதுநெறி காட்டிய புலவன்

இந்திய தேசிய விடுதலை விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடுகிறோம். பாரத நாடு அடிமைத் தளையில் கட்டுண்டு கிடந்த அந்நாளில் தமது தேசிய கீதங்களால் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பிய ஒரு பெரிய கவிஞரின் திருநாளினையும் நாம் கொண்டாடுகின்றோம்.

மகாகவி பாரதி சின்னஞ்சிறு வயதிலேயே பாடல்கள் புனையும் கவித்திறம் வாய்க்கப் பெற்றார். எட்டைய புர சமஸ்தானத்தில் அவர் தந்தையார் சின்னசாமி ஐயர் வேலையில் இருந்தார். பெரும் புலவர்களும் பாராட்டும் கவிவன்மை பாரதியிடம் காணப்பட்டதால் 'பாரதி' என்ற பெயர்—கல்விக்கு அதிதேவதையான சரசுவதியின் பெயர்—இவருக்குப் புலவர்களால் வழங்கப்பட்டது. பாரதி வறுமையிலே வாடிய புலவர்; ஆயினும் வறுமையிற் செம்மை கண்டவர். எந்தச் சூழ்நிலையிலும் நாட்டு விடுதலைக்குப் பாடுபடும் நல்ல குறிக்கோளினை மறவாதவர்; கை விடாதவர். குறிக்கோள் நிறைந்த—பிறருக்குப் பயனளிக்கும்—வாழ்க்கை வாழ்ந்தவர்.

இவர் தொண்டுகள் பல திறத்தன. நாட்டிற்கும், மொழிக்கும், பெண் சமூகத்திற்கும் சமுதாயப் பொதுமைக்கும் இவர் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியன.

முதலாவது இவர் நாட்டிற்காக ஆற்றிய நற்பணி களைக் காண்போம்.

என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்
என்றுமடியுமெங்கள் அடிமையின் மோகம்?
என்றெம தன்னைகை விலங்குகள் போகும்?
எனறெம தின்னல்கள் தீர்ந்து பொய் யாகும்?

என்று சுதந்திர வேட்கையும் துடிப்புங் கொண்டவர் பாரதியார். கொடுமை பல செய்த அன்னிய ஆங்கில ஆட்சியை நோக்கி அவர் ஆண்மையுரை ஆற்றுவதைக் கீழ்க்காணும் பாடல் வரிகளால் அறியலாம்:

நாங்கள் முப்பது கோடி ஜனங்களும்
நாய்களோ? பன்றிச்—சேய்களோ?
நீங்கள் மட்டு மனிதர்களோ இது
நீதமோ பிடி—வாதமோ?

என்று கேட்டு,

"சதையைத் துண்டு துண்டாக்கினும் உன் எண்ணம் சாயுமோ? ஜீவன் ஓயுமோ?" என்று தம் மாறாத நிலை குலையாத மனவுறுதியைப் புலப்படுத்துகின்றார்.

வந்தே மாதரம் என்போம்—எங்கள்
மாநிலத் தாயை வணங்குதும் என்போம்

என்று பாரத மாதாவை வணங்கும் வாழ்வினை வகையுற எடுத்து மொழிகின்றார்.

நாமிருக்கும் நாடு நமது
என்ப தறிந்தோம்—இது
நமக்கே உரிமையாம்
என்ப தறிந்தோம்

என்று ஆணித்தரமாகக் கூறி,

பூமியில் எவர்க்கும் இனி
அடிமை செய்யோம்—பரி
பூரணனுக் கேயடிமை
செய்து வாழ்வோம்

என்று இறைவன் ஒருவனுக்கே ஆட்பட்ட ஆன்ம நிலையினை எடுத்து மொழிகின்றார்.

மேலும் சுதந்திரப் பயிரை வாடிவிடாமல் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தைத் தமக்கே உரிய அரிய கவிதைப் பாங்கில் அவர் அறிவுறுத்துவதன் அருமையைப் பின்வரும் வரிகள் கொண்டு உணரலாம்:

தண்ணீர்விட்டோ வளர்த்தோம்
சர்வேசா! இப்பயிரைக்
கண்ணீராற் காத்தோம்
கருகத் திருவுளமோ?...
ஓராயிர வருடம்
ஓய்ந்து கிடந்தபின்னர்
வாராது போல வந்த
மாமணியைத் தோற்போமோ?

பாரத நாட்டினைப் பாடும் பொழுது அவர் உள்ளத்தில் தோன்றும் பெருமித மிடுக்கினைப் பாருங்கள். அவர் தாயும் தந்தையும் மகிழ்ந்து குலாவி வாழ்ந்தது இந்த நாடாம். அவருக்கும் முன்னோர்கள் பலர் வாழ்ந்து முடிந்ததும் இந்த நாடுதானாம்.

எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே

என்று கூறி,

பாரதநாடு பழம்பெரு நாடே
பாடுவர் இஃதை எமக்கிலை ஈடே

என்கிறார்.

பாரத நாட்டைப் பாடும் பாரதி, தாம் பிறந்த தாய்த்திருநாடாம் தமிழ் நாட்டை மறந்தாரல்லர்.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே

என்று பாடுகிறார்.

ஆங்கிலம், இந்துஸ்தானி பிரெஞ்சு முதலிய மொழிகள் கற்ற பாரதி,

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல்
இனிதாவது எங்கும் காணோம்

என்று பாடுகிறார்.

ஷெல்லியின் கவிதையில் பெரும் ஈடுபாடு கொண்ட பாரதி இவ்வுலகிலேயே கம்பர், வள்ளுவர், இளங்கோவைப் போன்ற புலவர்களைக் காணல் அரிது என்று பாடுகின்றார்.

யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை
உண்மை; வெறும் புகழ்ச்சி யில்லை

என்கிறார்.

"சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே" என்று கூறும் பாரதியார் தமிழ் இலக்கியச் சுவை தேவருலக இன்பத்திற்கு ஈடானது என்கிறார்.

தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்.

## பொதுவுடைமைத் தத்துவம்

இக்காலத்தில் பெரிதாகச் சொல்லப்படும் பொதுவுடைமைத் தத்துவத்தை (Socialism) அன்றே முழங்கியவர் பாரதி. பாரதத் தாய் முப்பது கோடி மக்களைக் கொண்டிருந்தாலும் அவளுக்கு உயிர் ஒன்றேதானாம்; பதினெட்டு மொழிகள் பாரத நாட்டில் நில்வினாலும் அவை வெளிப்படுத்தும் சிந்தனை ஒன்றேதான் என்றும் குறிப்பிட்டார். இன்பமோ துன்பமோ, அந்நிலை முப்பது கோடி மக்களுக்கும் பொது என்றார். வாழ்ந்தால் முப்பது கோடியும் வாழவேண்டும்; இன்றேல் முப்பது கோடியும் வீழவேண்டும் என்றார்.

முப்பதுகோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்—இவள்
செப்பு மொழிபதி னெட்டுடையாள் எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்
எப்பதம் வாய்த்திடுமேனும் நம்மில்
யாவர்க்கும் அந்தநிலை பொதுவாகும்
முப்பதுகோடியும் வாழ்வோம்—வீழில்
முப்பதுகோடி முழுமையும் வீழ்வோம்

மேலும், மக்கள் மட்டுமின்றிக் காக்கையும் குருவியும், நீள்கடலும் மலையும் தம் கூட்டமாக, உறவாகக் கண்டவர் பாரதி.

**காக்கை குருவி எங்கள் ஜாதி நீள்**
**கடலும் மலையும் எங்கள் கூட்டம்**
**நோக்கும் திசையெலாம் நாமன்றி வேறில்லை**
**நோக்க நோக்கக் களியாட்டம்!**

நாட்டின் ஒருமைப்பாட்டைக் (National Integration) குறிப்பிடும்போது சிந்து நதியில் ஓடும் படகில் சேரநாட்டு பெண்களுடன் சுந்தரத் தெலுங்கில் பாட்டிசைத்துத் தோணிகளோட்டித் தமிழர் உலா வரலாம் என்றார்.

**சிந்துநதியின்மிசை நிலவினிலே**
**சேரநன்னாட்டிளம் பெண்களுடனே**
**சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்**
**தோணிகளோட்டி விளையாடி வருவோம்.**

இந்திய மக்கள் அனைவரும் ஒற்றுமையாக வாழ வேண்டியதன் அவசியத்தைப் பின்வருமாறு வற்புறுத்து கின்றார்:

**ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்**
**ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே**
**நன்றிது தேர்ந்திடல் வேண்டும்—இந்த**
**ஞானம் வந்தாற்பின் நமக்கெது வேண்டும்?**

நனவாக வேண்டிய கனவுகளைக் கவிஞர் காண்கிறார். சிங்களத் தீவிற்கொரு பாலமும், சேதுவை மேடுறுத்தி ஒரு வீதியும் அமைக்க வேண்டும் என்றும் கூறும் கவிஞர் வங்கத்தில் உபரியாக ஓடி வரும் நீரின் மிகுதியைக் கொண்டு மையத்து நாடுகளில் பயிர் செய்வோம் என்கிறார். இப்போது கங்கை-காவிரி இணைப்புப் பற்றிப் பேசப்படுகிறது. எனவே பாரதியாரை, 'மக்கள் ஆக்கா

மனுவேந்தர்' என்று (Poets are the unacknowledged legislators of the world-Shelley) கூறிய கூற்றை மெய்ப்பித்த கவிஞராகக் குறிப்பிடலாம். சுதந்திரம் வருவதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்னரேயே,

**ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே**
**ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோம்**

என்று தீர்க்க தரிசனத்தோடு பாட்டுப் பாடியவர் பாரதியார்.

## பெண்கள் முன்னேற்றம்

"அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?" என்று பேசப்பட்ட காலத்தில்,

**மாதர் தம்மை இழிவு செய்யும்**
**மடமையைக் கொளுத்துவோம்**

என்று முழங்கியவர் பாரதி. பெண்ணின் பெருமையைக் கூறுமுகத்தான,

**தாய்க்குமேல் இங்கேயோர் தெய்வமுண்டோ?**
**தாய் பெண்ணே யல்லளோ?**

என்று கேட்டு,

**பெண்ணுக்கு விடுதலை நீரில்லை யென்றால்**
**பின்னிந்த உலகினிலே வாழ்க்கை யில்லை**

என்று கூறுகிறார். மேலும் அவர், பெண்ணுக்குக் கடவுள் ஞானத்தை வைத்ததாகவும், உலகில் மூடர் சிலர் பெண் அறிவைக் கெடுத்ததாகவும், 'இரண்டு கண்களில் ஒன்றைக் குத்திக் காட்சி கொடுத்திட முடியுமா?' என்றும் கேட்டு இறுதியில், 'பெண்கள் அறிவை வளர்த்தால் உலகில் உள்ள

எல்லா வேற்றுமைகளும் நீங்கிவிடும்' என்கிறார். நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நிமிர்ந்த ஞானச் செருக்குங் கொண்ட செம்மை மாதராகப் புதுமைப் பெண்ணைப் பாரதியார் படைத்துக் காட்டு கிறார். விரும்பிய ஆண்மகனை மணந்து, அவன் அறச் செயல்களுக்கெல்லாம் துணை நின்று, முன்னைக் காட்டி லும் மாதர் அறங்களைச் சிறப்பாகச் செய்வோம் என்று புதுமைப் பெண்கள் முழக்கமிடுகின்றார்கள்.

அடுத்து, குழந்தைகளுக்கு நல்ல அறிவுரைகளைப் பாரதியார் பகர்ந்துள்ளார் 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்பது பழமொழி. பாரதியாரின் பாப்பாப் பாட்டு உலகமொழிகள் அனைத் திலும் மொழிபெயர்க்கப்பட வேண்டிய அற்புதமான பாட்டாகும்.

> **சாதிகள் இல்லையடி பாப்பா குலத்**
> **தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்**

என்று குறிப்பிட்டு, துன்பம் நெருங்கி வந்தபோதும் சோர்ந்துவிடலாகாது என்று குறிப்பிட்டு, அறிவு மிகுந்த தெய்வம் வருந்துன்பம் அத்தனையும் போக்கிவிடும் என்றும் குறிப்பிடுகின்றார். எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்துதலும், தெய்வம் உண்மையென்று அறைதலும், வயிரம் போன்று உறுதி வாய்ந்த நெஞ்சமும் வாழும் முறைகள் என்று வகையுற எடுத்து மொழி கின்றார்.

> **உயிர்களிடத்தில் அன்பு வேணும்; தெய்வம்**
> **உண்மையென்று தானறிதல் வேண்டும்**
> **வயிர முடைய நெஞ்சு வேணும்—இது**
> **வாழும் முறைமையடி பாப்பா!**

என்கிறார்.

## சமுதாய நோக்கு

**ஊருக்கு நல்லது சொல்வேன்—எனக்கு**
**உண்மை தெரிந்தது சொல்வேன்**

என்று பாரதி ஓரிடத்தில் குறிப்பிடுவது போன்று, அரிய பல கருத்துக்களைத் தம் பாடல்களில் வழங்கியுள்ளார்.

**ஏழையென்றும் அடிமையென்றும்**
**எவனும் இல்லை ஜாதியில்**
**இழிவுகொண்ட மனிதரென்பது**
**இந்தியாவில் இல்லையே**

என்று வர்க்க பேதமற்ற ஒரு சமுதாயத்தை (Classless Society) படைத்துக் காட்டுகிறார். முப்பது கோடி ஜனங்களுக்கும் பொதுவான ஒரு சமுதாயத்தை உலகத்திற்கே பொதுவாகப் படைத்துக் காட்டவேண்டும் என்று எண்ணுகிறார் பாரதியார். மேலும் இங்கு வாழ்வோர் அனைவர்க்கும் சோறுண்டு; உழைத்தே வாழவேண்டும்; உழைக்காமல் பிறர் உழைப்பில் வாழ்வது திருட்டு என்று பேசுகிறார் பாரதியார்.

**வயிற்றுச் சோறுண்டு கண்டீர்—இங்கு**
**வாழும் மனிதரெல்லோர்க்கும்**
**பயிற்றி உழுதுண்டு வாழ்வீர்—பிறர்**
**பங்கைத் திருடுதல் வேண்டாம்.**

## தொழில் முன்னேற்றம்

பாரதியார் தம்முடைய தொழிலாகப் பின்வருமாறு கூறியிருக்கிறார்:

**நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்குழைத்தல்**
**இமைப் பொழுதுஞ் சோராதிருத்தல்**

கலைவளமும், இசைவளமும், காட்டுவளமும் மிக வேண்டும் என்பதிலே பாரதிக்கு ஆர்வம் மிகுதி.

காவியமே செய்வோம், நல்ல காடு வளர்ப்போம்
கலை வளர்ப்போம்; கொல்லர் உலை வளர்ப்போம்
ஓவியம் செய்வோம், நல்ல ஊசிகள் செய்வோம்

அன்ன சத்திரம் கட்டுதலினும், ஆலயம் பதினாயிரம் எழுப்புதலினும், ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தலே உயர்ந்த அறம் என்று போற்றுகின்றார். ஓயாமல் உழைக்க வேண்டும்; செய்யும் தொழிலில் உயர்வு தாழ்வு இல்லை. இரும்பைக் காய்ச்சி உருக்கிட வேண்டும்; இயந்திரங்கள் செய்திட வேண்டும்; கரும்பைச் சாறு பிழிந்திட வேண்டும்; கடலில் மூழ்கி முத்தெடுத்திடுதல் வேண்டும் என்று குறிப்பிடுகின்றார்.

## பாரதியாரின் முப்பெரும் பாடல்கள்

பாரதியாரின் கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு முதலியன பாரதியாரின் கவிதைச் சிறப்பினை எதிர்காலத்தில் என்றென்றும் பறையறைந்து கொண்டிருக்கும் என்று தமிழறிஞர் கூறுவர். கண்ணனைத் தாயாக, தந்தையாக, தோழனாக, சேவகனாக எண்ணிப் பாரதியார் பாடியிருக்கும் பாடல்கள் எல்லாம் கவிதைக் கனி பிழிந்த சாறுகள் எனலாம். பாரதத் தாய் அடிமைத் தளையில் கட்டுண்டு துன்பப் பட்ட நிலையும், ஒருநாள் அன்னையின் அடிமை விலங்குகள் ஒடிந்து இந்திய மக்களின் இன்னல்கள் தீரும் என்பதனைப் பாரதியார் (Symbolic) —ஆகப் பாஞ்சாலி சபதத்தில் காட்டுகின்றார். “கட்டுண்டோம்; பொறுத் திருப்போம், காலம் மாறும்” என்று பாஞ்சாலி சபதத்தில்

வருகின்ற வரிகள் பாரத விடுதலையை மனத்தில் கொண்டு பாடியவையாகும்.

## கடவுள் நெறி

ஞாலம் முழுவதையும் பராசக்தியின் தோற்றமாகக் கண்ட இவர்,

> **அன்னை வடிவமடா! இவள்**
> **ஆதிபராசக்தி தேவியடா—இவள்**
> **இன்னருள் வேண்டுமா—பின்னர்**
> **யாவு முலகில் வசப்பட்டுப் போமடா**

என்கிறார் பாரதியார். "ஆயிரந் தெய்வங்கள் இல்லை; அறிவே தெய்வம் என்று பல்லாயிர வேதங்கள் முழங்கு கின்றன" என்கிறார். காக்கைச் சிறகின் கருமையிலும், பார்க்கும் மரங்களின் பசுமையிலும், கேட்கும் ஒலியிலும் கண்ணன் பரமாத்மாவின் நிறமும் வடிவும் கீதமும் விளங்குவதாகக் குறிப்பிடுகின்றார். ஏசுபெருமானையும் அல்லாவையும் சிறப்பித்துப் பாடியுள்ளார்.

## குயில் பாட்டு

பாரதியாரின் கற்பனை வளத்தையும், உணர்ச்சி உந்தல்களையும் குயில் பாட்டில் கண்டு மகிழலாம்.

> **காதலை வேண்டிக் கரைகின்றேன் இல்லையெனில்**
> **சாதலை வேண்டித் தவிக்கின்றேன்**

என்ற குயிலின் சோகக் குரல் நம் காதுகளில் விழுந்து கொண்டேயிருக்கின்றது. வேதாந்தக் கருத்து இணையும் கவிதை குயில் பாட்டாகும்.

## பாரதியின் விருப்பம்

"காணி நிலம் வேண்டும்
பராசக்தி – காணி நிலம் வேண்டும்"

என்ற பாடல்கள் பாரதி தன் மன விருப்பத்தைப் புலப் படுத்தியுள்ளார். காணி நிலத்திடை ஒரு மாளிகையும், மாளிகையைச் சுற்றித் தென்னை மரங்களும், தென்னங் கீற்றை யூடுருவி நிலவொளியும், காது குளிரச் செய்யும் குயிலோசையும், சித்தம் மகிழச் செய்யும் இளந்தென்ற லும், பாடிக் கலந்து மகிழ ஒரு பத்தினிப் பெண்ணும், இவ்வனைத்தும் எய்திடவும், எய்தியது நீங்காமல் நிலைத்திடவும். காட்டு வெளியினிலே அன்னை பராசக்தி கட்டுக் காவலும் வேண்டுமென்று பரவுகின்றார்.

# கண்ணம்மா-என் குழந்தை

பாட்டுக்கொரு புலவன் பாரதி நாட்டுக்குத் தந்த கவிதைகள் பல. அடிமைத் தளையில் அல்லலுற்ற பாரதத் தாயை விடுவிக்க நாட்டு மக்கள் உள்ளத்தில் கிளர்ச்சி ஊட்டி எழுச்சியூட்டிய பாடல்கள் தேசீய கீதங்கள் பக்தி வலையிற்பட்டுத் தெய்வத்திற்கு ஞானச் சுடர்விளக்கு ஏற்றப் பாடிய பாடல்கள் தெய்வப் பாடல்கள். உள்ளத்தில் ஊறி வரும் உணர்ச்சிப் பெருக்கிலே எழுந்த பிற பாடல்கள் தனிப் பாடல்கள். அவர் தம் சுயசரிதையும் வசன கவிதையும் இதில் அடங்கும். கண்ணனைத் தாயாக, தந்தையாக, காதலியாக, காதலனாக, சீடனாக, சற்குருவாக, குழந்தையாக, விளையாட்டுப் பிள்ளையாக எண்ணிப் பாடிய பாடல்கள் கண்ணன் பாட்டு. பாரதக் கதையின் ஒரு பகுதியாம் பாஞ்சாலி சபதத்திற்குப் புது மெருகும், பொலிவும், வனப்பும், புதுமையும் பூத்துக் குலுங்கப் பாடியதே பாஞ்சாலி சபதம். 'முன்னிக் கவிதை வெறி மூண்டே நனவழியப் பட்டப் பகலிலே பாவலர்க்குத் தோன்றுவதாம் நெட்டைக் கனவின்' நிகழ்ச்சியிலே எழுந்தது குயில்பாட்டு. இவ்வாறு பல்வேறு கோணங்களிலே பல்வேறு மனநிலையிலே பல பொருள் பற்றிப் பாரதியார் பாடியிருக்கின்றார், 'அவர் தொடாதது ஒன்றுமில்லை; தொட்டதை அழகு படுத்தாமல் விட்டதில்லை' என்ற கூற்றிற்கிணங்க பாரதி கையாளாத துறை கவிதையில் இல்லையெனலாம். ஆயினும் இவ்வனைத்திலும் நம் நெஞ்சை ஈர்ப்பன பாரதியின் கண்ணன் பாடல்கள்தான்.

கண்ணனைப் பாடாத கவிஞர்கள் குறைவு. தமிழ் நாட்டுக் கவிஞர்கள் கண்ணனிடம் கொண்ட ஈடுபாடு மிகுதி. கண்ணனைக் குழந்தையாக எண்ணிப் பல பாடல்களைப் பாடியவர் பெரியாழ்வாராகும். பிள்ளைத் தமிழ் என்று தமிழில் பெருகி வளர்ந்த இனியதொரு வகைக்கு வித்தூன்றிய பெருமை அவரைச் சாரும். குலசேகராழ்வார் கௌசலை வயிற்றுதித்த இராகவனுக்குத் தாலாட்டுப் பாட்டுப் பாடினார். அதனையொட்டிப் பாடிய பெருமை குமரகுருபரர்க்கும் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞர் பாரதியையும் சாரும்.

'குழந்தையினுடைய மனநிலையைப் பெறாத எவரும் என் மோட்ச உலகிற்குள் நுழைய முடியாது' என்றார் ஏசுபெருமான். 'குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே' என்பது நம் நாட்டுப் பழமொழி. குழந்தையைத் தெய்வமாகவும் தெய்வத்தைக் குழந்தையாகவும் கண்டவர் பாரதி. அப்படிக் கண்ட நிலையிலே பிறந்த கவிதைதான்—பாட்டுத்தான் 'கண்ணம்மா என் குழந்தை' என்பது.

'சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா' என்று தொடங்கும் பாட்டு யாவுமாய் எங்குமாய் நீக்கமற நிறைந்திருக்கின்ற பராசக்தியைக் குழந்தையாகக் கண்டு சொல்லிய பாட்டாகும். 'சிறுகதையின் தொடக்கமும் முடிவும் குதிரைப் பந்தயத்தின் தொடக்கமும் முடிவும் போல விறுவிறுப்பாயிருக்க வேண்டும்' என்று சொன்னான் மேலை நாட்டு மேதை ஒருவன். அக் கூற்று, கவிதைக்கும் பொருத்தமுடையதே. அம் முறைப்படி இப் பாட்டின் தொடக்கமே 'சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா! செல்வக் களஞ்சியமே! என்று தொடங்குகின்றது. 'கிளி போலப் பெண் அழகாயிருக்கிறாள்'

என்று கிளியையே நாம் அழகிற்கு எல்லையாகப் பேசுகிறோம். குழந்தை சின்னஞ்சிறு கிளி; சிங்காரக் கிளி, செல்வம்—பணம் தேயும் நிலையுடையது. ஆனால் இக்குழந்தைச் செல்வமோ வளர்ச்சியும் வாழ்வும் உடையது. எதிர்காலத்திற்கெனச் சேமித்து வைக்கக் கூடியது; செல்வக் களஞ்சியம். 'புத்' என்ற நரகத்திற்குப் போகாமலிருக்கப் புத்திரர் வேண்டும் என்கின்றன வடமொழி நூல்கள் 'பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த மக்கட் பேறல்ல பிற' என்றார் தெள்ளு தமிழ் வள்ளுவர். 'இம்மை யுலகத்து இசையுடன் விளங்கி மறுமை யுலகமும் மறுவின் றெய்துப சிறுவர் பயந்த செம்மலோர்' என்கிறது அகம். 'படைப்புப் பல படைத்துப் பலரோடு உண்ணும் உடைப்பெருஞ் செல்வ ராயினும் மயக்குறுமக்களை இல்லோர்க்குப் பயக்குறை இல்லைத் தாம் வாழுநாளே' என்று குழந்தைக் குலத்தின் சிறப்பைச் சொல்லிலே வடித்தான் சங்ககாலப் பாண்டியன் அறிவுடை நம்பி. அம் மரபில் வந்த பாரதியார் 'என்னைக் கலி தீர்த்தே ஏற்றம் புரிய வந்தாய்' என்று பாடுகிறார், 'ஏழ்பிறப்பும் தீயவை தீண்டாப் பழி பிறங்காப் பண்புடை மக்கள் பெறின்' என்ற வள்ளுவர் வழி நிற்கிறார் பாரதி. 'பிள்ளைக் கனியமுதே கண்ணம்மா! பேசும் பொற் சித்திரமே' என்ன அழகான உயிரோட்டமான தொடர். ஊமைப்பட சினிமாக் காலத்திலே வாழ்ந்து அதன் பின்னர்ப் பேசும்பட சினிமாப் பார்த்தவர்க்கு இத்தொடரின் அருமை விளங்கும். 'ஒருவன் உள்ளத்தில் அழகொழுக எழுதிப் பார்த்திருக்கும் உயிரோவியமே' என்று பாடினார் பதினேழாம் நூற்றாண்டின் இணையற்ற தெய்வக் கவிஞரான குமர குருபரர் ஆனால் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞரான பாரதி 'பேசும் பொற்சித்திரமே' என்று குழந்தையைப்

பாராட்டினார். பேச்சு கேட்பதற்கு இனிமையாயிருக்கிறது. பொன் வண்ணம் உடலுக்கு வனப்பூட்டுகிறது. சித்திரம் காண்பதற்கு மகிழ்வூட்டுகிறது. தெருப்புழுதியில் அளைந்து விளையாடிய அழுக்குக் கைகளோடு அப்பாவைக் கண்டு ஓடிவரும் குழந்தையாகயிருந்தாலும் கூட அள்ளி அணைத்திடவே ஆசை தோன்றும். கண்ணம்மா ஓடி வருகையில் உள்ளம் குளிருகிறது; ஆடித் திரிகையில் ஆவியே, உயிரே ஓடிப்போய்த் தழுவுகிறது. உச்சியினை முகர்ந்தால் வராத கர்வமும் வந்துவிடுகிறது. கண்ணம்மாவை மெச்சி ஊரார் புகழ்ந்தால் உடம்பு புல்லரிக்கின்றது. கள்ளுண்டு களித்து மயங்கிய நிலையையே களிப்பு—மகிழ்ச்சியின் போதை நிலை என்பர் தமிழில். அப்படிப்பட்ட நிலைக்குக் கொண்டுசெல்லப் படுகிறார் பாரதி, கண்ணம்மாவைக் கன்னத்தில் முத்தமிடும்போது இவையெல்லாம் இனிய நிகழ்ச்சிகள்.

இப்பொழுது கண்ணம்மாவின் முகம் சிவந்துவிடுகிறது. பாரதியின் நெஞ்சிலே துன்பம் வந்து கொட்டுகிறது. கண்ணம்மாவின் நெற்றி சுருங்கித் துன்பத் திரைகள் கோடிட்டுச் சிணுங்குகிறாள். இதைக் காணப் பொறாத பாரதியின் நெஞ்சு பதைக்கிறது. இறுதியில் குறுகுறுவென அலையும் கண்ணம்மாவின் கோலக் கண்களிலிருந்து ஒன்றிரண்டு நீர்த்துளிகள் வழிகின்றன. இதுகண்ட பாரதியின் நெஞ்சில் இரத்தம் வடிகிறது, இல்லை, இல்லை கொட்டுகிறது.

**என்கண்ணிற் பாவையன்றோ?—கண்ணம்மா!**
**என்னுயிர் நின்னதன்றோ?**

என்று கண்ணம்மாவைக் கண்ணின் பாவையாக, உயிரின் ஊட்டமாக, உறைவிடமாகக் கருதிக் கவிதை வெறியிற் பாடுகின்றார்,

இனி, பாரதி கண்ணம்மாவின் சிறப்பினைக் கனிவில் குழைத்துச் சொல்லில் வடிக்கத் தலைப்படுகின்றார். கண்ணம்மா சொல்லும் மழலையிலே துன்பங்கள் எல்லாம் 'பகலவனைக் கண்ட பனிபோல்' மறைகின்றன. அவளுடைய முல்லைச் சிரிப்பிலே பாரதியின் மூர்க்கம்—கோபம் ஓடி ஒளிகிறது. ஏடுகளும் சொல்லாத இன்பக் கதைகளை, இன்னும் சொல்லப் போனால் எந்தச் சுருக்கெழுத்துக் காரரும் புலவரும் எழுத முடியாத மொழியிலே, எழுத முடியாத அளவிலே கண்ணம்மா ஆடிப் பாடி உணர்ச்சியுடன் சொல்கின்றாள்.

அன்பிலே தெய்வமாய், மார்பிலே வைரமணியாய், சீர்பெற்று வாழச் செல்வமாய்த் துலங்குகிறாள் கண்ணம்மா.

'குறுகுறு நடை நடந்து, சிறு கை நீட்டி, இட்டும் தொட்டும், கௌவியும் துழந்தும் நெய்யுடை அடிசில் மெய்ப்பட விதிர்க்கும்' குழந்தைச் செல்வத்தின் குன்றாத சிறப்பினை, குறையாத அழகினை நன்றாகச் சொல்லில் வடித்துச் சுவையூட்டி 'நினைத்தொறும் 'காணுந்தொறும்' இனிப்பூட்டும் பாட்டாய்த் தமிழ் மக்களுக்கு அளித்திருக்கிறார் அமர கவி பாரதி.

'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா' என்பது கவிமணியின் வாக்கு. அவர் வாக்கு 'உண்மை; வெறும் புகழ்ச்சியில்லை!

# புதுவைக் குயில் கூவி மறைந்தது

தண்டமிழ்க் கவிதைச் சோலையில் இன்னிசைத்தீம் பண்ணிசைத்துக் கொண்டிருந்த புதுவைக் குயில் பறந்து மறைந்துவிட்டது. தமிழ்க் கவிதை வானத்தில் இருள் சூழ்ந்துவிட்டது. வானத்திலே வட்டமிட்டுவந்த வெள்ளி நிலா இன்று இல்லை. கீதமிசைத்த கோலக் குயில் கூவி மறைந்துவிட்டது. எல்லையில்லாப் பெருவானத்தில் எங்கோ பறந்து சென்று மறைந்துவிட்டது. தமிழ்த்தாய் ஓர் அருமைக் கவிஞனை இழந்து தவிக்கிறாள். இருபதாம் நூற்றாண்டின் இணையிலாப் பெருங் கவிஞர்களாகிய பாரதியும் பாரதிதாசனும் இன்று நம்மிடமிருந்து விடை பெற்றுச் சென்றுவிட்டார்கள். அவர்கள் விட்டுச் சென்ற கவிதைச் செல்வங்களே இனி நமக்கு உற்ற துணை.

கி.பி. 1891ஆம் ஆண்டு புதுவையில் பிறந்து எழுபத்து மூன்று ஆண்டுகள் தமிழ் அன்னைக்குப் புத்தப் புது மணி யாரங்கள் பூட்டிக் களித்த புரட்சிக் கவிஞர் மறைந்து விட்டார். இயற்கையைப் பற்றி இனிமை ததும்பப் பாடிய கவிஞர் அவர்கள் இயற்கை எய்திவிட்டார். பதினெட்டு வயதிலேயே தமிழ்ப்பணி தொடங்கிய தண்டமிழ்க் கவிஞர் இன்று விண்ணோர் உலகு சென்றுவிட்டார்.

நான்கைந்து ஆண்டுகளாகக் கவிஞர் அவர்களோடு பழகும் நற்பேறு எனக்கு இருந்துவந்தது. அன்போடு அவர் அழைத்து இருக்கை தந்து விருந்தோம்பும் அந்தப் பண்பான காட்சி என் நெஞ்சில் அப்படியே பசுமையாக

உள்ளது. ஒளிவு மறைவின்றி உள்ளது உள்ளபடியே வெளியிடும் அவர் பண்பு பலரும் அறியத்தக்கது. அவருக்கே இயல்பான நகைச்சுவை சுவைத்து மகிழத் தக்கது. 'தமிழைப் பழித்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்' என்ற தமிழ் வெறி கொண்ட உள்ளம் நாம் அனைவரும் விரும்பிப் பின்பற்றத் தக்கது.

காலனுக்குக் கண்ணில்லை; கருணை இல்லை. நமக்கு நற்பேறு இல்லை. கவிஞர் இன்று நம்மிடையே இல்லை.

அவர் விட்டுச் சென்ற தமிழ்க் கவிதைப் பேழை திறந்து கிடக்கின்றது. அங்கே எண்ண எண்ணத் தித்திக்கும் வண்ணக் கவிதைகள் உள்ளன. அவற்றை வாரி உண்ணச் 'சேர வாரும் செகத்தீரே' என நான் அழைக்கின்றேன். அவர் நமக்கு விட்டுச் சென்றிருக்கும் கவிதைகளே நம் சொத்துக்கள். அவற்றைப் படித்து மகிழ வேண்டும்; பாடிப் பாடிப் பரவசப்பட வேண்டும். அவர் கவிதைகள் உலகெங்கும் பரவ நாம் முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும். அவர் 'உலகக் கவிஞர்' என்பதை நாம் உலகிற்கு உணர்த்த வேண்டும். ஷேக்ஸ்பியர் சிறந்தார் தமது நாடகம் எழுதும் நற்பண்பால்; வேர்ட்ஸ் வொர்த் சிறந்தார் தமது ஈடு இணையற்ற இயற்கையை வடித்துக் காட்டும் திறத்தால். ஷெல்லியும், கீட்ஸூம், பைரனும் சிறந்தார்கள் காதல் உலகிற்குக் கவிதை வடித்துத் தந்த சிறப்பால். புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சிறந்தார் இவ்வனைத்துத் துறையிலும் எழிலார்ந்த கவிதைகள் வடித்துத் தந்த காரணத்தால்.

'காலத்தின் இடையிடையே ஹோமர், தாந்தே போன்ற கவிஞர்கள் தோன்றவில்லையாயின் உலகம் அழிந்துபட்டிருக்கும்' என்றார் கவிஞர் ஷெல்லி.

ஆம்! அஃது உண்மை.

சுருங்கக் கூறின் காலம் கடந்தும் வாழப்போகும் கவிஞர் நம் கவியரசர் பாரதிதாசன் அவர்கள்.

புதுவைக் கவிஞர்-புதுமைக்-கவிஞர் புரட்சிக் கவிஞர் தம் எழுதுகோல் பல துறைகளிலும் பணியாற்றியது. 'அவர் தொடாதது ஒன்றுமில்லை; தொட்டதை அழகு படுத்தாமல் விட்டதில்லை' என்று டாக்டர் ஜான்சனைக் கோல்ட்ஸ்மித் கூறியதைப் போலப் பாரதிதாசனின் எழுதுகோல் தொடாத துறையே இல்லை. தொட்ட துறைகள் துலங்காமற் போனதில்லை.

தமிழர்கள் வாழும் வரையில் அவர் வாழ்வார். தமிழ் உள்ளவரை அவர் கவிதைகள் வாழும். இறந்தும் இறவாக் கவிஞர் அவர். அவர் திருப்பெயர் வாழ்க.

இனி, அவர்தம் கவிதைகள் சிலவற்றை நாம் நினைவு கொள்வோம். அவர் கவிதைகளை உள்ளவாறு அனுபவிப் பதே அவர் ஆன்மா அமைதியடைய நாம் செய்யும் பணி.

முதற்கண் அவர் தம் இயற்கையின் எழில்பற்றிய பாடல்களைக் காண்போம்.

## இயற்கை

பாரதிதாசன் என்றவுடனே அவர் இயற்கையின் எழிலையும் இனிமையையும் புகழ்ந்து பாடிய கவிதைகள் நம் முன்னே நிற்கின்றன. அவர் கவிதை நூலாம் 'அழகின் சிரிப்பு' உலக மொழிகள் அனைத்திலும் உடனடியாக மொழிபெயர்க்கப்பட வேண்டிய சீர்த்தியும் தகுதியும் வாய்ந்தது. "எங்கெல்லாம் அழகு கொலு வீற்றிருக் கின்றதோ அங்கெல்லாம் கோலக் குமரன்—தமிழ்க் கடவுள்

குடி கொண்டுள்ளான்'' என்று குறிப்பிட்டார் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. இயற்கையின் இனிய பெற்றியினைப் பாரதிதாசன் பாடியதுபோல வேறு எவரும் பாடவில்லை. சங்கக் கவிஞனுக்குப் பிறகு இயற்கையைப் பாடவந்த தங்கக் கவிஞர் அவர். கவிஞர் கவிதைத் துறையினைக் கைவரப் பெற்றார். எங்கே? கவிஞர் வாக்காலேயே காண்போம்:

**காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்**
**கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன் அந்தச்**
**சோலையிலே மலர்களிலே தளிர்கள் தம்மில்**
**தொட்டவிடம் எலாம் கண்ணில் தட்டுப் பட்டாள்**
**மாலையிலே மேற்றிசையில் உருகு கின்ற**
**மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ஆலஞ்**
**சாலைதொறும் கிளைதோறும் கிளியின் கூட்டம்**
**தனிலந்த அழகென்பாள் கவிதை தந்தாள்.**

நிலவைப் பற்றிக் கவிஞர் பாடுகிறார்:

**அந்தியிரு ளாற்கருகும் உலகு கண்டேன்**
**அவ்வாறே வான்கண்டேன் திசைகள் கண்டேன்**
**பிந்தியந்தக் காரிருள்தான் சிரித்த துண்டோ?**
**பெருஞ் சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவோ நீதான்**
**சிந்தாமல் சிதறாமல் அழகை எல்லாம்**
**சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி**
**இந்தாவென் றேஇயற்கை அன்னை வானில்**
**எழில் வாழ்வைச் சித்திரித்த வண்ணம்தானோ!**

தென்றற் காற்றினைக் கவிஞர் அவர்கள் லாவகமாக அறிமுகப்படுத்துகிறார்.

அந்தியிலே இளமுல்லை சிலிர்க்கச் செந்நெல்
அடிதொடரும் மடைப்புனலும் சிலிர்க்க என்றன்
சிந்தை உடல் அணுஒவ்வொன் றும்சி லிர்க்கச்
செல்வம் ஒன்றுவரும்; அதன்பேர் தென்றற் காற்று.

அடுத்து, காதல் பற்றிக் கவிஞர் காட்டும் காட்சிகளைக் கோவையுறக் காண்போம்.

காதலியைப் பார்த்துக் காதலன் சொல்கின்றான்:

மின்னலிடை கன்னல்மொழி இன்னும் சொன்னால்
விரியுலகில் ஒருத்திநீ அழகின் உச்சி.

காதலனைப் பற்றிக் காதலி கொண்டுள்ள எண்ணத்தைப் பின்வரும் வரிகள் தெற்றெனத் தெளிவாக்கும்;

கண்மூக்குக் காது வாய்மெய்
இன்பத்திற் கவிழ்ப்பான் மற்றும்
பெண்பெற்ற தாயும் போல்வான்
பெரும்பணி எனக்கி ழைப்பான்
வண்மையால் கால்து டைப்பான்
மறுப்பினும் கேட்பா னில்லை
உண்மையில் நான்அ வன்பால்
உயர்மதிப் புடையேன் தோழி.

இவ்வாறு ஒருவரை ஒருவர் உணர்ந்து உளம் நெகிழ்ந்து வாழும் வாழ்வில் துன்பமேது?

அப்படித் துன்பம் நேரிட்டாலும் காதலன் தன் காதலியைப் பார்த்துக் கேட்கின்றான்:

துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம்சேர்க்கமாட்டாயா! எமக்கு நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா!—நல்
அன்பிலா நெஞ்சில் தமிழ்ப்பாடி நீ

**அல்லல் நீக்கமாட்டாயா?—கண்ணே**
**அல்லல் நீக்க மாட்டாயா?**
**வன்பும் எளிமையும் சூழும் நாட்டிலே**
**வாழ்வில் உணர்வு சேர்க்க – எம்**
**வாழ்வில் உணர்வு சேர்க்க—நீ**
**அன்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால்**
**ஆடிக் காட்ட மாட்டாயா—கண்ணே நீ**
**ஆடிக் காட்ட மாட்டாயா.**

கவிஞர் தம் உவமையழகும் சொல்லாற்றும் திறனும் மிகவும் சிறப்பு வாய்ந்தன.

**ஓர் கிளையில் ஒரு குலையில் தீமை காணில்**
**உயர் குலைகள் அத்தனையும் மறுப்பதுண்டோ?**

என்றும்,

**கரிப்பின்றேல் இனிப்பருமை யாரே காண்பர்?**

என்றும் அறிஞர் பாடுவது காண்க.

அடுத்து, நம் பாரதிதாசனின் தமிழ்ப்பற்று கட்டுக்கு அடங்காத ஒன்று.

## தமிழ்ப்பற்று

**எனையீன்ற தாய்க்கும் தந்தை மக்கள்**
**இனமீன்ற தமிழுக்கும் என்னால்**
**தினையளவு நலமேனும் கிடைக்கு மென்றால்**
**செத்தொழியும் நாள்எனக்குத் திருநாளாகும்.**

எனக் கவிஞர் உவமை வாயிலாகத் தமிழின்பத்தை விளக்குகின்றார் :

மங்கை ஒருத்தி தரும் சுகமும்—எங்கள்
மாத்தமிழ்க் கீடில்லை என்றுரைப்போம்

தமிழை அழிக்கவரும் இந்தியினைக் கவிஞர் சாடும் வேகத்தினைப் பாருங்கள் :

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை—எம்மை
மாட்ட நினைத்திடும் சிறைச்சாலை
தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம் உயிர்
தித்திப்பை எண்ணிடப் போவதில்லை.

## சமுதாயச் சீர்திருத்தம்

தொடக்க நாள் முதலே சமய பேதத்தையும், சாதி பேதத்தையும் வெறுத்தொதுக்கியவர் கவிஞர் அவர்கள். கொள்கை நெறி நிற்கும் குன்று அவர், சமுதாயப் புரட்சி செய்து, ஊளையிற் துரும்புபோல் அலைக்கழித்துப் புதிய தோர் உலகம் செய்த புரட்சிக் கவிஞர் அவர்.

ஒன்றுபட்ட இரண்டு உள்ளங்களைச் சாதி, சமயம் பொருள் பேதங்களைக் காட்டிப் பிரிப்பது அடாத செயல் என்பது கவிஞர் தம் அழுத்தமான எண்ணம் :

காத லிருவர்களும் – தம்
கருத்தொரு மித்தபின்
வாதுகள் வம்புகள் ஏன்?—இதில்
மற்றவர்க் கென்ன உண்டு?

விதவைகள் மறுமணம் செய்து கொள்ளவேண்டும்; அதற்கு இந்தச் சமுதாயம் ஆதரவு காட்டவேண்டும் என்று வற்புறுத்திப் பாடிய கவிஞர் அவர்.

கோரிக்கையற்று கிடக்கு தண்ணே—இங்கு
வேரில் பழுத்த பலா

என்று கூறி,

வாடாத பூப்போன்ற மங்கை நல்லாள்
மணவாளன் இறந்தால்பின் மணத்தல் தீதோ!
பாடாத தேனீக்கள் உலவாத் தென்றல்
பசியாத நல்வயிறு பார்த்த துண்டோ?

என்று அற்புதமான உவமை கூறிப் புரட்சி விதை விதைத்துச் சமுதாயச் சீர்திருத்தம் காண்கிறர் கவிஞர் அவர்கள்.

## பெண்ணுலகம்

பெண்களைப் பாடாத கவிஞர்கள் இல்லை; பாராட்டி பேசாத கவிஞர்கள் இல்லை. பெண்களுக்குக் கல்வி வேண்டும். எனினும், பெண்ணுரிமை பெற்றுப் பெண்ணுலகம் சிறக்க வேண்டும் என்றும் பாடிய பாரதி தாசனின் பங்கு பெண்ணுலகில் பெரும் பங்கு.

கல்வியில் லாத பெண்கள் களர்நிலம்' அங்கிலத்தில்
புல்விளைந் திடலாம்; நல்ல புதல்வர்கள் விளைதல் இல்லை.
கல்வியை உடைய பெண்கள் திருந்திய கழனி! அங்கே
நல்லறி வுடைய மக்கள் விளைவது நவிலவோ நான்!

பாரதிதாசனின் வசன கவிதைகள் தனிச்சிறப் புடையன. உண்மையாகச் சொல்லப் போனல் தாகூரின் கவிதைச் சிறப்பைவிட ஓர் படி உயர்ந்தது அவர்தம் வசன

கவிதை. அழகும் ஆழமும் பொருளுணர்ச்சியும் வகை கவிதைகளில் கொப்புளிக்கின்றன,

காதல் வாழ்வு—ஐந்து

"கெண்டைகள் துள்ளி விளையாடி நீரின்
அடிமட்டத்தில் அள்ளி நுகர்வன இன்பத்தை!"

"நாமும் அங்கு இன்பம் நுகர்வோம்—
அடடா, நாம் மீன்களல்லவே;"
"கண்ணிமைப் போது நான் நீருக்குள்
ஒளிந்து கொள்கிறேன் பிற்பகுதியும் கேள்;"
"நிறுத்துங்கள்! முற்பகுதியே என்பாதி
உயிரைப் போக்கிவிட்டது."
"மாற்றிச் சுவைக்கும் நான்கு விழிகள்
தம்மிற் பிரியாமல் நீராடின்."

நகைச் சுவை

நகைச்சுவையோடு கவிதையினைக் கையாள்வதில் பாரதிதாசன் தனிச்சிறப்புப் பெற்றவர். தனியே அவரோடு உரையாடிய பேறு பெற்றவர்கள் இதனை நிச்சயம் உணர்ந்திருப்பர். இயற்கையை வருணிக்கு முகத்தான நகைச்சுவையினை நயம்படக் கையாளு கின்றார் கவிஞரேறு.

கிளையினிற் பாம்பு தொங்க
விழுதென்று குரங்கு தொட்டு
விளக்கினைத் தொட்ட பிள்ளை
வெடுக்கெனக் குதித்த தைப்போல்

கிளைதோறும் குதித்துத் தாவிக்
கீழுள்ள விழுதை யெல்லாம்
ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்

கவிஞர் அவர்களின் முதற்பாட்டு.

எங்கெங்கும் காணினும் சக்தியடா
ஏழ்கடல் அவள் நிற வண்ணமடா

என்ற பாட்டாகும். அம் முதற் பாட்டிலேயே கவிஞர் தாம் கவிதையுலகின் முடிசூடா மன்னன் எனக் கட்டியம் கூறி விட்டார்.

அவர் பாடிய திராவிட நாட்டுப் பண் இனவுணர்வுக்கும் எழுச்சிக்கும் வித்திட்டது.

வாழ்க வாழ்கவே
வளமார் எமதுதி ராவிடநாடு
வாழ்க வாழ்கவே

என்று தொடங்கும் பாடல் நம் நாட்டுப்பாடலாகும்.

நான்தான் திராவிடன் என்று நவில்கையில்
தேன்தான் நாவெலாம்! வான்தான் என்புகழ்!"

என்று இனவுணர்வு ததும்ப இறுமாப்போடு பாடுகின்றார் கவிஞர். திராவிடத்தின்—திருவிடத்தின் மறுமலர்ச்சிக்கு வழிகோலுகிறார்,

இன்னும் கவிஞர் தம் கவிதைச் சிறப்புக்களை விரிக்கிற் பெருகும் என்று விரிவஞ்சி இதோடு முடிக்கின்றேன்.

நன்றி நிறைந்த தமிழ் நெஞ்சங்கள் வாழும்வரை பாரதிதாசன் திருப்பெயர் வாழும். "எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு" என்று விண்ணதிர முழக்கிய கவிஞர்—புதுவைக் குயிலின் கீதம் என்றென்றும் நம் காதில் மகிழ்ச்சிப் பண் இசைத்துக் கொண்டிருக்கும்.

# பாரதிதாசனும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வும்

கவிஞர்களெல்லாம் இயற்கையின் காதலர்கள். விரிந்த வானைப்போல் உள்ளம், அருவியைப்போல் சோம்பலற்ற இயக்கம், மலையைப்போன்ற பெருமிதம், தூய காற்றைப்போல் சிந்தனைகள், நிலத்தைப்போல் பொறுமை என்று இயற்கையின் கூறுகளில் மனிதர்க்காகும் உயரி பண்புகளைக் காண்பர். பாவேந்தர் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இயற்கையிலும் இயற்கை அளிக்கும் இன்ப வாழ்விலும் ஈடுபாடுமிக்கவர். ஆகவே சுற்றுச் சூழலைக் குறித்துப் பாவேந்தரின் பாடல்களில் பன்முக ஆய்வுமேற்கொண்டு இக்கருத்தரங்கில் அறிஞர்கள் கட்டுரை அளித்துள்ளமை மிகப்பொருந்துவதொன்றாகும்.

சங்ககாலத்திலிருந்தே வாழ்க்கையை இயற்கையோடு பிணைத்துப்பார்க்கும் ஒரு நோக்கு தமிழ்க்கவிஞர்க்குண்டு. ஒவ்வொரு நிலத்திற்கும் அதனைச் சார்ந்த மரம் செடி, கொடி, புள்ளினம் எனக் கருப்பொருளை உரிமையாக்கும் சூழலைச் சங்க இலக்கியங்களில் காண்கிறோம். இத்தகை ஒரு மரபைப் பிற்காலக் கவிஞர்களில் பாரதிதாசன் மிக அழுத்தமாக எடுத்துரைக்கின்றார். மனிதர்கள் எங்கு நல்லவர்களாக இருக்கின்றார்களோ அங்கே நிலமே நீயும் நல்லை என்பர் ஔவையார். "வள்ளி கீழ்வீழா வரை மிசைத்தேன் தொடா மலைவாழ்நர் அல்ல புரிந்தொழுகலான்" என்று கூறி இந்த மலையில் வாழ்பவர்கள் தீயன செய்தொழுகுவதால் இங்கே கிழங்கு வேர்விடாது; மலை மீது தேன் சமையாது என இயற்கையே மனிதர்களின்

மனநிலைக்கேற்ப அமையும் என்பதைக்காட்டுவர். மனிதர்கள் இயற்கைச் சூழல் கெடாவாறு நல்ல ஒழுகுநெறியை மேற்கொளவேண்டும். கம்பனுக்கு ஆறு சான்றோரின் கவியெனக் காட்சியளித்தது. அழகு, பயன், தெளிவு, குளிர்ச்சி ஓட்டம் ஆகியவை ஆற்றின் தகுதிகளாக அக்கவிஞனாற் காட்டப்பெறும். பாவேந்தர் ஆறளிக்கும் பயனை,

> நோய்தீர்ந்தார்! வறுமை தீர்ந்தார் நூற்றுக்கு நூறு பேரும்!
> ஓய்வின்றிக் கலப்பை தூக்கி உழவுப்பண் பாட லானார்
> சேய்களின் மகிழ்ச்சி கண்டு சிலம்படி குலுங்க ஆற்றுத்
> தாய்நடக் கின்றாள் வையம் தழைக்கவே தழைக என்றே!

ஓர் ஊரின் தூய்மைக்கும், நோயின்மைக்கும் அங்குள்ள நீர்நிலையின் தூய்மை இன்றியமையாதது. உண்ணும் உணவை விளைக்கும் முதலாகவும், பருகும் நீராகவும் அமைவதனை வாழ்வின் உயிர்த்தேவை என்லாமே! ஆகவே பாவேந்தர் வளர்த்துப்பேணும் தாயென ஆற்றைக் கண்டார். இன்று ஆற்றிடையே ஊரின் சாக்கடைகள், கழிவுநீர்க் கால்கள் கலக்கின்றன. கங்கையும், கங்கையிற் புனிதமாய காவிரியும் மாசுண்ட மேனியோடு நடக்கின்றன. ஆறுகள் பலவற்றில் தொழிற்சாலைகளின் நச்சுக்கழிவுகள் புகுகின்றன. ஆற்று மணல் "உரித்தநற் றாழம் பூவின் நறும்பொடி உதிர்த்தது" போல இருக்குமெனப் புரட்சிக் கவிஞர் கூறுமாறு இல்லை. "இருகரைவாரமும் திருமகள் உறையுளாப் பண்ணும் இப்புண்ணிய தாமிர வருணி" என மனோன்மணீய ஆசிரியர் கூறியுள்ளவாறு ஆற்றின் நிலை இன்று இல்லை. ஆற்றின் உயரிய கரைகள், கரைகளில் மரங்கள், மரங்களில் பறவைகள் எனப் பாவேந்தரின் ஆற்றுக் காட்சி அமைகிறது. இத்தகைய சுற்றுச் சூழலமையுமாறு இயற்கைக்கு நாம் அரண்செய்தல் வேண்டும்.

மனித வாழ்விற்காகும் தூய காற்று நம் சுற்றுப்புறத் தூய்மையாலேயே பெறப்படுவது. வீட்டுக்கு ஒரு மரம் நடுவோம் என்பது அரசின் அறிவிப்பாக இருக்கிறது, தென்னை பயிரிடுங்கள் என்றும் தேக்கு வளர்த்திடுங்கள் என்றும் வேளாண் துறை பரிந்துரைக்கின்றது. காற்றினை அசைத்து முகில்களை வருடி மழையை உண்டாக்கும் ஆற்றலுடைய காடுகளை நாம் அழித்துக்கொண்டு வருகிறோம். மரங்களை வெட்டுவதால் உதகை போன்ற மலைப்பகுதிகளில் நிலச்சரிவு ஏற்படுகிறது. சாம்பற் சத்து, மணிச்சத்து, தழைச்சத்து என்பனவற்றுக்கெல்லாம் மூலமாக விளங்கும் தாவரச் செல்வத்தை நாம் இழந்து வருகின்றோம்.

> **செருந்தி ஆச்சா, இலந்தை தேக்கு ஈந்து கொன்றை யெல்லாம்**
>
> **பெருங்காட்டின் கூரை அந்தப் பெருங்கூரை மேலே நீண்ட**
> **ஒருமுங்கில் இருகுரங்கு கண்டேன் பொன்னூசல் ஆடல்!**
> **குருந்துடையாளம் கண்டேன் கோணல்மா மரமும் கண்டேன்!**

எத்தனை மரங்களின் பெயர்கள் ஒரு சிறிய பாட்டில் அடுக்கப்பெறுகின்றன. எதிர்காலத் தமிழ்ச் சமுதாயம் இவற்றில் பலபெயர்களுக்குரிய மரங்களை அடையாளம் காணப்போவதில்லை. தொட்டிகளில் வேர்விடாமல் குரோட்டன்ஸ் வளர்த்தல், குறுமரங்களாகவும் சிறுசெடி களாகவும் குறுக்கப்பட்டுப் பயன்பெறும் Bonsay தாவரங் களைப் பெருக்கல், வரவேற்பறைகளில் பிளாஸ்டிக் தென்னை மரங்களை அழகிற்கென அமைத்தல் ஆகியன சமூகப் பண்புகளாக மாறிவருகையில் சுற்றுச்சூழலைத் தூய்மையாக்கி நல்லகாற்றை வழங்கும் மரம் பயிரிடும் மனநிலை எப்படி உருவாகும்.

குயில்கூவிக் கொண்டிருக்கும் கோல மிகுந்த
மயிலாடிக் கொண்டிருக்கும் வாசம் உடையநற்
காற்றுக் குளிர்ந்தடிக்கும்; கண்ணாடி போன்ற நீர்
ஊற்றுக்கள் உண்டு; கனிமரங்கள் மிக்க உண்டு

என்று பாவேந்தர் கூறுகின்றவாறு காட்டின் எழில் சுற்றுச் சூழலின் மாசு துடைத்து மனித சமூகத்தை நோய் அண்டாமல் பாதுகாக்கவல்லது. புறாக்கூடுகளாக வீடு களைக் கட்டிக்கொண்டு, குளிர்சாதனப் பெட்டிகளின் மின் காற்றிடம் அடைக்கலம் புகுந்து அதில் ஏற்படும் சலிப்பில் மெரினாவில் காற்றுவாங்கக் காத்திருக்கும்போதுதான் காற்று வசதிமிக்க சூழலின் தேவை நம் கவனத்திற்கு வருகிறது. ''காத்து வாங்க பீச்சுப் பக்கம் காத்திருக்கும் கூட்டமே நேத்து வாங்கிப் போன காத்து என்ன ஆச்சு வீட்டிலே" என்று கண்ணதாசன் இந்த வாழ்க்கைச் சூழலை எள்ளி நகையாடுகிறார். பாவேந்தர் இயற்கை யளித்த சூழற் கொடையினை எண்ணி எண்ணி வியக்கிறார்.

விரிந்த வானே, வெளியே—எங்கும்
விளைந்த பொருளின் முதலே
திரிந்த காற்றும் புனலும்—மண்ணும்
செந்தீ யாவும் தந்தோய்
தெரிந்த கதிரும் நிலவும்—பலவாச்
செறிந்த உலகின் வித்தே
புரிந்த உன்றன் செயல்கள் – எல்லாம்
புதுமை! புதுமை! புதுமை!

என்று போற்றுகின்றார். காற்றை நோக்கிக் கவிஞர் கூறும் "உன்னிடம் அமைந்திருக்கும் உண்மையின் விரிவில் மக்கள்

சின்னதோர் பகுதியேனும் தெரிந்தார்கள் இல்லை" என்ற கூற்றை நாம் நினைக்கவேண்டும்.

வீடு, வாழும்தெரு, ஊர், நாடு என்று ஒவ்வொரு நிலையிலும் சுற்றுச்சூழல் இனிதமைய விழிப்புணர்வு வேண்டும். 'இருண்ட வீடு' என்ற நூலில் புரட்சிக் கவிஞர் இதனை அழகாகக் காட்டுகின்றார்.

**வீட்டினுள் காற்று வீசுந் தோறும்**
**மோட்டு வளையில் மொய்த்த ஒட்டடை**
**பூமழை யாகப் பொழியும் தலையில்!**
**ஊமைக் குப்பைகள் உம்மென்று மேலெழும்!**

இப்படி ஒரு வீடிருக்குமானால் என் செய்வது? குடும்ப விளக்கில் இல்லத்தலைவி தங்கம் நாள்தோறும் வீட்டின் செம்மை பேணுகின்றாள்; ஒட்டடை அடிக்கின்றாள்; பெயர்ந்த காரை பூசுகின்றாள்.

**பனித்துளி மணிகள் காய்க்கும் பசும்புற்கள் அடர்புலத்தில்**
**தனித்தனி அகலா வண்ணம் சாய்ந்திட்ட பசுக்கள் எல்லாம்**
**தனக்கொன்று பிறர்க்கொன்று என்னாத் தன்மையால்**
**புல்லை மேயும்**

என்று சிற்றூரின் சூழல் காட்டுவர். பசுக்கள் மேயப் புல்வெளி பரந்த நிலமுண்டு சிற்றூரில்! அவற்றைக் காலாற மேய்த்தலும் ஓடும் நீரிற் குளிப்பாட்டலும் உண்டு அங்கே! நகரில் கட்டுத்தறி பெயராத மாடுகளிடையே வைக்கோற் கன்று காட்டி வரவழைக்கும் பாலினால் மனிதர்கட்கு நோய் மலிகிறது. இடநெருக்கடியைத் தவிர்க்கின்ற வகையிலும் இயற்கைச் செந்நெறி குலையா வண்ணமும் நகரமைப்பு வேண்டும். நச்சுப் புகை கக்கும் ஊர்திகளும், கொசுப் பண்ணைகளாக விளங்கும் குட்டை

களும், குப்பை கூளம் மலிந்த தெருக்களும், தொழிற் சாலைக் கழிவுகளும் நம் சுற்றுச் சூழலைக் கெடுத்து நோய் களை உருவாக்க வல்லன. ஓஸோன் என்ற இயற்கைக் காற்று வெளி மண்டிலத்தின் இனிய கொடை நலிவுறாத வாறு நாம் பேணிக்கொள்ளவேண்டும். இல்லையெனில் எதிர்கால மானிடச் சாதி முழுவதும் மருத்துவமனைகளில் நிலையாகக் குடியேறும். "வஞ்சகம் சேர் சின்ன மானிடச் சாதிக்கு வாய்ந்த நிலை இதுவோ" என்று பாவேந்தர் கூறுமாறு நம் நிலை ஆகும்.

**எண்ணங்கள் போல்—விரி**
**வெத்தனை! கண்டாய்—இரு**
**கண்ணைக் கவர்ந்திடும் ஆயிரம் வண்ணங்கள்**
**கூடிச் சுடர்தரும் வான்!**

என்பதுபோல் பரந்த வான்வெளியைக் கருமா முகிற்குலம் தோய காற்றின் ஊஞ்சலில் மழைக்கம்பி பிடித்து இறங்க, அதனால் வையகம் வாழ நாம் சுற்றுச் சூழலைப் பேணு வோமாக! "Nature never did betray. The heart that loved her. It is her privilege through all the years of our life to lead from joy to joy" என்று கவிஞர் வோர்ட்ஸ்வொர்த்து கூறியவண்ணம் இயற்கைத்தாயின் இனிய மடியில் நாம் இன்புறுவோமாக!

# பாரதிதாசன் பாடல்களில் இயற்கை

இவள் என்று பிறந்தவள் என்று உணரமுடியாத இயல்பினளாய்த் தமிழ்த்தாய் இலங்குகின்றாள். சுருங்கச் சொன்னால் முன்னைப் பழமைக்கும் பழமையாகவும் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய்த் தமிழ்மொழி வீறுடன் விளங்குகின்றது. மூப்பது நூற்றாண்டுக் காலமாக முறையாக வளர்ந்துவரும் தமிழ் இலக்கியம் இறைவன், இயற்கை, பெண்மை என்னும் மூன்று பொருள்கள் பற்றிச் சிறப்பித்துப் பேசுகின்றது.

தொல்காப்பியனார் முதற்பொருள் என்று நிலத்தினையும் பொழுதினையும் சுட்டுவர். கருப்பொருள் என்று தெய்வம் முதலான பதினான்கு பொருள்களைக் குறிப்பிடுவர். உரிப்பொருள் என்று நிலவொழுக்கத்தைப் பேசுவர். வாழ்முதற் பொருளாக நிலத்தினையும் பொழுதினையும் தொல்காப்பியனார் சுட்டியிருப்பதில் ஓர் உண்மை பொதிந்திலங்குகின்றது. இயற்கை என்னும் பின்னணி இல்லாமல் மனித வாழ்வு துலங்கியதில்லை எனலாம்.

மேலை நாட்டுக் கவிஞராம் வேர்ட்ஸ்வொர்த் இயற்கையில் ஈடுபாடு கொண்டு பாடிய கவிஞராவர். இயற்கையே எழுதுகோல் பிடித்து அவருக்காக எழுதியது என்பர். (Nature itself wrote for him) கபிலர் முதலான சங்கத்தமிழ்ப் புலவர்கள் பலரும் இயற்கையில் தோய்ந்து பாடல்கள் எழுதியவர்களாவர். சங்கப் புலவர்களைப்

போன்று இருபதாம் நூற்றாண்டில் இயற்கையழகில் தோய்ந்து இணையற்ற பாடல்களைப் புனைந்தவர் பாரதிதாசன் ஆவர்.

"இயற்கை அனைத்தும் அழகே. அந்த அழகு செந்தாமரை என்றும், நிலவென்றும், கதிரென்றும் சிரித்தது. காணும் பொருளிலெல்லாம் அழகைக் காணவும் கண்டவாறு தாமே சொல்லோவியம் தீட்டவும் திறம் பெறுதல் வேண்டும். தமிழர்கள் பிறமொழி, தமிழ் மொழி நூல்களில் பார்த்தபடியே எழுதும் நிலை தீர வேண்டும். அதற்கு இச்சிறு நூல் (அழகின் சிரிப்பு) இயற்றியதன் வாயிலாக நான் இதை அறிஞர்க்கு நினைவுறுத்துகிறேன்".

என்று புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் 'அழகின் சிரிப்பு' என்னும் தம் அரிய நூலின் முன்னுரையில் குறிப்பிடுகின்றார்.

தமக்கு அழகு கவிதை தந்த இடங்களை அழகுறப் புலப்படுத்தியுள்ளார். 'அழகுப் பொருள்கள் என்றும் அழியா இன்பம் நல்கும்' (A thing of beauty is a joy forever) என்று கவிஞர் கீட்ஸ் குறிப்பிட்டது போன்றே பாரதிதாசனாருக்கும் காலையில் கீழ்த்திசையில் தோன்றும் கதிரவன் ஒளியிலும், அக்கதிரொளி கடற்பரப்பில் ஒளிவெள்ளத்தைப் பாய்ச்சிக் கடல்நீரில் தங்கத் தகடுகளை விரிக்கும் நிலையினிலும், சோலைகளில் மலர்ந்துள்ள மலர்களிலும், முகிழ்த்துள்ள தளிர்களிலும் மேலும் தொட்ட இடங்களிலெல்லாமும் அழகு கண்ணில் தட்டுப்பட்டாள் என்றும், மாலை நேரத்தில் மேற்றிசையில் தகத்தகாய கோலம் காட்டும் மாணிக்கச் சுடரிலும், ஆலஞ் சாலையில் கிளைகள்தோறும் கிளிக்

கூட்டம் அமர்ந்திருக்கும் அழகிலும் அந்த அழகென்னும் நங்கை கவிதை தந்தாள் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்
 கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்; அந்தச்
சோலையிலே மலர்களிலே தளிர்கள் தம்மில்
 தொட்டஇடம் எல்லாம் கண்ணில் தட்டுப்பட்டாள்
மாலையிலே மேற்றிசையில் இலகுகின்ற
 மாணிக்கச் சுடரிலவள் இருந்தாள் ஆலஞ்
சாலையிலே கிளைதோறும் கிளியின் கூட்டந்
 தனில் அந்த அழகென்பாள் கவிதை தந்தாள்

மேலும் சிறுகுழந்தை விழியினிலும், திருவிளக்கின் ஒளியினிலும், மலர் தொடுக்கும் நங்கையரின் விரல் வளைவினிலும், உழவன் கலப்பையைத் தோளில் சுமந்து செல்லும் நடையினிலும், நன்செய் நிலம் மரகதக் கம்பளம் விரித்தாற்போன்று காட்சி தரும்நேர்த்தியினிலும் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் உள்ளத்தைப் பறி கொடுத்ததாகப் பாங்குறக் கிளத்துகின்றார்.

சிறுகுழந்தைவிழியினிலே ஒளியாய் நின்றாள்
 திருவிளக்கிற் சிரிக்கின்றாள்; நாரெடுத்து
நறுமலரைத் தொகுப்பாளின் விரைவளைவில்
 நாடகத்தைச் செய்கின்றாள் அடடே செந்தோட்
புறத்தினிலே கலப்பையுடன் உழவன் செல்லும்
 புதுநடையில் பூரித்தாள்; விளைந்த நன்செய்
நிலத்தினிலே என்விழியை நிறுத்தினாள்; என்
 நெஞ்சத்தில் குடியேறி மகிழ்ச்சி செய்தாள்

தாம் பெற்ற பேற்றினை நாமும் பெறவேண்டும் என்ற நல்லுள்ளத்தோடு,

பசையுள்ள பொருளிலெலாம் பசையவள்காண்!
பழமையினாற் சாகாத இளையவள்காண்!
நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள்!
நல்லழகுவசப்பட்டால் துன்பமில்லை!

என்கிறார்.

முதற்கண் கடற்காட்சியில் உள்ளம் பறிகொடுக்கின்றார் கவிஞர். கடல் ஊருக்குக் கிழக்கே இருக்கிறது. அப்பெருங்கடலின் ஓரம் கீரியின் உடல்வண்ணம்போல் மணல் மெத்தை தென்படுகின்றது. அம் மெத்தைமேல் எழுந்து விழுந்து புரளும் அலைகள் கல்வி பயிலும் இளைஞர்கள் நெஞ்சம்போல் ஏறும்; வீழும்; புரண்டிடும்.

ஊருக்குக் கிழக்கே உள்ள
பெருங்கடல் ஓரமெல்லாம்
கீரியின் உடல்வண் ணம்போல்
மணல் மெத்தை; அம் மெத்தைமேல்
நேரிடும் அலையோ, கல்வி
நிலையத்தின் இளைஞர் போலப்
பூரிப்பால் ஏறும் வீழும், புரண்டிடும்;
பாராய் தம்பி—கடல்!

கடற்பரப்பைக் காண நெஞ்சம் மகிழும்; கடலின் கண்கொள்ளாக்காட்சி களிப்பூட்டும்; வடக்கும் தெற்கும் ஓடுநீர்ப் பரப்பும் காண இருவிழிச் சிறகால் நெஞ்சம் எழுந்திடும்; முழுதும் காண ஒரு கோடிச் சிறகு வேண்டும்.

...........அடடா எங்கும்
விழுந்தது தங்கத் தூற்றல்
வெளியெலாம் ஒளியின் வீச்சு!
முழங்கிய நீர்ப்பரப்பின்

முழுதும் பொன்னொளி பறக்கும்
பழங்கால இயற்கை செய்யும்
புதுக்காட்சி பருகு தம்பி

—அழகின் சிரிப்பு; 7

என்று காலைக் கதிரவன் வரவைக் களிகூரக் கூறுகின்றார். அவன் வரவால் உலகில் ஏற்படும் பரபரப்பை,

இளங்கதிர் எழுந்தான்; ஆங்கே
இருளின்மேல் சினத்தை வைத்தான்;
களித்தன கடலின் புட்கள்
எழுந்தன கைகள் கொட்டி
ஒளித்தது காரிருள் போய்

—அழகின் சிரிப்பு : கடல் 8

என்று குறிப்பிடுகின்றார்.

கடல்நீரும் நீலவானமும் கைகோக்கின்றது. இரண்டிற்கும் இடையே கிடக்கும்வெள்ளம் அழகு வீணையாகும் அவ்வீணமேல் காற்று அடித்து அவ்வீணையின் நரம்பினை அசைக்கின்றது. அப்போது வீணை இயக்கவல்ல தேர்ந்த புலவனாக அக்காற்று தென்படுகின்றது.

கடல்நீரும் நீலவானும்
கைகோர்க்கும்! அதற்கிதற்கும்
இடையிலே கிடக்கும் வெள்ளம்
எழில்வீணை; அவ்வீணை மேல்
அடிக்கின்ற காற்றோ வீணை
நரம்பினை அசைத்தின்பத்தை
வடிக்கின்ற புலவன்.
பொன்னுடை களைந்து, வேறே
புதிதான முத்துச்சேலை
தன் இடை அணிந்தாள் அந்தத்
தடங்கடற் பெண்ணாள்.

—அழகின் சிரிப்பு, கடல் 9.

# பாரதிதாசன்

## வாழ்க்கைக் குறிப்பு

புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் அவர்கள் 29-4-1891 இல் கனகசபை முதலியாருக்கும், இலக்குமி அம்மை யாருக்கும் மகனாகப் புதுவையில் பிறந்தார். தமிழுடன் பிரஞ்சு மொழியும்கற்றார். இளமையிலேயே கவிதை எழுதும் ஆற்றல் பெற்றுத்திகழ்ந்தார். இசையுடன் கூடிய பாடல்களை எழுதினார். பள்ளித் தமிழாசிரிய ராகப் பணியைத் தொடங்கித் தம் பதினெட்டு வயதிலேயே கல்லூரித் தமிழாசிரியரானார். திருமண நிகழ்ச்சி ஒன்றில் பாரதியைச் சந்திக்கும் வாய்ப்புப் பாரதிதாசனுக்குக் கிடைத்தது அபொழுது "எங்கெங்கு காணினும் சக்தியடா" என்றபாடலைப் பாடினார். உடனே பாரதி அப்பாடலை, "ஸ்ரீ சுப்பிரமணிய பாரதி கவிதா மண்டலத்தைச் சேர்ந்த கனகசுப்புரத்தினம் எழுதியது" என்றுகுறிப்பிட்டு, சென்னையில் இருந்த 'சுதேசமித்திரன்' பத்திரிகைக்கு அனுப்பிவைத்தார்.

1921இல் பழநியம்மாள் என்பவரைத் திருமணம் புரிந்துகொண்டு இல்லறத்தில் ஈடுபட்டார். மொழிக் காகவும் நாட்டிற்காகவும் பல பாடல்களை இயற்றினார். நாட்டு விடுதலைக்கும் பாடுபட்டார். விடுதலைக்குப்பின் தந்தை பெரியார் ஈ.வே.ரா.வின் தொடர்பும் சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகளும் அவரைப் புரட்சிக் கவிஞராக்கின.

பாரதிதாசனுக்கு, சரசுவதி, வசந்தா, ரமணி என்னும் மூன்று பெண்களும், கோபதி என்ற ஆணும் பிறந்தனர். கோபதி என்ற பெயரே மன்னர் மன்னன் என்று பெயர் மாற்றம்பெற்றது.

1964 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 2 ஆம் நாள் இயற்கை எய்தினார்.

## இயற்றிய நூல்கள்

பாரதிதாசன் அவர்கள் நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றினார். அவற்றுள் கவிதை நூல்களே மிகுதி. கவிதை நூல்களுள் குறிப்பிடத்தக்கவை சஞ்சீவி பர்வதத்தின் சாரல், புரட்சிக்கவி, வீரத்தாய், இசையமுது தொகுதி- ,?, பாண்டியன் பரிசு, குறிஞ்சித்திட்டு, குடும்ப விளக்கு, இருண்ட வீடு, அழகின் சிரிப்பு, தமிழியக்கம். தமிழுக்கு அமுதென்றுபேர், வேங்கையே எழுக போன்றவை. உரைநடை நூலுள் மானிடம் வாழ்க குறிப்பிடத்தக்க நூலாகும்.

## புரட்சிக்கவி பாவேந்தர்

பாரதிதாசன், சுயமரியாதை இயக்கத்தால் ஈர்க்கப் பட்ட பின்பு அவரது பாடுபொருள் பெருமாற்றத்திற்கு உட்பட்டது. மொழி, இனம், நாடு, சீர்திருத்தம் பற்றி மிகுதியாகப் பாடினார். இவையே அவரைப் புரட்சிக் கவியாக, பாவேந்தராக மாற்றின.

## மொழி

தம்ழ் இலக்கிய உலகில் தாய்மொழியாம் தமிழுக்காக, தமிழின் ஏற்றத்திற்காக மிகுதியாகப் பாடியவர் பாரதி தாசன்தான் என்றால் அது உண்மை அன்றி வேறில்லை. அவர் தமிழை உயிரெனப் போற்றி வாழ்ந்தார் அதனை,

"கனியிடை ஏறிய சுளையும் முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்—காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும் பாலும்—தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும்—தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்"[1]

எனவரும்-அவர் கூற்றால் அறியலாம்.

நெல்லும், நீரும், கனியும், பிறவும் உடலைத்தான் வளர்க்கும். உடல் மட்டுமே மனிதனாகிவிடாது. அவ்வுடலுடன் உயிரும் இருக்கவேண்டும். அதற்கு மேலாக உணர்வும் இருக்கவேண்டும். உணர்வு என்பது பகுத்தறியும் உணர்வு அவ் உணர்வை அளிக்கவல்லது தமிழ் மட்டுமே. இதனை

"செந்நல் மாற்றிப சோறும் பசுநெய்
தேக்கிய கறியின் வகையும்
... ... ... ...
உன்னை வளர்ப்பன தமிழா! உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே"[2]

எனவரும் அவரது அடிகளால் அறியலாம்.

இன்று, உயர்கல்வி வரை தமிழிலியே படிககலாம் என்ற நிலை உள்ளது. ஆனால் பாரதிதாசன் காலத்தில் தமிழ் படிப்பது என்பது இழிவான செயலாகக் கருதப் பட்டது, தாய்மொழியாம் தமிழ் புறக்கணிக்கப்பட்டு ஆங்கிலமும், வடமொழியும் ஆட்சி செய்த காலமாக இருந்தது. இதனைக்கண்டு வெகுண்ட பாரதிதாசனார்

தமிழ்மொழியைக் கட்டாயப் பாடமாக்கவேண்டும் என்று விரும்பினார். தாய்மொழியில் சிந்திக்கும் சிந்தனையே செம்மை உடைத்து ஆதலால் தமிழர்கள் சிந்தனைச் செல்வர்களாக மாற அவர்களுக்குத் தாய் மொழியைக் கட்டாயமாக்கவேண்டும் என்று கருதிய பாவேந்தர்,

''தமிழ்க் கல்வி தமிழ்நாட்டில்
கட்டாயம் என்பதொரு
சட்டம் செய்ய!
ஆங்கில நூல் அறிவுக்குச்
சான்றிருந்தால் அதுபோதும்
அலுவல் பார்க்க"[3]

என்று முழக்கம் செய்தார். அதன் விளைவு இன்று தமிழ் மொழி கட்டாயப் பாடமாக்கப்பட்டது. பள்ளியிலும், கல்லூரியிலும் மட்டும் தமிழ் கட்டாயம் என்று ஆக்கி விட்டால் தமிழ்மொழி வளர்ந்துவிடாது. விளம்பரங் கள், திருமணச்சடங்குகள், உணவு விடுதிகள் போன்ற அனைத்துமே தமிழில் இருத்தல் வேண்டும் என்கின்றார். அவர் அவ்வாறு கூற வேண்டிய நிலை அன்றைய நிலை. அவர் அன்றைய நிலையையும் எடுத்துக்கூறுகின்றார்.

'மனக்கவரும் தென்றலிலே
குளிரா இல்லை? தோப்பில்
நிழலா இல்லை?
தணிப்பரிதாம் துன்பமிது!
தமிழகத்தின் தமிழ்த் தெருவில்
தமிழ்தான் இல்லை''[4]

என்று தணிக்க இயலா துன்பம் கொள்கின்றார்' விளம்பரங்கள் முதலானவற்றில் எல்லாம் தமிழ்தான்

வேண்டும் என்று கூறி இறுதியாக, "தமிழ்நாட்டில், நம் தமிழ் பலதுறைகளிலும், தாழ்மைப்படுத்தப்பட்டிருக் கின்றது. அத்துறைகளில் சிலவற்றையே இதில் எடுத்துக் காட்டி இருக்கின்றேன். மற்றும் சில துறைகள் பின்னர் ஆகட்டும், இதைநான் எழுதியதின் நோக்கம். என்ன வெனில், தமிழார்வம்மிக்க இளைஞர்கள், இத்தகைய துறைகளில் தமிழ் முன்னேற்றங்கருதி இயன்றவரை கிளர்ச்சி செய்யவேண்டும் என்பதுதான் ஒரு கூட்டம் கோயிலில் பிறமொழிக் கூச்சலைத் தடுக்க ஏன் முயலலாகாது? ஒரு குழுவினர் தெருத்தோறும் சென்று பிறமொழி விளம்பரப்பலகையை மாற்றி அமைக்கச் சொல்லி ஏன் வற்புறுத்தலாகாது? மற்றும் பலவகையினும் கிளர்ச்சி செய்யின், தமிழ்விடுபடும், தமிழ்நாடு விடுபடும். எவ்வினையினும் இஃதன்றோ இந்நாள் இன்றியமையாத நல்வினை"[5] என்றும் கூறுகின்றார். அன்னாரின் கனவு இன்று சிறிது சிறிதாக நனவாகிக்கொண்டிருக்கின்றது.

## இனம்

சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்த பெரியார் அவர்கள் திராவிடநாடு நலம்பெற அரும்பாடுபட்டார். தமிழர், தெலுங்கர், மலையாளி, கன்னடியர் அனைவரும் நலமுடன் வாழ வழிவகுத்தார். இந்நிலையில் பாவேந்தர் அவர்களும் திராவிட இனம் ஒன்றுபட்டு திராவிடநாடு அடைதல் வேண்டும் என்று பாடினார்.

''அடிமரம் ஒன்றேடா
அதன்பெயர் திராவிடமே
தடங்கிளைகள் ஐந்தல்லவா
தமிழ் தெலுங்கு கேரளமே
அடடே கன்னடம் துளுவம்

ஐங்கிளைக்கும் அடி நன்றே
... ... ...
தெளிவிலார்க்கும் தெரிவியடா
திராவிடம்' திராவிடமே!!''[6]

சுயமரியாதை இயக்கம் ஐந்துப் பாகுபாடுடன் இருந்த திராவிடர்களை ஒன்று சேர்க்க முயன்றது. ஆனால் அது வெறும் கனவாக ஆவது கண்டு, பெரியார் அவர்கள் தமிழர்களை மட்டுமாவது ஒன்றுபடுத்துதல் வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார். அதனால் ஐவரையும் ஒன்று சேர்க்கும் முயற்சியை விட்டு தமிழர்களை ஒற்றுமையுடன் வாழவேண்டினார். இவ் ஒற்றுமை ஒன்றே தமிழர்கள் உயர்வுக்கு ஒரே வழி என்று கண்டார். இதனால் பாவேந்தர் பாரதிதாசனாரும் பின்னாளில் திராவிட இனத்தைப் பாடுவதை விட்டுத் தமிழரையே பாடத் தொடங்கினார்.

''தமிழரெல்லாம் தமிழரையே சார்தல் வேண்டும்
தமிழர் அல்லார் தமைச்சார்தல் தீமைசெய்யும்''

என்றும்

''உடையினிலே நன்றாதல் வேண்டும்! உண்ணும்
உணவினிலே நன்றாதல் வேண்டும்; நல்ல
நடையினிலே ஒன்றாதல் வேண்டும்; பேசும்
நாவினிசம் ஒன்றாதல் வேண்டும்''[8]

என்றும் பாடினார். இவ்வாறு இன மேம்பாட்டிற்கும் ஒற்றுமைக்கும் அரும்பாடுபட்டார் பாவேந்தர்.

நாடு

பாரதிதாசன் அவர்கள் தொடக்கக் காலத்தில் இராட்டினப்பாட்டு, கதர்பாட்டு போன்றவற்றைப்

பாடுங்கால் பாரத நாட்டைக் குறித்தே பாடினார். பின்னால் சுயமரியாதை இயக்கத் தொடர்பால் அவர் தமிழ்நாட்டையே 'நாடு' எனக் கொண்டார்.

தன்மொழியில் உயர்வடையாத எந்தவொரு நாடும் மற்றத் துறையில் முன்னேற முடியாது என்பார்கள். அமெரிக்கா,ரஷியா, ஜப்பான்,ஜெர்மனி போன்ற நாடுகள் வளர்ச்சி அடைந்து உள்ளதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். அது போன்று நம்நாடும் உயர்வடைய வேண்டின் முதலில் மொழியை உயர்த்த வேண்டும். தாய்மொழியைச் செம்மைப்படுத்தி அதனை உணர்த்தல் வேண்டும். தாய்மொழியைப் பாராட்டாத எந்த நாடும் வீழ்ச்சி அடையும். இதனை நன்கு உணர்ந்தே பாவேந்தர் அவர்கள்,

''தமிழ் உயர்ந்தால் தமிழ்நாடு தான் உயரும்
அறிவுவளரும் அறமும் ஓங்கும்
இமயமலை போலுயர்ந்த ஒருநாடும்
தன்மொழியில் தாழ்ந்தால் வீழும்'' [9]

என்றும்,

''தமிழ் வாழ்ந்தால் தமிழர் வாழ்வார்கள் என்றோம்
தமிழர் மார்தட்டி வந்தாரா இல்லையா?" [10]

என்றும் பாடினார்.

நாட்டின் மேன்மைக்கு முதலில் மொழியையும், மொழி பேசும் மக்களையும் அம்மக்களின் பண்பாட்டை விளக்கும் இலக்கியங்களையும் காத்தல் வேண்டும். இவற்றைக் காக்கும் உரிமையே நாட்டுரிமை. இதனைத்

"தமிழ் தமிழினம், தமிழிலக்கியம் இவற்றில்
ஒன்றுபோம் எனில் மற்றவும் ஒழியும்
நாட்டின் உரிமை காத்தல் வேண்டும்"[11]

என்கின்றார்.

## சீர்திருத்தம்

பாரதிதாசன் வாழ்ந்த காலக்கட்டத்தில் தமிழ்ச் சமுதாயம், முடை நாற்றமெடுத்த சீர்கெட்ட சமுதாய மாக இருந்தது. பெண்களுக்கும் கல்வி இல்லை. சமஉரிமை இல்லை. இயற்கையின் நியதியாகிய காதல் மணம் மறுக்கப்பட்டது, கலப்பு மணம் நினைத்துக்கூட பார்க்கமுடியாத ஒன்றாக விளங்கியது. பொருந்தா மணமும், குழந்தை மணமும் நாட்டை அலைகிழித்துக் கொண்டிருந்த நேரம். சாதியின் பெயராலும் சமயத்தின் பெயராலும் மக்கள் பிளவுபட்டுத் தோன்றி தமிழ்ச் சமுதாயத்தின் இச்சீர்கேடுகளை எல்லாம் களைந்து நல்லதொரு சமுதாயம்-சீர்பெற்ற சமுதாயம் அமைய அரும்பாடுபட்டார், சமுதாயத்தின் குறைகளை எல்லாம் எடுத்துக்காட்டினார். அதற்கான காரணத்தையும் அதனைக்களையும் வழிமுறைகளையும் சொன்னார். இன்று தமிழ்ச் சமுதாயம் சிறிதளவேனும் தலைநிமிர்ந்து இருக்கின்றது என்றால் அதற்குக் காரணமானர்களுள் குறிப்பிடத் தக்கவர் பாரதிதாசன் என்றால் மிகையாகாது.

## பெண் கல்வி

ஆண்களும் பெண்களும் இணைந்ததே சமுதாயம். இவ்விருவரும் இல்லாமல் முழுமையான சமுதாயம் தோன்ற முடியாது. இவரின் முன்னேற்றமுந்தான் சமுதாய முன்னேற்றமாக அமையும். ஏனோ இடைக்

காலத்தில் ஏற்பட்ட குழப்பத்தால் பெண்கள் சமுதாயத்தின் முன்னேற்றம் தடைப்பட்டது. உயிர் நாடியாகிய கல்வி அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டது அதனால் அவர்கள் அடுப்படிக்கும் பள்ளியறைக்கும் இடையிலேயே தங்களின் வாழ்வை முடித்துக் கொண்டனர்.

**"ஆடை அணிகலன் ஆசைக்கு வாசமலர்**
**தேடுவதும் ஆடவர்க்குச் சேவித் திருப்பதுவும்**
**அஞ்சுவதும் நாணுவதும் ஆமையைப்போல் வாழுவதும்**
**கொஞ்சுவது மாகக்கிடைக்கும் மகளிர் குலம்**
**மானிடர் கூட்டத்தில் வலிவற்ற ஓர்பகுதி"[12]**

வலிவற்றுச் சீர்கெட்ட இச்சமுதாயம் அதன் மற்றப்பகுதி யாகிய ஆண்சமுதாயத்தைக் கெடுத்தல் இயல்பே. ஓர் உறுப்பின் ஒரு பகுதிக்கு அழிவு ஏற்பட்டால் மற்றப் பகுதியும் அழிதல் இயல்பு. எனவே, பெண் சமுதாயம் சீர்கெட்டால் அதனால் ஆண்சமுதாயம் சீர்கெடும். பெண் களுக்குப் பேச்சுரிமை இல்லை என்றால் ஆண்களுக்கு மட்டும் அவ்வுரிமை வந்துவிடுமா என்ன?

**"ஊமைஎன்று பெண்ணை உரைக்குமட்டும் உள்ளடங்கும்**
**ஆமைநிலைமைதான் ஆடவர்க்கும் உண்டு"[13]**

எனவே பெண் சமுதாயத்தைச் சீர்ப்படுத்தினால்தான் ஓர் ஆரோக்கியமான சமுதாயம் உருவாக முடியும். அதற்குப் பெண்களுக்குக் கல்வி அறிவு ஊட்ட வேண்டியது நமது கடமை. கல்வி இல்லாப் பெண்கள் வெறும் களர்நிலந் தானே,

''கல்வியில்லாத பெண்கள்
களர்நிலம் அந்நிலத்தில்
புல் விளைந் திடலாம் நல்ல
புதல்வர்கள் விளைதல் இல்லை!
கல்வியை உடைய பெண்கள்
திருந்திய கழனி; அங்கே
நல்லறிவு உடைய மக்கள்
விளைவது நவிலவோநான்!''[14]

என்று கூறுகின்றார் பாவேந்தர்.

பெண்கள் கல்வி கற்க முதலில் அவர்களின் பெற்றோர் உறுதியுடன் இருத்தல் வேண்டும். ஆண் குழந்தையைப் படிக்கவைப்பதில் இருக்கும் உறுதி பெண் குழந்தையைப் பொருத்தமட்டில் பெற்றோருக்குக் குறைவாகவே இன்றளவும் உள்ளது. இந்நிலை மாறவேண்டும். அதனால் பெற்றவர்களைப் பார்த்து

''பெற்றால் தந்தைதாய்மாரே—நும்
பெண்களைக் கற்க வைப்பீரே!
இற்றைநாள் பெண்கல்வியாலே—முன்
னேறவேண்டும் வைய மேலே''[15]

என்று கூறுகின்றார்.

பெண்கல்வி பற்றி இவர் பல பாடல்கள் பாடி இருக்கின்றார். அவற்றுள் மணிமகுடமாகத் திகழ்வது, தந்தை மகளுக்குக் கூறுவதாக அமைந்த இசைப்பாடல். அப்பாடல் வருமாறு :

'தலைவாரிப் பூச்சூடி உன்னைப்—பாட
சாலைக்குப்போ வென்று சொன்னாள் உன் அன்னை;
சிலைபோல ஏனங்கு நின்றாய்—நீ
சிந்தாத கண்ணீரை ஏன்சிந்துகின்றாய்?

விலைபோட்டு வாங்கவா முடியும்? கல்வி
வேளை தோறும் கற்று வருவதால் படியும!
மலைவாழை அல்லவோ கல்வி?—நீ
வாயார உண்ணுவாய் போஎன் புதல்வி!
படியாத பெண்ணாய் இருந்தால்—கேலி
பண்ணுவார் என்னை இவ்வூரார் தெரிந்தால்!
கடிகாரம் ஓடும்முன் ஓடு!—என்
கண்ணல்ல! அண்டைவீட்டுப் பெண்களோடு!
கடிதாய் இருக்கும் இப்போது—கல்வி
கற்றிடக் கற்றிடத் தெரியும் அப்போது!
கடல்சூழ்ந்த இத்தமிழ்நாடு—பெண்
கல்வி பெண்கல்வி என்கிற தன்போடு''[15]

## பெண்ணுரிமை

ஆண்களுக்குப் பேச எழுத உரிமை இருத்தல் போன்று பெண்களுக்கும் உரிமை இருத்தல் வேண்டும். பெண்களுக்குக் கல்வி புகட்டிவிட்டு அவர்களுக்குப் பேச்சுரிமை இல்லை என்றால் அக்கல்வியால் என்ன பயன் விளைந்துவிடும் என்கிறார் பாவேந்தர்.

''பெண்ணுக்குப் பேச்சுரிமை வேண்டா என்கின்றீரோ?
மண்ணுக்குக் கேடாய் மதித்தீரோ பெண்ணினத்தை?
பெண்ணடிமை தீரும் மட்டும் பேசுந் திருநாட்டு
மண்ணடிமை தீர்ந்து வருதல் முயற்கொம்பே''[16]

எனவே மண்ணடிமை தீர பெண்ணடிமை தீர்தல் வேண்டும். பெண்களுக்கு வீட்டிலும் வெளியிலும் (அகத்திலும் புறத்திலும்) உரிமை வேண்டும் என்கின்றார்.

## காதல் மனம்

காதலித்து மணந்துகொள்வதே தமிழர் மரபு. களவின் வழிவந்த கற்பே சிறந்தது என்பார் நம்பி அகப் பொருள் ஆசிரியர். காதலித்து மணந்துகொள்வது ஒன்று. மணந்துகொண்டு காதலிப்பது மற்றொன்று. முன்னது சிறந்தது. பின்னது ஏற்புடையது, முன்னதைப் பற்றியே சிறக்கப்பாடுகின்றார் பாவேந்தர். அது தமிழர் பண் பாட்டில் ஒன்றல்லவா?

காதல் கொண்ட காளை ஒருவன் தான் காதலித்த கன்னியின் அழகினை எடுத்துக் கூறுகின்றான்.

> **"மின்னலிடை; கன்னல்மொழி; இன்னும் சொன்னால்
> விரிஉலகில் ஒருத்திநீ அழகின் உச்சி"**[16]

இரண்டே அடிகளில் பெண்மையின் அழகை இவ்வளவு உயர்வாக வருணித்தவர் இலக்கிய உலகில் பாரதிதாசன் மட்டுமே எனலாம். அது போலவே காதலி ஒருத்தி தன் காதல் அனுபவத்தைக்

> **"கொழிக்கும் ஆணழகன்!—அவன்
> கொஞ்சிவந்தே எனது
> விழிக்குள் போய்ப் புகுந்தான்—நெஞ்ச
> வீட்டில் உலாவுகின்றான்"**[17]

'கண்விழி புகுந்து கருத்தினில் கலந்த' அவன் இதயத் தில் உலா வருகின்றானாம். இந்நிலையையே 'இருவரும் இதயம் மாறிப்புக்கு இன்பம் எய்தினர்' என்பார் கம்பநாடார். இவ்வாறு ஆணும் பெண்ணும் காதலித்தப் பின் அக்காதலுக்குக் குறுக்கே மற்றவருக்கு என்ன வேலை.

"காதலி ருவர்களும்—தம்
கருத்தொரு மித்தபின்
வாதுகள் வம்புகள் ஏன்?—இதில்
மற்றவர்க்கு என்ன உண்டு''[18]

ஏதும் இல்லை. அவர்கள் செய்ய வேண்டியது எல்லாம் அவ்விரு உள்ளங்களையும் இணைத்து மணம் முடித்து வைத்தலே ஆகும்.

## கலப்பு மணம்

தமிழர்கள் சாதியாலும் சமுதாயத்தாலும் பிளவுபட்டு அதனால் சீர்கெட்டுப் போனார்கள். அவர்களைச் சீர்படுத்தவந்த பெரியார் சாதிசமயங்களைச் சாடினார். அவற்றை நாட்டைவிட்டுத் தொலைக்க அரும்பாடு பட்டார். அதற்குப் பல வழிமுறைகளைப் பின்பற்றினார். அவற்றுள் ஒன்று கலப்பு மணம். கலப்பு மணத்தால் தமிழர் கள் ஒன்றுபட்டனர். ஒன்றுபடுகின்றனர். அன்னாரின் வழியைப் பின்பற்றிய பாவேந்தர் அவர்களும் கலப்பு மணத்தை மிகுதியாக ஆதரித்தார். அது காதல் மணத்தை யும் உள்ளடக்கியது அல்லவா?

"சாதிகள் வீழ்ந்திட வேண்டும்—பெண்ணே
தமிழினமோ வாழ்ந்திட வேண்டும்
மாதொருத்தி வேண்டும் எனக்கும்—தமிழ்
மகளாய் இருந்தால் தான் இனிக்கும்''[19]

என்கின்றார். தான் மணந்துகொள்ளப் போகும் பெண் தமிழ்ப் பெண்ணா என்று பார்த்து மணந்துகொள் அவள் இன்ன சாதி என்று பார்க்காதே என்கின்றார். தன் மகள் காதலித்தவன் என்ன சாதி என்று தந்தை மகளிடம் கேட்கின்றார். அதற்கு மகள் தரும் விடை,

"அப்பா உண்மையில் அவரும் என்போல்
மனித சாதி மந்தி அல்லர்
காக்கை அல்லர் கரும்பாம்பல்லர்...

என்கின்றார். மேலும்,

"சாமி சற்றும் என்நினைவில் இல்லை
மாது நான் தமிழனின் மகளாதலாலே''...[20]

என்றும் கூறுகின்றாள் தமிழன் என்றால் சாதியைச் சற்றும் நினைவில் கொள்ளுதல்கூடாது என்று தமிழனுக்கு புதிய இலக்கணத்தையும் வகுத்துக் கொடுக்கின்றார். புரட்சிவேந்தர், அதனால்தான் என்னவோ இன்று தமிழ் நாட்டில் கலப்பு மணத்தைச் சட்ட ரீதியாக்கி விட்டனர் நம் அரசியலார். அதனால் இன்று கலப்பு மணம் செய்து கொள்வார் எண்ணிக்கை சிறிதுசிறிதாக அதிகமாகிக் கொண்டு வருகின்றது. சாதியும் நாட்டை விட்டுச் சிறிது சிறிதாக நீங்கிக்கொண்டிருக்கிறது. பெரியாரின் எண்ணம் ஈடேறுகிறது.

## பொருந்தா மணம்

இல்லறம் என்ற நல்லறம் ஆணும் பெண்ணும் மனமொத்து நடத்தப்படுவதாகும். மணம் புரிந்து கொள்ளப்போகும் மணமக்களின் விருப்பத்தைக் கேளாமல் ஏதோ தச்சன் இரு மரச்சட்டங்களை ஒன்றுபடுத்துவது போல் இரு உடல்களை ஒன்று சேர்த்தல் மணமாகாது. உள்ளத்தின் வழி உடல் இணைதல் வேண்டும். உள்ளப் புணர்ச்சி நடந்த பின்னே மெய்யுறு புணர்ச்சி நடத்தல் வேண்டும். முன்னது நடக்காமல் பின்னது மட்டும் நடப்பது மூர்க்கத்தனம்; மூடத்தனம். இதனைப் பாவேந்தர் 'மூடத்திருமணம்' என்ற பாட்டில் நன்கு

எடுத்துக்காட்டுகின்றார். முதியவன் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்ட இளைய கன்னி ஒருத்தி படும் துன்பங்களை எல்லாம் எடுத்துக்கூறி இறுதியில் அவள் இக்கொடுமைக்கு ஆளாகக் காரணமான சமூக வழக்கைச் சாடுகின்றனர்.

"மண்ணாய்ப் போக! மண்ணாய்ப்போக!
மனம் பொருந்தாமணம் மண்ணாய்ப் போகவே!
சமூகச் சட்டமே! சமூக வழக்கே!
நீங்கள் மக்கள் அனைவரும்
ஏங்கா திருக்க மண்ணாய்ப் போகவே"[21]

## சாதிசமய எதிர்ப்பு

தமிழ்நாட்டைப் பொறுத்தமட்டில் சமுதாயச் சீர்கேட்டிற்கு வேராக இருந்தவை சாதியும் சமயமுந்தான். மக்களைப் பக்குவப்படுத்தி நன்னெறியில் இட்டுச் செல்லவே இங்கு சமயங்கள் தோன்றின. தொடங்கியதின் நோக்கம் சரிதான். ஆனால் சில தன்னலக்காரர்களின் தலையீட்டால் சமயம் சீர்கெட்டு விட்டது. அது சமுதாயச் சீர்கேட்டிற்கு வழிகோலியது. எதுவுமே தோன்றும்போது நல்லநிலையில்தான் தோன்றும் காலம் செல்லச் செல்ல சீர்கெட்டுவிடும் என்பர். அதற்கு இரையானதில் நம் சமயமும் ஒன்று. சமயம் சாதியை ஈன்றெடுத்தது. சாதி சமயத்திற்கு உறுதுணையானது. ஒன்றை ஒன்று பிரித்துக்காணமுடியாத அளவிற்கு இணைந்தன. அதனால் இவ்விரண்டையுமே சாடுகின்றார் பாவேந்தர்.

"இருட்டறையில் உள்ளதடா உலகம்! சாதி
இருக்கின்றது என்பானும் இருக்கின்றானே!

மருட்டுகின்ற மதத்தலைவர் வாழ்கின்றாரே!
வாயடியும் கையடியும் மறைவ தெந்நாள்?"[22]

சாதி இருப்பதினால் உலகம் இருளில் மூழ்கிக் கிடக்கின்றது. உலகம் ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கிச் செல்ல வேண்டுமானால் சாதிகள் ஒழியவேண்டும். அது போலவே மதத்தலைவர்கள் வாழ்கின்ற காரணத்தால் வாய்ச்சண்டையும் கைச்சண்டையும் இருக்கின்றது. மருட்டுகின்ற மதத்தலைவர் ஒழிந்தால் நாட்டில் சண்டைகள் ஒழிந்துவிடும்.

பண்டைக் காலத்திலும் சமயப்பிரிவால் சண்டைகள் கொலைகள் இன்றும் சமயத்தின் காரணமாய்ப் பெரும் பெரும் தலைவர்கள் கொல்லப்படுகின்றனர். இன்று உள்நாட்டுக் கலகத்திற்குச் சமயமும் ஒரு காரணமாக இருக்கின்றது. எனவே சாதி சமயங்களை எதிர்த்துப் பல பாடல்களைப் பாடினார் பாவேந்தர்.

## பொதுவுடைமை

நாட்டில் பொதுவுடைமை அரசு அமைவதைப் பாவேந்தர் விரும்பினர். அதனால் அவர் தம் பாடல்கள் அனைத்திலும் இக்கருத்தை வலியுறுத்துகின்றார்.

"ஓடப்ப ராய் இருக்கும் ஏழையப்பர்
உதையப்ப ராகிவிட்டால், ஒரு நொடிக்குள்
ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி
ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ"[23]

என்று எல்லாம் பொருளாதாரத்தில் ஒன்றுபட்டுத் திகழ வேண்டும் என்று அழுத்தம் திருத்தமாக—அதே நேரத்தில் ஆவேசக் குரலில் முழக்கமிடுகின்றார்.

"எல்லார்க்கும் தேசம், எல்லாருக்கும் உடைமைஎல்லாம்
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும் ஆகுகவே
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம் வாய்ந்திடுக
எல்லாருக்கும் நல்ல இதயம் பொருந்திடுக"[24]

என்று பொதுவுடைமைக் கொள்கைகளை முழக்கச் செய்கின்றார்.

மேலைநாட்டில் 'ஜான்சன்' என்னும் அறிஞனை 'கோல்டு சுமித்' என்பவர் பாராட்டும்போது, "அவர் தொடாத துறை ஒன்றும் இல்லை; தொட்ட துறைகளை அழகுபடுத்தாமல் விட்டதில்லை" என்பார். அது பாரதிதாசனாருக்கு முழுக்க முழுக்கப் பொருந்துவதாகும். அவர் துறைதொறும் துறைதொறும் புரட்சிச் செய்து புரட்சிக்கவியாக விளங்கினார். புரட்சிக்கவிஞர் என்றாலே அது இவரைத்தான் குறிக்கும் என்ற நிலைக்கு உயர்ந்தார்.

## இலக்கிய நயம்

இதுகாறும், பாவேந்தரின் கருத்தில் மட்டுமே கருத்து செலுத்திப் பார்த்து அவர் புரட்சிக்கவி என்று காட்டப் பட்டது. அவர் சிறந்த இலக்கியக் கவிஞரும்கூட. அவர் தனது புரட்சிக் கருத்துகளுக்கு இலக்கிய மெருகு ஊட்டும் போதே அது சிறந்து மிளிர்கின்றது. நல்ல முறையில் இலக்கியக்கலை கைவரப் பெற்றவர் பாரதிதாசன்.

அவர் இலக்கியக் கூறுகளுள் சிறப்புப் பொருந்தி விளங்குகிறது கருத்து என்பதனை முன்பு கண்டோம் அடுத்து இயற்கை வருணனை, உவமை, ஓசைநயம், உணர்ச்சி கற்பனை போன்ற இலக்கியக் கூறுகளும் சிறந்த முறையில் அமைந்துள்ளன.

## இலக்கிய வருணனை

உலகில் 'இயற்கையைப் பாடாத கவிஞனே இல்லை எனலாம். இயற்கையினைப் பாவேந்தர் 'அழகின் சிரிப்பு' என்கின்றார். அழகின் சிரிப்பில், நிலா, தாமரை, வான், காடு, சிற்றூர், பட்டினம், புறா, மயில், கடல், தென்றல், குன்றம், ஆறு, கிளி போன்றவை களிநடனம் புரிகின்றன. நிலவைப் பாடும்போது,

"அந்தி இருளாற் கருகும் உலகு கண்டேன்
அவ்வாறே வான்கண்டேன் திசைகள் கண்டேன்
பிந்தி அந்த காரிருள்தான் சிரித்ததுண்டோ
பெருஞ்சிரிப்பின் ஒளிமுத்தோ நிலவே நீதான்
சிந்தாமல் சிதறாமல் அழகை எல்லாம்
சேகரித்துக் குளிரேற்றி ஒளியும் ஊட்டி
'இந்தா என்றே' இயற்கை அன்னை வானில்
எழில்வாழ்வைச் சித்திரித்த வண்ணந் தானோ?"[25]

என்று ஓவியம் தீட்டுகிறார்.

இரண்டு புறாக்கள். ஜோடிப்புறாக்கள். ஒன்றாக இணைந்து இரையுண்ணுகின்றது. அதன் அழகைக் கண்டு களித்த பாவேந்தர்,

"இருநிலா இணைந்துபாடி இரையுண்ணும்! செவ்விதழ்கள்
விரியாத தாமரைபோல் ஓர் இணை! மெல்லியர்கள்
கருங்கொண்டை! கட்டி ஈயம் காயாம்பூக் கொத்து! மேலும்
ஒருபக்கம் இருவாழைப்பூ! உயிருள்ள அழகின் மேய்ச்சல்"[26]

என்று பல வண்ணங்களில் காணப்படும் புறாக்களை நம் உள்ளத்தில் படம் பிடித்துக் காட்டுவது போன்ற ஓர் ஒரு காட்சியை ஏற்படுத்துகின்றார். 'எங்கெங்குக் காணினும்

சக்தியடா' என்று பாடத் தொடங்கிய பாவேந்தர், எங்கெங்குக் காணினும் எழில் வண்ணமே' என்று கூறும்படி எங்கும் இயற்கை அழகு இருப்பதை கண்டு மகிழ்கின்றார்.

''பசையுள்ள பொருளிலெல்லாம் பசையவள் காண்!
பழமையினாற் சாகாத இளையவள் காண்!
நசையோடு நோக்கடா எங்கும் உள்ளாள்!
நல்லழகு வசப்பட்டால் துன்பமில்லை![27]

என்று எதிலும் அழகைக் காணுகின்றார். இயற்கையின் அழகை மாந்திய பாவேந்தர் நல்லழகு வசப்பட்டால் துன்பமில்லை' என்று தமது அனுபவத்தைக் கூறுகின்றார். இன்றும் துன்பம் நேரும் வேளையில் பூஞ்சோலைக்கும்' கடற்கரைக்கும் மக்கள் செல்வதைக் காணுகின்றோம். ஏனெனில் இயற்கை அழகில் நாம் இரண்டறக் கலங்குங் கால் நமக்குப் புறத்துன்பங்கள் தோன்றுவதில்லை.

## உவமை நயம்

உவமையைக் கையாளும் முறையினால் கருத்து பொலிவு பெருகின்றது. சிறந்த முறையில் உவமை அமைந்தால் கருத்து செம்மையாக விளக்கம் பெறும், பாரதிதாசனும் உவமையை நன்கு கையாண்டுள்ளார், சிறந்த உவமையை, நினைக்க நினைக்க நெஞ்சை அள்ளும் இன்ப உவமைகளைக் கையாண்டுள்ளார். உவமைக் கவிஞர் சுரதா (சுப்புரத்தின தாசர்) தோன்றக் காரண மாக அமைந்தவர் அல்லவா!

நிலாவைப் பெண்ணாகவும், நீலநிற வானத்தை அவளின் முக்காடாகவும், குன்றின்மேல் தெரியும் நிலவின் வெள்ளொளியை வெண்ணெய்யின் நிறத்திற்கும்,

வெண்ணெயை எடுத்து துய்ப்பதுபோல் அவ்வழகை உண்ணும்படியும் அமையுமாறு ஓர் பாடல்

"நீல முக்காட்டுக் காரி
நிலாப் பெண்ணாள் வற்றக் காய்ந்த
பாலிலே உறைமோர் ஊற்றிப்
பருமத்தால் கடைந்து, பானை
மேலுள்ள வெண்ணெய் அள்ளிக்
குன்றின் மேல் வீசிவிட்டாள்;
ஏலு மட்டும் தோழா நீ
எடுத்துண்பாய் எழிலை எல்லாம்"[25]

பண்டிதர்கள் பகுத்தறிவுக்கு ஒவ்வாதவர்கள். பழைய கதைகளில் உள்ள குறைகளை எல்லாம் எடுத்துக் கூறினால் விளக்கம் சொல்லிச் சரிசெய்து கொள்வது அவர்கள் இயல்பு. இதனை இல்லத்தரசி வீட்டுப்பணிகள் அனைத்தையும் தணிக்கை செய்வதற்கு ஒப்பிட்டு மகிழ்கின்றார்.

"பண்டிதர்கள் பழங்கதையின் ஓட்டைக் கெல்லாம்
பணிக்கையிடல் போல் அனைத்தும் தணிக்கை செய்தே"

இவ்வாறு தக்க இடத்தில் தக்க உவமையைத் தக்க முறையில் கையாள்வதில் வல்லவராகப் பாவேந்தர் திகழ்கின்றார்.

## ஓசை நயம்

தொடக்கக் காலம் முதற்கொண்டே பாவேந்தர் அவர்கள் இனிய ஓசைநயம் உடைய இசைப்பாடல்களை இயற்றினார். தான் இயற்றிய பாடல்களுக்கு தாளம் ராகம் போன்றவற்றை தாமே அமைத்தார். ஆதி தாளம்

முதலான தாள வகைகளில் அமைந்த பாடல்களையும், காந்தாரி, இந்துஸ்தானி முதலிய இராகங்கள் அமைந்த பாடல்களையும் இயற்றினார். இப்பாடல்கள் தொகுக்கப் பட்டு இசையமுது—1, இசையமுது—2 என இரு தொகுதி களாக வெளியிடப்பட்டுள்ளது. அவர் பல இசைப்பாடல் களை இயற்றினாலும் அவற்றுள் தலைமைசான்ற இடத் தில் இருப்பது இப்பாடல்.

பெண் குழந்தையைத் தொட்டிலில் கிடத்தி பெற்றோர்கள் பாடும் இனிய பாடல்,

"துன்பம் நேர்கையில் யாழ் எடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா?—எமக்கு
இன்பம் சேர்க்க மாட்டாயா?—நல்
அன்பிலா நெஞ்சில் தமிழில்பாடி—நீ
அல்லல்நீக்க மாட்டாயா?—கண்ணே
அல்லல்நீக்க மாட்டாயா?—மிக
வன்பும் எளிமையும் சூழும் நாட்டிலே
வாழ்வில் உணர்வை சேர்க்க—எம்
வாழ்வில் உணர்வை சேர்க்க—நீ
அற்றை நற்றமிழ்க் கூத்தின் முறையினால்
ஆடிக்காட்ட மாட்டாயா?—கண்ணே
ஆடிக்காட்ட மாட்டாயா?
அறமிது என்றும் யாம் மறமிது என்றுமே
அறிகலாத போது—யாம்
அறிகலாதபோது—தமிழ்
இறைவனாரின் திருக்குறளிலே ஒருசொல்
இயம்பிக் காட்ட மாட்டாயா?—நீ
இயம்பிக் காட்ட மாட்டாயா?
புறமிது என்றும் நல் அகமிது என்றுமே
புலவர் கண்ட நூலின்—தமிழ்ப்

புலவர் கண்ட நூலின்—நல்
திறமை காட்டிஉனை ஈன்ற எம்உயிர்ச்
செல்வம் ஆக மாட்டாயா? தமிழ்ச்
செல்வம் ஆக மாட்டாயா!''[29]

## உணர்ச்சி

பாவேந்தர் அவர்கள் உணர்ச்சிமிக்க பல கவிதைகள் இயற்றினார். கவிதையே உணர்ச்சியின் அடிப்படையில் தோன்றுவ.து கவிதை உணர்ச்சியின்பாற்பட்டது திறனாய்வு அறிவின்பாற்பட்டது. கவிஞன் உணர்ச்சிமயமானவன், திறனாய்வாளன் அறிவுமயமானவன். புரட்சிக் கவிஞரின் பாடல்களில் நகைச்சுவை, அவலம் பெருமிதம் முதலான எட்டுவிதச் சுவை உணர்ச்சிகள் நிரம்பி உள்ளன. அவர் புரட்சிக் கவி என்பதற்கு ஏற்ப அவர் பாடல்களில் வீர உணர்ச்சியே முதலிடம் பெறுகின்றது.

"பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு
திறக்கப்பட்டது! சிறுத்தையே வெளியில்வா!
எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்கப்
புலியென செயல் செய்யப் புறப்படு வெளியில்
......................................
சிங்க இளைஞனே திருப்புமுகம்! திறவிழி''[30]

என்று தமிழுக்குக் கொடுமை செய்வாரை எதிர்க்க இளைஞர்களுக்கு அறைகூவல் விடுகின்றார். மேலும் தொழிலாளர்கள் துன்பத்தில் மூழ்கவும், உழைக்காத பணமுதலைகள் உண்டு மகிழவும் இருக்கும் கொடுமையினைக் கண்டு நெஞ்சு பதைத்த பாவேந்தர் ஆவேசக் குரலில்,

"கொலை வாளினை எட்டா மிகு
கொடியோர் செயல் அறவே
குகைவாழ் ஒருபுலியே உயர்
குணமேவிய தமிழா"[31]

என்று தமிழனுக்கு உணர்ச்சி ஊட்டும்வண்ணம் கூறுகின்றார்.

## கற்பனை

பெண்களை மயிலுடன் ஒப்பிடுவர் புலவர்கள். பெண்களுக்குக் கழுத்து குட்டையானது. மயிலுக்கு கழுத்து நெட்டையானது. அனைத்திலும் பெண்கள்போலிருக்கும் மயிலுக்கு கழுத்தில் மட்டும் ஏன் இந்த ஏற்றத்தாழ்வு. கற்பனை செய்து பார்க்கின்றார் கவிஞர். அவருக்கு ஒரு கருத்துப் புலப்படுகின்றது. அதனை நகைச்சுவையுடன் கலந்து உரைக்கின்றார்.

"அயலான் வீட்டில் அறையில் நடப்பதை
எட்டிப்பார்க்கா திருப்பதற்கே
இயற்கை அன்னை இப்பெண் கட்கெலாம்
குட்டைக் கழுத்தைக் கொடுத்தாள்! உனக்கோ
கறையொன்றில்லாக் கலாப மயிலே;
நிமிர்ந்து நிற்க நீள்கழுத் தளித்தாள்!
இங்குவா! உன்னிடம் இதைச் சொன்னேன்
மனதிற் போட்டுவை; மகளிர் கூட்டம்
என்னை ஏசும் என்பதற்காக"[32]

மாலைப்பொழுது, கொல்லையில் கவிஞரும் அவர்தம் மனைவியாரும் தென்றல் இதமாய் வீசுகின்றது. இந்நிலையில் மனைவியார், வெந்தயக் கலத்தை பூனை தள்ளி

விட்டது என்று அடுக்களைச் சென்றார். தனித்திருந்த கவிஞர், மனைவியாரின் உடற்குளிர்ச்சி மென்மை, மணம் இவற்றை நுகர நினைவு கொண்டார். மனைவி அங்கு வராமலேயே அது நிறைவேறியது எப்படி? கவிஞரே கூறுகின்றார்.

''தெரியாமல் பின்புறமாய் வந்த பெண்ணாள்
சிலிர்த்திடவே எனை நெருங்கிப் படுத்தாள்போலும்
சரியாத குழல் சரியலானாள் போலும்
தடவினால் போலும் எனைத் தன்கரத்தால்
புரியாத இன்பத்தைப் புரிந்தாள் போலும்!
புரியட்டும் என இருந்தேன்; எதிரில் ஓர்பெண்
பிரிவுக்கு வருந்தினேன் என்றாள் ஓகோ!
பேசும்இவள் மனைவி மற்றொருத்தி தென்றல்''[33]

இவ்வாறு இவர்தம் கற்பனையில் உயரிய கருத்தும், காதற் சிறப்பும் மிளிர்கின்றன.

**நகைச்சுவை**

நகைச்சுவையைப் பற்றித் தாங்கள் என்ன நினைக்கின்றீர்கள் என்று மகாத்மா காந்தியை கேட்டபோது அவர், "நகைச்சுவை இல்லையென்றால் நான் எப்பொழுதோ தற்கொலை செய்துகொண்டிருப்பேன்"[34] என்றாராம். நகைச்சுவை வாழ்க்கைக்கு அந்த அளவிற்கு வேண்டற்பாலது. பாரதிதாசன் நகைச்சுவை விரும்பி. இஃது அவர் பாடலில் வரும் நகைச்சுவை உணர்ச்சியால் அறியலாம்.

அடர்ந்த காடு, அதில் செழித்து வளர்ந்திருக்கும் ஆலமரம். அதன் கிளையில் ஒரு குரங்கு. அது ஆல விழுது

என்று எண்ணி பாம்பைப் பிடித்துவிடுகின்றது. உடனே குழந்தைபோல் துள்ளிக்குதித்து மேல்நோக்கி தாவுகின்றது. அங்கு கிளைகளில் உள்ள விழுதுகளை எல்லாம் பாம்பாக எண்ணி எண்ணி அஞ்சி மரத்தின் உச்சிக்குச் சென்று விடுகின்றது. மேலே சென்று குனிந்து தன் வாலைப் பார்க்கின்றது. தன்வாலும் அதற்குப் பாம்புபோல் காட்சி அளிக்கின்றதாம்.

> "கிளையினிற் பாம்பு தொங்க
> விழுதென்று குரங்கு தொட்டு
> விளக்கினைத் தொட்ட பிள்ளை
> வெடுக்கெனக் குதித்ததைப் போல்
> கிளைதொறும் குதித்துத் தாவி
> கீழுள்ள விழுதை எல்லாம்
> ஒளிப்பாம்பாய் எண்ணி எண்ணி
> உச்சிபோய்த் தன்வால் பார்க்கும்"[35]

'நல்லமுத்துக்கதையில்' வரும் அம்மாக்கண்ணு வெள்ளையப்பரிடம் காதல் கொண்டு தன் அன்பை வெளிப் படுத்தும் பாடல் மிக்க சுவை பயப்பது.

> "அம்மியும் நீங்கள் அடுப்பும் நீங்கள்
> சட்டியும் நீங்கள் பானையும் நீங்கள்
> வீடும் நீங்கள் மாடும் நீங்கள்
> திகைப்படைந்து தெருவில் போனால்
> மரமும் நீங்கள் மட்டையும் நீங்கள்
> கழுதை நீங்கள் குதிரை நீங்கள்
> எல்லாம் நீங்களாய் எனக்குத் தோன்றும்"[36]

இவ்வாறு பாரதிதாசனின் நகைச்சுவை மிக்க இன்ப உணர்வை ஊட்டி நம்மைச் சிரிக்க வைக்கின்றது.

இவ்வாறு பாரதிதாசனார் பாடல்களில் புரையோடிப் போன சமுதாயத்தைச் சீர்திருத்தத் தேவையான, பெண்கல்வி, காதல் மணம், கலப்பு மணம், விதவைமண ஏற்பு, குழந்தைமண மறுப்பு, பொருந்தா மணம் எதிர்ப்பு, ஆண்பெண் சமம், சாதிசமய விடுதலை, பகுத்தறிவு இயக்கம், மொழி, இனம், நாடு போன்றவற்றின் மேம் பாட்டிற்கான கருத்துகள், மிளிர்கின்றன.

மேலும் சிறந்த இலக்கியமாகத் திகழத் தேவையான உவமை நயம், கற்பனை நயம், உணர்ச்சி நயம், வருணனை, சுவை போன்றவை செம்மையாக அமைந்துள்ளன இவரது பாடலில் மனதைப் பறிகொடுத்த சான்றோர் பெருமக்கள் கீழ்வருமாறு பாராட்டியுள்ளனர்.

> பாரதிதாசன் அவர்கள் புரட்சிகரமான கருத்துகளை வெளிப்படுத்திய முதல் கவிஞரும் கடைசிக் கவிஞரும் ஆவார். அவருக்கு ஈடாக இன்று எந்தக் கவிஞரும் தோன்றவே இல்லை. தோன்றியவர்களும், தோன்றுகிறவர்களும் பழமைக் கருத்துகளைக் கொண்டவர்கள் தான் ஆகும்.
>
> —தந்தை பெரியார் ஈ வே.ரா.

> பாரதிதாசனின் தமிழ்ப் பற்றுக்கு எல்லையில்லை அவர்தம் பாடலைப் படிக்கின்ற அந்நியனும் தமிழனாகிவிடுவான்.
>
> —டாக்டர் அ. சிதம்பரநாதஞ் செட்டியார்

> எனக்குக் குயிலின் பாடலும், மயிலின் ஆடலும், வண்டின் யாழும், அருவியின் முழவும் இனிக்கும். பாரதிதாசன் பாட்டும் இனிக்கும்.
>
> —தமிழ்ப் பெரியார் திரு.வி.க.

நமக்கொரு வால்டேர் கிடைத்துவிட்டார். நமக்கோர் ஷெல்லி கிடைத்துவிட்டார். அவர் நம்மோடு இருக்கிறார், நமக்காக இருக்கிறார். நம் வேலையைச் செய்கிறார் நாம் வாழ வழி அமைக்கிறார் அவர் வாழ்க.

—பேரறிஞர் அண்ணா

## அடிக்குறிப்புகள்

1. பாரதிதாசன் கவிதைகள்: தொகுதி-1, பக். 89
2. மேற்படி, பக். 89
3. தமிழியக்கம், பக். 20
4. மேற்படி. பக். 13
5. மேற்படி. முன்னுரை
6. இசையமுது, தொகுதி-2, பக். 55
7. தமிழுக்கு அமுதென்று பேர், பக். 21
8. வேங்கையே எழுக. பக். 39
9. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி-4 பக். 190
10 " " தொகுதி-4, பக். 191
11. " ,, தொகுதி-3, பக். 312
12. ,, ,, தொகுதி-1, பக். 37
13. சஞ்சீவி பர்வதத்தின் சாரல்
14. குடும்ப விளக்கு
15. இசையமுது, பக். 50

15அ. இசையமுது

16. சஞ்சீவி பர்வதத்தின் சாரல்

16அ. பாண்டியன் பரிசு, 5-57

17. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி-1, பக். 78
18. ,, ,, " பக். 78

19. பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 4, பக். 74
20. மேற்படி பக். 89
21. பாரதிதாசன் கவிதைகள் தொகுதி 1, பக். 111
22 பாண்டியன் பரிசு, 3-56
23. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி-1, பக். 148
24. " " வீரத்தாய் பக். 50
25. " " புரட்சிக்கவி பக்.20
26. அழகின் சிரிப்பு, புறாக்கள் பக், 42
27. மேற்படி, அழகு பக். 5
28. மேற்படி, குன்றம் பக். 21
29. இசையமுது, தொகுதி-1 பக். 48
30, பாரதிதாசன் கவிதைகள் தொகுதி-2, பக். 90
31. பாரதிதாசன் கவிதைகள் தொகுதி-1, பக். 173
32. " " " பக். 54
33. " " தொகுதி-2
34. துளசி ஜெயராமன், காந்திக் கதைகள் நூறு. பக். 82
35. அழகின் சிரிப்பு, ஆல். பக். 40
36. பாரதிதாசன் கவிதைகள், தொகுதி-3, பக். 132

# உமர் கய்யாம்

உமர்கய்யாம் பாரசீக நாட்டின் பெருங்கவிஞர். கி.பி. 11-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நிஷபூர் என்ற நகரத்தில் இவர் பிறந்தார். இவரது இயற்பெயர் கியாதுடீன் அபுல்பாத் உமர் என்பது; தம் இயற் பெயரோடு கய்யாம் என்பதையும் தாமே சேர்த்துக் கொண்டார். 'கய்யாம்' என்பதற்குக் கூடாரம் செய் பவன்' என்று பொருள். இத்தொழிலை இவர் தந்தை யார் செய்தார் போலும்! இவர் தமது பள்ளிப் படிப்பின் போது, இவரும் இவரது உற்ற நண்பர்கள் இருவரும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டனர். 'தம்முள் ஒருவர் உயர்ந்த நிலையை அடைந்தால் மற்ற இருவருக்கும், அவர் உதவவேண்டும், அவர்களை உயர்த்தவேண்டும்' என்பதே அந்த ஒப்பந்தம். வியப்புக்குரிய வகையில் இந்த நண்பர் களில் ஒருவர் ஒரு மாநிலத்தை ஆளும் நிலைக்கு உயர்ந் தார். அதனால் தம் தோழர்களுள் ஒருவருக்கு அரண் மனையில் உயர்பதவியைக் கொடுத்தார்; உமாருக்கு ஆண்டுதோறும் பெருந்தொகையைக் கொடுத்து வாழச் செய்தார்.

பணக் கவலை இல்லாதபடி வாழ்ந்த உமர்கய்யாம் தம்முடைய நீண்ட ஆயுளை, கணிதம் சோதிடம் முதலிய சாஸ்திரப் பயிற்சியில் செலவிட்டு வந்தார். இவர் இயற்றியுள்ள முகம்மதியப் பஞ்சாகம் இவருடைய கணித அறிவையும் சோதிட அறிவையும் புலப்படுத்தும். இவருடைய கல்வியறிவு ஆழமானது. வாழ்க்கையைக் குறித்தும் அது பயனின்றி வறிதாயுள்ள தன்மையைக்

குறித்தும் பல பாடல்களை யாத்தார். இப் பாடல்களுக்கு 'ருபாயாத்' என்று பெயரிட்டார். ருபாயாத் என்பதற்கு நான்கடிச் செய்யுள் என்பது பொருள்.

## மொழிபெயர்ப்பு

உமரிகய்யாம் பாரஸீக மொழியில் இயற்றிய ருபாயாத் பாடல்களைப் 'பிட்ஜெரால்ட்' ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அந்த ஆங்கில மொழிபெயர்ப்பைத் தழுவியே கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை 'உமர் கய்யாம்' பாடல்களைத் தமிழாக்கித் தந்துள்ளார்.

'பிறநாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும்' என்ற பாரதியின் வாக்கு மொழி பெயர்ப்பின் தேவையை உணர்த்தும்.

மொழிபெயர்ப்பு ஓர் அருங்கலையாகப் போற்றத் தககது. உலக நாடுகள் ஒன்றோடொன்று இலக்கியத் தொடர்பு கொள்வதற்கும் வெவ்வேறு நாட்டு மக்கள் ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு பண்பாட்டு முறையில் உறவைப் பெருக்கிக் கொள்ளவும் மொழிபெயர்ப்பு உறுதுணையாக அமையும். மொழிபெயர்ப்பாளருக்கு ஒரு மொழிப் பயிற்சியும், ஒருமொழிப் புலமையும், ஒருமொழி ஆர்வமும் போதா; இருமொழிப் பயிற்சியும், இருமொழிப் புலமையும் இருமொழி ஆர்வமும் வேண்டும். ஒரு மொழியிலே கூறப்பட்ட கருத்தை அதன் அழகும் உணர்வும் சிதையாமல் வேறொரு மொழியிலே வடித்துத் தருவது பெரும் சாதனையாகும். இத்தகைய பணியைச் சிறக்கச் செய்துள்ளார் கவிமணி.

மூல நூலாசிரியராகிய உமர்கய்யாம் அவர்களின் நோக்கமும் உணர்வும் சிதையா வண்ணம் அவருடைய

பாடல்களைத் தமிழாக்கித் தந்துள்ளார் கவிமணி. இதனாலேயே ஆங்கில உலகில் பிட் ஜெரால்ட் பெற்றுள்ள மதிப்பைத் தமிழில் கவிமணி பெற்றுள்ளார். கவிமணியின் இந்த மொழிபெயர்ப்பைப் பற்றி, "மொழி பெயர்க்க எடுத்துக்கொண்ட ஒவ்வொரு செய்யுளிலும் கவிமணியின் ஆன்மா பிரவேசித்து நின்று செய்யுட் கருத்தின் வடிவினைத் தானே மேற்கொண்டு புதிய சிருஷ்டியாகத் தோன்றியுள்ளது என்பதே உண்மை. இச் செய்யுள்களிலே மொழிபெயர்ப்பு என்ற உணர்ச்சியே உண்டாவதில்லை. நமது நாட்டிலே நமது தாய்மொழி விருட்சத்திலே இயற்கையாகக் காய்த்து விளைந்து சுவை படக் கனிந்த கனிகள் என்று சொல்லத் தக்கனவாகவே உள்ளன" என்று வையாபுரிப்பிள்ளை அவர்கள் தமிழ்ச் சுடர் மணிகள் என்ற நூலில் கூறியுள்ளார்.

## கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை (1876-1954)

இவர் நாகர்கோவிலையடுத்த தேரூரில் 1876-ஆம் ஆண்டில் பிறந்தார். தந்தையார் சிவதாணுப்பிள்ளை, தாயார் ஆதிலட்சுமி அம்மையார். சாந்தலிங்கத் தம்பிரானிடம் தமிழ் கற்றார். இவர் இலக்கணங்களையும் இலக்கியங்களையும் முறையாகப் பயின்று புலமை பெற்றார். 1901-ல் திருமணம் செய்து கொண்டார். கோட்டாறு பள்ளியிலும், மகாராஜா பெண்கள் கல்லூரியிலும் தமிழ்த்தொண்டாற்றினார். இலக்கிய ஆராய்ச்சி செய்வதையும் புதிய கவிதைகள் இயற்றுவதையும் கடமையாகக் கருதிச் செய்து வந்தார். 'தேவி', 'கவிமணி' என்னும் பெயர்களாலும் அவர் அழைக்கப்படுகிறார்.

மலரும் மாலையும், மருமக்கள்வழி மான்மியம், ஆசிய ஜோதி, தேவியின் கீர்த்தனங்கள், குழந்தைச்

செல்வம், கவிமணியின் உரைமணிகள் ஆகிய நூல்களை யும் கவிமணிபடைத்துள்ளார். இவரைத்

"துரும்பென மெலிந்த தேகம், துலங்கிடும் குளிர்ந்த பார்வை
இரும்பென வலிய உள்ளம் இனியவே செய்யும் எண்ணம்"

கொண்டவராகவும், கரும்பினும் இனிய சொற்கள் கொண்டவராகவும் போற்றுகிறார் நாமக்கல் கவிஞர். இவரே கவிமணியின் கவிதையைக் குறித்து 'தேசிய விநாயகத்தின் கவிப்பெருமை தினமும் கேட்பதென் செவிப் பெருமை' எனப் போற்றுகிறார். இவரது கவிதை களின் மாண்பைக் குறித்து டி.கே.சி. அவர்கள் "தமிழ் மக்களுக்குக் கிடைத்த பெருஞ்செல்வம்; அரிய செல்வம்; தெவிட்டாத அமிர்தம்; ஆயுள் முழுவதுமே தமிழ்மகன் தன்னுடன் வைத்துக் கொண்டு அனுபவிக்க வேண்டிய வாடாத பூச்செண்டு" என்று பாராட்டுகிறார். இனிமை, எளிமையுமான மொழிநடை கவிமணிக்குக் கைவந்த கலையாகும்.

உமார் கய்யாம் கணிதக் கலை வல்லுநராகவும், சோதிடக் கலை நிபுணராகவும் அவர் காலத்தில் திகழ்ந் தாலும், இன்று உலக மக்கள் அவரை ஒரு மிகச் சிறந்த கவிஞராகவே நினைவு கூர்கின்றார்கள். அவர் தம் ஆழ்ந்த கணிதப் புலமையும் சோதிடக்கலைத் தேர்ச்சியும் பொது மக்களால் மறக்கப்பட்டுவிட்டன. வாழ்க்கையில் வறிதாயுள்ள தன்மை குறித்தும் வாழ்க்கை எவ்வாறெல் லாம் நிகழ்கின்றது என்பது குறித்தும் இவர் இயற்றியுள்ள பாடல்களை மக்கள் மறந்தாரல்லர்; மாறாக இன்றளவும் மனத்தில் இருத்தி அக்கவிஞனின் வாழ்க்கைத் தத்துவ நோக்கிற்கு வணக்கம் செலுத்துகிறார்கள்.

மக்களின் இம்மை, மறுமை குறித்துச் சிந்தித்து எளிமையும், உயர்வும் புலப்பட இவர் இயற்றியுள்ள அருமையான ஒப்புயர்வற்ற செய்யுட்கள் 'ருபாயத்' என்று அழைக்கப்பெறுகின்றன.

'ருபாயத்' என்னும் நூலில் அமைந்துள்ள பாடல்களில் ஓர் அவலச் சுவை நெடுகிலும் தொனிக்கக் காணலாம். இவர் பாடல்களில் இன்ப உணர்ச்சியினைக் காண்பதரிது. இப்பிறவியில் இவ்வுலகத்தில் உண்பதும், குடிப்பதும், மங்கையுடன் இணைந்து மகிழ்ந்து வாழ்வதும் தான் உருவாக்கப்பட்ட நியதியோ என்ற ஐயுறவு உணர்ச்சி இவர் பாடல்களில் கொப்பளிக்கும். இவ்வுலகில் வாழ்ந்து முடிந்தபின், மறுபிறவியில் நமக்குக் காத்திருப்பது யாவை என்பது குறித்தும் முடிந்த முடிபாக இவர் பாடல்களில் யாதும் காணப்படவில்லை. நெஞ்சைப் பிழியும் ஒரு சோக உணர்ச்சியே இவர் பாடல்களின் அடிநாதமாய் அமைந்துள்ளது எனலாம் இவருடைய பாடல்களைப் படிப்போர் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் அந்தத் தீராத சோக உணர்ச்சி நிலைகொள்வதனை உணரலாம். ஆன்மாக்கள் துடிதுடித்து வருந்தும் துன்பநிலை இந்தப் "பாரசீகக் கவிதைகளிலே அங்கங்கே காணப்படுதல் உண்மை" என்பர் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்கள். அதற்குச் சான்றாக,

வந்தவந்த மனிதரெல்லாம் (36)

வழியிற் குண்டு குழிவெட்டி (31)

என்று தொடங்கும் இரு பாடல்களை அவர் எடுத்துக் காட்டுவர்.

வாழ்க்கையில் நம்பிக்கையற்று வாழ்க்கையை எள்ளி நகையாடும் போக்கில் மது, மங்கையர், இசை பெருகூட்டும் பாட்டு ஆகியவற்றில் வாழ்நாளை ஓட்ட வேண்டும் என்று இவர் அறிவுறுத்துவதாகக் கவிமணி அமைத்துள்ள கீழ்காணும் பாடல் எஞ்ஞான்றும் நெஞ்சிலே கொள்ளத் தக்கதாகும்.

வெய்யிற் கேற்ற நிழலுண்டு;
வீசும் தென்றல் காற்றுண்டு;
கையில் கம்பன் கவியுண்டு;
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயு முண்டு;
வையந் தருமிவ் வனமன்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ? (106)

ஒரு மனிதன் தன் உயர்வுக்கும் தாழ்ச்சிக்கும் அவனே காரணமாக அமைகின்றான் என்பர். இதனையே நாலடியார்,

நன்னிலைக்கண் தன்னை நிறுப்பானும் தன்னை
நிலைகலக்கிக் கீழிடு வானும் — நிலையினும்
மேன்மேல் உயர்த்து நிறுப்பானும் தன்னைத்
தலையாகச் செய்வானும் தான் (248)

என்று கூறுகிறது.

உமாரும் இக் கருத்தினைப் பின்வருமாறு குறிப்பிடக் காணலாம்.

ஊனா ருடலம் இதுவீழின்
உண்டலம் வாழ்வின் நிலையறிய
ஆனா ஆசை மிகவேஎன்
ஆன்மா வினையான் வேண்டிநின்றேன்

நானா உலகம் நெடுநாளா
நாடி யலைந்து வந்ததுதான்
'யானே சொர்க்கம் நரகமெலாம்'
என்றே கூறி நின்றதுவே (30)

அடுத்து, பகலும் இரவும்போல இவ்வுயர்வும் தாழ்வும் மாறிமாறியும் இவ்வுலகில் அமையும் என்பதனை மிக அழகாகக் குறிப்பிடுகிறார் உமார். மணிமுடி தரித்து மன்னவன் ஆண்ட அரண்மனைக் காலம் மாறினால் கோட்டானும் ஆந்தைகளும் பேயும் வாழும் காடாகி விடும், என்றும், வில்லேந்தி வேட்டைக்குச் சென்று வெற்றி கொண்ட வேடனின் கையினையும் பின்னாளில் நரிகள் பற்றி இழுப்பதனைப் பாரில் கண்கூடாகக் காணலாம் என்றும் கட்டுரைக்கின்றார் (14).

நம் இச்சையினால் இவ்வுலகிற் பிறக்கவில்லை. இன்னும் எவ்வெப் பிறவி வாய்க்குமோ! எவ்வெவ்வா றெல்லாம் அல்லற்பட்டு அழவேண்டியிருக்குமோ! எனவே இக்கொடுமைகளை மறந்து தொலைக்க ஒரு கிண்ணம் மது வேண்டும் என்கிறார் (72). மேலும் உமார் இவ்வுலகை ஒரு தோட்டக் களமாகவும், மனிதர் விதியின் விளையாட்டுக் கருவிகள் என்றும், இறைவன் அலகிலா விளையாட்டுடையான் என்றும் அழகுறச் சித்தரிக்கின்றார். பாடலைக் காண்போம்.

எல்லாம் இங்கோர் சூதாட்டம்;
இரவும் பகலும் மாறாட்டம்;
வல்லான் விதியே ஆடுமகன்;
வலியில் மனிதர் கருவிகளாம்;

சொல்லா தெங்கும் இழுத்திடுவான்;
ஜோடி சேர்ப்பான்; வெட்டுவான்;
செல்லா தாக்கி ஒவ்வொன்றாய்த்
திரும்ப அறையில் இட்டிடுவான் (52)

எனவே விதி அதன் போக்கிலேயே செல்லும் என்றும், அதனைத் தடுத்து நிறுத்தும் வல்லமை இவ்வுலகில் எவருக்கும் இல்லையென்றும், துன்பம் அடுக்கடுக்காகத் தொடர்ந்து வருதல் உறுதி என்றும் வன்மை புலப்பட உமார் குறிப்பிடுகின்றார்.

எழுதிச் செல்லும் விதியின்கை
எழுதி எழுதி மேற்செல்லும்
தொழுது கெஞ்சி நின்றாலும்
சூழ்ச்சி பலவும் செய்தாலும்
வழுவிப் பின்னால் நீங்கியொரு
வார்த்தையேனும் மாற்றிடுமோ?
அழுத கண்ணீ ராறெல்லாம்
அதிலோர் எழுத்தை அழித்திடுமோ? (53)

விதி முடிந்தால் மரணம் வந்தெய்துகிறது. மரணத்திற்குப்பின் மனிதநிலை என்னவென்று எவருக்காவது தெரியுமா? தெரியாது என்கிறார் உமார் கய்யாம்.

திட்டிக் கதவு திறந்ததடா!
திறவு கோலும் இல்லையடா!
கட்டித் திரையும் கண்டதடா!
கண்ணும் மயங்கி நின்றதடா!
ஒட்டிச் சிறிது நீ நான்என்று
உரைத்த உரையும் கெட்டதடா!
நட்ட காலம் பின்னையடா!
நான் நீ யற்றுப் போச்சுதடா! (26)

இவற்றிலிருந்து என்ன தெரிகிறது? மது குடித்து மதி மயங்கித் துன்பங்களை மறந்து சுகம் காணலாமா? ஆம்! அதுதான் செய்யத் தக்கது. பொன் வேண்டாம்; புகழ் வேண்டாம்; பொருள் வேண்டாம்; அதிகாரம் வேண்டாம். தன்னை மறந்து இன்பமுற ஒரு தந்திரத்தைக் கற்றுக், கொள்ள வேண்டும். நாளை என்பது பொய். இந்த நிமிடம் நம்முடையது. வாழ்வு சிறிதுதான்; அந்தச் சிறிதான வாழ்வு நேரத்தையும் பயனற்றுப் போக்கி விடாமல், இந்திரிய இன்பங்களை, உடலில் ஆற்றல் இருக்கும் பொழுதே அனுபவித்துத் தீர்த்துவிட வேண்டும். இவ்வாறு அறிவுறுத்துகிறார் உமார்.

வாராய் நண்பா, வருத்தமெனும்
வாடைக் காலப் போர்வையினை
நேரா வருமிவ் வசந்தமெனும்
நெருப்பில் வீசி எறிவாயே!
தோரா வாழ்வின் பறவைஇனும்
செல்லும் தூரம் சிறிதேயாம்.
பாராய்! பாராய்! பறவை அதோ
பறக்கச் சிறகும் விரித்ததடா! (9)

வாழ்வு பற்றிய இக்கொள்கை மக்களுக்கு உவப்பாகக் கூட இருக்கலாம்; ஆனால் அபாயம் பொருந்திய வாழ்வாகவும் அஃதாகிவிடும் என்பதையும் ஒருவர் மறத்தல் கூடாது. இக்கொள்கை மிருக வாழ்க்கையிற் கொண்டுபோய் விட்டுவிடலாம். எனவே வாழ்க்கை ஆற்றின் அலை போல் அமைகிறது மீண்டும் மீண்டும் ஒரு சுழலில் அகப்பட்டுக் கொண்டு விழுவதும் எழுவதுமாக வாழ்க்கை இருக்கிறது.

மலையில் ஏறி நிற்கின்றோம்,
    மறிந்து கடலில் வீழ்கின்றோம்;
கலவு புயலில் அகப்பட்டுச்
    சுழன்று சுழன்று செல்கின்றோம்
அலையும் நுங்கும் நுரையுமால்
    அடைந்த பயன்வே றொன்றுமிலை
உலகின் உண்மை இதுவல்லால்
    உரைக்க வேறொன்றுண்டோ? சொல் (24)

நன்மையும் தீமையும் ஒருங்கே வாழும் இடமாக மக்களைப் படைத்து விட்டு, மக்கள் தீமைகள் செய்யும் போது அவர்களைத் தண்டிப்பது படைத்தவனாகிய இறைவனுக்கு அழகாகுமா? நீதியாகுமா? என்று கேட்கிறார் கவிஞர் உமார் கய்யாம்.

யாது சொன்னாய்? இன்னமுதம்
    ஏந்தி உண்ட கலமதனை
மோதி உடைக்கும் அறிவில்லா
    மூடன் எங்கும் உண்டுகொலோ?
ஓதற் கரிய பேரருளால்
    உவந்து கண்ட உருவமதைத்
தீதென் றெண்ணிச் சினம்பெருகிச்
    சிதைக்கத் தெய்வம் துணிந்திடுமோ? (86)

படைத்தவனையே பார்த்து வினாவெழுப்பும் கவிஞர், வைகறை நேரத்தில் பொய்கையோரச் சோலையில் மலர்ந்து மணம் பரப்பிய ஆயிரமாயிர மலர்கள் மாலை நேரத்தில் சேற்றில் உதிர்ந்து சருகாகிற காட்சியைக் காட்டி உலகவாழ்வை இதில் கண்ணாற்கண்டுதெளிவாயே என்று உணர்த்துகிறார். இன்ப துன்பங்கள், இரவு பகல், மேடு பள்ளம், உயர்வு தாழ்வு ஆகிய அனைத்தும்

கொண்டதே வாழ்க்கை என்கிறார். "மலரும் மலர்கள் வாடலும் இவ்வாழ்வு நிலையாதோடலுமே உலகம் கண்ட உண்மைகளாம்" என்கிறார்.

இந்த உலகம் எப்படிப்பட்டவர்க்காகவும் காத்திருப்பதில்லை; எப்படிப்பட்ட தகுதியுடையவர் மடிந்து போனாலும், அதன் காரணமாக இவ்வுலகம் இயங்குவது நின்றுவிடாது; மாறாக அது'தன்போக்கில் இயங்கிக் கொண்டே இருக்கும் என்ற அரிய உலகியல் உண்மையைப் பின்வரும் பாடல் அடிகளால் உமார் கய்யாம் உணர்த்துகின்றார்.

யானும் நீயும் இறந்தபினும்
இராஜ ராஜன் பட்டபினும்
ஊனம் இன்றி இவ்வுலகம்
ஊழி ஊழி நின்றிடுமால் (13)

கிட்டாத பொருள்மேல் ஆசைப்பட்டு அதற்காக அலைக்கழிந்து நிற்பதில் பொருளில்லை; கிட்டிய பொருளை ஆரத்துய்க்க வேண்டும் என்ற வாழ்வியல் தத்துவத்தினைக் கவிஞர் உமார் கய்யாம் அழகுற எடுத்துக் காட்டுகின்றார்.

மண்ணில் மறையுப் முடிமன்னர்
வாழ்வும் அரிய வாழ்வாமோ
கண்ணிற் காணாச் சொர்க்கமுமோர்
கனவே யன்றி நனவாமோ?
நண்ணும் உன்னகப் பொருளதனை
நம்பி யிருநீ. நண்ணாதது
எண்ணி எண்ணி எந்நாளும்
ஏங்கி அலைவது ஏன்?ஐயா (19)

"விரும்பியது கிடைக்கவில்லையென்றால் கிடைத்ததை விரும்ப வேண்டும்" என்ற டாக்டர் மு. வ. அவர்களின் மணிமொழியும் ஈண்டு நினைவுகூரத் தக்கதாகும்.

வருதண் ணீரைப் போல்வந்தேன்
மாயக் காற்றைப்போல் மறைந்தேன் (22)

என்று உமார் குறிப்பிடும் வாழ்வு பற்றிய உவமை எந்நாளும் மனங்கொளத்தக்கதாகும். ஒருவனின் வாழ்வு கழிக்கப்பட்ட வகையை,

கானா றோடும் நதியேபோல்
கண்ட கண்ட படிபோனேன் (23)

என்று குறிப்பிட்டிருப்பதும் கருதத்தக்கது.

ஆணும் பெண்ணும் இணைந்து பிணைந்து மகிழ்ந்து ஈருடலும் ஒருயிருமாய் வாழ முற்பட முடிந்தால் இவ்வுலகம் இன்பத்தின் இருப்பிடமாய் இலங்காதோ என்று கேள்வி கேட்கிறார் கவிஞர் உமார்.

அன்பே! யானும் நீயும் இசைந்து
அயலில் எவரும் அறியாமல்
வன்பே உருவாம் விதியினையும்
வளைத்துள் ளாக்கி முயல்வோமேல்,
துன்பே தொடரும் இவ்வுலகைத்
துண்டு துண்டாய் உடைத்துப்பின்
இன்பே பெருகி வளர்ந்திடுமோர்
இடமாய்ச் செய்ய இயலாதோ? (44)

இந்தவுலகில் பாவம் செய்யாத மனிதரைக் காண முடியுமா? அவ்வாறு பாவம் ஒன்றும் செய்யாமல் வாழ்வது எளிதான செயலாகுமா? அவ்வாறு பாவம் செய்தவரைப் படைத்தவன் அருநரகிலிட்டால் அவனைப் பெருங்

கருணை வள்ளல் என்று பெயரிட்டழைத்தலும் தகுமோ? என்கிறார் உமார் (58). "மானை வளர்த்த கையாலே வஞ்சப் புலியும் வளர்ந்திந்தக் கானில் வேட்டை காணுமவர் கருணை உடையவர் ஆவாரோ?" (60) என்கிறார்.

ஆனால் உமார் இம்மையிலேயே இறைவன் பதத்தையும் நித்தம் பாடி வாழ்த்த வேண்டும் என்று உணர்த்தத் தவறவில்லை. அதனைப் பின்வரும் பாட்டால் அறியலாம்.

வீடும் பழவீ டாகுதடா!
　　விட்டம் கூரை சுவரெல்லாம்
ஆடி அலைந்து விழுநாளும்
　　அண்டி அண்டி வருகுதடா!
நாடி இதனை இன்னும் நீ
　　நம்பி மோசம் போகாமல்
பாடிப் பாடி, எம்பெருமான்
　　பாதம் போற்றி வாழ்வாயே (56)

இவ்வுலக இன்பத்தை அணு அணுவாய்ச் சுவைத்து முடிக்க வேண்டும் என்னும் உமாரின் தீவிர வேட்கையைப் பின்வரும் பாடல் புலப்படுத்துகின்றது.

இருக்கும் காலம் சிறிதேயாம்;
　　இதற்குள் இன்ப வாழ்வினையாம்
பெருக்கு மளவு பெருக்கிடுவோம்;
　　பிழையொன் றதனால் உண்டோ? சொல்
உருக்கும் பாடல் கேளாமல்
　　உண்ணும் மதுவும் உண்ணாமல்
பொருக்கு மண்ணில் மண்ணாகப்
　　புதைந்து போனால் என்செய்வோம்? (67)

பாரதி இந்த நிமிஷம் சத்தியம் என்பது போலக் கவிஞர் உமாரும் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

**இந்நாள் இனிய நாளானால்**
**இறந்த நாளுக்கு இரங்குவதேன்?**
**பின்னாள் எண்ணி நடுங்குவதேன்?**
**பெண்ணே! கிண்ணம் நிறையம்மா!** (71)

இறுதியாக, கவிஞர் உமார் கய்யாம் நில்லாத இவ்வுலகில் நிலைத்த சுகத்தைப் பெறுவதற்குரிய வழியினை வகையுறச் சொல்லுகின்றார். இவ்வுலகில் அரச பதவி பெற விரும்பினால் தன்னை மறந்து வாழும் தன்னலப் பாங்கு வந்து வாய்க்க வேண்டும். ஏழைக்கும் ஏழையாய், எளியவர்க்கு எளியவனாய், தோழனாய்த் தொண்டனாய் விளக்கமுற வேண்டும். மேலும் இல்லாத பொருளுக்கு ஏங்கிடாமலும், இருக்கும் பொருளையே எந்நேரமும் எண்ணிக் கொண்டிருக்காமலும் இறைவன் அளக்கும் படியினை ஏற்று, நல்லவர், அறிஞர் தம் தொடர்பை நாளும் விரும்பிப் போற்றி, நில்லாத உலகில் நிலைத்த சுகத்தை நித்தமும் தேடி வாழவேண்டும் என்று குறிப்பிடுகிறார் கவிஞர் உமார் கய்யாம் (112. 113).

"வாழ்க்கைத் தத்துவத்தைக் குறித்து உமார் கய்யாம் கொண்டுள்ள கொள்கை எவ்வாறாயிலும் அவரது கலையுணர்ச்சி அதியற்புதமாக உள்ளதென்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். விஷயங்களைச் சுருக்கிக் கூறும் பொழுது உண்மையில் ஒளிபரவும்படி செய்யும் ஆற்றல் உண்மையைக் காணும் உள்ளுணர்ச்சி பல்வேறு சிந்தனைகளை மனத்திலே குறிப்பாய்த் தோற்றுவிக்கும் பாவனா சக்தி, உலகப் பொதுமையாயுள்ள உணர்ச்சிகளும் கருத்துக்களும் தம் கருத்துகளை எதிரேற்றிக் கொள்ளும்படியாகச்

செய்யும் ஆற்றல்; இவைகள் எல்லாம் உமாரின் கவித்வப் பெருமையை நன்றாக உணர்த்துகின்றன. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளையின் அழகிய கவிதையிலும் அப் பெருமை நன்றாகப் புலப்படுகிறது" என்கிறார் பேராசிரியர் எஸ். வையாபுரிப் பிள்ளை.

உமார் கய்யாம் பாரசீக மொழியில் பாடிய பாடல்களைப் பிட்ஜிரால்டு என்பவர் ஆங்கிலத்தில் 'ருபாயத் என்று மொழிபெயர்த்தார். அப்பாடல்களைக் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை தமிழில் தந்துள்ளார். தமிழ் மன்னிற்கியையவும் பாடல்களைக் கவிமணி மொழி பெயர்த்துள்ளார் என்பதனைப் பின்வரும் ஆங்கிலப் பாடலுக்கு அவர் கண்டுள்ள தமிழாக்கம் கண்டு தெளியலாம்.

## ஆங்கிலம்

Herewith a leaf of bread beneath the bough,
A flask of wine, a book of verse and Thou,
Besides me singing in the wilderness
And wilderness is paradise enow!

## தமிழ்

வெய்யிற் கேற்ற நிழலுண்டு
வீசும் தென்றல் காற்றுண்டு
கையில் கம்பன் கவியுண்டு
கலசம் நிறைய மதுவுண்டு
தெய்வ கீதம் பலவுண்டு
தெரிந்து பாட நீயுமுண்டு
வையத் தருமிவ் வனமின்றி
வாழும் சொர்க்கம் வேறுண்டோ?

'A book of verse' என்பதனைக் 'கம்பன் கவி' என மொழிபெயர்த்துள்ள கவிமணியின் கம்பன் பற்று காணத்தக்கது.

"கவிமணியின் பாடலைப் ('ஆழி சூழும் உலகாளும்' என்று தொடங்கும் பாடல்) படிக்கும்போது அது பாரசீகப் பாடலின் மொழி பெயர்ப்பு என்ற எண்ணமே நமக்கு எழுவதில்லை. நம் நாட்டுத் தாயுமானவரின் பாடலைப் படிப்பது போல, அப்பர் தேவாரத்தைப் படிப்பதுபோல நம்மை மறந்து படித்து இன்ப அமைதி உறுகிறோம். எண்ணிப்பார்த்தால், கவிமணி பாரசீகப் பாடல்களை மொழிபெயர்த்தார் என்று சொல்வதைவிட, சிறந்த தமிழ்ப் பாடல்களில் திளைத்து வளர்ந்த அவருடைய கவிதையுள்ளம் பாரசீகப் பாடல்கள் சில வற்றைப் படித்த போது அவற்றில் ஒத்த கருத்துக்களைக் கண்டு மலர்ந்தது என்று கூறலாம்" என்பர் டாக்டர் மு. வரதராசனார்.[1]

நாஞ்சில் நாடு தந்த நற்றமிழ்க் கவிஞராய்த் தோன்றிய கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை இனிமை, எளிமை, அருமை என்னும்படி கவிதைகள் அமையப் பாடல்கள் பாடியவராவர்

"தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் பாடல்கள் தமிழ்மக்களுக்குக் கிடைத்த பெருஞ் செல்வம்; அரிய செல்வம்; தெவிட்டாத அமிர்தம்; ஆயுள் நாள் முழுவதுமே தமிழ் மகன் தன்னுடன் வைத்துக் கொண்டு அனுபவிக்க வேண்டிய வாடாத கற்பகப் பூஞ்செண்டு" என்பார் இரசிக மணி டி. கே. சிதம்பரநாதர்.[2]

கவிமணியின் நிகரற்ற படைப்பாக உமார் கய்யாம் பாடல்கள் துலங்குகின்றன.

1. கவிமணி நினைவு மலர் —'வாடா மலர்' பக். 36-37.
2. ஷெ ''கண்ணாரக்காண ஒரு கவிஞர்' ப. 18.

# நாமக்கல் கவிஞரின் நாட்டுப்பற்று

பாருக்குள்ளே நல்லநாடு—எங்கள்
பாரத நாடு

என்றார் பாரதியார். காந்தியுகத்தின் கவிஞரான நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை, வெங்கட்ராம பிள்ளைக்கும் அம்மணி அம்மாளுக்கும் எட்டாவது பிள்ளையாக 1888 ஆம் ஆண்டு அக்டோபர் 19ஆம் நாள் பிறந்தார். கவிதையிலும் ஓவியத்திலும் ஆர்வம் கொண்ட கவிஞர்,

பாரத நாடென்றன் பாட்டன்றன் சொத்து;
பட்ட யத்துக்கென்ன வீண் பஞ்சாயத்து

என்று பாடினார். அடிமைப்பட்டிருந்த இந்தியாவில் எழுச்சி கொண்டு பாடிய காந்தியக் கவிஞர் இவர்.

மகாத்மா காந்தி அடிகளின் இன்னா செய்யாமைக் (அகிம்சை) கொள்கையில் ஒன்றிய கவிஞர் உப்புச் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டார்.

கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது
சத்தியத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர்!

எனப் பாடிய கவிஞருக்குப் பாரதி போன்ற தேசிய கவிஞர்கள், தலைவர்கள் தொடர்பு ஏற்பட்டது. எளிமையும் இனிமையும் கொண்ட இவர்தம் கவிதைகள் நாட்டு

மக்களின் தேசிய உணர்வினைப் பிரதிபலிப்பதாக அமைந்துள்ளன. 1949ஆம் ஆண்டு ஆகஸ்டு 15ஆம் நாள் சென்னை அரசின் 'ஆஸ்தானக் கவிஞர்' எனும் விருதைப் பெற்றார்.

நாமக்கல் கவிஞரின் பாடல்களைத் தெய்வத் திருமலர், தமிழ்த்தேன் மலர், காந்தி மலர், தேசிய மலர், சமுதாய மலர், பெரியோர் புகழ் மலர், திருநாள் மலர், சிறுகாப்பிய மலர், இசை மலர், அறிவுரை மலர்' பல்சுவை மலர் எனப் பிரிக்கலாம். இம்மலர்களை நாட்டுப்பற்று அமையும் முறை, நாட்டு நலச் சிந்தனை என இரு பிரிவுகளாகப் பிரிக்கலாம். நாட்டுப்பற்று அமையும் முறை என்பது நாட்டுப்பற்று பற்றிக் கவிஞர் கூறும் கருத்துகள் அவரது பாடலில் எவ்வாறு அமைந்துள்ளன என்பதாகும். இதனைப் பக்திப் பாடலில் அமைவது, மொழிப்பாடலில் அமைவது, நேரடியாகக் கூறி அமைவது என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

நாட்டுநலச் சிந்தனை என்பது நாட்டின் நலன்குறித்து அவரின் சிந்தனையைப் பாடல்கள்வழி முறைமைப் படுத்திக் கொள்வதாகும். இதனைச் சுதந்திரத்தின் இன்றியமையாமை, சுதந்திரம் பெறும் முறை, சுதந்திர நாட்டின் நலன் என முப்பிரிவாக்கலாம்.

**கவிஞரின் நாட்டுப்பற்று**

- நாட்டுப்பற்று அமையும் முறை
  - பக்திப்பாடல் அமைவது
  - மொழிப்பாடல் அமைவது
  - நேரடியாகக் கூறுவது
- நாட்டுநலச் சிந்தனை
  - சுதந்திரத்தின் இன்றியமையாமை
  - சுதந்திரத்தைப் பெறும் முறை
  - சுதந்திர நாட்டின் நலன்

## பக்திப் பாடல் வழி நாட்டுப்பற்று

இந்தியர்கள் மிகுந்த இறை நம்பிக்கை கொண்டவர்கள். பக்திநெறி பன்னெடுங்காலமாக இம்மக்களுடன் ஒன்றிவிட்ட ஒன்று. கிறித்துப் பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே தோன்றிய சைவ, வைணவ நெறியும், கி.மு. 6 ஆம் நூற்றாண்டு அளவில் தோன்றிய புத்த, ஜைன மதங்களும் இறைமை உணர்வை மக்களிடம் தோற்றுவித்தன. புத்த மதம் கடவுளை மறுப்பதற்காகத் தோன்றினாலும் பின்பு புத்தரையே கடவுளாக்கி விட்டது. சைவ, வைணவ நெறிகளும் வேதங்களும், புராணங்களும் இணைந்த இந்து மதம் இறைமை உணர்வை மக்களிடையே ஆழமாகப் பதித்து விட்டது. இன்று இறைமை உணர்வுக்கு எதிராகக் கூறப்படும் எக்கருத்தும் மக்களால் முழுமையும் ஏற்கப்படுவதில்லை.

சுதந்திரத்திற்காகப் போராடியவர்கள் மக்களிடையே நாட்டுப்பற்றை ஊட்டுவதற்கு இறை உணர்வைத் துணை

கொண்டனர். எந்நாட்டிலும் நாட்டுப்பற்றும் விழிப்புணர்ச்சியும் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள் கவிஞர்களைக் கொண்டே தீவிரமடைகின்றது. கிரேக்கத்தில் பேச்சாளரான சாக்ரடீசும், பிரான்சின் எழுத்தாளர்களான ரூசோவும், வால்டேரும், இந்தியாவின் கவிஞர்களான தாகூரும் பாரதியும் நாட்டுப்பற்றையும் விழிப்புணர்ச்சியையும் மக்களுக்கு ஊட்டினார்கள்.

இந்தியாவில் தாகூரும், பாரதியும் தோன்றிய பின்னரே சுதந்திரப் போராட்டம் தீவிரம் அடைந்தது எனலாம்.

நல்லதோர் வீணை செய்தே—அதை
　　நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?
சொல்லடி சிவசக்தி

எனத் தமிழகத்தில் பக்தி உணர்வுடன் நாட்டுப்பற்றையும் ஊட்டியவர் பாரதி. இந்நெறியைப் பின்பற்றி நாமக்கல் கவிஞர் பிரார்த்தனை எனும் தலைப்பில்,

உலகெலாம் காக்கும் ஒருதனிப் பொருளே!
　　உன்னருள் நோக்கி இன்னுமிங்குள்ளோம்
இந்திய நாட்டை இந்தியர்க் கென்று
　　தந்தனை யிலையோ? தவறதில் உண்டோ?

என்றும்,

யாருடை நாடு? யாருடை வீடு?
　　யாருடைப் பாடு? யார் அனுபவிப்போர்?
பிறந்த நாட்டினிற் பிறவாதவரிடம்
　　இரந்து நின்று அவர் ஏவலே செய்தும்
உடலே பெரிதென உயிரைச் சுமந்திடும்
　　ஊனமில் வாழ்வினை ஒழித்திடத் துணிந்தோம்!

ஞான நாயகா......

............

மங்களம் பாடி மகிழ்ந்திடத் தருவாய்
எங்கும் இருக்கும் எழிலுடைச் சோதி

என்றும் இறைமை உணர்வினை, நாட்டுப் பற்றினை வெளிப்படுத்துகின்றார்.

நாட்டுப் பற்றென்பது, நாட்டின் சுதந்திரம் மட்டுமே அல்லாது, சமுதாய மேம்பாட்டிற்கான நல்லுழைப்பும் ஆகும். கவிஞர்களின் பாடுபொருளாக அமைவது மேற்காணும் எண்ணமாகும். நாமக்கல் கவிஞர் இக்கொள்கை வெளிப்பாட்டில் மிக்க தீவிரம் கொண்டு பாடிய தேசியக் கவிஞர் ஆவார். காந்தியடிகளின் வழிநின்று, தீண்டாமை பற்றி கண்ணன் பாடலில்,

அரசரின் குலத்தில் பிறந்தாலும்
ஆயர்தம் குடிசையில் வளர்ந்தவனாம்
ஒருசிறு பேதமும் எண்ணாமல்
ஒற்றுமை காட்டும் கண்ணாளன்

என்று பாடுகின்றார். இது போன்றே 'கடவுள், 'பராசக்தி', 'அனைத்தும் நீயே' போன்ற பாடல்களிலும் பக்தி உணர்வுடன் நாட்டுப் பற்றினைப் பாடியுள்ளார்.

## மொழிப் பாடலில் அமைவது

மனித நாகரிகத்தின் மேம்பாட்டிற்கு அடித்தளமாக அமைவது மொழியாகும். உலகில் உள்ள இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட மொழிகளை மொழியியலார் திருந்திய மொழிகள், திருந்தா மொழிகள் என இருவகைப் படுத்துவர். திருந்திய மொழிகள் 'உயர் தனிச்

செம்மொழிகள்' என்பர். இவற்றுள் தலையாயது தமிழ் மொழி. தாய்மொழியின் வழி சிந்திக்கின்றவனின் சிந்தனை தூண்டப்பெறும். "தாய்மொழி வழி அறிவைப் புகட்டுங்கள்" என்னும் சுவாமி விவேகானந்தரின் கூற்றினைஅடியொற்றி, தத்தம் தாய்மொழியில் தாகூர், பாரதிபோன்ற தேசியக் கவிஞர்கள் நாட்டுப்பற்றினை மக்களுக்கு ஊட்டினர்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்

என்றும்

செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே

என்றும் பாடுகின்ற பாரதி,

ஆடுவோமே—பள்ளு பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று

எனப்பாடி மககளிடை விழிப்புணர்ச்சி ஊட்டுகின்றதைப் போன்று நாமக்கல் கவிஞரும் தாய்மொழிச் சிறப்புடன் நாட்டுப் பற்றினையும் ஊட்டுகின்றார். தமிழ்த்தேன் மலர் என்னும் பகுதியில் உள்ள பாடல்கள் இதற்குச் சான்றாக உள.

உலகிலுள்ள மனிதர் யாரும்
ஒரு குடும்பம் என்னவே
ஒன்றுபட்டு வாழும் மார்க்கம்
தொன்று தொட்டுச் சொன்னது

என "யாதும் ஊரே யாவரும் கேளிர்" எனும் மனப் பாங்கை வெளிப்படுத்துகின்றார். 'தமிழா', உனக்கிது தருணம் வாய்த்தது' என்று தொடங்கும் பாடலில்,

இந்தியத் தாய்மனம் நொந்து கிடக்கையில்
இனமுறை பேசுகின்றார்! இழிவாகும்
அந்த பெரியவளின் அடிமை விலங்கறுத்துன்
அன்பை நிலைநிறுத்(து) அகிலமெல்லாம்

எனப்பாடுகின்றார். தமிழின் சிறப்பினைக் கூறுமிடத்து நாட்டுப்பற்றினை முன்னிறுத்துகிறார். தேனில் குழைத்து மருந்து உண்ணுதல் போன்று மொழியின் வாயிலாக நலம் பயக்கும் நாட்டுப் பற்றுணர்வைப் பாடுகின்றார்.

ஒருவர்க்கு நல்லுரைகளை நேரிடையாகக் கூறுவதிலும் அவரின் முன்னோர்களின் சிறப்பியல்புகளைக் கூறி நல்வழிப்படுத்த இயலும் என்பதைக் கவிஞர்,

பண்டிருந்தார் சேர சோழ
பாண்டி மன்னர் நினைவெலாம்
பாயுமேடா உள்ளன இன்று
பார்க்கும்போது நெஞ்சினில்
...............
செண்டெ முந்தா ரென்னப் பாய்ந்து
தேச முற்றும் சுற்றி நீ
தீரம் வீரம் நம்முள் மீளச்
சேருமாறு சேவை செய்.

எனத் தாய்மொழியின் சிறப்பினைக் கூறும்போதும் நாட்டு நலன் முன்னிற்பதைக் காணலாம்.

நேரடியாகக் கூறுவது

பக்தி, மொழி இவற்றின் துணைகொண்டு நாட்டுப் பற்றினை எடுத்துக்கூறும் கவிஞர் பல இடங்களில் நேரிடையாகக் கூறுகின்றார். இப்பாடல்களில் பக்தியோ அல்லது மொழி உணர்வோ இன்றி முழுவதும் நாட்டுப் பற்று மட்டுமே அமைந்து உள்ளது எனலாம். படிப்போரின் உள்ளத்தில் உணர்ச்சியைத் தூண்டிச் சிந்திக்கவும் செயல் படவும் வைக்கின்றது.

அடிமை இந்தியாவில் மக்கள் பட்ட துயரங்களைக் கூறும்போது நம் கவிஞர்,

முப்பத்து முக்கோடி மக்கள் இந்த
    மூப்புடை இந்தியத் தேவிபெற்றாள்
முப்பத்து முக்கோடி மக்களுந் தானுமாய்
    முச்சந்தி வீதியில் கத்துகின்றாள்

எனப்பாடுகின்றார். இப்பாடலைப் படிக்கும்போது உள்ளத்தில் ஓர் ஏழைத்தாய் தம் குழந்தைகளுடன் வறுமையின் கொடுமை தாளாமல் முச்சந்தியில் நின்று பிச்சை எடுக்கும் அவலக்காட்சி தோன்றுகின்றது. நம் நாட்டின் ஏழ்மையும் மக்களின் இரங்கத்தக்க நிலையும் உள்ளத்தை வாட்டுகின்றன இதனால் எப்பாடுபட்டேனும் சுதந்திரத்தை அடைந்தே தீர வேண்டும் என்ற எண்ண உறுதிப்பாடு மேலோங்குகின்றது அது போன்றே,

வந்தவர் போனவர் யாரையும் நம்பி
    வாடின காலங்கள் ஓடின தம்பி
இந்தத் தினம் முதல் இந்திய நாடு
    எனனுடை நாடென்ற எண்ணத்தைக் கூடு

என்ற பாடலில் நம் நாட்டின் வணிகம் பொருட்டு வந்த பிற நாட்டாரிடம் அடிமைப்பட்டு அடைந்த இழிநிலை

கள் ஒழிந்து, நம் நாட்டினை நாமே ஆள வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கித் திகழ்கின்றது. இந்நேரடிக் கூற்று முறை, மற்ற இருவகைகளை விடச் சிறந்த பயனை நல்கும் எனல் பொருந்தும். இங்ஙனம் நாமக்கல் கவிஞர் நாட்டுப் பற்றினைப் பக்திப்பாடல், மொழிப்பாடல். நேரடிக் கூற்று என மூவகையாகப் பகுத்துப் பாடுகின்றார்,

## நாட்டுக்காகப் பாடுபட்ட தலைவர்கள், அறிஞர்கள், கலைஞர்கள்

நாட்டு விடுதலையின் பொருட்டுப் பாடுபட்ட தலைவர்கள், அறிஞர்கள், கலைஞர்கள் அனைவரும் தம்மின் நல்வாழ்வினை இழந்து இன்பத்தினைத் துறந்து போராடினர். அத்தகு பெருந்தகைகளை நினைவு கூர்ந்து நாமக்கல் கவிஞர் பாடியுள்ள பாடல்கள், நாட்டு நலனில் அவர் கொண்டிருந்த பற்றினை, தேவையைப் புலப்படுத்துகின்றன. நாட்டுத் தலைவர்கள் மீது கொண்டிருந்த அன்பின்வழி நாட்டு நலத்தைப் பாடு கின்றார். இந்தியாவின் தந்தை மகாத்மா காந்தியடி களைப்பற்றி,

பிறப்பினும் பெரியவர் பெம்மான் காந்தி
இறப்பிலும் இணையலர் எம்மான் காந்தி
துறப்பிலும் நிகரிலர் தூயோன் காந்தி
மறப்பதும் நமக்கது மாபெரும் பாவம்
என்னுடைய பிறப்புரிமை சுயராஜ்யம் என்னுமொரு

என்று கவிஞர் பாடுகின்றார். மகாத்மாவைப் பற்றிக் காந்தி மலர் என்ற பாடல் தொகுதியைப் பாடியுள்ளார்.

'சுதந்திரம் எனது பிறப்புரிமை' என்று வீர முழக்கம் செய்த, திலகரைப் பாடும்போது கவிஞர்,

என்னுடைய பிறப்புரிமை சுயராஜ்யம் என்னுமொரு
மந்திரத்தை எங்கட்கீந்த
மன்னவனே திலகமுனி மஹாராஜா எம்முடைய
மராட்டியர்தம் மடங்க லேறே!
உன்னுடைய பெருஞ்சேனை யுத்தத்தி லணிவகுத்தே
உத்தரவை எதிர்பார்த் திங்கே
இன்னவழி போவதெனத் தெரியாமல் திகைக்கின்ற
இச்சமயம் இறக்கலாமோ!

எனப் பாடுகின்றார். நாட்டு விடுதலைக்காக வாழ்நாளை அர்ப்பணித்த கோபாலகிருஷ்ண கோகலே பற்றிக் கவிஞர்,

ஜாதிமத பேதமெல்லாம் கடந்து நின்றான்
தனிப்பெரிய குலத்துதித்த தகைமை யுள்ளோன்
மேதினியில் உடன்பிறந்த உயிர்களெல்லாம்
மெலிவின்றிப் பசிநீங்கிக் களிப்பதொன்றே
ஊதியமாம் எனக்கருதி உழைப்பதற்கே
உடலோடு பொருளாவி உதவிநின்றான்
கோதிலனாம் கோபாலகிருஷ்ண னெங்கள்
கோகலே யவன்பெருமை கூறப்போமே!

எனப் பாடுகின்றார். தொடர்ந்து வ. உ. சி., வல்லபாய் படேல், காமராசர், ராஜாஜி போன்ற நாட்டுக்கு உழைத்த நல்லவர்களைப் பற்றியும் நினைவு கூர்ந்து பாடுகின்றார்.

மக்களின் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு உழைத்த கவிஞர்களான தாகூர், பாரதி, தேசிக விநாயகம் பிள்ளை போன்றோரையும் பாடியுள்ளார். தேசிய கீதம் பாடிய தாகூரைப் பாடும்போது கவிஞர்,

காந்தியும் குருதேவ் என்று
கைகுவித் திறைஞ்சும் தாகூர்
மாந்தருள் பல நாட்டாரும்
மதங்களும் மருவி வாழ்ந்து
தேர்ந்தநல் லறிவை அன்பைச்
செகமெலாம் பரப்ப வென்றே
சாந்தி நிகேதன் என்ற
சமரச சங்கம் தந்தோன்

எனப் பாடியுள்ளார். தமிழன் மேம்பாட்டிற்காக உழைத்த 'தமிழ்த் தாத்தா' உ. வே. சாமிநாத ஐயர் பற்றியும் பாடியுள்ளார். தமிழில் உ. வே. சா.வின் பதிப்புப்பணி 'தமிழுக்கு ஒரு கொடை' எனலாம். உ. வே. சா. பற்றிக் கவிஞர்,

அல்லுபகல் நினைவெல்லாம் அதுவே யாக
அலைந்த லைந்தே ஊரூராய்த் திரிந்து நாடிச்
செல்லரித்த ஏடுகளைத் தேடித்தேடிச்
சேகரித்துச் செருகலின்றிச் செப்பம் செய்து
சொல்லரியா துன்பங்கள் பலவும் தாங்கிச்
சோர்வறியா துழைத்த ஒரு சாமிநாதன்
இல்லைஎனில் அவன்பதித்த தமிழ்நூ லெல்லாம்
இருந்த இடம் இந்நேரம் தெரிந்தி டாதே

எனப் பாடியுள்ளார். பாட்டுக்கொரு புலவன், தேசிய கவி பாரதியைப் பற்றிப் பாடும்போது,

சுப்ரமணிய பாரதியை நினைத்திட் டாலும்
சுதந்திரத்தின் ஆவேசம் சுருக்கென் றேறும்;
ப்ரபஞ்சம் முழுதும் நமக் கினமாய் எண்ணும்
இந்தியன்நான் என்றிடும்நல் லிறுமாப் புண்டாம்

எப்பெரிய காரியமும் எளிதாய்த் தோன்றும்;
எல்லையற்ற உற்சாகம் எழுந்து பொங்கும்
ஒப்பறிய 'தமிழன்' எனும் உவகை ஊறும்;
உள்ளமெல்லாம் துள்ளியெழும் ஊக்கமுண்டாம்

எனப் பாடுகின்றார். நாட்டு நலனுக்கு உழைத்தவர்களை நன்றியுடன் நினைவு கூர்கின்றார்.

## நாட்டுப் பெருமை

உலகில், தேசிய கவிகள் தாம் பிறந்த பொன்னாட்டைச் சிறப்பித்துப் பாடுவர். நாட்டுப் பற்றும், நாட்டுப் பெருமையும் ஒன்றுக்கொன்று நெருங்கிய தொடர்பு உடையவைகளே. பாரதியும் இந்தியத் தாயைப் பாரத மாதா என விளித்துப் பாடியுள்ளார். "எங்கள் நாடு" என்ற தலைப்பில்,

பாரதநாடு பழம் பெரும்நாடே
பாடுவம் இஃதை எமக்கில்லை ஈடே

என்று பாடுகின்றார். நாமக்கல் கவிஞர் தமிழராய்ப் பிறந்து இந்தியராய் வாழ்ந்தவர். தமிழராய்த் தமிழ் நாட்டின் பெருமைகளையும், இந்தியர் என்ற முறையில் இந்திய நாட்டுப் பெருமைகளையும் புகழ்ந்து பாடுகின்றார்.

மண்டிலத்தே இணையிலாத
வாழ்வுகண்ட தமிழகம்

எனத் தொடங்கி, தமிழகத்தின் விருந்தோம்பல், வீரம், ஞான, சித்தச் சிறப்பியல்புகள் ஆகியவற்றைத் 'தமிழ்த் தேன்' என்ற பகுதியில் பாடியுள்ளார். இந்தியாவின் சிறப்புகளைக் கூறும்போது,

ஞான முதித்தது மிந்நா டேஅருள்
ஞானிகள் நின்றது மிந்நாடே
மோனமறிந்த முதல்நா டேவெகு
முத்த ரிருந்தது மிந்நாடே
புத்தர் பிறந்தது மிந் ாடே அவர்
போதம் வளர்த்தது மிந்நாடே
சித்த ரிருந்தது மிந்நாடேவெகு
சித்திகள் பெற்றது மிந்நாடே

எனக் கூறுகின்றார்.

தொடர்ந்து தமிழ்நாட்டையும் இந்திய நாட்டையும் இணைத்துக் காணுமிடத்து ஒவ்வொரு மாநில மொழிகளுக்கும் அளிக்கப்படவேண்டிய சிறப்புகளையும், மாநிலங்கள் இந்தியாவின் அங்கம் என்பதையும் நம் கவிஞர் கூறுகின்றார்.

தமிழர்கள் உலகுக் கீந்த
வள்ளுவர் தானோ என்ன
தமிழ்தினும் உயர்ந்த தான
அறமெலாம் நடந்து காட்டும்
கமழ்மணம் உலகம் போற்றும்
காந்தியார் ஏந்தும் கொள்கை
நமதெனும் பெருமையோடு
நம்நாடு நன்மை பேசும்

எனப் பாடுகின்ற பாடலின் வழி அறியலாம்.

நாட்டு முன்னேற்றம் குறித்துக் கூறும்போது,

புதுத்துறை அறிவைத் தேடிப்
போயலைந் துழன்று ஈாடி
விதப்பல விஞ்ஞானத்தை
விரித்திடும் மேய்ஞானத்தால்

பொதுப்படக் கலைக ளெல்லாம்
தமிழிலே புதுமை பூண
மதிப்பொடே எவரும் போற்ற
நம்நாடு மணக்க வேண்டும்

என்று பாடுகின்றார்.

## நாட்டு நலச் சிந்தனை

நாமக்கல் கவிஞர் கூறும் நாட்டு நலச் சிந்தனையைச் சுதந்திரத்தின் தேவை, சுதந்திரத்தை அடையும் முறை, சுதந்திர நாட்டின் நலன் என மூவகையாக்கலாம். தேவையே மாற்றத்திற்கும் கண்டுபிடிப்பிற்கும் அடிப் படை என்பர். நாட்டு மக்களின் நலன், தேவை ஆகிய வற்றை ஆட்சியாளர் கவனிக்காது தன்னலத்துடன் செயல்படும்போது, மக்களின் தேவை அவர்களைத் தூண்டிச் செயல்படச் செய்கின்றது. ஆள்பவர் வேற்ற வராக இருப்பின போராடும் மக்கள் சுதந்திர போராட்ட வீரர்கள் எனப்படுவர்.

அடிமை இந்தியாவின் கொடுமைகளைக் கவிஞர் எடுத்தியம்புவது நாட்டின் சுதந்திரத் தேவையை நமக்கு உணர்த்துகின்றது.

அன்பறம் வளர்ந்திடாமல்
ஆற்றலும் அறிவும் மூன்றும்
வன்புகள் சூதும் வாதும்
வழக்குகள் வளரும் வாழ்வின்
இன்பமும் ஊக்கமும் ஆன்ம
எழுச்சியும் இன்றி என்றும்
துன்பமும் சோம்பல் சூழும்
சுதந்திரம் இல்லா நாட்டில்

என்னும் இவரது பாடல் ஆழ்ந்த பொருள் நோக்கம் கொண்டமைந்துள்ளது. சுதந்திரம் அற்ற நாட்டில் அன்பும் அதன் வழி நிகழும் அறமும் நிகழாது போகும். அறமற்ற நாட்டில் அறிவும் ஆற்றலும் குன்றும் அறிவின்றிச் செயல்படுமிடத்தில் சூதும் வாதும் தோன்றும், விளைவு இன்பமும் எழுச்சியும் இல்லா தொழியும், தொடர்ந்து துன்பமும் சோம்பலும் சூழ்ந்திடும் எனக் கூறுகின்றார். கவிஞரின் இக்கூற்று, உலக நாடுகளுக்கு ஒரு பொதுச் சிந்தனையாம்.

கோயில் குளங்களை இடித்தெறியும்
குழந்தைகள் பெண்களைக் கொலைபுரியும்
பேயின் கூத்தினைத் தடுத்திடவே
பெரிதும் சுதந்திரம் தொடுத்திடுவோம்
மூர்க்கர்கள் உலகினை ஆள்வதையும்
முற்றிலும் தருமம் தாழ்வதையும்
போக்கிடச் சுதந்திரம் வேண்டிடுவோம்

என்னும் கவிஞரின் கூற்றுமூலம் அடிமை இந்தியாவில் நிகழ்ந்த கொடுமைகள் புலனாகின்றன. சமயம், மக்களுடன் ஒன்றிணைந்த ஒன்றாகும். எனவே மக்கள் சார்ந்த சமயம் புறக்கணிக்கப்படும்போது அவர்களின் பண்பாடும் இல்லாது மறையும். இங்ஙனம் அவரவர் தத்தம் சமயத்தை இழக்க முடியாமலும் பிற சமயத்தை ஏற்க இயலாமலும் இடர்ப்படுவது நீங்கச் சுதந்திரத்தின் தேவை இன்றியமையாததாகும்.

சுதந்திரம் இல்லா ஒருநாடு
நம்புவி பேய்மிகும் பெருங்காடு;
எதிர்ந்திடும் துயர்களைச் சகித்திடுவோம்
எம்முடைச் சுதந்திரம் வகித்திடுவோம்

என்று பேய்கள் வாழும் சுதந்தரமில்லா நாட்டைக் கூறுகின்றார். எனவே, நாட்டின் நலத்துடன், பண்பாடு சிறந்து பொருளாதாரம் சீர்பெற மக்களுக்கு வாழ்வில் நம்பிக்கை ஏற்படச் சுதந்திரம் இன்றியமையாதது என்பதைக் கவிஞர் தம் பாடல்கள் மூலம் விளக்குகின்றார்.

## சுதந்திரத்தைப் பெறும் முறை

சுதந்தரத்தின் தேவை போன்றே, அத்தேவை நிறை வேற்றப்பட வேண்டிய வழி முறைகளையும் பாடுகின்றார்.

உலக வாழ்வில் வாழ்விற்குத் தேவையான நெறி முறைகளை வரையறுத்துக் கொண்டவர் நம் கவிஞர். காந்தீயக் கவிஞரின் செயல்முறை நாட்டு மக்களுக்கு நன்மை பயப்பதாக என்றும் உள்ளது. சுதந்திரம் பெறுவதற்காக முயன்ற வீரர்கள் மிதவாதிகள், தீவிரவாதி கள் எனப்பட்டனர். இவ்விருசக்திகளின் குறிக்கோள் சுதந்திரம் மட்டுமே. அதை அடையும் முறை வெவ்வேறாக அமைந்தது. இவ்விரு சக்திகளிலும் மிதவாதி சக்தி பெற்றுச் சுதந்திரத்தைப் பெற்றுத் தந்தது. காந்தியுகக் கவிஞரான நாமக்கல் கவிஞர், முழுவதும் மிதவாதத்தைப் பின்பற்றி,

கத்தி யின்றி ரத்த மின்றி
யுத்த மொன்று வருகுது
சத்தியத்தின் நித்தி யத்தை
நம்பும் யாரும் சேருவீர்!

.................

காந்தி யென்ற சாந்தமூர்த்தி

தேர்ந்து காட்டும் செந்நெறி
மாந்தருக்குள் தீமை குன்ற
வாய்ந்த தெய்வ மார்க்கமே

என்று பாடுகின்றார். போராட்டத்திற்குத் துணை நிற்கும் அடிப்படைச் சக்தி மக்களின் ஒற்றுமை என்பதை உணர்ந்து மிகவும் வலியுறுத்துகின்றார்.

இமயம் தொட்டுக் குமரி மட்டும்
இங்கி ருக்கும் யாவரும்
இந்தி யாவின் மக்களென்ற
சொந்தம் காணச் செய்குவோம்

என்று பாடுவதன் வாயிலாக ஒருமைப்பாட்டின் தேவையைக் கூறுகின்றார். ஒற்றுமையின் அவசியத்தை உணர்ந்தே, சுதந்திர இந்தியாவிலிருந்த சமஸ்தானங்கள் அனைத்தையும் ஒருங்கிணைத்தார் வல்லபாய் படேல். கவிஞரின் ஒருமைப்பாட்டுப் பாடலைச் செயல்வடி வாக்கியவர் இந்தியாவின் இரும்பு மனிதரான சர்தார் வல்லபாய் படேல்.

இயற்கையா மிந்த வித உரிமையைப் பறிக்க
இடையிலே தடையென நின்று
செயற்கையாலடக்கிக் கொடுமைகள் புரியும்
தீமைசேர் அரசியல் எதையும்
முயற்சியால் திருத்த முடியாதுபோனால்
முற்றிலும் அதனையே நீக்கி
அயர்சியில்·லாதஅரசுமற்றொன்றை
அமைப்பதும் குடிகளின் உரிமை

என்று புதிய அரசின் தேவையைப் பாடுகின்றார். கவிஞரின் இக்கூற்று இன்னும் நின்று நிலவும் தன்மையது.

மக்களின் தேவை உணராத, மக்களுக்காக மக்களால் ஆளப்படாத ஆட்சியின் மாற்றத்தை வலியுறுத்திப் பாடுகின்றார்.

இங்ஙனம் சுதந்திரத்தைப் பெறும் முறையிலும் கவிஞரின் நெறிப் புலப்பாடு விளங்குகின்றது. சீரிய தலைமை ஒற்றுமையுடன் நடத்தப் பெறும் போராட்டமே வெற்றி பெறும் என்பதை உணர்த்துகின்றார். பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பதன் வாயிலாக, மக்களும் ஆட்சியாளர்களும் தத்தம் கடமை உணர்ந்து செயல்பட வேண்டுகின்றார்.

### சுதந்திர நாட்டின் நலன்

நாமக்கல் கவிஞர், அடிமை இந்தியாவையும், சுதந்திர இந்தியாவையும் ஒருங்கே கண்டவர். அடிமைநிலை நீங்க அவரின் பாடல்கள் துணை நின்றதைப் போன்றே, சுதந்திர இந்தியாவின் நலன் குறித்த அவர்தம் பாடல்கள் நற்சிந்தனையின் விளக்கமாகத் திகழ்கின்றன. சுதந்திர நாட்டின் நலன் குறித்துக் கவிஞரின் பாடல்களை ஒற்றுமை, பொருளாதாரப் பொதுவுடைமை, சமுதாயச் சீர்திருத்தம் எனப் பகுக்கலாம்

### ஒற்றுமை

**அன்னியர்கள் நமை ஆண்ட அவதிநீங்கி**
**அரசுரிமை முழுவதையும் அடைந்தோம் நாமே**
**எனினும் ஏன்? சுதந்திரத்தின் இன்பம் காண**
**எவ்வளவோ மனமாற்றம் இன்னும் வேண்டும்**

எனப்பெற்ற சுதந்திரத்தைப் பேணுதற்குத் தேவையான மனமாற்றம் பற்றிப் பாடுகின்றார். சுதந்திரம் பெறுதல் வேண்டி, பாகுபாடில்லாமல் ஏற்றத்தாழ்வு தவிர்ந்த

நிலையில் போராடிய மக்கள் அச்சுதந்திரம் பேணுவதில் இல்லையே என்பதை உணர்ந்து, நாட்டு மக்களின் ஒருமைப்பாட்டிற்காக மனமாற்றத்தை வலியுறுத்து கின்றார்.

## பொதுவுடைமை

நாட்டு மக்களிடையே பொருளாதார ஏற்றத்தாழ்வு மிக்கிருக்குமாயின் நாட்டுச் சுதந்திரம் சட்ட திட்டங் களும் பயனற்றுப் போகும். எனவே பொருளாதார ஏற்றத் தாழ்வில்லா மக்கள் சமுதாயமே சுதந்திர இன்பத்தை அனுபவிக்க இயலும். இதனை உணர்ந்தே கவிஞர்,

> பாட்டாளி மக்களது பசிதீர வேண்டும்;
> பணமென்ற மோகத்தின் விசைதீர வேண்டும்;
> கூட்டாளி வர்க்கங்கள் குணம்மாற வேண்டும்;
> குற்றேவல் தொழிலென்ற மனம் மாற வேண்டும்

எனப் பாடுகின்றார். தொடர்ந்து பூமிதான இயக்கத் தினையும், பூதான இயக்கத் தந்தை வினோபா அவர் களையும் பாடுகின்றார்.

## சீர்திருத்தம்

சமுதாயத்தை சீர்திருத்த வேண்டி,

> இந்துக்களிடையே தீண்டாத பேர்கள்
> ஹரிஜன ஏழைகள் தம்மைப்
> பந்துக்கள் போலப் பரிவுடன் நடத்தி
> அவருடன் பழகுதல் வேண்டும்

என்று தீண்டாமை பற்றியும்,

கள்ளுபீர் சாராயம் காம வகைகள்—கெட்ட
கஞ்சா அபின்களெல்லாம் ஓடி ஒளிக்க
பிள்ளைக்குட்டி பெண்ஜாதி வயிறார உண்ணப்
பெற்றதே சுதந்திரமென் றாடுராட்டே!

என மது ஒழிப்பு பற்றியும்,

மறுமணம் மாதர்க்கில்லை
    மதலையை விதவையாக்கி
நறுமணப் பூவுமின்றி
    நல்லதோர் துணியுமின்றி
உறுமணல் தேரைபோல
    ஒளிந்திருந் தொடுங்கச் செய்யும்
சிறு மனப்பான்மை யேநம்
    தேசத்தின் நாசம்

என விதவைகள் மறுமணம் பற்றியும் பாடுகின்றார்.

சத்தியத்தின் நித்தியத்தைப் பாடிய நாமக்கல் கவிஞர் தம் பாடல்கள் மூலம், நாட்டுப்பற்று, நாட்டுநலச் சிந்தனை என்னும் பொருளமைப்பினை வெளிப்படுத்தியுள்ளார். பக்திநெறி நின்று இறைமை உணர்வுடன் தாய்மொழி போற்றி நாட்டுப் பற்றினைப் பாடும் முறையும், சுதந்திரத்தின் தேவை, அடையும் முறை, என்பவற்றை உள்ளடக்கமாகக் கொள்ளும் நாட்டுநலச் சிந்தனையும் கருத்திற் கொள்ளத்தக்கது. பாட்டாளி மக்களின் பசிதீரப் பாடிய, தேசிய காந்தியுகக் கவிஞர் நாமக்கல் இராமலிங்கம் பிள்ளையின் நாட்டுப் பற்றுணர்வு போற்றுதலுக்கும் வணக்கத்திற்கும் உரியதாகும்.

# கவிஞர் தமிழ் ஒளி

"கவிஞர்கள் உருவாக்கப்படவில்லை; ஆனால் பிறக்கிறார்கள்" என்பது கவிஞர் குறித்து வழங்கும் பொன்னுரையாகும். நம் கவிஞர் தமிழ் ஒளி அவர்கள் பிறவிக் கவிஞர் ஆவர். கரந்தைப் புலவர் கல்லூரியில் மூன்றாண்டு காலம் முறையாகத் தமிழ் பயின்ற கவிஞர் 1945 ஆம் ஆண்டு கோடை விடுமுறையிற் சென்னை வந்தவர் சென்னையிலேயே தங்கிவிட்டார். சென்னையின் அன்றாட அரசியலில் இவருக்கு ஆர்வம் ஏற்பட்டு விட்டது. 'தமிழ் ஒளி' என்னும் புனைபெயரில் தமிழ்ப் பத்திரிகைகளுக்குக் கவிதை, கட்டுரைகள் எழுதத் தொடங்கி விட்டார்.

தென்னார்க்காடு மாவட்டம் குறிஞ்சிப்பாடியை அடுத்த ஆடூரில் 21. 9. 1924 அன்று கவிஞர் பிறந்தார். இவர் பெற்றோர் சின்னையா—செங்கேணி அம்மாள் இவருக்கு இட்ட பெயர் விஜயரங்கம் என்பதாகும். கவிஞரின் குடும்பம் புதுச்சேரிக்குக் குடி பெயர்ந்தது. இதனால் கல்வே கல்லூரியில் பயிலும் வாய்ப்பினைக் கவிஞர் பெற்றார். அக்கல்லூரியில் அப்போது தமிழாசிரியராகப் பணியாற்றிக்கொண்டு வந்த பாவேந்தர் பாரதிதாசன் அவர்களோடு ஆசிரியர்-மாணவர் உறவு முறையில் நெருங்கிய தொடர்பு கொண்டார் இவ்வுறவு இவர்தம் கவிதையுள்ளத்திற்கு உரமாக அமைந்தது. சின்னஞ்சிறு வயதிலேயே தம் தோட்டத்து நாவல் மரத்தின் மீதேறி அமர்ந்துகொண்டு காலைக் கதிரழகின்

கற்பனையினைக் கவிதையில் வடிக்கத் தொடங்கிவிடுவார். இரவு நீண்ட நேரம் விழித்து எழுத்துப் பணியில் ஈடுபடுவார். இக்கவிதையுள்ளம் பின்னாளில் சிறந்து வளர்ந்து ஒளிவிட்டது. பிற்பட்ட வகுப்பில் பிறந்த கவிஞர்க்கு இயல்பாகவே தாழ்த்தப்பட்ட-ஒடுக்கப்பட்ட மக்கள்பால் ஆழ்ந்த பரிவுணர்ச்சி நிரம்பியிருந்தது. தொழிலாளர் நல உரிமைக்கு இவர் கவிதைகள் குரல் கொடுத்தன. 'முன்னணி', 'ஜனயுகம்' என்ற பத்திரிகை களில் இவர் எழுத்துவண்ணம் மிளிர்ந்தது. நான்காண்டு களுக்குப் பின்னர் இவர்தம் அரசியல் ஈடுபாட்டினை நிறுத்திக்கொண்டு தமிழ் இலக்கிய ஆராய்ச்சியில் ஈடுபட்டார். கம்பனிடத்தில் தனித்த ஈடுபாடு கொண்ட கவிஞர் 1955ஆம் ஆண்டில் 'விதியோ? வினையோ?' என்னும் இசை நாடகத்தினைப் புதிய பாங்கில் எழுதினார். 1957-58 ஆம் ஆண்டுகளில் 'மாதவி காவியம்', 'கண்ணப்பன் கிளிகள்'. 'புத்தர் காவியம்' என்னும் மூன்று கவிதை இலக்கியங்களைப் படைத்தார். இதில் 'புத்தர் காவியம்' மட்டும் முற்றுப் பெறாமல் நின்று விட்டது. இது பின்னர், கம்பனுக்கு வாய்த்த சடையப்ப வள்ளல் போல் கவிஞர் தமிழ் ஒளிக்கு வாய்த்த திரு செ. து. சஞ்சீவி அவர்கள் முயற்சியால் வெளியான 'தமிழ் ஒளியின் கவிதைகள்' என்னும் தொகுப்பில் 'புத்தர் பிறந்தார்' என்னும் முதற் கவிதையாக நிற்கின்றது. இதன் பின்னர் இலக்கிய ஆராய்ச்சிக் கண்கொண்டு வெளியிடப்பெற்ற 'சிலப்பதிகாரம் நாடகமா, காவியமா?' 'திருக்குறளும் கடவுளும்', 'தமிழர் சமுதாயம்' முதலிய உரைநடை நூல்கள் 1959-60ஆம் ஆண்டுகளில் வெளி வந்தன.

1962ஆம் ஆண்டிற்குப் பின்னர்க் கவிஞரின் வாழ்வில் கொடிய என்புருக்கி நோய் பற்றியது. அஃது உடம்பை

யும் உளளத்தையும் விடாது உலுக்கியெடுத்தது. 29. 3. 1965ல் கவிஞர் வாழ்வு முடிந்தது.

வாழ்ந்தது நாற்பதே ஆண்டுகள் எனினும் கவிஞர் வற்றாத கவிதைச் செல்வத்தைத் தமிழ்ச் சமுதாயத்துக்கு வாரி வழங்கிவிட்டுச் சென்றுள்ளார். தமிழர்தம் தவக் குறைவே கவிஞர் நீண்ட ஆண்டுகள் வாழக் கொடுத்து வைக்காதது என்பது அவர் விட்டுச் சென்ற கவிதை களைப் படித்துப் பார்க்கும்பொழுது புலனாகின்றது.

இனி, அவர் படைத்த கவிதைச் சோலையில் உலா வருவோம்.

கவிஞர் சந்த இன்பம் தழைக்கப் பாடுவார் என்பது அவர் புனைந்த பாடல்கள் பலவற்றின் வழி விளங்கு கின்றது.

'ஞாயிறு வணக்கம்' எனுந்தலைப்பில் அமைந்துள்ள கவிதையில்,

**கோலமாய் வளைந்தகடல் மேலே—ஒளி**
**கொண்டுவரு கின்றகதிர் வேலே!**
**...............**

—தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 77; 2-3

**தோள்மிசை அமர்ந்ததமிழ் போலே—மலைத்**
**தோள்மிசை துலங்கியசெங் கோலே!**
**.............**

—தமிழ் ஒளியின் கவிதைகள் பக். . 7.; 11-12

**பயந்திருட் கடிந்தவெற்றி வேலே—உன்**
**பார்வையில் வடியும்ஞானப் பாலே!**

—தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 77; 19-20

என்ற வரிகளில் கொஞ்சிடும் சந்த வன்மை செவியினை நிறைவித்துச் சிந்தையினை மகிழ்விக்கக் காணலாம்.

இயற்கையில் ஈடுபாடு மிகுந்த கவிஞர் இயற்கையை வருணிக்குந் திறம் நம் நெஞ்சை அள்ளுகின்றது. புதுவை தென்னை மரங்கள் நிறைந்த நகரம். 'தென்னம் பந்தல்' என்ற தலைப்பில் அவர் புனைந்திருக்கும் கவிதை அவர்தம் வருணனைத் திறத்தினையும் ஒலிநயம் சமைக்கும் ஆற்றலினையும் ஒருங்கே காட்ட வல்லதாகும்.

வானக் கருமுகில் மீது செங்கதிர்
வந்து படுகின்ற வேளை
வெடித்தது தென்னம் பாளை!

ஞானக் குமரி நகைத்தனள் பார், அதோ
நாற்புறமும் தென்னஞ் சோலை!
நன்கு விடிந்திடும் காலை!

—தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 80 1-2

இதுபோன்றே காவிரியாற்றைக் கவிஞர் 'தென்மகள் வருகின்றாள்' என்ற கவிதையில் சிறக்கப் பாடுகின்றார்.

பூவிரி சோலைகள் யாவும் வணங்கப்
பொன்மலர் தான்சிறந்தக்
காவிரி அன்னை வருகின்றாள் பொற்
கழல் 'கலகல' வென்றே!

—தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 91; 1-2

பூந்துகில் சுற்றிப் பொற்கரை யிட்டுப்
புன்னகை தான்சிந்தித்
தீந்தமிழ் பாடித் திரையொடும் ஆடித்
தென்மகள் வருகின்றாள்!

—தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 91 4-5

*இயற்கை வருணனையோடு இனிய கருத்துக்களையும் புகுத்தி எழுதுவதில் வல்லவர் கவிஞர் என்பதனை அவர் தம் 'நிலா' பற்றிய கவிதையால் அறிகிறோம்.*

பூட்டிய வீட்டைத் திறந்து குடும்பப்
புகழ்விளக் கேற்றிடவே—சுடர்
தீட்டப் புகுந்த புதுமனப் பெண்எனத்
தென்படும் வட்ட நிலா—கண்
முன்படும் வட்ட நிலா!

*—தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 95 1-5*

*'தாமரைப் பெண்' என்ற கவிதையில் கற்பனை நயமும் ஓசை நயமும் ஒன்றையொன்று போட்டியிட்டுச் செல்லக் காணலாம்.*

தாமரை

மூடிய போர்வை அகற்றியென் மேனியில்
முத்தங் கொடுத்தவன் யார்?—மனப்
பித்தங் கொடுத்தவன் யார்?—இமை

மூடிய கண்கள் விழிக்க எனக்கொரு
மோகங் கொடுத்தவன் யார்?—புதுத்
தாகங் கொடுத்தவன் யார்?

*—தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 83 1-6. (தாமரை)*

கதிரவன்

மொட்டென் றிருந்தவுன் மேனியிற் காலையில்
முத்தங் கொடுத்தவன் நான்—மனப்
பித்தங் கொடுத்தவன் நான்! — ஒரு

பொட்டென் றிருந்தவுன் மேனி மணம்பெறப்
பூத்திடச் செய்தவன் நான்!—கலைக்
கூத்திடச் செய்தவன் நான்!

—தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 83. 1-6

இவர் படைப்பான கவிதைகள் பல அழியா அழகுடையன என்றாலும் அழியவே அழியாத கவிதை (Immortal Poem) எனக் குறிப்பிடத்தக்க சிறப்புகள் பலவும் பொதிந் திலங்குவது 'பட்ட மரம்' என்னும் கவிதையாகும். உணர்ச்சி, கற்பனை, வடிவம், கருத்து எனும் கவிதைக்கு வேண்டிய நாற்கூறுகளும் நலம்பெற நிறைந்தொளிர்வது இக்கவிதையாகும். கவிதையினை ஒருமுறை வாய்விட்டுப் படித்தாலேயே இவ்வுண்மை விளங்கக் காணலாம்.

பட்ட மரம்

மொட்டைக் கிளையொடு
நின்று தினம்பெரு
மூச்சு விடும்மரமே!

வெட்டப் படும்ஒரு
நாள்வரு மென்று
விசனம் அடைந் தனையோ?

குந்த நிழல்தரக்
கந்த மலர்தரக்
கூரை விரித்தஇலை!

வெந்து கருகிட
இந்த நிறம்வர
வெம்பிக் குமைந்த னையோ?

கட்டை யெனும் பெயர்
உற்றுக் கொடுந்துயர்
பட்டுக் கருகினையே!

பட்டை யெனும்உடை
இற்றுக் கிழிந்தெழில்
முற்றும் இழந்தனையே!

காலம் எனும்புயல்
சீறி எதிர்க்கக்
கலங்கும் ஒருமனிதன்

ஓலமி டக்கரம்
நீட்டிய போல்இடர்
எய்தி உழன்ற னையே!

பாடும் பறவைகள்
கூடி உனக்கொரு
பாடல் புனைந்ததுவும்

மூடு பனித்திரை
யூடு புவிக்கொரு
மோகங் கொடுத்ததுவும்

ஆடுங் கிளைமிசை
ஏறிச் சிறுவர்
குதிரை விடுத்ததுவும்,

ஏடு தருங்கதை
யாகூ முடிந்தன!
இன்று வெறுங்கனவே!

*தமிழ ஒளியின் கவிதைகள் பக். 85-86*

"தத்துவ ஞானம் கைவரப் பெறாத எவனும் சிறந்த கவிஞனாகமாட்டான்" என்று திறனாய்வாளர் கூறுவர். 'வேண்டும் வரம்' எனுங்கவிதையில் கவிஞர் மனித வாழ்வு மாண்புற வேண்டுமெனில் மேற்கொள்ளத்தக்க வழிகளைப் பின்வருமாறு சொல்கின்றார்.

### வேண்டும் வரம்

மனமென்ற பேயை விரட்டிப் பிடித்து
வசத்தில் மடக்கிவிட்டால்
தினம்வென்று வென்று சிரித்துச் சிரித்துத்
திடங்கொண்டு வாழ்ந்திடலாம்!

ஐந்து குதிரைகள் ஓடுமுன் பற்றி
அதட்டி நிறுத்திவிட்டால்,
இந்த உலகம் நம்மைச்சுற்றி வந்திடும்
இட்ட பணிபுரியும்!

ஓட்டை உடலம் உருப்பட நித்தம்
ஒரு சிந்தை கொண்டிருந்தால்,
கோட்டை யிதற்குக் கொடிகட்டிச் சேனைகள்
கும்பிட வாழ்ந்திடலாம்!

கேவல ஆசையின் வாய்கள் நொறுங்கக்
கிழித்தெறிந் தால்உலகில்,
சாவு பயப்படும்; மானுடம் வென்று
'ஜயம் ஜயம்' என்றாடும்!

*தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 113*

கவிஞர் நலிந்தவர் வாழ்வைக் கண்டு நைபவர் என்பது அவரோடு பழகியவர்களும், அவர் எழுத்தை 'முன்னணி' பத்திரிகையிற் படித்தவரும் அறிவர். வானத்து மீன்களைப் பார்க்கும் கவிஞர்க்கு, அவை உடலுழைப்போர் உடம்பில்

ஏற்பட்ட தழும்புகளாகத் தெரிகின்றன; சொற்களிற் சோக உணர்ச்சிச் சிதறல்களாகத் தெரிகின்றன "இரவெனும் வறுமையின் கந்தல் உடை தனில் எண்ணற்ற கண்களோ விண்மீன்கள்?'' என்று பாடுகின்றார் கவிஞர்

'கண்ணம்மா' எனுங்கவிதை காதல் எனும் பேருணர்ச்சி இக்கவினுலகில் நிலைக்கும் வரை நின்று வாழும் நேர்த்தியான பாடலாகும். சிறந்த சொற்கள் சிறந்த முறையில் சிறந்த இடங்களில் செய்யப்பட்டிருக்கும் பாங்கினை இக்கவிதையில் காணலாம். சான்றிற்கு இதோ சில கவிதை நறுக்குமணிகள்.

'மஞ்சள் கரைத்து விட்டாள் —கண்ணம்மா
மாணிக்க ஓடையிலே!
நெஞ்சங் கரைந்து விட்டேன் மஞ்சளாய்
நீந்திநீ ராடுகிறேன்.'
'...............

உள்ளம் எழுதி விட்டாள் —கண்ணம்மா
ஊற்றுநீ ரோடையிலே!
கள்ளம் அழிந்துவிட்டேன் —அடியேன்
காதல்நீ ராடுகிறேன்!'

'யாத்திரை' என்ற கவிதை கவிஞன் இதயத்தையும் அதில் எழும் எண்ணத்தையும் இயம்புவதாகும்.

வெகுதூரம் நான் நடந்தேன்
வெள்ளி முளைக்கவில்லை!
வெகுதூரம் நான் நடந்தேன்
வீதி வெளுக்கவில்லை!

போகும்வழி நீளமென்று
புத்தி உணர்ந்தாலும்
போகும்வழி யெனது
போக்குக் கிசைந்தவழி'

—தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 111-4

என்று குறிப்பிட்டு,

உழைக்காமல் யாதுபயன்?
ஓய்ந்தார்க்கு வெற்றியுண்டோ?
அழைக்கின்றாள் கொல்லிமலை
ஆரணங்கு; செலலுகின்றேன்!

—தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 116 35-36

என்று கவிதையை முடிக்கின்றார் கவிஞர்.

"அஞ்சாமல் வாழ்க்கைக் கடலில் நீந்தினார்; ஓயாமல் உழைத்தார்; கவிதை யணங்கின் இறுதி யழைப்பையும் ஏற்றுச் சென்றுவிட்டார்" என்று தமிழ்ச் சான்றோர் டாக்டர் மு. வ. அவர்கள் குறிப்பிட்டுள்ளது போன்று கவிஞர் வாழ்வு முடிந்தது. ஆயினும் கவிஞரே தம் கவிதையில்,

வஞ்சகக் காலன் வருவதும் போவதுவும்
வாழ்க்கை நியதியடா!—எனில்
செஞ்சொற் கவிதைகள் காலனை வென்று
சிரிப்ப தியற்கையடா!

தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 145 11-12

என்று குறிப்பிட்டிருப்பது போன்று கவிஞர் தமிழ்ஒளி தம் இறவாத கவிதைகளால் நம்மிடை என்றும் வாழ்கின்றார்.

# கவிஞர் தமிழ் ஒளியின் கவிதைகள்

முன்னைப் பழமைக்கும் பழமையாய்ப் பின்னைப் புதுமைக்கும் புதுமையாய் நின்றொளிர்வது நம் மொழியாம் தமிழ்மொழி. தமிழ்மொழி தொன்மைச் சிறப்புடன் இலக்கியச் செல்வங்களையும் பெற்று வளமாக வாழ்ந்து வரும் வண்டமிழ் மொழியுமாகும். காலந்தோறும் இம் மண்ணில் தோன்றுகின்ற கவிஞர்கள் புதிய புதிய இலக்கிய வடிவங்களை இயற்றிச் சாவா மூவாத் தமிழிற்கு ஒப்பனை செய்து வருகின்றனர். 'காலத்தின் தேவைக் கேற்பக் கவிஞர் தோன்றுவர்' என்பர். இம்முறையில் இந் நூற்றாண்டின் கால்நூற்றாண்டின் முடிவில் தோன்றியவர் கவிஞர் தமிழ் ஒளி ஆவர்.

ரக்தாட்சி ஆண்டு, புரட்டாசித் திங்கள், ஆறாம் நாள் (21-9-9124), தென்னார்க்காடு மாவட்டத்தில் நெசவாளர் கள் மிகுதியாக வாழும் குறிஞ்சிப்பாடியை அடுத்த ஆடூர் என்னும் சிற்றூரில் திரு. பொ. சின்னையா—செங்கேணி அம்மாள் தம்பதிகட்குத் தலைமகனாகப் பிறந்தார், கவிஞர் தமிழ் ஒளி. பெற்றோர் இவருக்கு இட்ட பெயர் விஜயரங்கம் என்பதாகும். கவிஞர் பிறந்த ஊர்தான் ஆடூரேயொழிய, மற்றபடிகவிஞர் வளர்ந்த ஊர், நலமிக்க நாட்டுப் பற்றாளர்க்குப் புகலிடம் தந்து, புதிய இலக்கியப் படைப்புகளுக்கும் காரணமாக அமைந்த செந்தமிழ்த் தென்புதுவையாகும். பாரதியார், பாரதிதாசன், வாணி தாசன், தமிழ் ஒளிமுதலிய கவிஞர்கள் தம் கவிதைகளைப் புனையப் புதுச்சேரி வாழ்விடமாக அமைந்தது.

**இளமையும் கல்வியும்**

திரு. விஜயரங்கம் தம் தொடக்கக் கல்வியினைப் பிரெஞ்சுமொழிப் பள்ளியிலும், உயர் கல்வியினைக் கல்வே கல்லூரியிலும், தமிழ்ப் புலவர் கல்வியினைக் கரந்தைத் தமிழ்ச் சங்கப் புலவர் கல்லூரியிலும் கற்றார். ஆயினும் புலவர் இடைநிலை வகுப்பு படித்துக் கொண்டிருக்கும்போதே அதாவது—1945ஆம் ஆண்டில் கல்லூரி விடுமுறையின்போது சென்னைக்கு வந்த திரு. விஜயரங்கம், சென்னையிலேயே நிரந்தரமாகத் தங்கி விட்டார். எனவே அவரின் படிப்பு முற்றுப்பெறவில்லை. இதற்கு அவர் கூறிய காரணங்கள் இரண்டாகும். ஒன்று : தமிழ்ப்புலவர் பாடத் திட்டத்தில் வேண்டாத விரும்பத்தகாத அலுப்பூட்டும் பாடப் பகுதிகள் இருந்து அவருக்குச் சோர்வூட்டியமை. இரண்டு சென்னையின் அன்றாட அரசியல், மற்ற ஆரவார நிகழ்ச்சிகளில் அவர் தம் இளம் மனத்தில் ஏற்பட்ட வேட்கை.

**கவிதை உள்ளமும் பற்றும்**

பள்ளிக்குத் துள்ளிச் செல்லும் பிள்ளைப் பருவத்திலேயே இவர் பாடல்கள் புனைவதில் அளவுகடந்த ஆர்வம் காட்டினார். வைகறையில் துயிலெழுந்து, தம் தோட்டத்திலுள்ள நாவல் மரத்தின்மீது ஏறி உட்கார்ந்து கொண்டு, கதிரவனைப் பார்த்துக் கவி புனைவதில் ஈடுபட்டு விடுவார். இரவிலும் பிறர் தூக்கத்திற்கு இடையூறாக இருந்தாலும் இவர் எழுத்துப்பணி தொடர்ந்தது. திரு விஜயரங்கம் புதுவையில் கல்வே கல்லூரியில் பயின்றுவந்த பொழுது பாரதியார் அங்கு வாழ்ந்த வரலாற்றை விருப்புடன் கேட்டறிந்தார். அவர் கவிதைகளில் பெரிதும் ஈடுபாடு காட்டினர். அதுபோது கல்வே கல்லூரியில் ஆசிரியத் தொழில் நடாத்தி

வந்த பாரதிதாசன் அவர்களுடன் ஆசிரியர்—மாணவர் தொடர்பு கொண்டார். பாவேந்தரின் அன்பிற்குப் பாத்திரமாக அவருடைய இல்லத்தினையே சின்னாட்கள் தம் வாழ்விடமாகக் கொண்டார். நீறுபூத்த நெருப்பாக இருந்த திரு. விஜயரங்கத்தின் கவியுள்ளத்தைத் தம் ஆர்வக் காற்றால் ஊதிக் கனியச் செய்ததில் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனார்க்குப் பெரும்பங்கு உண்டு.

கரந்தைப் புலவர் கல்லூரியில் இடைநிலை வகுப்பில் கவிஞர் பயின்று வந்தபொழுது 'சிற்பியின்' 'கனவு' என்றொருநாடகத்தை இயற்றினார். இந்நாடகத்தினைச் 'சக்தி நாடக சபை'யினர் அரங்கேற்றித் தமிழ் நாடக உலகிற்கு நம் கவிஞரை அறிமுகப்படுத்தினர். இந்நாடகக் கதையே பின்னாளில் 'வணங்காமுடி' என்ற பெயரில் திரைப்படமாக வந்து வெற்றி கண்டது

## தொழிலும் தொண்டும்

இலக்கியப் பத்திரிகைகளுக்குக் கவிதைகள் தீட்டி அனுப்பி வந்தார். தமிழிற்கு ஒளியூட்டவல்ல நல்ல இலக்கியங்களைப் படைக்க வேண்டும் என்பதே அவருடைய இலட்சிய நோக்காக இருந்தது 'தமிழ் ஒளி' என்ற புனைபெயரில் கவிதையுலகிற்கு அறிமுகமானார். சென்னையிலிருந்து வெளி வந்த முற்போக்குப் பத்திரிகைகள் பலவற்றில் அவர் கவிதைகள் இடம் பெற்றன,

கவிஞர் பிற்பட்ட சமூகத்தில் பிறந்தவர்; எனவே, இயல்பாகவே தாழ்த்தப்பட்ட மக்களிடம் பாசம் கொண்டிருந்தார். அவர்தம் உரிமைகளுக்குப் போராடும் திறமும் கொண்டிருந்தார். தொழிலாளர்களின் வேலை

நீக்கம், கதவடைப்பு, கூலி உயர்வு முதலான தொழிற் சங்கப் போராட்டங்கள் இவர் இரக்க உள்ளத்தை ஈர்த்தன. அதன் விளைவு, அவர் தம் உள்ளத்தை, வாழ்வை, பணியைப் பாட்டாளி வர்க்கத்தின் நலத்திற்கென்றே காணிக்கையாக்கிக் கொண்டதாகும். தம் புரட்சிகரமான கருத்தை உள்ளடக்கிப் பல நூற்களை இவர் அந்நாளில் எழுதினார். கவிதைகளோடு மட்டுமின்றிக் கணக்கற்ற சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதித் தொழிலாளர் நலம் நாடினார். 1949ஆம் ஆண்டில் 'முன்னணி' என்ற வார ஏட்டின் துணையாசிரியராகப் பணியாற்றிவிட்டுப் பின்னர் 'ஜனயுகம்' என்ற திங்கள் இதழ் ஒன்றைத் தொடங்கி, இரண்டு திங்கள் நடத்தினார். பணம் பற்றாக்குறை அவர் பத்திரிகை முயற்சியினை வாழ விடவில்லை. குடும்பச் சொத்தான தென்னந்தோப்பையும் விற்றுப் பத்திரிகையை நடத்த வேண்டும் என்று அவர் மேற்கொண்ட முயற்சி பெற்றோர் இணங்காமை காரணமாகத் தோல்வியைத் தழுவியது.

## சென்னை வாழ்க்கை

கவிஞர் 1949ஆம் ஆண்டிலிருந்து 1962ஆம் ஆண்டு வரை பதின்மூன்று ஆண்டுகள் சென்னையில் தங்கி வாழ்ந்தார். தொடக்க காலத்தில் அரசியல் ஈடுபாடு கொண்டிருந்த அவர் 1953ஆம் ஆண்டிலிருந்து இலக்கிய ஆராய்ச்சியில் மட்டுமே ஈடுபாடு கொண்டார். சங்க இலக்கியந் தொடங்கிப் பாரதிதாசன் பரம்பரைக் கவிஞர்கள் இயற்றிய கவிதைப் படைப்புகள் வரை ஆராய்ந்த அவர் நெஞ்சில் கம்பநாடனின் கவிதை தனித்ததோர் இடத்தினைப் பெற்றது. 'தமிழ் இலக்கியத்தில் மறுமலர்ச்சி என்பது கம்பனை மீண்டும் காண்பதில் தான் இருக்க

வேண்டும்'[1] என்பது அவர்தம் ஆணித்தரமான நம்பிக்கை யாகும். எனவே தம்முடைய கவிதையொன்றில்,

பண்ணுக்குப் பண்தந்தும் பயன்தந்தும் செந்தமிழ்க்
கண்ணுக்குக் கண்தந்தும் கதிதந்தும் நீ சென்ற
விண்ணுக்கு மதிதந்தும் விறலிக்கே இகழ் தந்தும்
எண்ணுக்குக் கடல்தந்தும் எமக்கிதயந் தந்தாய்நீ!'

என்று பாடக் காணலாம்.

1955ஆம் ஆண்டில் 'விதியோ, வீணையோ?' என்னும் இசை நாடகத்தினைப் புதுப்போக்கில் தமிழுலகத்திற்கு வடித்துத்தந்தார். 1957-58ஆம் ஆண்டுகளில் 'கண்ணப்பன் கிளிகள்', 'புத்தர் காவியம்' என்ற இரண்டு கவிதை நூல் களை இயற்றினார். ஆனால் 'புத்தர் காவியம்' மட்டும் முடிவு பெறவில்லை. 1959-60ஆம் ஆண்டுகளில் ஆராய்ச்சி நூல்கள் சில வெளிவந்தன. 'சிலப்பதிகாரம் நாடகமா காவியமா?' 'திருக்குறளும் கடவுளும்', 'தமிழர் சமுதாயம்' என்பனவே அவை. பின்னர், கவிஞர் வாழ்க்கையில் ஒரு கொடிய திருப்பம் வந்துள்ளது. என்புருக்கி நோய் அவர் பிஞ்சுடலை வாட்டியது. பெற்றோர் சென்னை வந்து கவிஞரை வலுக்கட்டாயப்படுத்திப் புதுவைக்கு அழைத்துச் சென்றனர். அங்கு அவர் உடல்நிலை மேலும் மோசமானது. 1964ஆம் ஆண்டு சென்னை வந்தார். வறுமை வாட்டியது. நோய் முற்றியது. 29-3-1965 அன்று கவிஞர் வாழ்வு முடிந்தது.

நாற்பதே ஆண்டுகள் மண்ணில் வாழ்ந்த அக் கவிஞர் வாழ்வு இரங்கத்தக்கது. ஏன், கவிஞர் பலரின் வாழ்வும் இத்தகைய தன்மையுடையது தானே!

மன்னா வுலகத்து மன்னுதல் குறித்தோர்
தம்புகழ் நிறிஇத் தாமாய்ந் தனரே[2]

என்ற இலக்கியத் தொடருக்கு விளக்கமாக ஒளிர்கின்றார் கவிஞர் தமிழ் ஒளி.

இனி அவர்தம் கவிதையின் உள் நுழைந்து காண்போமாக!

## ஓசை நயம்

'ஓசை நயமும் கற்பனை வளமும் இயல்பாக அமைந்த கவிஞர் தமிழ் ஒளி' என்று டாக்டர் மு. வ. அவர்கள் குறிப்பிடுகின்றார்.[3] இதற்கேற்பக் கவிஞரின் பாடல்கள் பலவற்றின் ஓசை நயம் நம் செவிகளை நிறைவிக்கின்றன; கற்பனை வளமும் நெஞ்சை அள்ளுகின்றன.

செந்தாமரைப் பெண்டிற்
 தேன் சுரும்பர் என்கின்ற
பந்தாடற் காண்டி
 இளவேனில்!

பந்தாடல் கண்ட
 பரவசத்திற் காதலன்போல்
வந்தாடற் செய்தியால்
 வாழி இளவேனில்!
—தமிழ் ஒளியின் கவிதைகள். பக். 64

என்று 'வாழி இளவேனில்' எனும் கவிதையில் கானல்வரிப் பாடல், பரஞ்சோதியர் திருவிளையாடல் முதலானவற்றில் காணப்படும் ஓசை நயத்தினைக் காணலாம்.

இதுபோன்றே 'தென்னம் பந்தல்' எனும் கவிதையில்,

**வானக் கருமுகில் மீது செழுங்கதிர்**
**வந்து படுகின்ற வேளை**
**வெடித்தது தென்னம் பாளை!**
**ஞானக் குமரி நகைத்தனள் பார், அந்தோ**
**நாற்புறமும் தென்னஞ் சோலை!**
**நன்கு விடிந்திடுங் காலை!**

*—தமிழ் ஒளியின் கவிதைகள். பக். 80*

*மேலும், 'தாமரைப் பெண்' எனும் கவிதையில் கதிரவன் கூற்றில் வரும் பாடலில் ஓசை நயம் பொங்கித் ததும்புவ தனைக் காணலாம்.*

**மொட்டென் றிருந்தவுன் மேனியிற் காலையில்**
**முத்தம் கொடுத்தவன் நான்—மனப்**
**பித்தங் கொடுத்தவன் நான்!—ஒரு**

**பொட்டென் றிருந்தவுன் மேனி மணம்பெறப்**
**பூத்திடச் செய்தவன் நான்—கலைக்**
**கூத்திடச் செய்தவன் நான்!**

*—தமிழ் ஒளியின் கவிதைகள். பக். 83*

**கற்பனை நயம்**

*கவிஞர் கற்பனைச் சிறகு விரித்து வானிற் பறக்கிறார்: காணும் காட்சியினைக் கவினுற விரிக்குந் திறம் பெற்று மிளிர்கிறார். அவர் காட்டும் கற்பனை நம் உள்ளத்தில் உவகை பூக்கச் செய்கிறது.*

*'பட்ட மரம்' எனுங் கவிதை, கவிஞர் தமிழ் ஒளியின் கற்பனை உள்ளத்தின் உரைகல்லென நிற்கிறது.*

**மொட்டைக் கிளையொடு**
**நின்று தினம்பெரு**
**மூச்சு விடும்மரமே!**

வெட்டப் படும்ஒரு
நாள்வரு மென்று
விசனம் அடைந்தனையோ?

குந்த நிழல் தரக்
கந்த மலர்தரக்
கூரை விரித்த இலை!
வெந்து கருகிட
இந்த நிரம்வர
வெம்பிக் குமைந்தனையோ?

கட்டை யெனும்பெயர்
உற்றுக் கொடுந்துயர்
பட்டுக் கருகினையே?
பட்டை யெனும்உடை
இற்றுக் கிழிந்தெழில்
முற்றும் இழந்தனையே!

காலம் எனும்புயல்
சீறி எதிர்க்கக்
கலங்கும் ஒருமனிதன்
ஓல மிடக்கரம்
நீட்டிய போல்இடர்
எய்தி உழன்றனையே!

பாடும் பறவைகள்
கூடி உனக்கொரு
பாடல் புனைந்துதவும்,
மூடு பனித்திரை
யூடு புவிக்கொரு
மோகங் கொடுத்துதவும்,

ஆடுங் கிளைமிசை
ஏறிச் சிறுவர்
குதிரை விடுத்துதவும்,
ஏடு தருங்கதை
யாக முடிந்தன!
இன்று வெறுங்கனவே!

—தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 85-86

கார்த்திகை விளக்கினைச் சொல்ல வரும் கவிஞர்,

ஐப்பசித் தூதை அனுப்பிவைத்துக் கார்த்திகையைக்
கைப்பிடித்த வானின் ககனத் திருவிளக்கு!

—தமிழ் ஒளியின் கவிதைகள். பக். 93

என்கிறார். 'மீன்கள்' பற்றிப் பாடவந்த கவிஞர், 'இரவெனும் வறுமையின் கந்தல் உடைதனில் எண்ணற்ற கண்களோ விண்மீன்கள்?' (பக். 94) என வினா விடுக்கின்றார். இவருக்குப் பிச்சைக்காரர் இதயத்தின் விம்மல்கள் காலம் எழுதும் எழுத்துக்களாகத் தோன்றுகின்றன.

பாரதியாரின் 'கண்ணம்மா' பாட்டினை அனைவரும் அறிவர். இதே போக்கில் கவிஞரின் 'கண்ணம்மா' கவிதைச் சிறப்புகள் பலவும் பெற்று வீறார்ந்து விளங்கக் காணலாம்.

**கண்ணம்மா**

மஞ்சள் கரைத்து விட்டாள்—கண்ணம்மா
மாணிக்க ஓடையிலே!
நெஞ்சங் கரைந்து விட்டேன்... மஞ்சளாய்
நீந்திநீ ராடுகிறேன்!

மூழ்கிக் குளித்து விட்டாள்—கண்ணம்மா
முத்துநீர் ஓடையிலே!
தாழ்குழ லில்மல ராய்—அடியேன்
தாவிட நீந்துகிறேன்!

நீரைக் கலக்கி விட்டாள்—கண்ணம்மா
நித்தில ஓடையிலே
பேரைக் கலக்கி விட்டாள்—அலைகளில்
பேசிநீ ராடுகிறேன்!

சேலை பிழிந்து விட்டாள்—கண்ணம்மா
சித்திர ஓடையிலே!
ஆலை பிழிகரும் பாய்—என்னுளம்
ஆடநீ ராடுகிறேன்!

உள்ளம் எழுதி விட்டாள்—கண்ணம்மா
ஊற்றுநீ ரோடையிலே!
கள்ளம் அழிந்து விட்டேன்—அடியேன்
காதல்நீ ராடுகிறேன்!

—தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 9 10

திருக்குற்றாலக் குறவஞ்சியில் வரும் 'வஞ்சி வந்தனளே, மலைக் குறவஞ்சி வந்தனளே' என்ற மெட்டு.

மாமரக் கொம்புகள்
தோரணங் கொண்டு
மலர்கள் அசைந்தாடக்
காமனைச் சென்று
கருங்குயிற் கன்னி
கலந்து இசைபாடப்,
பூமகள் புன்னகை
கொண்டு மலர்கள்
புனைந்து புனைந்தாடக்
கோமள வல்லி
வசந்த மனோகரி
கொஞ்சிட வந்தாளே

—தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 109.

என்ற பாடலில் எதிரொலிக்கக் காணலாம்.

## உள்ளீடு

கவிஞர் தம் கவிதையில் அரிய கருத்துக்கள் பலவற்றை ஆங்காங்கே பதித்திருக்கக் காணலாம். "Poets are judged by the frame of mind they induce."[4] இம்முறையில் பார்த்தால் கவிஞர் தமிழ் ஒளி, தம் கவிதை யினைப் படிப்போருக்கு நற் கருத்துக்களைப் புகட்டி நிற்கக் காணலாம்.

'வேண்டும்' வரம் எனும் கவிதையில்,

மனமென்ற பேயை விரட்டிப் பிடித்து
வசத்தில் மடக்கிவிட்டால்,
தினம்வென்று வென்று சிரித்துச் சிரித்துத்
திடங்கொண்டு வாழ்ந்திடலாம்!

ஐந்து குதிரைகள் ஓடுமுன் பற்றி
அதட்டி நிறுத்திவிட்டால்
இந்த உலகம் நமைச் சுற்றி வந்திடும்
இட்ட பணிபுரியும்!

ஓட்டை உடலம் உருப்பட நித்தம்
ஒருசிந்தை கொண்டிருந்தால்,
கோட்டை யிதற்குக் கொடிகட்டிச் சேனைகள்
கும்பிட வாழ்ந்திடலாம்!

கேவல ஆசையின் வாய்கள் நொறுங்கக்
கிழித்தெறிந் தால் உலகில்,
சாவு பயப்படும்; மானுடம் வென்று
'ஜயம்ஜயம்' என்றாடும்!

—தமிழ் ஒளியின் கவிதைகள். பக். 113

'கவிஞன்' எனும் கவிதையில்,

சாயும் கதிர்களிலே—இருட்
சாலம் புரிகையிலே
காயும் நிலவெனவே – வழி
காட்ட எழுந்திடுவேன்!

—தமிழ் ஒளியின் கவிதைகள். பக். 117

என்றும்,

ஊரை எழுப்பிடவே – துயர்
ஒன்றை நொறுக்கிடவே
தாரை முழக்கிடுவேன்—தமிழ்ச்
சாதி விழித்திடவே!

—தமிழ் ஒளியின் கவிதைகள். பக். 117

என்றும் கவிஞர் தம் இலட்சிய வேட்கையை வெளியிடுகின்றார். மேலும்,

மண்ணில் முளைத்தவன் நான்—அதன்
மார்பில் திளைத்தவன் நான்
எண்ணித் துணிந்துவிட்டேன் —இனி
எங்கும் பறந்து செல்வேன்!

—தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 119

என்ற கவிதை, உலக அறிஞர்க்கும் கலைஞர்க்கும் கூறப்படும்ஒப்பற்ற அனுபவஅறிவுரையாகத்திகழ்கிறது. 'நாளை எனும் நாளை' வரவேற்கும் கவிஞர்கவிதையில் அவருடைய ஆழ்ந்த சித்தாந்தம் விளங்கக் காணலாம்.

நேற்று வாழ்ந்த வாழ்வெல்லாம்
நினைவைக் கொல்லும் சோதனையாம்
காற்றில் கதறும் துன்பஒலி
கனலுங் கனலாம் இன்றைக்கு!

நேற்றும் இன்றும் வெறுப்புற்றேன்
நீயேன் இன்னும் ஒளிகின்றாய்?
மாற்று மருந்து தரவல்லாய்!
மலரும் நாளே வாராய்நீ!

சுற்றம் என்போர் கைதிகளாம்!
சொத்தும் சுகமும் கற்பனையாம்!
வற்றும் குளத்து மீனாக
வாழ்நாள் எய்துந் துயர்போகக்

கற்றோர் நெஞ்சக் களிப்பேபோல்
கம்பன் செய்த கவியேபோல்
நற்றேன் ஒழுக மலர்விரியும்
நாளே வாராய், வாராய்நீ!

— *தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 120*

## பெரியார் போற்றல்

*கவிஞர் நாட்டுத் தலைவர்களையும், கவிஞர் பெருமக்களையும் தக்காங்கு போற்றக் காணலாம் புலமையைப் புலமை மதித்தல் சிறப்பன்றோ! நேரு இல்லாத இந்தியா, 'நீரிலா நிலத்தைப் போலாம்!" (பக். 139) என்றும், பாரதியின் புகழ் பாடுகையில்,*

கண்வழி சொட்டுங் குருதி யொடுங்
காணில் விழிதடவி —தமிழ்ப்
பண்வழி சென்று பழம்புகழ் சேர்த்தவன்
பாரதி என்பவனாம்!

கொத்தும் வறுமைக் கழுகு பறந்திடக்
கூகை அலறிவிழப் —பணப்
பித்தர் திரியக் கிடந்த இருளைப்
பிளந்து பிளந்தெறிந்தான்!

— *தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 141*

*என்றும் குறிப்பிட்டுள்ளார். பாரதிதாசன் புகழினை,*

உயிரில் உணர்வில் கலந்த கவிஞன் என்
உயிரில் உயிர்கொண் டுலவுகின்றான்!—வெறும்
துயரில் நான்மூழ்கிக் கிடக்கவில்லை, அவன்
தொண்டு சிறந்திடத் தொண்டு செய்வேன்!
— *தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 143*

என்றும்,

அடிமைகொள், எனை!' என்று
புலவன் ஒவ்வொருவனும்
அயலவன் கால்பிடிக்க,

மிடிமைகொல் வாழ்விலும்
'செந்தமிழ்க் கெதிரிஎன்
எதிரிதான்!' என்று கூறிக்

குடிமையும் கொற்றமும்
ஏதடா தமிழன்னை
கொடியின்றி நிற்கும் நாளில்

ஒடிகின்ற செடியல்ல
ஆலடா தமிழ் என்
றுணர்த்தினான் கவிஞர் கோமான்
— *தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 144*

என்றும், பாடிச் சிறப்பித்துள்ளார்.

காமராசரைக் குறிப்பிடும்பொழுது,
கற்றவர் பலர் இருந்த போதும்—உண்மை
கற்றவர் அருகிவிட்ட நேரம்
பற்றெதும் இன்றி அரசில் நுழைந்தார்—மக்கட்
பரம்பரையை உயர்த்த விழைந்தார்!
— *தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 148*

என்றும் புகழ்ந்துள்ளார்.

**கவிதையும் வாழ்வும்**

கவிஞர் தம் பருவுடல் மறையினும் புகழுடல் மறைவதில்லையன்றோ? இதனைக் கவிஞர்,

> வஞ்சகக் காலன் வருவதும் போவதும்
> வாழ்க்கை நியதியடா? எனில்
> செஞ்சொற் கவிதைகள் காலனை வென்று
> சிரிப்ப தியற்கையடா!

— தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 145

என்று குறிப்பிட்டுள்ளார். இக்கூற்றினைக் கவிஞர் வாழ்க்கையின் உரைகல்லாகவும் கொள்ளலாம்.

'யாத்திரை' எனுங் கவிதை அவர் வாழ்வின் வார்ப்படமாக விளங்கக் காணலாம்.

> கள்ள மிகுந்தக்கால்
> காணும்வழி அச்சுறுத்தும்!
> உள்ள மிசைந்தாலோ
> உறுதி தளராதாம்!
>
> போகும்வழி தூரமென்று
> பூமிதனில் அஞ்சிடிலோ
> சாகும்வரை நீந்துமிந்த
> சமுத்திரமும் தூரமன்றோ?
>
> ..........................
>
> உழைக்காமல் யாதுபயன்?
> ஓய்ந்தார்க்கு வெற்றியுண்டோ?
> அழைக்கின்றாள் கொல்லிமலை
> ஆரணங்கு; செல்லுகின்றேன்!

— தமிழ் ஒளியின் கவிதைகள் பக். 116

இன்னும் கவிஞர் தமிழ் ஒளியின் கவிதைகளில் உவமை நயம். சொல்லாட்சித் திறன், வடிவச் சிறப்பு முதலான பல அழகுகளையும் ஒருங்கே காணலாம்.

இனி, கவிஞரின் இரண்டு தனிக் கவிதைகளான 'புத்தர் பிறந்தார்' எனுஞ் சிறு காப்பியத்தினையும், 'கண்ணப்பன் கிளிகள்' எனும் உருவகக் கவிதையினையும் சுருங்கக் காண்போம். 'புத்தர் பிறந்தார்' எனுஞ் சிறு காப்பியம் முடிவுபெறாத ஒன்றாயினும். கவிதை நயம் சொட்டும் எழிலார்ந்த கவிதைகள் பல அதில் அடங்கியுள்ளன. "'புத்தர் பிறந்தார்' என்ற அருமையான காவியம் முடிக்கப்படாமலே குறையாக நின்றுவிட்டது. தமிழிலக்கியத்தின் குறையாகவே ஆகிவிட்டது என்னும் முன்னுரைக் கூற்று[5] முற்றிலும் உண்மையே!

## கண்ணப்பன் கிளிகள்

இந்தப் பாடல் புனைந்ததற்குரிய காரணத்தைக் கவிஞரே பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார் :

"என் கதையில் வரும் கிளிகள் தாமே சிந்தித்துப் பேசக் கூடியவையாக இருக்கின்றன......

குற்றம் குணமிரண்டும் கூட்டிற் கிளிகளென்று
சுற்றம் படருகின்ற தொல்லுலகில்—பெற்றம்
பெரிதுண்டு மன்னிக்கும் பேர்க்கென் றறிந்தால்
அரிதுண்டோ ஆற்றும் அறம்?

—பக் : 10.

மேலே கொண்டுள்ள வெண்பாவை நான் எழுதி முடித்த பிறகு அவ்வுருவகக் கிளிகளை உயிர்க் கிளிகளாகப் படைத்துப் பார்க்கலாமே என்ற எண்ணம் எழுந்தது. பிறகென்ன, அந்தக் கிளிகளைப் பேசவைத்து விட்டேன்![6]

குணத்தையே ஆண் கிளியாகவும், குற்றத்தைப் பெண் கிளியாகவும் உருவகம் செய்கிறார். இரண்டு கிளிகளும் ஒரு கூட்டில் வாழ்கின்றன.

கண்ணப்பன் கூட்டின் சொந்தக்காரன். அவனைக் கொத்துகிறது பெண்கிளி. கண்ணப்பன் வெகுண்டு அதனைப் பிரித்து வைக்கிறான். ஆண்கிளி பிரிவாற்றாமையால் துயருறுகிறது. துயில் கொள்ளும்போது, பெண் கிளி இறந்து போனதாகக் கனவுகண்டு, அந்தக் கனவால் வருந்திப் புலம்பி உயிர் விடுகின்றது. காலையில் கண் விழித்த எசமானன் கண்ணப்பன் இதனைக் கண்டு கலங்கி, இறந்துபோன ஆண் கிளியைக் கூட்டினின்றும் விடுதலை செய்துவிடுகின்றான். ஆண் கிளியின் பெரும் பிரிவு பெண் கிளியைப் பேதுறச் செய்கிறது. மாலை நேரத்தில் வானத்தில் வந்து முளைத்த பிறைமதி வடிவில் ஆண்கிளியே வந்திருக்கிறதென்று மயங்கி, அதனை எட்டிப் பிடிக்க விண்ணுக்குப் பறந்து, அலைந்து, அலுத்துச் சோர்ந்து மண்ணில் உயிரற்று ஆண் கிளியின் உடல் கிடக்கும் புதரிலேயே வந்து விழுகிறது. உயிரற்ற இரு கிளிகளையும் கண்டு வருந்துகிறான் கண்ணப்பன். தன்னால் விளைந்த தவறு என்று எண்ணி உருகுகிறான்.

இதுதான் கதை,
கிளியை வருணிக்கும் கவிஞர்,

**கொவ்வைப் பழமென்ற மூக்கும்—கற்றுக்**
**கொடுக்கின்ற செஞ்சொற்பயில்கின்ற நாக்கும்**
**செவ்வைப் படுங்குன்றிக் காற்றும்—கண்ணன்**
**சிந்தையி லின்பம் சிறந்திடப் பண்ணும்!**

— பக். 16

என்கிறார்.

## நெஞ்சைப் பிழியும் அவலம்

இவ்வுருவகக் கவிதையில் நம் நெஞ்சை நெக்குருகச் செய்யும் அவலத்தினைக் காணலாம்,

பிரிந்தன இரு கிளிகள்—அவை
பிரிந்தன சொரிந்தன நீர்விழிகள்
எரிந்தன இருகிளிகள்—அவை
இடறின இடறின இடறினவே

— பக். 17

என்றும்,

தத்தையம்மா தத்தை யம்மா
ஓடிச் சென்றாயோ?—கடல்
முத்தையம்மா முத்தையம்மா
தேடிச் சென்றாயோ?

— பக். 23

என்றும்,

பூவாரம் ஒன்று நான் கோத்துப் போட்டேன்—அதைப்
போங்காலக் காலன் அறுத்துப் போட்டான்!
தேவாரம் போனபின் தத்தையம்மா—தமிழ்த்
தேனாரம் ஏதடி தத்தையம்மா?

— பக். 26

என்றும் வரும் பகுதிகள் அவலச் சுவையுணர்வை வெளிப் படுத்துகின்றன.

மனிதன் இழைத்ததுயர்
 மரணத்திற் போய்முடியப்
புனிதர் மறைவுக்குப்
 பொங்காதா என்னெஞ்சம்?

— பக். 50

என்ற வரிகளில் கண்ணகியின்[7] அவலம் எதிரொலிக்கின்ற தன்றோ?

கண்ணப்பன் தன் தவறை யுணர்ந்து, தன் உள்ளப் புன்மைக்கு வருந்தி நைகிறான் :

கண்மணியை நான் பிரித்த
கயமைக்கு நீ வருந்தி
விண்சென்றாய்! இச் செய்கை
உன் வன்மை! என் புன்மை.

— பக். 37

ஆண் கிளியின் புதரில் பெண் கிளி விழுந்து இறந்து கிடப்பதனைக் கவிஞர்,

இறப்பிலும் பிரியாத் தத்தை
எழுதெழிற் கிள்ளை பக்கல்
சிறப்பதும் சிறப்பாய்ச் செத்துத்
தென்மகள் கிடந்த தேபோல்

— பக். 71

கிடந்ததாக எழுதுகிறார். இச் சோகக் கதையை,

எதிர்நின்ற மரங்கள்தொறும் இலைகள் தோறும்
நின்ற மழைச் சிறுதுளிகள் உதிர்ந்து கண்ணீர்
நித்திலங்கள் எனச் சிதறி நிறைந்ததம்மா!

— பக். 72

என்று கூறி முடிக்கிறார் கவிஞர்.

மனிதனாகிய கண்ணப்பன் பெண் கிளியைப் பின்வருமாறு பாராட்டுகிறான்.

என்னினும் உன்னன்பே
சிறந்த தம்மா!
இருளிலும் என்னுள்ளம்
இருண்ட தம்மா!
பொன்னினும் மணியினும்
போலா னாய்! உன்
புகழினும் மேலான
தொன்று மில்லை!

— பக். 7[illegible]

இதுவே கவிதை உணர்த்தும் பாடம்.

"காதலில் தோல்வியுற்று வாழ்விலும் தோல்வியுற்றுக் கால நோய்க்கு இரையாகி இளம் பருவத்தில் வாழ்வை நீத்த அவருடைய உள்ளத்தின் சோகமே இந்தக் கதையாக அடியெடுத்ததோ, என்னவோ? யார் அறிவர்?" என்று கலைமகள் ஆசிரியர் திரு கி. வா. ஜகந்நாதன் குறிப்பிடுகின்றார்[8]. இந்நூலின் முதற்பதிப்பு 1966இல் வெளி வந்தது; இந்நூல் தில்லிப் பல்கலைக் கழக மாணவர்க்குப் பாடமாக இருந்தது.

நூலினை வெளிக் கொணர்ந்த நண்பர் திரு. செ. து. சஞ்சீவிக்கு நன்றி. தமிழ் ஒளியின் கவிதைகளை எனக்குப் பாடி அறிமுகப்படுத்திய டாக்டர் மு.வ. அவர்களுக்கு வணக்கம்.

## அடிக்குறிப்புகள்

1. தமிழ் ஒளியின் கவிதைகள் : கம்பனுக்குக் காணிக்கை.
2. புறநானூறு : 165 : 1—2.
3. தமிழ் ஒளியின் கவிதைகள், முன்னுரை: பக்கம், 3
4. Mathew Arnold : Essays in Criticism, P. 144.
5. டாக்டர் மு. வ; முன்னுரை, ப : 3.
6. தமிழ் ஒளியின் கவிதைகள், பக். 10.
7. மன்பதை அலர்தூற்ற மன்னவன் தவறிழைப்ப
அன்பனை யிழந்தேன்யான் அவலங் கொண்டு
அழிவலோ.
—சிலம்பு : துன்ப மாலை, 36—37.
8. முன்னுரை : பக்கம் 8.

# கண்ணதாசன் படைப்பியல்

கண்ணதாசன் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ்க் கவிதையுலகில் இன்றியமையா இடத்தைப் பெறு கின்றவர்.

> வாழையடி வாழையென வந்த
> திருக்கூட்ட மரபில் நானும் ஒருவனன்றோ''

என்று இராமலிங்கர் பாடியதற்கேற்ப வழிவழியாக வருகின்ற தமிழ்க் கவிஞர் வரிசையில் மதிப்பிற்குரிய நிலையில் வைத்துப் போற்றத்தகுந்தவர் கண்ணதாசன். இத்தகைய ஓர் இடத்தைத் தயக்கமற நாம் அளிக்கக் காரணமாய் அமைந்த ஆற்றல்கள் ஆராயத் தகுவன.

> ''காவியத் தாயின் இளையமகன்
> காதல் பெண்களின் பெருந்தலைவன்
> மானிட ஜாதியில் தனிமனிதன்
> படைப்பதனால் என்பேர் இறைவன்"

என்று தனக்கேயுரிய வகையில் தன்னை அறிமுகப்படுத்திக் கொள்ளும் அக் கவிஞன் வெள்ளித் திரையின் குரலை வீதிக்குக் கொணர்ந்தவர். வயற்காடுகளில் நாட்டுப்புறப் பாடல்களைக் கொஞ்சம் நகர்த்திவிட்டுத் திரைப்பாடல் களைப் பாடச் செய்தவர். கண்ணதாசன் திரையுலகிற் புகுந்து அதற்கேற்பப் பாடல்களை எழுதிய நிலை யிலிருந்து, தன் பாடல்களுக்கேற்ப இசையமைக்குமாறு செய்த மாபெரும் புரட்சி வேறெவரும் செய்யாதது. மெட்டுக்காகச் சொற்களை வெட்டிக்கொண்டிருந்த

நிலையிலிருந்து தமிழ்ப் பாடல்களை மீட்டதனால் கருத்துநிறைந்த பாடல்கள் பல நம் காதிற் புகுந்தன. கண்ணதாசனுக்கு முன்பே பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் தத்துவ இழையோடும் பாடல்களை வெள்ளித் திரைக்கென எழுதியதுண்டு. ஆனால் கண்ணதாசன் அதனை மிகுதியாக்கியதோடு மிகமிக எளிமையாகப் பாமரரும் எண்ணிச் சுவைக்குமளவு பெரிய தத்துவங் களைப் பாடல்களில் படைத்துக் காட்டினார்.

"வாழ்க்கை என்பது வியாபாரம் — வரும்
ஜனனம் என்பது வரவாகும் — அதில்
மரணம் என்பது செலவாகும்
இரவல் தந்தவன் கேட்கின்றான் — அதை
இல்லை என்றால் அவன் விடுவானோ?"

என்று வாழ்க்கைப் போக்கினை ஒரு வணிக மொழியில் தத்துவ இழையோடு பாடுகின்றார். திரைப்படப் பாடல் களில் பட்டினத்தார், தாயுமானவர் போன்ற மெய்ஞ் ஞானிகளின் கருத்துகள் கண்ணதாசனால் எளிய உரை பூண்டு உலா வந்தன. தொட்டிலுக்கு அன்னை, கட்டிலுக்குக் கன்னி, பட்டினிக்குத் தீனி, கெட்டபின்பு ஞானி என்பன போன்ற அடிகள் இலக்கியம் தெரிந்த எவர்க்கும் பட்டினத்தாரை நினைவூட்டும். பழைய கருத்துகளை மேலும் புதிய மெருகுடன் இருபதாம் நூற்றாண்டு மக்கள் மனத்திற்குத்தகச் சொன்ன பாவலர் கண்ணதாசன். திரை உலகில் கண்ணதாசன் கதை உரையாடல் எழுதுகின்றவர்களையும் தாண்டிப் பாத்திரத்தை அறிவார்ந்த நிலைக்குக் கொண்டுபோகும் வகையில் பாடல்களை மழையாகக் கொட்டியவர். இசைப் பாடல்கள் உலாவந்த திரை உலகில் கவிதைக் கனிகள் பழுத்துக் குலுங்க வழிசெய்தவர் கண்ணதாசன்.

**"எறும்புத் தோலை உரித்துப் பார்க்க யானை வந்ததடா—என்**
**இதயத் தோலை உரித்துப் பார்க்க ஞானம்வந்ததடா"**

என்பது ஒரு பெரிய தத்துவத்தின் சுருக்கமான விதையாகும். கண்ணதாசன் திரை உலகில் நுழையாமல் போய் இருந்தால் இத்தகைய மிகப் பெரிய தத்துவங்களைப் பாமர மனிதன் சந்தித்திருக்க முடியாது. "இமையும் விழியும் எதிரானால் இயற்கை சிரிக்காதோ", "தெய்வத்தின் மார்பில் சூடிய மாலை தெருவினிலே விழலாமா?", "அழகைக் காட்டும் கண்ணாடி மனதைக் காட்டக்கூடாதோ'' "கண்களில் நீலம் விளைத்தவளோ, அதைக் கடலினில் கொண்டு கரைத்தவளோ'' என்பது போன்று புதிய புதிய உவமைகள் பூக்கின்ற மலர்த் தோட்டமாய்க் கண்ணதாசனின் கவிதைகள் நமக்குக் காட்சி தருகின்றன.

கண்ணதாசனின் புலமையும் ஆற்றலும் திரைத் துறையோடு நின்றுவிடவில்லை. அவை கவிதை உலகில் கொடிகட்டிப் பறந்தன. அரசியல் துறையில் அவரால் போற்றப்படாத தலைவர்களும் இல்லை; தூற்றப்படாத தலைவர்களும் இல்லை. நேருவை ஒருகால நிலையில் வசைபாடிய கவிஞரே பின்பு நேரு காவியம் பாடியிருக்கிறார். கண்ணதாசனின் கவிதைகளிலேயே தலைசிறந்தது என்று நேருவைப்பற்றிய கவிதையான 'ஜனநாயக சோசலிசம்' என்பதனைக் குறிப்பிடலாம். நேருவின் மார்பில் இடம் பிடித்துக்கொண்ட ரோஜாப்பூ வேறு எம்மலரும் பெறாத இடத்தைப் பெற்றுவிட்டதாக உள்ளம் பூரித்ததாம். நேருவை மற்றவர் வணங்கும் போதெல்லாம் தன்னையே வணங்கியதாக ரோஜா களிக்குமாம். இப்போது மன்னவன் மறைந்த துயரில்

ரோஜா கையற்றுப் புலம்புகிறதாம். இதோ ரோஜா அழுகிறது.

“ஊரவர் நாட்டோர் உலகோர் யாவரும்
பாரதப் பெண்ணையே பார்த்தழு கின்றார்!
எனக்கென அழுவோர் இதயம் இல்லையோ!
ஏழைக்குடியில் இழையும் கொடியில்
இருந்துவந் தாலும் எங்களுக் கிந்த
நாட்டின் பண்புகள் நான்கும் உண்டடி!
காதலவர் பிரிந்த கவலை பொறாது
கைம்மைநோன் பேற்கும் கற்பும் உண்டடி!
இன்று முதலே எங்கள் குலத்தோர்
இன்னொரு மார்பை இணையோம்; நினையோம்!”

இந்த மலரின் துயரத்தின்வழி ஓர் அருமையான கையறு நிலைக் கவிதையைக் கண்ணதாசன் படைத்து வழங்கியிருக்கிறார்.

தன் பெயரன்—தன்னுடைய தாலாட்டுக் கேட்டு உறங்கியவன் எதிர்பாராது இறந்த துயரத்தில் கவிஞர் மனம் குமைந்து பாடிய கையறு நிலையும் மிக உயர்ந்த காவியச் சிறப்பு உடையது. இருபது நூற்றாண்டு இலக்கிய வரலாற்றிலும் இல்லாத ஒரு புதுமையாக கவிஞரின் இந்த இரங்கற்பா விளங்குகிறது. மாறிமாறிக் கொண்டிருந்த அரசியல் போக்குகளுக்குத் தகுந்தாற் போலத் தன்னையும் மாற்றிக்கொண்ட கவிஞரிடம் கால வளர்ச்சியும், சிந்தனையில் ஒரு பரிணாமமும் தென்படக் காணுகின்றோம். கட்சி, அரசியல் கடந்து தகுதிமிக்க பெரியவர்களை மதித்துப்போற்றும் பக்குவமான மனப்பாங்கு அவரிடம் தோன்றிற்று. எல்லோரையும்

உயர்த்திப் பாடுகின்ற அந்த நிலையில்தான் அவர் மனிதரைப் பாடமாட்டேன் என்று உறுதி கூறுகின்றார். எனினும் அந்த உறுதியையும் உடனே உடைத்துக்கொண்டு மனிதர் பலரைப் பாடுவதோடு அதற்கோர் அமைதியை யும் கற்பித்துக் கூறுகிறார். கண்ணதாசன் தான் கொண்ட கோட்பாடுகளில் நிலையாக இருந்ததில்லை. எனினும் அந்த நிலையின்மைதான் அவருடைய கவிதையை மேலும் வேகமாக இயக்கியிருக்கிறது. அவரே கூறுமாறு அவர் கத்தியையும் கேடயத்தையும் எல்லோருக் கும் அளித்திருக்கிறார், போற்றலுக்கும் தூற்றலுக்கும் எவரானாலும் அவருடைய கவிதையையே பயன்படுத்தி யாகவேண்டும்.

காவிய உலகில் கண்ணதாசன் செய்துள்ள சாதனைகள் சில. ஆட்டனத்தி, மாங்கனி போன்ற தொடக்க காலக் காவியங்கள் அவருடைய கற்பனை வீச்சையும் பாத்திர உருவாக்கத் திறனையும் புதுமையாகச் சொல்லும் வேட்கையையும் காட்டுகின்றன.

"காற்றுக்கு முரங்கைமரம் ஆடல்போலும்
கடலுக்குள் இயற்கை மடியசைத்தல் போலும்
நாற்றுக்குள் இளங்காற்று நடித்தல் போலும்
நல்லோர்தம் அவைக்குள்ளே நடனமிட்டாள்"

என்று உவமைகளை அடுக்கிச் சொல்லும் செய்தியை அணிபடக் காட்டுகின்ற போக்கை அவருடைய தொடக்க காலக் காவியங்கள் காட்டுகின்றன. பக்தி இலக்கியங்களான தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்வியப் பிரபந்தம் போன்றவை இவரிடம் பெரிய தாக்கத்தை உண்டாக்கி இருக்கின்றன. 'அன்றொருநாள் அவனுடைய பேரைக் கேட்டேன்!, என்று தேவாரம் அவரிடம் புதிய வடிவம்

பெறுகிறது. 'ஆண்டாளின் கனாக் கண்டேன் தோழி' என்பது. 'கனவு கண்டேன் நம் காதல் கனிந்துவர' எனப் பண் பாடுகிறது. இந்த மரபில் திருப்பாவை, திருவெம்பாவையை ஒட்டி, கண்ணதாசனின் தைப்பாவை மிகப் பெரிய சொல் அலங்காரங்களோடும் தொடை நயங்களோடும் வெளிப்படுகிறது.

"பிறர்காலில் தொழுதறியான்
தொழுவாரைப் பிறர்க்குரையான்
செருவாளிற் கைபதிப்பான்
கைவாளைச் செருவில்விடான்
பொருள்தோன்றக் கவிபுனைவான்
கவிபாடப் பொருள்பறியான்
மருள்மானை மனத்தணைவான்
மனமானை மருளவிடான்

இருள்வானில் நிலவிடுவான்
நிலவாழ்வை இருளவிடான்
நிறைமாதர் நெறிநிறையும்
நிலம்காத்தான் முறைவகுத்தான்
தரும்சேரன் பெற்றறியான்
தழைக்கும்கோன் வஞ்சியிலும்
நிறையாயோ. உலவாயோ.
நிலவாயோ தைப்பாவாய்!"

எனஒவ்வோர் அடியிலும் உடன்பாடும் எதிர் மறையுமாக தொடுகின்ற சொல் நலம் மிகவும் சுவைக்கத் தக்கதாகும், தமிழ் மக்களின் பண்பாட்டிற்குத்தக ஆண்டு தோறும் தொடங்கும் தைத்திங்கள் வருகையினை இப் பாவைப்பாட்டு போல வேறெதுவும் சிறப்பிக்கவில்லை.

இயேசு காவியம் கிறித்துவ சமய உலகு வியந்து போற்றும் வகையில் இவருடைய இறுதிக் காலத்தில் இவரால் புனையப் பெற்றது.

கவியரங்குகளில் கண்ணதாசன் மின்னல் வீச்சாகவும் மேகப் பொழிவாகவும் அவையில் உள்ளவரைத் திகைக்க வைத்தவர். இந்த விரைந்து பாடும் ஆற்றலே பின்பு திரையுலகில் அவர் சொல்லச் சொல்லப் பாடல்களை எழுதிக் கொள்ளும் பழக்கமாக வளர்ந்திருக்கிறது. காலில் கட்டி வந்து மருத்துவமனையில் இருந்ததனால் கவியரங்கத்திற்குப் போக முடியாத நிலையில் எழுதிய கவிதையை அவருடைய அண்ணனிடம் கொடுத்தனுப்ப அவர் படிக்கின்றார்.

"தொட்டதெலாம் பொன்னாகத் தொடுத்ததெலாம் பொருளாகப்
பெற்றதிலே செல்வம் பெருகிக் கிடந்தாலும்
கட்டிவர வில்லை எனக் கண்கலங்கி நிற்றேன்பால்
கட்டிவந்து சிலநாளாய் கட்டிலிலே போட்டதனால்
கட்டிவைத்துள்ள கவிதையினைக் கட்டி அனுப்பியுள்ளேன்
யாத்தவனைக் காணா அவைப் பெரியீர்
மூத்தவரே படிக்கின்றார்"

என்று தொடங்கியவுடனே எல்லார்க்கும் புரிகின்ற எளிய சிலேடையும், நகைச்சுவை இழையும் அரங்கத்தின் கையொலிகளைப் பெற்றுவிடுகின்றன.

"சேய் சமைத்த சோற்றைச் சிந்தாமல் சிதறாமல்
தாய் உண்ணும் பாவனையில் சபைநிறைந்த சான்றோரே"

என்று மிக ஆழமான அரிய உவமையுடன் வெளிப்படும் அடிகள் அருவிபோல் உள்ள கவியரங்கக் கவிதையின் ஒரு பகுதியாகும். கண்ணதாசன் ஓர் ஆசுகவி. இம்

மென்றால் இருநூறும் முன்னூறும் அம்மென்றால் ஆயிரமும் பாடி அழியாப்புகழ் கொண்ட மகா கவிஞர். போகி எனப் பார்ப்போர்க்கு அவர் போகியாகவும் யோகி எனப் பார்ப்போர்க்கு யோகியாகவும் காட்சித் தருகின்ற நிலையில் இகபரசுகம் எல்லாவற்றையும் பாடியுள்ளார் அப் பெருங்கவிஞர். கண்ணனைப்பற்றிச் சிற்றின்பமாகவும் பேரின்பமாகவும் பாடல் கேட்கவேண்டுமென்று விரும்புகின்ற காதுகளுக்கு எல்லாம் கண்ணதாசனே இன்னும் எத்தனையோ நூற்றாண்டுகளுக்கு விருந்தளிக்கமுடியும்.

# கவிஞர் முடியரசனின் ஊன்றுகோல்

## ஓர் ஆய்வு

### நூலின் நாயகர் பற்றிய வரலாறு

16-10-1881இல் இராமநாதபுரம் மாவட்டம் மகிபாலன்பட்டியில் திருவாளர் முத்துக் கருப்பன் செட்டியார்—திருமதி சிவப்பி ஆச்சி இவர்களுக்கு நன்மகவாய்த் தோன்றியவர் 'பண்டிதமணி' என்று தமிழுலகம் பாங்குடன் அழைக்கும் திரு மு. கதிரேசன் செட்டியார் அவர்களாவர். இவர் அரசஞ் சண்முகனாரிடம் தமிழ் கற்றார். தருவை நாராயண சாத்திரியாரிடம் வடமொழி கற்றார். காரைக்குடி சொக்கலிங்க ஐயாவிடம் சமய அறிவு பெற்றார். 1912ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. இவர்தம் மனைவியார் பெயர் மீனாட்சியாகும். ஐந்து ஆண்களும் மூன்று பெண்களும் இவர்தம் மக்களாவர். பண்டிதமணியின் சீரிய தமிழ்ப்பணியாக அவர் சன்மார்க்க சபையினை 1909ஆம் ஆண்டில் தோற்றுவித்ததைச் சொல்லலாம். 1933ஆம் ஆண்டு ஈழ நாடு சென்று சொற்பொழிவுகள் ஆற்றிவிட்டுத் திரும்பிய இவர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் பணியினை 1934இல் ஏற்றுக்கொண்டு அப் பணியினை 1946ஆம் ஆண்டுவரை திறம்படச் செய்தார்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகம் கண்ட அருந்தமிழ் வள்ளல், இசைத் தமிழிற்கு ஏற்றம் தந்த வள்ளல் அண்ணாமலை அரசரின் தலைமையில் 1941ஆம் ஆண்டு இவருக்கு மணிவிழாக் கொண்டாடப்பெற்றது. 1925ஆம் ஆண்டில் 'பண்டிதமணி' என்ற பட்டத்தினைச் சன்மார்க்க

சபை வழங்கியது. நடுவனரசு 1942ஆம் ஆண்டில் 'மகா மகோபாத்தியாய', என்னும் பட்டத்தை இவருக்கு வழங்கிச் சிறப்பித்தது. 'சைவ சித்தாந்த வித்தகர்' என்ற பட்டம் பெற்ற இவர், திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனத்தினரால் 1951ஆம் ஆண்டு 'மூதுபெரும் புலவர்' என்ற பட்டம் வழங்கப் பெற்றார். பல்வேறு நூல்களை இயற்றியும் வடமொழி நூல்களைத் தமிழிற் பெயர்த்தும் பல்லாற்றானும் நந்தமிழிற்கு நனி மிகத் தொண்டாற்றிய இவர் தமது 73வது வயதில் 21-10-1953இல் சிவனடிப் பேற்றினை அடைந்தார்.

## நூலாசிரியர் பற்றிய வரலாறு

கவியரசர் முடியரசனார் தமிழ்கூறு நல்லுலகு நன்கறிந்த தலைமைக் கவிஞராவர். தமிழ்மொழியை ஐயந்திரிபற எழுத்தெண்ணிக் கற்று, நற்றமிழாசிரியராய் அமைந்து, அற்புதப் பாக்களை அருந்தமிழில் இசைக்கும் ஆற்றல் பெற்றவர், நாவீறு வாய்க்கப்பெற்ற பாவலராய்த் திகழ்பவர். இவரைக் குறித்து டாக்டர் இராம. பெரியகருப்பன் (தமிழண்ணல்) அவர்கள் குறிப்பிடும் மதிப்புரை பின்வருமாறு:

> 'பாட்டுத் திறத்தாலே வையத்தைப் பாலித்திட' எண்ணும் இம் முடியரசர் 'நமக்குத் தொழில் கவிதை, நற்றமிழுக்கு ஆக்கம் தேடுதல்' என வாழ்ந்து வருபவர்; தமிழ் நலம் கருதித் தன்னலம் விடுவித்தவர்; சிந்து பாடும் சிற்றாறு போலும் செந்தமிழ் நடை வல்லவர்; தமிழ்த் தாய்க்கு வாய்த்த மறந்தும் புறந்தொழாத ஆழ்வார்

பாமலர்கள் கொண்டு நாளும் அவளை அருச்சிக்கும் நாயன்மார்; தமிழ்ப்பிழை செய்வாரை மனமுருக வைத்துத் தினமவரைத் திருத்தும் மணிவாசகர். கண்ணொளி மங்கினும் தமிழ்நலத்தைக் கூர்ந்து கண்டு, காட்டத் தளராதவர். தலைமுடி நரைப் பினும், தமிழைப் பாடும்போது இளமை பெற்று மீசையை முறுக்கும் தமிழ் மறவர். தமிழ்த்தாயைப் பாடும் பணியில் ஓய்வு காணாதவர்!

மதுரை மாவட்டத்தில் அமைந்துள்ள எழில்மிக்க சிற்றூராகிய பெரிய குளத்தில் 7-10-1920இல் கவிஞர் முடியரசனார் பிறந்தார். சுப்பராயலு—சீதாலட்சுமி ஆகியோருக்கு மகனாகப் பிறந்த இவர். தாய்மாமன் துரைசாமி அவர்கள் பிற்கால இலக்கியங்கள்பால் காட்டிய பெரிய ஈடுபாட்டினால் இவருக்கும் இளமைக் காலத்தி லேயே இலக்கிய ஆர்வம் மிகுந்து இலக்கிய இன்பத்தில் ஈடுபட்டுத் திளைக்கத் தொடங்கினார்.

இவர்தம் ஊரே இவருக்குக் கவிதை பாடும் ஊற்றினைத் தோற்றுவாய் செய்தது என்பதனைப் 'பாம் பறியும் பாம்பின கால்' என்பது போல, இவரோடு நெருங்கிப் பழகியவரும், இவரைப் போலவே கவிதை ஆற்றிலில் வல்லவருமான 'அஞ்சிசவடி' புகழ் கவிஞர் பாவலர் மணி ஆ. பழநி அவர்கள் பின்வருமாறு உரைப்பார்:

வளைந்து கிடக்கும் மேற்கு மலைத்தொடரும் அதில் மேய்ந்து திரியும் மேகக் காட்சியும், இசை பாடும் புள்ளினமும், இறங்கி வரும் சிற்றாறும், வெள்ளிக்காசைச் சுண்டி விட்டாற்போலத் துள்ளிக் குதிக்கும் கெண்டை மீன்களும் வெடித்துச் சிரித்துக் காண்பவர் விழியைக் கவரும் வாசமலர்க் குளமும்

> துரைராசுவின் இதயத்தைக் கவர்ந்தன; என்னவோ செய்தன; தாய் மாமன் துரைசாமி ஊட்டிய இலக்கியச் சாறு தன் வேலையைத் தொடங்கி விட்டது.

இதனால் தமிழார்வம் கவிஞர் முடியரசனாரைப் பிடபிடித்து உந்த மேலைச் சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் தமிழ் பயின்றார். அக்காலத்தே இவருக்கு ஆசிரியப் பெருமக்களாக அமைந்த பலரிடமிருந்து இவர் ஆழ்ந்த மொழிப் பற்றையும் இனப்பற்றையும் பெற்றார். மேலும் மேலைச் சிவபுரி சன்மார்க்க சபையின் ஆண்டு விழாவிற்காக வருகை புரிந்த இசைத்தமிழ் ஏந்தல் ஈழம் தந்த விபுலானந்தர், கரந்தைக் கவியரசு வேங்கடாசலம் பிள்ளை, சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை, பன்மொழிப் புலவர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், மகாவித்துவான் ரா. ராகவையங்கார் முதலான பெருமக்களுக்கெல்லாம் தொண்டு செய்து மகிழும் பேற்றினையும் பெற்றார்.

1940ஆம் ஆண்டில் தந்தை பெரியாரின் தன்மான இயக்கத்தில் பங்கு கொண்டார். 1947இல் வித்துவான் பட்டம் பெற்ற இவர் தொடக்கத்தில் இரண்டாண்டுகள் சென்னை முத்தியாலுப்பேட்டை உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றினார். சென்னையில் வாழ்ந்து வந்த தமிழறிஞர் பலரோடு தொடர்பு கொண்டார். போர்வாள், கதிரவன், குயில், முருகு, அழகு முதலிய இதழ்களில் இவரின் சிறுகதைகளும் கவிதைகளும் கட்டுரைகளும் வெளிவந்தன. புதுக்கோட்டையிலிருந்து அக்காலையில் வெளிவந்த 'பொன்னி' இதழ் இவரைப் 'பாரதிதாசன் பரம்பரை' என்று அறிமுகப்படுத்தியது. பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் தலைமையில்

1949ஆம் ஆண்டில் இவர் கலைச்செல்வி என்னும் நங்கை நல்லாரைத் திருமணம் செய்து கொண்டார்.

தமிழ்த் தென்றல் திரு. வி. க., கவிஞர் வாணிதாசன் முதலிய அறிஞர் பெருமக்களுடன் நெருங்கிப் பழகினார். அதுபோது நாட்டில் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தம் துணைவியாரோடு கலந்து கொண்டார். திருமணத்திற்குப் பின்னர்ச் சென்னையிலிருந்து காரைக்குடி சென்று அங்கு மீ. சு. உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியர் பணியினையேற்று, அப்பணியினைத் தொடர்ந்து 28 ஆண்டுகள் செய்து ஓய்வு பெற்றார். இவருக்கு ஆண் மக்கள் மூவரும் பெண் மக்கள் மூவரும் மக்கட் செல்வங்களாக வாய்த்துள்ளனர், 1955ஆம் ஆண்டு குருதி உமிழும் கொடுநோயாம் காச நோய்க்கு ஆளாகி, புதுக்கோட்டை அண்ணல் சுப்பிரமணியனார். வி.கே. இராமச்சந்திரனார் முதலிய புகழ்வாய்ந்த, தமிழ் உள்ளம் வாய்ந்த மருத்துவர்களால் புது வாழ்வு தரப்பெற்றார்.

இளமைக் காலத்தில் முருகனைப் பாடுவதே தம் கவிதையின் பயன் என்று தம் கவியுலக வாழ்க்கையைத் தொடங்கிய கவிஞர் 1940ஆம் ஆண்டிற்குப் பிறகு சமுதாயச் சூழல், தமிழ்நாடு, தமிழ்மொழி இவை குறித்தே பாடி வருகிறார். தமிழகத்தில் அமைந்திருந்த சமுதாயச் சூழலின் தாக்கமும், சுய மரியாதை இயக்கத்தின் பால் இவர் கொண்டிருந்த வேட்கையும். பாவேந்தர் பாரதிதாசனார் பால் இவர் கொண்டிருந்த பற்றும் இவரை ஆத்திக நிலையிலிருந்து மாற்றி நாத்திகராக்கி, அதற்கேற்பவே கவிதைகளைப் புனைய வைத்தன.

கலப்பு மணத்தைத் தம் பாடல்களில் பெரிதும் வற்புறுத்திய இவர் சொல்லிய வண்ணம் செய்து காட்டிய

செம்மலாகத் துலங்குகிறார். தாம் கலப்பு மணம்செய்து கொண்டதோடு, தம் மக்களுக்கும் கலப்பு மணம் செய்து வைத்த சீர்திருத்தம் இவர் வாழ்விற் பலரும் கண்டுவியந்த வொன்றாகும்.

இவர்தம் இயல்பிற் சிறத்தனவாகக் கவிஞர் ஆ. பழநி அவர்கள் குறிப்பிடுவன பின்வருமாறு :

சாதி சமயங்களுக்குள் ஆட்படாமை-நன்றி மறவாமை-நட்பைப் பேணல்-கொள்கைப் பிடிப்பு-குறிக்கோள் வாழ்வு-உதவும் உள்ளம்-ஒட்டார் பின் செல்லாமை-ஆசிரியர்ப் போற்றல்-ஆகியன இவர் தம் இயல்பிற் சில.

"சங்கப் புலவர்தம் பாடலே பாடல் என்பதில் அழுத்தமான நம்பிக்கையுடைய இவர் பாட்டுலகில் பாரதியாரைப் பாட்டனாகவும், பாரதிதாசனாரைத் தந்தையாகவும் கருதிக் "குலமுறை கிளத்தும்" கொள்கையுடையராக விளங்குகிறார்.

"பெரும்பாலும்" தன்னை மறந்த லயம் தன்னில் இருக்கும் இயல்பினர்; "புட்டி," களின் துணையால் அன்று; எட்டியவரை சிந்திக்கும் இயல் பினால். கனவிலும் கவிதை பாடுவது என்பது இவருக்கே உள்ள தனித்திறனாகும். கனவிற் பாடிய கவிதையை மறுநாள் காலையில் எழுந்து வரி மாறாமல் எழுதிவிடும் இவரது ஆற்றல் வியப்புக் குரியது. இஃது இயற்கை வழங்கிய அருட்கொடை என்றே கூறல் வேண்டும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரின் 'அழகின் சிரிப்பு' கவிதை அனைவரும் அறிந்தது, இவரும் 1950 ஆம்ஆண்டு

கோயம்புத்தூரில் நடைபெற்ற முத்தமிழ் மாநாட்டில் 'அழகின் சிரிப்பு' என்ற தலைப்பில் ஒரு கவிதை இயற்றி, அக்கவிதை முதற்பரிசுக்குரியதெனப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசனாரால் தேர்ந்தெடுக்கப் பெற்ற சிறப்பினைப் பெற்றார்.

1966ஆம் ஆண்டில் "முடியரசன் கவிதைகள்" என்ற நூலும், 1973 ஆம் ஆண்டில் "வீர காவியம்" என்ற நூலும் தமிழ் நாட்டரசின் பரிசினைப் பெற்றன. தனிச் சிறப்பிற் குரிய பாடல்கள் என இவர் தம் சில கவிதைகள் தேர்ந்தெடுக்கப் பெற்று அப்பாடல்கள் சாகித்திய அகாதெமியினரால் இந்தியிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. 1966ஆம் ஆண்டில் இவர் திருவண்ணாமலை குன்றக்குடி ஆதீனத்தார் நடத்திய பாரி விழாவில் தவத்திரு குன்றக்குடி அடிகளா ரால் 'கவியரசு' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்றார்.

பல்வேறு சிறப்புக்களைப் பெற்றுத் தம் மணிவிழா வினையும் கொண்டாடி முடித்து 'என்றும் நானோர் இளைஞன்' என்னும் உணர்வுடன் வாழ்ந்தவர். கவிஞர். முன்னாள் மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரும், தமிழகப் புலவர்குழுவின் தலைவரும், பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்களின் தலைமாணக்கருமான டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க "ஊன்றுகோல்" என்ற இக் காப்பியத்தைக் கவிஞர் முடியரசன் கவின்பெறப் புனைந் துள்ளார். பண்டிதமணி அவர்களின் வாழ்க்கை வரலாற் றினை வகைபட விரித்துரைக்கும் நோக்கில் அமைந்துள்ள இக் காப்பியம் பண்டிதமணியின் இயல்புகளையும்,

இலக்கியச் சுவை தேரும் நெஞ்சப் பாங்கினையும், நூல் இயற்றும் ஆற்றலையும், அவர்தம் நுண்மாண் நுழைபுலச் சிறப்பினையும், தமிழ்த் தொண்டினையும், சன்மார்க்க சபை கண்ட திறலினையும் திறம்பட விளக்கி நிற்கின்றது எனலாம்.

## நூல் அமைப்பு

இந்நூல் 'கதிரெழு காதை' தொடங்கி, 'சிலைகாண் காதை' வரை பதினேழு காதைகளை : உள்ளடக்கியதாகத் திகழ்கின்றது. நேரிசை ஆசிரியப்பா, நிலைமண்டில ஆசிரியப்பா, நாற்சீர் விருத்தம், அறுசீர் விருத்தம், எழுசீர் விருத்தம், எண்சீர்விருத்தம் கலிவெண்பா, கட்டளைக் கலித்துறைமுதலிய பாவும் பா வகைகளும் பெற்று மொத்தம் இக்காப்பியத்தில் 2022 செய்யுட்கள் அமைந்துள்ளன.

## நூற்பெயர் காரணம்

பண்டிதமணி கையகத்தே எப்பொழுதும் விளங்கி, அன்னாரது இயக்கத்திற்குத் துணை நின்ற அரிய ஊன்று கோலினையே காப்பியப் பெயராகக் கொண்டமை இதற்கொரு தனிச்சிறப்பாகும், 'ஊன்றுகோல் உதவுவதாவது தளர்ந்துழி அதனை நீக்குதல்' எனப் பரிமேலழகர் விளக்குவார். தமிழுக்குத் தளர்வு வராது எழுத்து, பேச்சுச் செம்மைகளை வற்புறுத்தி அம்மொழி வளர்ச்சிக்கு ஓர் ஊன்றுகோலென விளங்கியமையாலும், எப்பொழுதும் செவ்விய பேரரசின் வையகத்தே விளங்கி அவர்தம் நடுவு நிலை, நல்லாட்சிகளை விளக்கிநின்ற செங்கோல் போலக் கதிரேசர் கையில் விளங்கியமையாலும் இக் காப்பியம் அச்சொல்லாட்சியில் அக்கறை காட்டிப் பலவிடத்தும் நன்கு புனைகின்றது.

கவிஞரின் கருத்துப்படி கதிரேசற்கு ஏற்பட்டது காற்குறை'யேயாகும் (1:22). கதிரேசர் கையகத்தே கண்ட ஊன்றுகோல் கதிர்காமத்துக் கடவுள் கதிரேசன் கையில் தண்டுகொண்டு (தண்டாயுதம்) நிற்பது போல இருந்ததைப் பகுத்தறிவு நெறிப்பட்ட பண்பாளராம் முடியரசர் சொல்லாமற் சொல்கின்றார்

ஊன்றுகோல் ஒன்று பற்றி
உரத்துடன் நிமிர்ந்து நின்றான்
சான்றவர் போற்று மாறு
தண்டுகொண் டங்கு நின்றான் (2:18)

இளம்பிள்ளை வாதத்தால் பண்டிதமணியாரின் 'நவையுறு கால்கள் எங்கும் நடந்திட இயவில்லை' என்றாலும் அன்னாரின் 'குவிதரும் புகழோயாண்டும் குலவிட நடந்த தங்கே' என்கிறார் கவிஞர். (2 : 25)

இவ்வாறு டாக்டர் தமிழண்ணல் அவர்கள் தம் 'தமிழ்க்கதிர்' உரையில் விளம்புவர்.

## நூல் நுவலும் செய்திகள்

### 1. கதிரெழுகாதை

முதலாவது 'கதிரெழு காதை' இக்காதையில் பண்டிதமணி கதிரேசனாரின் பிறப்புப் பற்றிய செய்திகளைக் காணலாம்.

'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற பாட்டெழுந்தது பூங்குன்றமாகும். சங்ககாலப் பூங்குன்றமே இன்றைய மகிபாலன் பட்டி என்பர். இதனைக் கவியரசு முடியரசனார் கிளத்தும் பாங்கு உள்ளத்தை நெகிழ்விப்பதாகும்.

யாதும் ஊரே யாகும்
யாவருங் கேளிர் என்னும்
கோதிலாக் கொள்கை முற்றுங்
குறித்திடும் பாடலொன்றை

ஓதுவார் உள்ள மெல்லாம்
உவந்துவந் தேத்தும் வண்ணம்
ஓதினான் கணியன் என்னும்
ஒப்பிலாச் சங்கச் சான்றோன் (2)

விரிமனக்கொள்கை யெல்லாம்
விரித்திடுஞ் சங்கப் பாட்டுக்
குரியவன் கணியன் என்னும்
ஒருதனிப் புலவ னான

குரிசிலை உலகம் போற்றக்
கொடுத்தது தமிழ்ப்பூங் குன்றம்
சிறியதே எனினும் மிக்க
சிறப்பினாற் பெரிய தாகும் (3)

*மகிபாலன் பட்டியில் முத்துக் கருப்பன்-சிவப்பியார் பெற்ற ஆண் மகனே நம் கதிரேசர். 'விசு பிரட்டாசித் திங்கள் வெள்ளியாம் இரண்டாம் நாளில் பசுபதிக்குரிய தென்று பகரும் ஆதிரை நன்னாளில்' கதிரேசர் தோன்றி னார். கதிரொளி தரும் பிள்ளைக்குக் கதிரேசன் என்னும் பேரிடப்பட்டது. மூன்று வயது நடக்கும்போது இவருக்கு இளம்பிள்ளைவாதம் என்னும் நோய் வந்தது. இதனாற் பெற்றோர் பெரிதும் கவன்றனர்.*

## 2. கலைபயில் காதை

*திண்ணைப் பள்ளிக்கூடப் படிப்பே அந்நாளைய படிப்பு. எண்ணையும் எழுத்தையும் மண்ணிலும் ஓலைச்*

சுவடியிலும் எழுதிப் படிப்பதுதான் அந்நாளைய கல்வி முறை. விடியுமுன் விழிகள் விழித்து எழுந்து மலர் விரல் கொண்டு மண்ணில் வடிவுற எழுதிக் காட்டியும் அலர் சிறுவாயால் ஓதியும் சின்னஞ்சிறார் கல்விகற்றனர். 'எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்' என்று நடை முறையில் கற்பித்த ஆசிரியரைத் தொழும் தெய்வமாக எண்ணி வாழ்ந்தனர் கல்வி பயிலும் சிறார்கள். திண்ணைப் பள்ளியில் நெடுங்கணக்கைக் கற்ற கதிரேசர் ஆத்திசூடி, உலகநீதி முதலான நீதி நூல்களையும் இளமையிலேயே கற்றார். 'இளமையிற் கல்வி சிலையில் எழுத்தன்றோ!' தமிழ் மொழி, வடமொழி ஆகிய இருமொழி கற்று வல்ல வரானார்.

ஏழே ஏழு மாதங்களில் கல்விச் சிறப்பைக் கண்டவ ராய்த் துலங்கினார் கதிரேசர்.

பள்ளியில் ஏழு திங்கள்
    பயில்கதி ரேசப் பிள்ளை
தெள்ளிய மதிய ராகித்
    தேர்ந்தநற் புலவராகி

அள்ளிய புகழாம் செல்வம்
    அளப்பில பெற்றான் என்றால்
உள்ளளவும் படுமோ அந்த
    ஓய்விலா உழைப்பை அம்மா (7)

இருமொழி வல்ல ரானார்
    இனியசொல் வல்ல ரானார்
உரைசெய உரிய ரானார்
    உயர்கவி தருவ ரானார்

பொருள்நயம் தெரிய லானார்
புகழும்நாள் வரைய லானார்
வருமிவை திங்கள் ஏழில்
எவ்வணம் வாய்த்த தம்மா! (8)

இவ்வாறு தொடக்கக் கல்வி பயின்ற கதிரேசனாரைச் செட்டிநாட்டு வணிகர் மரபுப்படி இலங்கையில் அமைந் திருந்த கடைக்குக் கணக்கெழுதவும், வணிகத்தைக் கற்றுக் கொள்ளவும் இவரின் தந்தை அனுப்பிவைத்தார். துணிக் கடையில் துணியளந்து கொடுத்து விற்கும் வாணிகத்தினை மேற்கொண்டார் கதிரேசர்; மூன்றாண்டுகள் இவ்வாறு கழிந்தன. தந்தை மறைந்தார் என்னும் செய்தி கேட்டுத் தாய்நாடு விரைந்தார்; மீண்டும் இவருக்குப் பக்கவாத நோய் பற்றிக்கொண்டது. இதனால் வற்றிய கால் வந்து வாய்த்தது. ஊன்றுகோல் ஒன்று கொண்டு நடந்தார். கம்ப ராமாயணத்தைத் தாமே படித்துத் தேர்ந்தார். அரசஞ் சண்முகனாரிடம் தொல்காப்பியம் கற்றார். தருவை நாராயண சாத்திரியாரிடம் ஐந்தாண்டுகள் வடமொழி கற்றார். இப்பெற்றியினைப் பின்வருமாறு உரைப்பார் கவியரசு முடியரசனார்:

அறிவினை வளர்க்க வேண்டி
அயன்மொழி ஒன்றைக் கற்றார்
செறிதரும் அறிவைக் கொண்டு
செந்தமிழ் பேணி நின்றார்

நெறிதடு மாற வில்லை
நெடும்புகழ்த் தமிழை என்றும்
குறைபடப் பேச வில்லை
குலக்கதி ரேசர் மாதோ (39)

## 3, சபை காண் காதை

பண்டிதமணி கதிரேசனார் அவர்களின் தலையாய தொண்டு மேலைச் சிவபுரியில் சன்மார்க்க சபை நிறுவியதாகும். வளமாக வாழ்ந்து வரையாது கொடுத்து வாழும் குடும்பம் வ. பழ. சா பழநியப்பர் குடும்பமாகும். அவர் தம்பி அண்ணாமலையார், தம் அண்ணாவின் பண்புகளுக்கேற்ற தம்பி. சைவத்தையும் செந்தமிழையும் சிறக்க ஓம்பிய குடும்பத்தினரான இவர்கள் மேலைச் சிவபுரியில் கணேசர் செந்தமிழ்க் கல்லூரியும், செந்தமிழ் நிலையமும், சன்மார்க்கச் சபையும் பண்டித மணியின் தூண்டுதலாலே கண்டார்கள். சன்மார்க்க சபையில், அதன் ஆண்டு விழாக் கூட்டங்களில் கலந்து கொள்ளாத தமிழறிஞர்கள் இலர்.

## 4. மணம்புணர் காதை

கதிரேசனாரின் கால் ஊனமும், நிதி நிலைமை சரியில்லாத நிலையும் அவருக்குத் திருமணப் பேறு முப்பது வயது கடந்தும் வாய்க்காமல் தள்ளிப் போட்டு வந்தன. பதின்மூன்று வயதிற்குள் திருமணத்தை நடத்திவிடும் தனவணிகர் மரபில் கதிரேசனார்க்கு முப்பது வயது கடந்தும் திருமணமாகாத நிலைகண்டு கதிரேசனைப் பெற்ற தாய் மனம் வருந்தினார். பழநியப்பர் முன்வந்து ஈப்போக் கடையில் கதிரேசருக்குப் பங்கு தருவதாகச் சொல்லி அவர் பொருள் நிலையை வளப்படுத்தி, அவர் உறவில் மீனாட்சி என்னும் நங்கையைக் கைப்பிடிக்குமாறு செய்தார்.

கதிரேசனார்க்கு வாய்த்த மனைவி அரும் பண்புகள் வாய்ந்தவர். "கண்ணகியைக் கண்ணெதிரே கண்டதில்லை

கதிர்மணியார் வீட்டிற் கண்டோம்" என்று சொல்லும் அளவிற்கு அவர் குண நலம் கொண்டவராக விளங்கினார்.

அவர் தம் இனிய பண்புகளைக் கவியரசு உரைக்கும் பாங்கினைக் காண்போம்.

கொண்டான்றன் குறிப்புணர்ந்து நடந்தொழுகுங்
குலமகளாய்க் கூடி வந்து
கண்டாரை விருந்தோம்பிக் காக்கின்ற
கலைமகளாய் எவரை வீட்டிற்
கண்டாலும் பணிந்துரைத்துக் கனிந்தமொழி
தருமகளாய் எளிமை பூண்டு
கண்டாரும் தொழத்தக்க திருமகளாய்க்
கற்பரசி வாழ்ந்து வந்தார் (13)

## 5. நெறியுணர் காதை

கதிரேசனார் தம் காலைக் கடமைகளைக் கவியரசு முடியரசனார் கிளத்தும் பாங்கில் அவர் தம் வாழ்வின் ஏற்றமும் விளக்கமும் தெரிய வருகின்றன

போராடிச் செங்கதிரோன் தோன்று முன்னர்ப்
புலர்காலைப் பொழுதத்துக் கடமை யாற்றி
நீராடி வெள்ளியமெல் லாடை பூண்டு
நீருடி மலரடியை நினைந்து, நெற்றி
நீராடி மெய்யெல்லாம் பொலிந்தி ருக்க,
நிறைமொழிகள் சிலசொல்லி வணங்கிப் பின்னர்
யாரோடும் உரையாடல் முதலாம் செய்கை
யாவையுமே செய்துவரல் அவர்வ ழக்கம் (1)

காலையில் தேவாரம் ஓதுவார்; நாவாரப் பாடுவார். திருவாசகத்தில் தோய்வார். இதனை நயம்படக் கிளத்தும் பாடல் வருமாறு:

வான்கலந்த மாணிக்க வாச கர்தாம்
வாய்மலர்ந்து பொழிந்ததிரு வாசகத்தைத்
தாங்கலந்து பாடுங்காற் செங்கரும்பின்
செழுஞ்சாறு வடித்தெடுத்துக் குறிஞ்சி தந்த

தேன்கலந்து பால்கலந்து முற்றி நின்ற
தீங்கனியின் சுவைகலந்து பிறந்து வந்த
ஊன்கலந்தும் உயிர்கலந்தும் பருகுங் காலை
உவட்டாமல் இனிப்பதுபோல் இன்பங் காண்பார் (12)

## 6, மயக்குருக் காதை

'காற்றும் வெளிச்சமும் கலந்து விரவும் கீற்றுக் கொட்டகைக் கீழமர்ந்திருந்து பயிலுதல் எழுதுதல்' பண்டித மணியின் வழக்கமாகும். ஒருநாள், தம்மேனியில் திருநீறு துதையப்பூசி, உருத்திராக்க வடம் கழுத்தில் சுற்றி, பருத்துயர் மேனியர் ஒருவர் பக்தர் எனும் வேடம் பூண்டு 'முருகா முருகா' என்று உருகும் வாயராய்ப் பண்டித மணியிடம் வந்தார். பணம் பெறத் திட்ட மிட்டுத் தணிகை முருகன் ஆணைவழியே தாம் அவரிடம் வந்ததாக அறிவித்தார். முருகனுக்கு ஆலயம் எடுக்க அவாவுற்றதாக அறைந்தனர். ஐயாயிரம் ரூபாய் இரந்து நின்றனர்.

இதுகேட்ட கதிரேசரோ அப்போலித் துறவிக்கு ஒரு பாடம் கற்பிக்க எண்ணினார். எத்தனையோ முருக அடியார்கள் இருக்க, அவரிடம் மட்டும் ஆண்டவன் கொண்ட கருணையை நினைத்து உருகுவதாகச் சொன்னார். பின், 'உங்கள் கனவில் வந்த முருகன் எளி யேன் கனவிலும் வாராதிருப்பானோ' என்று கூறி இன்று இரவுக் கனவில் அவன் வந்து கட்டளையிட்ட பிறகு மறு நாள் விடியலில் ஆவன செய்வதாக மறுமொழி பகர்ந்தார்

மறுநாள் அப்போலித் துறவியிடம் கதிரேசர், "ஐயா! முருகன் என் கனவில் நேற்றிரவு வந்தான். என்னிடம் பணமில்லை என்பதை அவன் அறிவான். ஆதலின் பணம் இருக்குமிடத்தையும் சொல்லிவிட்டுச் சென்றான். அவ்விடத்தைத் தோண்டிப் பார்த்தால் புதையல் கிடைக்கும்" என்று சொல்லி நின்றார். உடனே போலித் துறவி அவ்வாறு தோண்டும் குழியில் புதையல் கிடைக்காது போய்விடின் என்ன செய்வது என இயம்பினான். உடனே பண்டிதமணியவர்கள், "அந்தக் குழியில் புதையல் கிடைக்கவில்லையெனில் அறுமுகனுக்கு ஆலயம் கட்ட வேண்டுமென்று அரும் பொருள் கேட்டு வந்த அடியாரையே அச்சமாதிக் குழியில் இறக்கினால் அவர் சீவன் முக்தராகி விடுவார், அதன் மேல் ஒரு கோவில் கட்டி நினது கையால் நித்திய பூசனையும் நீயே ஆற்றி வருக எனப் பணித்தனன். எனவே நீங்களும் அறுமுக வொருவன் என் கனவினில் இட்ட கட்டளையை நிறை வேற்றுவதற்குத் தாமதிக்காது உதவுதல் வேண்டும்; எனவே மாலைப்பொழுது வந்தருள்க" என்று வேண்டி நின்றார். இதனைக் கேட்டவுடனே போலிச்சாமி எழுந்து நடந்தார். "மாலை வந்தது; மாதவர் வந்திலர். கந்தன் பெயரால் கயிறு திரித்தவர் அந்தர்த் தியானம் ஆகினர்."

## 7 வழக்காடு காதை

வீரகவி என்பார் செட்டிநாட்டில் அந்நாளில் வாழ்ந்த மிடுக்கான கவியாவார். அவர் தன்னைப் போலக்கவிஞர் நாட்டில் எங்குத் தேடினும் கிடைக்கப் பெறார் எனக் கூறித் தருக்கி நின்றார். அவர் செருக்கைப் பண்டித மணியார் தக்க வகையில் தம் தமிழ்ப் புலமை காட்டி அடக்கினார். தம் வருவாய் பண்டிதமணியால் குறைந்தது எனக் கூறி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

வீரகவி தொடர்ந்த அம்மான நட்ட வழக்கில் பண்டித மணியார் தரப்பில் வாதாட 'நற்றமிழில் வல்லவராய் வழக்குரைக்கும் நாவலராய்ச் சிங்கம் என்று பற்றுடனே சொல நிற்கும்' பசுமலை சோமசுந்தர பாரதியார்; வழக்காடி வீரகவி இட்ட வழக்கைத் தள்ளுபடி செய்யச் செய்தார். அன்று முதல் பசுமலையார் பண்டிதமணியின் நண்பரானார். வீரகவியார் பகைவரானார்.

## 8 சொல்வல்ல காதை

இக்காதையில் பண்டிதமணியின் தமிழ்ப்புலமையும் நயம் காணும் மதிநுட்பமும் கூறப்படுகின்றன.

**பொன்விசிறி மடிப்பொன்று தோளின்மீது**
**புரண்டிருக்கும்; வடமொழியும் பயின்றா ரேனும்**
**மின்முகிலிற் மொழியுங்கால் அயன்மொழிச் சொல்**
**மேவாத தமிழிருக்கும்; பிறர்க ருத்தை**

**முன்னியல்பின் எள்ளலொடு மறுக்குங்காலை**
**முனைமுழுங்காக் கூர்ப்பிருக்கும் இனித மர்ந்து**
**நன்மணியார் நிற்காது பேசு கின்ற**
**நாவன்மை கண்டுலகம் போற்றி நிற்கும்** (7)

இசை வளர்க்கும் மாநாடுகள், சமய மாநாடுகள், தமிழ் வளர்க்கும் மாநாடுகள், சங்க நூல் நலங்காணும் மாநாடுகள், கடல் கடந்து வாழும் கன்னித் தமிழர் மாநாடுகள், இசை மாநாடுகள் ஆகிய அனைத்து மாநாடுகளுக்கும் இவரே தலைமை தாங்கிச் சிறப்புற நடத்திக் கொடுத்தார். அவர் சொற்பொழிவின் திறம் பின்வருமாறு அமைந்திருந்ததென முடியரசனார் முழங்குகின்றார்.

பழையதமிழ் நூலெனினும் சமயம் பற்றிப்
பகர்கின்ற நூலெனினும் எதுவென்றாலும்
பிழையறவுந் தெளிவுறவும் அவையோர் உள்ளம்
பீடுறவும் பதிவுறவும் தேர்ந்த சொல்லின்
மழைபொழிவார்; நெடுநேரம் நனைந்தி ருப்போர்
மனத்தகத்துச் சலிப்பொன்றும் தோன்றா வண்ணம்
நுழைபுலத்தால் நகைச்சுவையும் குழைத்தெ டுத்து
நுவன்றிடுவார்; அஃதில்லாப் பேச்சே யில்லை (27)

## 9 நட்பு வளர் கதை

இலக்கணக் கடலைக் கரை கண்டவர் சோழவந்தான் அரசஞ் சண்முகனார் ஆவர். திருக்குறளுக்கு விருத்தியுரை கண்டவரும் அவர். அத்தகு நல்லாரோடு இவர் நட்புப் பூண்டார். இவர்கள் இருவரிடையேயும் நட்பு மலர்ந்ததே ஓர் அரிய நிகழ்ச்சியாகும். ஒருநாள் மருத்துவமனை யொன்றிற்குப் பண்டிதமணியார் மருத்துவரை நாடிச் சென்றிருந்தார். அப்போது மருத்துவர் வெளியே சென் றிருந்தார். பொலிவற்ற குடுமியும் சட்டையணியா உடம்பும் கொண்டு வாடிய மேனியராயிருந்த ஒருவரை அங்குப் பார்த்து, அவர் மருத்துவமனையின் ஏவலாளாக இருப்பர் எனப் பண்டிதமணியார் கருதிக் 'குடிநீர் கொஞ்சம் கொணர்க' என்றனர். அவரும் கொண்டு வந்து தந்தார். பின்னர்ப் பண்டிதமணிக்குப் பசி வந்துற்றது. மீண்டும் ஏவலராகத் தெரிந்தவரைப் பார்த்து 'உண்டி வாங்கித் தரலும் ஒல்லுமோ?' எனக் கேட்டார். அவரும் உடன் வாங்கிவந்து தந்தார். இந்நேரம் மருத்து வரும் வந்தார். 'பொருத்தம் பொருத்தம் புலவர் தொடர்பு. இருவரையும் யான் அறிமுகம் செய்ய எண்ணினேம். இவரே சோழ வந்தான் அரசஞ் சண்முகனார்' என்றனர் மருத்துவர். பணியுமாம் என்றும்

பெருமை' என்னும் திருக்குறள்வாக்கிற்கு ஒள்ளிய உருவாக இருந்த பண்டிதமணி அரசஞ்சண்முகனாரைக் கண்டு, அவர் நட்பைப் பெற்று மகிழ்ந்தார்.

எளிமைக்கோர் இலக்கியமாய் மக்கள் தொண்டிற் கோர் இலக்கணமாய்க் குன்றக்குடியில் வாழும் தமிழ்த் துறவி குன்றக்குடி அடிகளாரோடு நேயம் பூண்டார்; திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகளோடு தொடர் கொண்டார்; தமிழ்த்தென்றல் திரு வி.க. பண்டிதமணி யாரின் உற்ற நண்பரானார்; பண்டிதமணி, தனித் தமிழ் இயக்கங்கண்ட மறைமலையடிகளாரைத் தழுவிக் கொண் டார்; யாழ் நூல் தந்த இலங்கைத் துறவியார் விபுலானந் தரின் அரிய நட்புச் செல்வத்தை நயந்து பெற்றார்; தொல்காப்பியக் கடல் கந்தசாமியார் இவர்தம் உற்ற தோழரானார்; உரை வகுப்பதில் புலமை சிறந்த நடுக்காவேரி மு. வேங்கடசாமி நாட்டாரின் தொடர்பு கிடைத்தது. நாவலர் கணக்காயர் சோமசுந்தர பாரதியார் தமிழவேள் உமாமகேசுவரம் பிள்ளை, கவிமணி தேசிக விநாயகம்பிள்ளை, சேது சமத்தானப் புலவர் ரா. ராகவையங்கார், தாகூர் சட்ட விரிவுரையாளர் அறிஞர் கா.சு பிள்ளை, இரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் முதலியோர் இவர்தம் நண்பர்களானார்கள்.

## 10 பேராசிரியக் காதை

திருவேட்களம் என்னும் பதியையடுத்து அண்ணா மலை அரசர் கண்ட கல்விக் கழகமாம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் இவர் பன்னிரண்டு ஆண்டுகள் தமிழாசிரியர் பணியாற்றினார். டாக்டர் அ. சிதம்பரநாதர், இலங்கை இலக்குமண ஐயர், டாக்டர் வ.சுப.மாணிக்கனார் முதலானோர் இவர்தம் தலைமாணாக்

கரிகளாவரி: இவர் பேராசிரியராக வீற்றிருந்த சிறப்பு,

ஆங்கிலங் காற்றோர் தாமே
அமர்வதற் குரிய ரென்ற
பாங்கினில் ஒழுகும் நாட்டில்
பைந்தமிழ் தேர்ந்த செம்மல்
ஓங்குபே ராசா னாகி
உயர்பெரும் பொறுப்பைத் தாங்கி
ஈங்கினி தாட்சி செய்தார்
இணையிலை எனும் மாறே

என்னும் பாடலால் துலக்கமுறும்.

## 11 பொதுப்பணிபுரி காதை

இசைத்தமிழ் வளர்ச்சிக்கும் பண்டிதமணி அளப்பரிய பணி ஆற்றினார்; அண்ணாமலைநகரில் மணிவாசக மன்றம் கண்டு வியாழன் தோறும் பாட்டின் நலம் பரிந்துரைக்கும் பணி மேற்கொண்டார். கொப்பனாபட்டியில் மெய்யப்பர் உதவியால் கலைமகள் கல்லூரி கண்டார். மகிபாலன் பட்டிக்கு நல்ல சாலை வசதி கிடைக்குமாறு பார்த்துக்கொண்டார். அஞ்சலகம் ஒன்று செயலாற்ற ஆக்கம் தேடினார். பேருந்து வசதிகள் அச்சிற்றூர்க்குக் கிடைக்க வழி வகுத்தார்.

## 12 விருதுபெறு காதை

கதிரேசனாருக்கு மேலைச்சிவபுரி சன்மார்க்க சபையினர் 'பண்டிதமணி' என்னும் பட்டம் தந்து பாராட்டினர். சென்னையில் நடைபெற்ற ஒரு மாநாட்டில் 'முதுபெரும் புலவர்' என்னும் பட்டம் இவருக்கு வழங்கப்பட்டது. திருவண்ணாமலைத் திருமடம் 'சைவ சித்தாந்த

வித்தகர்' என்னும் பட்டத்தை அவர் தகுதியறிந்து தந்தது. ஆங்கில அரசாங்கம் 'இராவ் சாகிப்' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பிக்க எண்ணியது. அதனை வாங்க மறுத்த பெருமித உள்ளம் கதிரேசனாருடைய தாகும். கல்வித்துறையில் வல்லவர் தமக்கு வழங்கப்படும் 'மகாமகோபாத்தியாய' என்னும் விருது அண்ணாமலை அரசரின் அரிய முயற்சியாலும் அவர் மகனார் முத்தைய வேள் அவர்களின் முயற்சியாலும் கிடைத்தது.

விருதுகள் இவர்க்கு மேன்மைகள் தந்தன. இவரால் விருதுகள் ஏற்றமும் பெற்றன, தான் சிறிதாயினும் தக்கார் கைப்படுமேல் வான்சிறி தாக வளர்ந்திடும் அன்றோ.

## 13 நூல் தரு காதை

'மிருச்சகடிகம்' என்னும் வடமொழி நூலினை அழகுத் தமிழில் 'மண்ணியல் சிறுதேர்' என இவர் மொழி பெயர்த்தனர். சுக்கிரநீதி, சுலோசனை, உதயண சரிதம், மாலதி மாதவம் முதலான நூல்களையும் யாத்தார். திருவாசகக் கதிர்மணி விளக்கம் என்னும் இவர் நூல், இவர்தம் நுண்மாண் நுழைபுலம் காட்டும்.

## 14 மணிவிழாக் காதை

மகிபாலன்பட்டி அணிசெய்யப் பெற்றது

மாவிலைத் தோர ணங்கள்
வயங்குறக் கட்டு வித்தார்
பூவினிற் சரங்கள் கட்டிப்
புதுமணம் பரவவிட்டார்

வாவியிற் பூத்து நிற்கும்
மலர்களும் கொணர்ந்து வைத்தார்;
காவெனக் குளிர்ந்து தோன்றக்
கடிநகர் கோலஞ் செய்தார் (3)

அண்ணாமலை அரசரின் தலைமையில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் படைத்த மணிவிழா மலர் வெளியிடப் பெற்றது. அறிஞர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார். நாவலர் சோமசுந்தர பாரதியார், கரந்தை நீ கந்தசாமிப் பிள்ளை முதலான தமிழ் அறிஞர்கள் கலந்துகொண்டு பண்டிதமணியின் மணிவிழாவினை மாண்புறநடாத்தினர்.

## 15 பிணியுறு காதை

பண்டிதமணியார் நோய்வாய்ப்பட்டுக் கிடந்த நிலையினை முடியரசனார் கிளத்தும் போக்கும் நம் நெஞ்சை நெகிழ்விப்பதாயுளது.

பாட்டுக்குள் நயமுரைத்து மகிழ வைத்த
பண்பட்ட செந்நாவில், தமிழ்மு ழக்கம்
கேட்பிக்கும் மணிநாவில், புலம்பல் ஓசை
கேட்டதனால் மனமுருகிக் கண்ணீர் சிந்தி
நாட்டுங்கற் சிலையானோம் சிறிது நேரம்
நாவசைய விலைஎமக்குப் பின்னர்த் தேறி
ஏட்டுக்குள் எடங்காத துயரம் மாற
இயன்றவரை முருகப்பர்·எடுத்து ரைத்தார் (7)

குன்றக்குடி அடிகளார் பண்டிதமணியாரை வந்து பார்த்து ஆறுதல் கூறிப் போந்தார்.

## 16 கதிர்மறை காதை

பண்டிதமணியின் இறுதி வந்துற்றது. தரையில் பாய் விரித்துப் படுத்தவர் விழித்திலர். 'விரித்துரை நல்குவோர்

*விரித்திலரீ ஒரு சொல்' என்றபடி, கதிரவன் மறையப் பின் யாண்டும் அழுகுரல் எழுந்தது.*

சிந்தித்துச் சிந்தித்து வாழ்நா ளெல்லாம்
செயலாற்றி வந்ததமிழ் பெரியார் எங்கே?
சிந்தித்துக் கண்டவற்றை நிரல்ப டுத்துச்
செவிகுளிரத் தந்தபேர றிஞர் எங்கே?

புந்திக்குள் இருளகற்றி ஒளியும் நல்கிப்
பொலிந்திருந்த கதிரெங்கே? எங்கே? என்று
சந்தித்த புலவரெலாம் கண்ணீர் சிந்தித்
தாளாத துயரத்தில் மூழ்கி நின்றார் (3)

## 17 சிலைகாண் காதை

*கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் பண்டிதமணி யாரின் சிலையைப் பாங்குடனே திறந்து வைத்து அவர்தம் விரிவான தமிழ்த் தொண்டினை விளங்கப்பாராட்டினார்.*

பண்படும் ஒழுக்கம் மிக்கோர்
பகர்தரும் வாய்ச்சொல் யாவும்
ஒண்டமிழ் மாந்தர்க் கென்றும்
ஊன்றுகோ லாகுங் கண்டீர்
பண்டித மணியார் தந்த
பயன்தரும் ஊன்று கோலைக்
கொண்டுளந் தளரா வண்ணம்
கூடியே நடப்போர் வாரீர்! (17)

## காப்பிய நலன்கள்

*பண்டிதமணி மகாமகோபாத்தியாய மு. கதிரே சனாரின் வாழ்க்கை வரலாற்றினைக் கவியரசு முடியரசனார் காப்பியமாகப் புனைந்துள்ளார். பதினேழு*

காதைகளும் 2022 பாடல்களும் கொண்ட இக்காப்பியம், அமைந்திருக்க வேண்டிய பல்வேறு நலங்களும் வீறுடன் பெற்று விளங்கக் காணலாம்.

"பெருங்காப்பியப் பண்புகள் பல நிறைந்த சிறுகாப்பியம் இது. கதிரெழு காதை முதலாகச்சிலைகாண் காதை ஈறாகப் பதினேழு காதைகளையுடையது. அறுசீர், எழுசீர், எண்சீர் விருத்தங்களையும், கட்டளைக் கலித்துறை, கொச்சகக் கலியினையும் கொண்டு, இடையிடையிருந்த நிலை மண்டில நேரிசையாசிரியங்களுடன் யாக்கப் பெற்றது" என்று டாக்டர் தமிழண்ணல் இந்நூலினைப் பாராட்டுவர். மேலும் அவர் "வாழ்க்கை வரலாற்றைப் புனைவுமிகுதியின்றி அவ்வாறே காப்பியமாக எழுத முடியும் என்பதற்கு இஃது ஒரு தக்கசான்றாகத் திகழ்கிறது. செம்பாதிக்கு மேல் படித்துக்கொண்டே செல்லும் பொழுது, உரைநடை வரலாறொன்றுக்குக் கொடுக்கப் பட்ட செய்யுள் வடிவமோ என்ற நினைவு எழுகிறது. எனினும் நடையோட்டமும் கருத்துச் செறிவும் தடைபடாக் குருதியோட்டம்போல் காப்பியத்தை உயிர்ப்புடையதாக்குகிறது" என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## காப்பியத்தின் தலைப்புப் பொருந்தும்

பண்டிதமணியவர்கள் இளமையிலேயே பக்கவாத நோய்க்கு ஆளானார்கள். அதனால் கால்கள் விளக்கமில்லாமற் போயின. உடலுறுப்புகளில் ஒன்று ஒருவர்க்குக் குறைபட்டிருக்குமானால் மூளையாற்றல் மிகுதியாக இருக்கும் என்பர். அந்த முறையில் இவர் அறிஞர்போற்ற நடைகொண்டு வாழ்ந்தார். நடக்கும் நடைகுறைந்தாலும் ஒழுகும் நடையும், எழுதும் நடையும் சீரியதாகவே இலங்கின. இதனைக் காப்பிய ஆசிரியர்,

**ஊன்றுகோல் ஒன்று பற்றி**
**உரத்துடன் நிமிர்ந்து நின்றான்**
**சான்றவர் போற்று மாறு**
**தண்டுகொண் டங்கு நின்றான்** (2:18)

*என்று நயமுடன் குறிப்பிடுவர் மேலும் கவியரசு முடியரசனார்,*

**பொறியின்மை கண்டு நெஞ்சம்**
**புழுங்கிலர் நாளும் நாளும்**
**அளவறிந் தொழுகல் வேண்டி**
**ஆள்வினை உடைய ராகி**
**நெறியிலே நடந்து வந்தார்**

*என்றும் குறிப்பிடுகின்றார்.* (2:26)

*'ஊன்றுகோல்' என்ற சொல்லை இரண்டாவதாகக் காப்பியத்தில் கவியரசு வைத்துள்ள இடம் வருமாறு:*

**ஓதிய ஆத்தி சூடி**
**ஊன்றுகோ லாகக் கொண்டே**
**நீதிநூற் படிகள் ஏறி**
**நெடியகாப் பியங்க ளென்னும்**
**வீதிசேர் ஊர்கள் சுற்றி**
**வீறுகொள் சங்கச் சான்றோர்**
**ஓதிய இலக் கியத்தின்**
**உலகெலாம் உலவி வந்தார்** (2:39)

*மூன்றாவதாக 'ஊன்றுகோல்' இடம்பெற்றுள்ள இடம் வருமாறு:*

**எமக்கெல்லாந் தமிழமுதை ஊட்டி யூட்டி**
**எமதறிவை வளர்த்துநலந் தந்த தாயாம்**
**இமைக்குநிகர் எனநின்று தமிழைக் காக்கும்**
**இயல்புடைய நற்சபைக்கோர் ஊன்று கோலாய்த்**

தமக்குநிகர் இலாமணியாய் விளங்கி நிறைந்து
தழைத்துவரும் அருள்மனத்தர் பழநி யப்பர்
அமைத்தசபை இவருக்கோர் ஊன்று கோலாய்
அமைந்திருக்கத் தமிழ்பரவிச் செழிக்கக் கண்டோம்
(3:31)

நான்காவதாகக் கவியரசு ஊன்றுகோலைப் பின்வருமாறு காட்டுகின்றார் :

உறுப்பிணியாற் கால்தளர்ந்த கதிரேசர்
உளந்தளரார், ஊன்று கோலின்
பெருவலியால் நாடெங்கும் நடந்துலவித்
தமிழ்பரப்பி ஆதனைப் பேணாச்
சிறுசெயலால் தளர்ந்திருந்த தமிழ்மாந்தர்
செயலாற்ற ஊன்று கோலாய்
வருபவர்தாம் இவரென்று தெளியார்தம்
மகட்கொடைக்கு மறுத்து வந்தார் (4:5)

இறுதிக் காதையான 'சிலைகாண் காதை'யிலும் ஊன்றுகோல் தப்பாது இடம் பெறுகின்றது.

ஊன்றுகோல் கொண்டே யாண்டும்
உலவிநற் றமிழ்வ ளர்த்தார்
ஊன்றுநற் சிலையாய் நின்றார்
ஆயினும் உய்வு காண
ஊன்றுகோள் நமது ளத்தில்
ஒவ்வொன்றும் மணிக ளாகும்
ஊன்றி நாம் எண்ணியெண்ணி
உருப்பெற உழைத்தல் வேண்டும் (17:7)

இவ்வாறு "பண்டிதமணி கையகத்தே எப்பொழுதும் விளங்கி, அன்னாரது இயக்கத்திற்குத் துணைநின்ற அரிய ஊன்றுகோலினையே காப்பியப் பெயராகக் கொண்டு"

இந்நூல் திகழ்கின்றது. "தமிழுக்குத் தளர்வு வராது எழுத்து, பேச்சுச் செம்மைகளை வற்புறுத்தி அம்மொழி வளர்ச்சிக்கு ஓர் ஊன்றுகோலென விளங்கியமையாலும் இக்காப்பியம் அச்சொல்லாட்சியில் அக்கறை காட்டிப் பல விடத்தும் நன்கு புனைகிறது" என்று காப்பியத் தலைப்புப் பொருத்தத்தினைப் பாராட்டுவர் டாக்டர் தமிழண்ணல் அவர்கள்.

## காப்பியத் தொடக்கம்

காப்பியம் மங்கலச் சொல்லால் தொடங்கப்பெற வேண்டும் என்பர். தமிழின் முதற்காப்பியமாம் சிலப்பதி காரம் 'திங்கள்' என்ற மங்கலச் சொல்லால் தொடங்கு கின்றது. தொண்டர்சீர் பரவவல்ல சேக்கிழார் இயற்றி யருளிய பெரியபுராணம் 'உலகெலாம் உணர்ந்து' எனத் தொடங்குகின்றது. கம்பநாடர் இயற்றிய இராமாயணம் 'உலகம் யாவையும்' எனத் தொடங்குகின்றது. கவியரசு முடியரசனாரும் முன்னோர் சென்ற வழியில் முன்னோர் மொழி பொருளைப் பொன்னே போல் போற்றுவம் என்பதற்கேற்பத் தம் காப்பியத்தைப் பின் வருமாறு தொடங்குகின்றார்.

உலகெலாம் உய்ய வைக்கும்
உயரிய கொள்கை யாவும்
நிலவிய தொகையும் பாட்டும்
நிகழ்த்திய சங்கம் ஏறி
அலகிலாப் பெருமை பூண்டாள்
அன்னையாம் தமிழ ணங்கின்
மலருளாம் அடிகள் வாழ்த்தி
மகிழ்வுற மனத்துள் வைப்பாம்

## வருணனைச் சிறப்பு

இக்காப்பியம் எளிய இனிய வருணனைகள் பல கொண்டதாக அமைந்துள்ளது. தொடக்கம் முதல் இறுதி வரை ஆங்காங்கே நெஞ்சைக் கொள்ளை கொள்ளும் அழகிய வருணனைகள் இடம் பெற்றிருக்கக் காணலாம். இந்நூலின் உயர்தனிச் சிறப்பாக இவ்வருணனைச் சிறப்பினைக் கொள்ளலாம்.

மகிபாலன் பட்டியின் வருணனை மனங்கொளத் தக்கது. அதுவருமாறு :

வளரிளங் காடு சூழ்ந்து
  வனப்பிணிற் பொலிந்து தோன்றும்
அளறிடை விளைந்து நிற்கும்
  அணிவயல் அழகு கூட்டம்
களமர்கள் சென்று சென்று
  கடமைகள் ஆற்றி மீள்வர்
குளமெலாம் மீன்கள் துள்ளிக்
  குதித்திடுங் காட்சி யுண்டு (1.9)

புனல்தரு மணிமுத் தாறு
  புறத்தினிற் சூழ்ந்து நிற்கும்
இனமலர் பூக்குஞ் சோலை
  எழில்தரும் இயற்கைக் காட்சி
மனதில் அமைதி காட்டி
  மதிவளர் புலமை கூட்டும்
கனவுல கொன்று காட்டிக்
  கவிதையும் படைத்துக் காட்டும் (1.10)

பண்டிதமணியின் மணிவிழாவினையொட்டி மகிபாலன்பட்டி அழகு செய்யப் பெறுவதைப் பின்வரும்

பாடல்கள் மிகச் சிறப்பாக வருணனைப் போக்கிற் புல படுத்துகின்றன.

தெருவிடை மணல்ப ரப்பித்
தெள்ளிய நீர்தெளித்தும்
அரிசியிற் றிரித்த மாவால்
அணிபெறக் கோல மிட்டும்
வருபவர் உள்ள மெல்லாம்
மகிழ்வினிற் குளிரும் வண்ணம்
அரிவையர் கோலஞ் செய்ய
அழகினாற் பொலிந்த தவ்வூர் (14:1)

புதுக்கிய மனையின் வாயிற்
பூம்பொழிற் பந்த ரிட்டார்
மதிப்புறங் கமுகு வாழை
மரங்களும் குலைகள் தொங்க
எதிர்ப்புறங் கட்டு வித்தார்
இளந்தளிர்க் குருத்தெ டுத்துப்
புதுப்புது முறையாற் பின்னிப்
பொலிவுற நால விட்டார் (14:2)

மாவிலைத் தோர ணங்கள்
வயங்குறக் கட்டு வித்தார்
பூவினிற் சரங்கள் கட்டிப்
புதுமணம் பரவ விட்டார்
வாவியிற் பூத்து நிற்கும்
மலர்களும் கொணர்ந்து வைத்தார்
காவெனக் குளிர்ந்து தோன்றக்
கடிநகர் கோலஞ் செய்தார் (14:3)

## புலமை நயங்காட்டல்

தாம் புனையும் பாடல்களில் சிலேடை நயம், சொல்லாட்சிச் சிறப்பு முதலியன துலங்கும் வண்ணம் பார்த்துக் கொள்வதில் கவியரசு முடியரசனார் அவர்கள் முன் நிற்கின்றார் என்பதனைப் பின்வரும் பாடல்கள் கொண்டு தெளியலாம்.

மகிபாலன் பட்டியினை வருணிக்கும் கவிஞர் கூற்றை முதற்கண் காண்போம்.

குளங்களில் நிறையும் நீர்தான்
குறையினும் ஆங்கு வாழ்வோர்
உளங்களில் நிறையும் ஈரம்தான்
உருகுதல் என்றுங் காணார்
வளங்கனிற் சுருங்கு மேனும்
வழங்கலிற் சுருங்காக் கையர்
களங்களிற் பதர்க ளுண்டு
காளையர் மணிகள் போல்வார் (1:11)

நிழல்களே சாயும் அன்றி
நிலையினிற் சாயா நெஞ்சர்
கழனியில் வரம்பு செய்வர்
கற்பதில் வரம்பு செய்யார்
உழவினிற் களைகள் தோன்றும்
உறவினிற் சுளைகள் காணார்
அழல்களே சுடுவ தன்றி
அவர்மொழி சுடுவ தில்லை (1:12)

உழுகலங் குழிகள் செய்யும்
ஒருவர்மற் றொருவர்க் காகக்
குழியகழ் வினைகள் செய்யார்
கூடியே வாழ்ந்து நிற்பர்

புழுங்குதல் அரிசிக் கன்றிப்
புத்தியில் அதனைக் கொள்ளார்
பழகுதற் கினியர் அந்தப்
பகுதியில் வாழும் மாந்தர் (1:13)

குலவுவார் நடந்து செல்லக்
குறுவழி கொண்ட தேனும்
உலகுளார் நடந்து செல்ல
உயர்வழி பலவுஞ் சொல்லி
அலகிலாப் பெருமை பூண்ட
அரும்பெரும் பாடல் தந்து
நிலமெலாம் புகழ்வி ரித்து
நிலவுவ தவ்வூர் ஆகும் (1:14)

*பண்டிதமணி தமக்குத் தாமே படித்துக் கற்றவரான சிறப்புப் பின்வருமாறு நயம்படக் கிளத்தப்படுகின்றது.*

இனியநல் லார்வம் மிஞ்ச
இனுஞ்சில தேடிப் பெற்றான்
கனிவுடன் விளக்கிக் கூறிக்
கற்பிக்கும் ஆசானின்றித்
தனிமையில் அனைத்தும் கற்றுத்
தக்கதோர் புலமை பெற்றான்
தனிமொழி தமிழே யன்றோ
தனித்திருந் ததனைக் கற்றான் (2:23)

*இது போன்றே பண்டிதமணியின் கால்கள் எங்கும் நடக்காமல், அவர் ஈட்டிய புகழ் எங்கும் பெருமிதத்துடன் நடை பயின்றதைப் பின் வருமாறு நயம்பட முடியரசனார் விவரிக்கின்றார்.*

அரும்பிய புலமை யாற்றல்
அழகிய மொட்டும் ஆகி,
விரும்பிய போதும் ஆகி,
விளைந்திடும் நறவம் மாந்தச்
சுரும்பினம் மொய்க்கும் வண்ணம்
தூயநன் மலரும் ஆகி
விரிந்தது; மணமும் சற்றே
வீசிடத் தொடங்கிற் றங்கே (2:24)

கவர்மணம் நுகர்ந்த மாந்தர்
களித்தனர் புகழ்ந்து நின்றார்
அவனெனும் சொல்லை மாற்றி
அவரென அழைக்க லுற்றார்
நவையுறு கால்கள் எங்கும்
நடந்திட இயல வில்லை
குவிதரும் புகழோ யாண்டும்
குலவிட நடந்த தங்கே (2:25)

*ஈகைக் குறித்துக் கவிஞர் குறிப்பிடும் பாட்டிலும் நயம் நன்கியைந்து வருகின்றது.*

சொலக்கேட்டு விழியிமைகள் இமைப்பதில்லை
தூண்டுவதால் ஈகைமனம் பிறப்ப தில்லை
மலைக்காட்டில் திரிமயில்கள் தோகைதனை
வற்புறுத்திக் கூறுவதால் விரிப்ப தில்லை
மலைக்கோட்டு மாமுகிலும் பிறர் சொல்லை
மதித்தெழுந்து மழைநீரைப் பொழிவதில்லை
தலைக்கொள்ளும் இயல்புணர்வால் மனங்குளிர்ந்து
தானுவந்து வழங்குவதே ஈகை யாகும் (3:6)

*பண்டிதமணியின் ஒழுகலாறுகளைப் புலப்படுத்தும் பாடல்களில் கவியரசு முடியரசனாரின் நுண்மாண் நுழை*

புலமும், தடைபடாப் பாட்டோட்டமும் தெற்றெனப் புலனாகின்றன. சான்றுகள் வருமாறு:

கடையிரவு கழிந்தபின்னர் விழிம லர்ந்து
கனிவுதரும் வாசகத்தை விரித்து நெஞ்சில்
இடையறவு படாவகையில் ஓதிஓதி
இறைவனடி நினைந்துருகி மகிழ்ந்து பின்னர்
மடலெழுதும் மெய்யன்பர் மகிழு மாறு
மறவாமல் அவ்வவர்க்கும் ஏற்ற பாங்கில்
விடையெழுதும் இயல்பதனைக் கடமையாக
விடையுடையன் அடிபரவும் தொழும்பர் கொண்டார்
(5:10)

ஒருபாதி உமையவட்குத் தனது மெய்யில்
இடமளித்த ஒருவனடி உளத்திற் கொண்டார்
ஒருபாதி தமதுளத்திற் செந்த மிழுக்கும்
ஒருபாதி சிவநெறிக்கும் இடம ளித்தார்
இருவேறு மொழியுணர்ந்தும் உளத்திற் றோய்ந்த
இனியதமிழ் மொழியாலே தொழுது வந்தார்;
திருவாத வூரர்மொழி மூவர் ஓதும்
திருமொழிகள் இவர்நெஞ்சை யுருக்கி நிற்கும் (5:11)

## செட்டி நாட்டுப் பெருமக்கள் பண்பாடு

காப்பியத் தலைவர் தன வணிகர் குலப் பெருமனார் ஆனதனால் இக்காப்பியத்தில் செட்டிநாட்டுப் பழக்க வழக்கங்கள் திறம்படக் கிளத்தப் படுகின்றன. மேலும் காப்பிய ஆசிரியரும் செட்டிநாட்டில் நெடுங்காலம் வாழ்ந்து வருபவரான காரணத்தினால் செட்டிநாட்டு மக்களின் பரந்துபட்ட பண்பாட்டினை மிகவும் நுணுகிக்

கண்டு அதைத் தம் காப்பியத்தின் பலவிடங்களிலும் பெய்து வைத்துள்ளார். சில காண்போம்.

திருக்கோயில் பல எழுப்பிச் சிதைவிடத்துத்
திருப்பணிகள் எனும்பேரால் திருத்திக்கட்ட
வெருக் கொள்ளும் வெயில்நாளில் வேட்கையுடன்
வருவார்க்கு விழைந்தெழுந்து தண்ணீர்ப் பந்தல்
உருக் கொள்ளு மாறமைக்க, உணவுதரும்
அறச்சாலை உண்டாக்கக் குளங்கள் தோண்டப்
பெருத்தநிதி எடுத்தெடுத்து வழங்குவது
பெருமையெனப் பேணுவது வணிகர் நாடு (3:1)

அண்ணாமலை அரசரை நினைவுகூர்வது போல அமைந்துள்ள பாடல் வருமாறு:

வழங்குதலை வழக்காக்கி வாழ்ந்திருந்த
வணிகர்சிலர் புதிய அறஞ் செயநி னைந்தார்
முழங்குதிரைக் கடல்கடந்து முயன்றுபெருஞ்
செல்வமெலாம் ஈந்துவக்க முனைந்து வந்தார்
எழுங்கலைகள் பலவளருங் கழகங்கள்
எழிலறிவுக் கலைக்கோவில் எழுப்பி நின்றார்;
பழங்கலைகள் பதிப்பித்தார் தமிழிசைக்குப்
பயன்பட்டார் மாறிவருங் காலம் நோக்கி (3:3)

பாட்டோட்டம் அமைந்த பாடல் வருமாறு:

கணக்கிட்டுச் செட்டோடு வாழுமவர்
கல்விக்குக் கணக்கின்றி வழங்கி வந்தார்;
பணக்கட்டுப் பாடின்றி வழங்கியதால்
பாரிலுளார் வள்ளலென அவரைச் சொன்னார்;

மணக்கட்டும் அறிவுமணம் மலரட்டும்
கலைமலர்கள் எனவிழைந்து செல்வ நீரை
அணைக்கட்டுப் போடாமல் திறந்துவிடும்
அழகுளத்தைப் பெருமனத்தை வியவார் யாரே? (3 : 4)

## கண்ணெதிரே காட்சிகளைக் கொண்டு வரும் பாடற்றிறன்

மிகச் சிறந்த கவிஞர்கள் தம் பாடல்களில் காட்சிகளை வருணிக்கும் பொழுது, அக்காட்சிகளையே மனக்கண் முன் கொண்டு வந்து காட்டும் அரிய திறல் வாய்க்கப் பெற்றவராயிருப்பது உண்டு; அவ்வகையில் முடியரசனாரும் சில காட்சிகளை வருணிக்கு முகத்தான் அக்காட்சிகளையே கவினுற நம் மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்திவிடும் ஆற்றல் பெற்றவராயிருத்தல் கண்கூடு.

பண்டிதமணி அழகான தோற்றப் பொலிவும் அதே நேரத்தில் உடம்பின் ஒரே குறையாகக் காற்குறையும் பெற்றவர். மேடையில் சொற்பொழிவாற்றும் பொழுது அவர்தம் பருமையும் பொன்னிறமும் வாய்ந்த உடல் துலக்க முறுவதும், புன்னகை முகத்தினராய் அவர் பொலிவுறும் மாட்சியும், இன்சொல்லினராய் எவரையும் வயப்படுத்தும் அவர் பேச்சும், கண்ணையும் கருத்தையும் ஒருங்கே கவர வல்லதாகும். இதை ஓவியம் தீட்டிக் காட்டுமாப் போலக் கவிஞர் புனைந்திருக்கும் பாடல்கள் வருமாறு:

சிரிப்பிருக்கும் அவர்வாயில், பேசுங்காலை
சிந்தனையின் தெளிவிருக்கும் அவர்முகத்தில்
விரித்திருக்கும் ஒளியிருக்கும் விழியிரண்டில்
விரிநெற்றி பொலிவுபெற நீறிருக்கும்;

பருத்திருக்கும் கழியினைக்கை பிடித்திருக்கும்
பளபளக்கும் அக்கழியில் பூணிருக்கும்;
விரித்திருக்கும் நீள்விழிப்பில் அமர்ந்திருப்போர்
விழிகளுக்குள் வியப்பிருக்கும் களிப்பிருக்கும் (8 : 6)

பொன்விசிறி மடிப்பொன்று தோளின்மீது
புரண்டிருக்கும், வடமொழியும் பயின்றா ரேனும்
மின்முகிலிற் பொழியுங்கால் அயன்மொழிச் சொல்
மேவாத தமிழிருக்கும்; பிறர் கருத்தை
முன்னியல்பின் எள்ளலொடு மறுக்குங்காலை
முனைமழுங்காக் கூர்ப்பிருக்கும் இனிதமர்த்து
நன்மணியார் நிற்காது பேசுகின்ற
நாவன்மை கண்டுலகம் போற்றி நிற்கும் (3:7)

## திருக்குறள் கருத்துகளைப் பெய்தல்

*தமிழ்நாடு செய்தவப் பயனாய்த் தோன்றியவர் திருவள்ளுவர். அவர் இயற்றியருளிய உலகப் பொதுமறை காலம், இடம், நாடு, மொழி, இனம் இவற்றையெல்லாம் கடந்து என்றும் வாழும் கீர்த்தி படைத்ததாயிருக்கின்றது. திருவள்ளுவருக்குப் பின்வந்த தமிழ்ப் புலவர் பெருமக்களெல்லாம் திருக்குறள் தொடர்களையும் திருக்குறட் கருத்துகளையும் தம் நூலிற்கையாண்டிருக்கக் காணலாம். மணிமேகலைக் காப்பியத்தைத் தந்த கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார்.*

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றஅப்
பொய்யில் புலவன் பொருளுறை தேறாய்
(சிறைசெய்காதை 59-61)

*என்று திருக்குறளினையே அப்படியே அகழ்ந்து கையாண்டிருக்கக் காணலாம்.*

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப் புடைத்து (திருக்குறள் 398)

என்பர் திருவள்ளுவர். இதனைக் காப்பிய ஆசிரியர் கவிஞர் முடியரசனார் பின்வருமாறு புகல்வர்:

ஒருமையிற் கற்ற கல்வி
உதவிடும் எழுமை என்ற
மறைமொழி புகன்ற வாய்மை
மறைமொழி யாகா தன்றோ? (1:9)

சபை காண் காதையில் பின்வரும் பாடலில் மீண்டும் குறட்கருத்தைப் பெய்துள்ளார் கவிஞர்.

நல்லறத்தை விலைகொடுத்து வாங்குவது
நாகரிகச் செயலன்று, நாளும் ஓங்கும்
பல்வளங்கள் பெற்றவர்தாம் ஊருணிபோல்
பழமரம்போல் மருந்துமரம் போலநின்று
நல்குதலை இயல்பாகக் கொளல்வேண்டும்
நல்லவர்கள் ஒப்புரவென் றதைத்தான் சொல்வர்;
இல்லறத்தாள் மனமகிழத் தலையளித்தல்
இயல்பன்றோ! விலைகொடுத்தும் பெறுவா ருண்டோ!
(3:8)

மேற்காணும் இப்பாடல்,

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு (திருக்குறள் 215)
பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடைய யான்கண் படின் (திருக்குறள் 216)

என்னும் திருக்குறள்களை நினைவிற்குக் கொண்டு வருகின்றதன்றோ?

## முன்னோர் மொழிபொருள் பொன்னே போல் போற்றல்

திருக்குறட் கருத்துகளை மட்டுமன்றிச் சான்றோர் முதல் திருமுறைச் செல்வர்கள் வரையில் பலருடைய கருத்துகளைத் தம் மனத்துள் வாங்கி கவியரசு முடியரசனார் ஆங்காங்கே பாடல்களைப் பெய்து வைத்துள்ள திறம் எண்ணி மகிழ்தற்குரியதாகும்.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே (புறநானூறு 187)

என்ற ஔவையாரின் புறநானூற்றுப் பாடலின் பிழிவினைப் பின்வரும் பாடலிற் காணலாம்.

உருவினிற் சிறிய தவ்வூர்
உளத்தினாற் சிறந்த மாந்தர்
மருவியங் குறைத லாலே
மதிப்பினில் உயர்ந்த தாகும்
உருவுகண் டெள்ளல் வேண்டா
ஓதுவ தறநூல் அன்றோ?
உரியவர் நல்ல ரானால்
ஒருநிலம் நல்ல தாகும் (1:8)

திருவாசகம் தந்த திருவாதவூரரின் பாடலிற் சொக்கி நின்றவர் கதிரேசனார் என்பதை முடியரசனார் புலப் படுத்தும் பாங்கே தனிச் சிறப்பு வாய்ந்ததாகும். வள்ளலார் பாடலை அப்படியே அகழ்ந்து தந்து முடியரச னார் கதிரேசனாரின் ஈடுபாட்டினைக் காட்டுவது நெஞ்சை

யள்ளும் நீர்மையுடைத்தாகும். எடுத்துக்காட்டாக இரண்டு பாடல்களை இவண் காணலாம்.

வான்கலந்த மாணிக்க வாச கர்தாம்
　　வாய்மலர்ந்து பொழிந்ததிரு வாச கத்தைத்
தாங்கலந்து பாடுங்காற் செங்க ரும்பின்
　　செழுஞ்சாறு வடித்தெடுத்துக் குறிஞ்சி தந்த
தேன்கலந்து பால்கலந்து முற்றி நின்ற
　　தீங்கனியின் சுவைகலந்து பிறந்து வந்த
ஊன்கலந்தும் உயிர்கலந்தும் பருகுங் காலை
　　உவட்டாமல் இனிப்பதுபோல் இன்பங் காண்பார்
(5:12)

கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வண்ணம்
　　குளிர்மரங்கள் சூழுமகி பாலன்பட்டி
மேடையிலும் ஓடையிலும் மற்று முள்ள
　　வீதியிலும் தமையொத்த சிறுவரோடும்
ஆடையிலே இவருளத்தைக் கவர்ந்து கொண்ட
　　அரியதமிழ் மொழிதந்த நீதிநூலின்
பாடலினாற் பெறுமின்பம் தழைத்தெ ழுந்து
　　படர்ந்துவர மெய்யுணர்வாய் மிளிரப் பெற்றார்
(5:13)

பொன்னும் துகிரும் முத்தும் மன்னிய
　　மாமலை பயந்த காமரு மணியும்
இடைபடச் சேய ஆயினும் தொடைபுணர்ந்து
　　அருவிலை நன்கலம் அமைக்கும் காலை
ஒருவழித் தோன்றியாங்கு என்றும் சான்றோர்
　　சான்றோர் பாலர் ஆப
சாலார் சாலார் பாலர் ஆகுபவே (புறநானூறு 218)

என்பது சங்கப்பாட்டு. எங்கெங்கோ பொன்னும் மணியும் முத்தும் கிடைப்பினும் உயர்ந்த அணிகலன் ஒன்று

அமைக்குங்காலை அவையெல்லாம் ஓரிடத்திற் கூட்டப் பெற்று அழகிய அணிகலன் ஆவது போலச் சான்றோர்களும் எங்கெங்கோ பிறந்தாலும் ஓர் அரிய செயலை ஆற்றுவான் வேண்டி ஓரிடத்தில் ஒன்று கூடிச் செம்மையான செயல் முடிப்பர் என்பது மேற்காணும் புறப் பாடலால் விளக்கமுறும் செய்தியாகும். அதுபோலப் பண்டித மணியார் தமிழ்ப் புலமை சான்ற பலருடனும் நட்புக் கொண்ட சிறப்பினைக் கவிஞர் விளக்கும் மாட்சி காண்க:

நிலத்தடியில் அமைந்திருக்கும் பொன்னும் மற்றும்
நீர்க்கடலில் கிடக்கின்ற துகிரும் முத்தும்
மலைப்புலத்தில் விளைந்துயர்ந்த மணியுங்கூடி
மாநிலத்தார் அணிகலன்கள் அமைக்குங்காலை
கலத்தினிடை ஒருசேரத் தோன்றி யாங்குக்
கலைபலவுங் கற்றுணர்ந்த சான்றோர் சேய்மை
நிலத்தவர்தாம் என்றாலுங் கல்வி கேள்வி
நிறைந்தொளிரும் மணியின்பாற் கலந்திருந்தார்
(9:24)

நகைச்சுவை

பண்டிதமணியாரிடம் நகைச்சுவையுணர்வு மிகுதியாக இருந்தது. தம் பேச்சினிடையே நகையுதிர்ப்பது அவர் வழக்கம். இதனை நூலாசிரியர் நுவலுந்திறம் பாராட்டத்தக்கது.

தன்னை ஏமாற்ற வந்த போலித் துறவியிடம் பண்டித மணியார் முருகன் பற்றிக் கிளத்திக் கூறும் செய்தியில் நகை கொப்பளிப்பதைக் காணலாம்.

வடிவேல் முருகா வாய்த்தநின் ஆணையை
அடியர் இவர்க்கும் அருளினை என்னே!
என்றுபா ராட்டி இருமொழிப் புலவரின்
ஒன்றும் முகத்தை உற்று நோக்கி
முழுமுதற் பொருளாம் முருகன் பொருள்பெற
வழிசொலா திருப்பனோ? அவன்சொலும் வழியை
அடியன் இவனுக் கறைதல் ஒல்லுமோ?
என்னலும் புலவர் எழில்வேல் முருகன்
சொன்ன மொழிகள் தூய மறையெனப்
போற்றத் தக்கன; பொருந்திய நெஞ்சம்
ஏற்றுளோம் ஆதலின் இசைத்தநல் வழியை
நும்மிடம் புகல இம்மியுந் தடையிலை
என்று கூறி எதிர்வெளி நிலத்தில்
நின்ற வெள்வேல் மரத்தினைச் சுட்ட
ஒன்றும் தோன்றா உளத்துட னிருந்த
சாமியை நோக்கிச் சாற்றினர் புலவர்;
வெள்வேல் முருகற்கு மிகவும் உகந்தது
வள்ளல் கைவேல் வெள்வே லன்றோ?
இம்மரம் அதன்பேர் ஏற்றுள தாதலின்
அம்மரம் விரும்பினன் அதனைக் காட்டி
அதன்கீழ்த் திசையில் ஆறு முழத்தில்
பதமுற ஆழந் தோண்டிப் பார்ப்பின்
பசும்பொன் அங்கே பதுங்கிக் கிடக்கும்
எடுத்ததைத் திருப்பணி இயற்றத் தருகவென்
றருளிச் செய்தனன் ஆறு முகத்தான்
என்றதும் மகிழ்ச்சி ஏகிய முகத்தில்
துன்றும் வருத்தந் தோன்ற இருந்த
துறவியை நோக்கித் தொழுதகு பெரியீர்!
அருளிய ஆணையை ஐயுறல் வேண்டா
கந்தன் நமக்கருள் கட்டளை பொய்க்குமோ?

இந்தப் பணியில் இன்றுமேன் தாழ்வு?
தொடுகுழி அமைத்தல் தொண்டர் நமக்கே
இடுபணி யாகும் ஆதலின் ஐய,
ஊரார் அரவம் ஒடுங்கிய பின்னர்
ஈராறு கையன் இட்ட பணியை
இன்றிராப் பொழுதே இருவருந் தொடங்குதும்
என்றனர் புலவர் (6:187-224)

..............................
மலைத்தல் தவிர்க மற்றுண வுண்டு
மாலைப்பொழுதில் வந்தருள் புரிக
என்றதும் சாமிகள் எழுந்து நடந்தனர்.
மாலை வந்தது மாதவர் வந்திலர்
கந்தன் பெயரால் கயிறு திரித்தவர்
அந்தர்த் தியானம் ஆகினர் அன்றே! (6:280-285)

*கம்பர் யார் என்ற கிளர்ச்சியெழுந்தது. அதுபோது பண்டித மணியார் நகைச்சுவையுணர்வுடன் பின்வருமாறு கூறினர்:*

கருத்து வேற்றுமை பெருத்துள நாளில்
கறுத்தெழுந் தாசிலர் கம்பன் யாரெனக்
கிளர்ச்சிகள் நடத்தினர் : கிழவர் இவர்தாம்
நகைச்சுவை மொழியால் நவின்றனர் சிலசொல்
'கம்பை யுடையவன் கம்பன் அதனால்
கம்பன் யானே' கழறினர் இவ்வணம்;
அவையில் இருந்தோர் அனைவரும் அந்நகைச்
சுவையால் மகிழ்ந்தனர்; சோர்ந்தன கையே
(8: *நிலைமண்டில ஆசிரியப்பா 1-8*)

ரசிகமணி டி.கே. சிதம்பரநாத முதலியார் கம்பன் பாடல்களில் பல இடைச் செருகலாக நுழைந்தவை என்று கூறிப் பல பாடல்களைத் தள்ளிவிட, அது கேட்ட பண்டித மணி நகைச்சுவையுணர்வுடன் பின்வருமாறு உரைத் தாராம்.

சுவைமணி சிதம்பர நாதர் ஒருநாள்
அவையிற் பேச எழுமுன் அறிமுகம்
செய்ய எழுந்த துய்ய மணியார்
பாட்டின் சுவையிற் பழகிய மணியிவர்
கம்பன் பாடற் காசுகள் எடுத்துக்
கொட்டுவார் தட்டுவார் கூடிய பாடலில்
கம்பன் முத்திரை காணாக் காசிவை
செல்லாக் காசெனச் செப்பி எறிவார்;
படலம் பலவும் திடமுடன் எறிவார்
இடைஇடைச் செருகல் என்றெடுத் தெறிந்திட
ஒருவர் போதும்; பலரிவண் தோன்றின்
கம்பனைத் தேடிக் கற்றுத் தொலைக்கும்
வம்பே யில்லை என்றுமை வழங்க
அன்றவ ரிருவரும் சிரித்தனர் ஆங்கே

(8: நிலைமண்டில ஆசிரியப்பா 23-37)

இது போன்றே ஒரு நாள் பண்டிதமணியவர்கள் தலைமை தாங்கிய கூட்டத்திற் பேசிய பேச்சாளர் ஒருவர், பலர் காலத்தைப் பொன்னெனப் போற்றுவதில்லையென்று குறிப்பிட்டுத் தாமே அக்குற்றத்திற்கு இலக்காகிப் பன்னெடு நேரம் பேசினதைக் கூட்ட முடிவில் தலைவர் முடிவுரையில் பண்டிதமணியார் பின்வருமாறு கூறி நகை யொலியைப் பிறப்பித்தாராம்.

தமிழ்மணிப் புலவர் தலைமை தாங்க
வழக்கில் வல்லவர் முழக்கினர் ஒருநாள்
கற்றமிழ்ப் புலவர் பற்பல குற்றம்
உற்றவர் என்று குற்றஞ் சாற்றிக்
காலம் பொன்னெனக் கருதார் அவர்தாம்
காலங் கடந்தே வருதல் கண்டுளேம்
என்று பற்பல எடுத்து மொழிந்தவர்
நேரங் கடந்து நிறுத்தினர் பேச்சை;
கூறுங் குற்றச் சாட்டினைக் கேட்டு
முடிவுரை ஒன்று மொழிந்தனர் தலைவர்
'ஏதிலார் குற்றம் எடுத்துரைப் பதுபோல்
ஓதுவோர் தம்பாற் குற்றம் உறுவதை
ஓர்ந்து காண்பரேல் ஒருதுய ரிலையே'

*(8: நிலைமண்டில ஆசிரியப்பா : 9-22)*

*தொல்காப்பியனார் எண்வகைச் சுவைகளுள் நகைச் சுவைக்கு முதலிடம் தந்து அடுத்தபடியாக அவலச் சுவைக்கு இரண்டாமிடம் தருகிறார். கவியரசு முடியரச னார் பாடியுள்ள பாடல்களில், குறிப்பாகப் பண்டிதமணி யின் மறைவைப் பற்றிக் குறிப்பிடும் பாடல்களில், அவலச் சுவையின் ஆழத்தினைக் காணலாம்.*

தலைவிக்கோ தலைவனில்லை; மகனுக்கோ
தாயில்லை; பூத்தி ருக்கும்
மலருக்கோ மணமில்லை; வானுக்கோ
மதியில்லை; மறவர் கூட்டத்
தலைவற்கோ வாளில்லை; சன்மார்க்க
சபையினுக்கோ நீதான் இல்லை
நிலைமைக்கோ என் செய்வோம்? எனச் சபையார்
நெஞ்சுழன்று மயங்கி நின்றார் (16:10)

அடங்கொண்ட நோயதனால் அல்லலுக்கே
ஆளாய்நிற் கின்றேன், காலன்
வடங்கொண்டு வருங்காலம் வாராதோ
எனைநோக்கி என்று நொந்தேன்
நடங்கண்ட அம்பலத்து நாதனடி
நண்ணினிநீ எனக்கும் ஆங்கோர்
இடங்கண்டு வையென்று கவிமணியார்
ஏங்கிமனம் பேத லித்தார் (16:12)

நமது தமிழ்த் திருக்கோவில் முன்பிருந்து
நாளெல்லாம் நாவசைத்த மணியின்ஓசை
அமைதியுற ஓய்ந்ததம்மா! தமிழ்மாந்தர்
அகங்குளிர இலக்கியத்தேன் வழங்கி வந்த
கமழ்மணத்துக் கோற்குறிஞ்சி சாய்ந்த தம்மா!
கையிருந்த கனியொன்று வீழ்ந்த தம்மா!
இமிழ்கடல்மா ஞாலத்தின் இருள கற்ற
எழுகதிரும் கடனாற்றி மறைந்த தம்மா! (16:16)

## உவமை நலம்

ஒருகவிஞர் அவர் கையாளும் உவமைகளால் அளவிடப் பெறுகிறார் என்பர். உவமைகளை அமைப்பதிலும், தக்க இடந்தேர்ந்து அவைகளைக் கையாளுவதிலும் தான் ஒரு கவிஞனின் தேர்ந்த கவிதைத் திறன் தெளிவுறுவதாக இலக்கிய ஆய்வாளர்கள் அறைவர். இக்கூற்றின் வழிநின்று 'ஊன்றுகோல்' எனும் சிறு காப்பியத்தை ஆராய்ந்து காண்போமானால் இக்காப்பியம் முழுவதும் பொருட் பொருத்தமுற அமைந்திருக்கும் உவமைகளைக் காணலாம்.

'குன்றின் மேலிட்ட விளக்கு' என்னும் பழைய உவமை,

விடுகதிர்போல் விளங்குகதி ரேசர் நெஞ்சின்
விழைவிலுரு வானசபைத் தொடர்பால் குன்றில்
இடுவிளக்கின் ஒளிபோலத் தமிழ்நா டெங்கும்
இசைபரப்பித் தமிழ்பரப்பி விளங்க லுற்றார்
(3:19)

என்னும் பாட்டிற் புதுமையுடன் ஒளிரக் காணலாம். பண்டிதமணி அமைத்த சன்மார்க்க சபை நல்ல உழவனுக்கு வாய்த்த நன் செய்வயல் போன்றதன்றோ! இதனைக் கவிஞர் பின்வருமாறு குறிப்பிடுவர் :

வண்குன்றத் தோளுடையான், உழைப்புக் கஞ்சான்
உழவனுக்கு வயலொன்று வாய்த்த தைப்போல்
பொன்குன்ற நகருறையும் புலவருக்குப்
புகழ்விளைக்குஞ் சபையொன்று கிடைத்த தையா
(3:21)

'வளர் பயிர்க்கு மழை' என்றோர் உவமையும் (3:25) பிறிதோரிடத்தில் இடம் பெற்றிருக்கக் காணலாம். 'பானைச் சோறுக்குப் பருக்கொன்று பதம்' என்பது பழமொழி. அதனை உவமையாக்கிக் கவிஞர் உவகை ஊட்டும் திறம் காண்க.

நலம்மிகுந்த சான்றோராய் இவர்பாற் கற்றோர்
நாவலராய் எண்ணிலராய் விளங்கு கின்றார்
புலமையெனுங் கடலுக்குள் மூழ்கி மூழ்கிப்
புதுப்புதுநன் முத்தெடுத்து மக்கட் கீந்து
குலவிவரும் துணைவேந்தர் ஒளியால் மேன்மை
கொண்டிலங்கும் மாணிக்கம் ஒருவர் ஆவார்
உலையிலவிழ் பதம்பார்க்கப் பானைச் சோற்றுக்
கொருசோறு போதாதோ போதும் போதும்
(10:20)

டாக்டர் வ. சுப. மாணிக்கனாரர் அவர்கள் பண்டித மணியின் மிக நெருங்கிய மாணாக்கராய் வாய்த்தமை யினைக் கிளத்தியுள்ள நயம் காண்க.

நூலின் இறுதியிலும் ஓர் அழகிய உவமையை வைத்தே கவிஞர் காப்பியத்தை முடிக்கின்றார்.

உயர்பெரும் நோக்கங் கொண்ட
ஒப்பிலாக் கல்வி தன்னை
மயர்வுற உடலை யோம்பும்
வாழ்க்கைக்கே வழியாக் கொண்டால்
வயல்தனில் வரகுக் காக
வளம்பெரும் பொன்னாற் செய்த
உயரிய கொழுவைப் பூட்டி
உழுவதற் கொப்பா மென்பார் (17:16)

## மொழிப்பற்று

பண்டிதமணி தமிழுக்குத் தொண்டு செய்தவர்; தமிழார்வம் தழைக்கப் பெற்றவர். தம் வாழ்நாளில் தாய் மொழிக்காகவும், தமிழிசைக்காகவும் நன்கு உழைத்தவர். இதனை மொழிப்பற்று துலங்கும் வண்ணம் முடியரசனார் புலப்படுத்தியுள்ளார்.

இருமொழி நூல்கள் தேடி
எப்பொருட் டாகக் கற்றார்?
பொருள்வரும் புகழும் வந்து
பொலிந்திடும் என்றா கற்றார்?
ஒருசிறி தேனும் அவ்வா
றுளத்தினிற் கருதவில்லை;
இருள்படர் வாழ்வில் இன்பம்
எய்துதல் குறித்தே கற்றார் (2:37)

கண்டிசைக்கும் யாழோசை, குயிலின் பாட்டு
வண்ணமயில் எழிலாட்டம், அருவி வீழ்ந்து
கொண்டெழுப்பும் நன்முழவு, பிறவுங் கூடிக்
கொழிக்கின்ற இன்பத்தைத் தமிழில் தோய்ந்த
பண்டிதரின் மணிமொழியில் நாவு திர்க்கும்
பாநயத்திற் பெற்றுணர லாகுமென்று
பண்டைய நற் றமிழ்மொழியின் அழகு ணர்ச்சிப்
பாட்டுக்குப் பொருளான பெரியார் சொன்னார்

(8:14)

பாட்டரங்கம் தமிழ்நாட்டில் அரங்க மேறிப்
பாடுபவன் தமிழன்தான்; அந்தப் பாட்டைக்
கேட்டிருக்கும் அவையினரும் தமிழ்மாந்தர்;
கீர்த்தனையாம் கிருதிகளும் இவையே கேட்கும்
நாட்டமொடு வந்தவர்க்கோ விளங்கவில்லை
நாமினியும் பொறுத்திருந்தாற் பயனே யில்லை
வேட்டெழுந்து தமிழ்வேண்டும் என்று சொன்னோம்
விளங்குகிற மொழிப்பாடல் வேண்டும் என்றோம்

(11:6)

இசைக்கிளியை மொழிக்கூண்டில் அடைக்க வேண்டி
எழுகின்றார் என்றுநமைப் பழித்துச் சொன்னார்
இசைக்குயிலைத் தமிழ்வானில் பறக்கா வண்ணம்
இறகொடித்துப் பிறமொழிக்குள் அடைத்துவிட்ட
வசைக்குரியார் யாவரெனத் தெரியா வண்ணம்
வழிமாற்றித் திசைதிருப்பிக் காட்டி விட்டுத்
தசைப்பிண்டத் தலையாட்டிப் பொம்மை முன்னர்த்
தமிழ்விடுத்துப் பிறமொழியே பாடி வந்தார்

(11:7)

கொடுமையிது கொடுமையெனக் கொதித்தெழுந்து
    கொடையண்ணா மலையரசர் பத்துப் பாட்டில்
விடுகஇனித் தமிழ்பாட்டிற் கா றி டங்கள்
    வேற்றுமொழிப் பாட்டுக்கு நான்கி டங்கள்
தடைஎனவோ இதற்குமெனத் தமிழர் சார்பில்
    தமிழ்நாட்டில் தமிழரசர் பிச்சை கேட்டார்
கெடுமதிய ரதன்பின்னு மிரங்கவில்லை
    கிளர்ச்சிசெய முனைந்தபினும் திருந்தவில்லை (11:8)

நம்முன்னோர் தேடிவைத்துத் தொன்று தொட்டு
    நமக்குரிமை யாகிவரும் வீட்டில் வாழ
வம்பென்ன? வழக்கென்ன? அந்த வீட்டில்
    வாடகைக்கோ ரிடங்கேட்டோம் எவனி டத்தோ?
அம்மொழியார் விரும்பவில்லை தடைக்கல் லானார்
    அட இனியும் பொறுப்பதுவோ? உரிமைகாக்க
இம்மண்ணிற் சிறுபுழுவும் முயலு மன்றோ
    இனிநமக்குத் தமிழரெனும் பெயர்தா னேனோ? (11:9)

மாற்றிதற்குக் காண்பதற்கு நினைத்த அண்ணா
    மலையரசர் இயக்கமொன்று தமிழி சைக்குத்
தோற்றுவித்தார்; நல்லவர்கள் ஒத்து ழைத்தார்;
    துணைநின்று பணிபுரிந்த இதழும் உண்டு
சாற்றறிகர் மொழிப்புலவர் துணிந்து வந்து
    தகுமுறையால் தமிழிசைக்குத் தொண்டு செய்தார்;
வேற்றுமொழிப் புலமையிலும் வீறு பெற்று
    விளங்கு கதிரேசருக்கும் சரிபங் குண்டு (11:10)

இவ்வாறு பல்வேறு நிலைகளில் இக்காப்பிய ஆசிரியர் கவியரசு முடியரசனார். தமிழைப் பாடும் இடங்களில்

தன்மை மறந்து உணர்ச்சி மீதூரப் பெற்றவராய் விளங்கும் நிலையினை விளங்கக் காணலாம்.

சுருங்கச் சொன்னால், இக்காப்பிய நாயகராம் பண்டிதமணியார் முதுபெரும் புலவர் கதிரேசனாரின் பண்புகள் எல்லாம் பாங்கான முறையில் கவியரசரால் புனையப் பெற்றுள்ளன. அதிலும் குறிப்பாகப் புலமை நயம் பொருந்தியவராயும், இலக்கியச் சுவையினை இனிமையுற மாந்துவராயும் பொதுநலம் பேணும் தொண்டராயும், இசைத்தமிழ் ஏற்றத்திற்கென உழைத்த ஏந்தலாகவும், சன்மார்க்க சபை கண்ட சான்றோராகவும், திருமுறை நெறி நின்ற தூயோராகவும், செட்டி நாட்டின் சிறப்பிற்குரிய பண்புகளின் பெட்டகமாகவும் வாழ்ந்து அண்மையில் நூற்றாண்டு விழாப் பெற்றுச் சிறந்தவரான அமரர் பண்டிதமணி மு. கதிரேசன் செட்டியார் அவர்களை நம் கண்முன் கொண்டு வந்து நிறுத்தும் 'மணிவாசுகோல்' காப்பியம், சிறு காப்பிய உலகிற் சீரிய இடத்தைப் பெறும் சிறப்பிற்குரியதாகும்.

# இராஜாராம் மோகன்ராய்

"பாரத நாடு பழம்பெரும் நாடு; பாடுவம் இஃதை
எமக்கிலை ஈடே"

என்று பாடினார் பாரதியார். பழமையும் சிறப்பும் மிகுந்த இந்தப் பாரத பூமியில் எண்ணற்ற மகான்களும், ஞானிகளும், பெரியோர்களும் தோன்றியிருக்கிறார்கள். பல சமயங்கள் நிலவுகின்ற நம் நாட்டில் பல்வேறு காலங்களில் பல சமயச் சான்றோர்கள் தோன்றியுள்ளனர்; அது போன்றே சமயத்தைச் சீர்திருத்த வந்த பெரியோர்களும் தோன்றியிருக்கிறார்கள். இந்தியா பழம் பெரும் நாடானதால் இங்குப் பல்வேறு சமூகத்தைச் சார்ந்த பெரியோர்களும், அச்சமூகத்தில் ஏற்பட்டுப்போன கேடுகளைப் போக்கி நல்வழி காட்டச் சமூகச் சீர்திருத்தவாதிகளும் அவ்வப்போது தோன்றி வந்து கொண்டே இருக்கின்றனர்

இந்தியாவில் வங்காள மாநிலம் அத்தகைய சமயச் சான்றோர்களையும் சமூகப் பெரியோர்களையும் வழிவழியாகப் பெற்று வருவதாகும். இராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் போன்ற தவஞானிகளை உலகிற்கு அளித்த உன்னத மாநிலம் வங்காளம் தான். அதுபோன்றே இராஜராம் மோகன்ராய், முதலான சமூகப் பெரியார்களையும், தாகூர் போன்ற இலக்கிய மேதைகளையும், பக்கிம் சந்திர சட்டர்ஜி போன்ற நாவலாசிரியர்களையும் நாட்டிற்குத் தந்த மாநிலம் வங்காள மாநிலமேயாகும்.

பதினேழாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இங்கிலாந்தில் தொடங்கப் பெற்ற கிழக்கிந்தியக் கம்பெனி

இந்தியாவிற்கு வாணிகம் செய்ய வந்தது. இந்தியா பல்வேறு அரசர்கள் கீழும், சிற்றரசர்கள்கீழும், திலப்பிரபுக்கள் கீழும் சிதறுண்டு கிடந்த நிலைமையைப் பார்த்து விட்டு, அதனைத் தங்களுக்கு வாய்ப்பாகக் கருதிக் கொண்டு நாடு பிடிக்கத் தொடங்கினார்கள். விரைவில் அவர்கள் எண்ணமும் ஈடேறியது. இந்தியாவில் அவர்கள் ஆட்சி எழுந்த காரணத்தால் எல்லாத்துறைகளிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆங்கிலக் கல்வி எங்கும் பரவிய தால் சில நன்மைகள் விளைந்தன. மேலை நாட்டாரோடு இந்தியர்கள் தொடர்பு கொண்டனர். எனவே அவர்கள் சமய வாழ்விலும் சிற்சில மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின.

இவ்வாறு 18, 19-ஆம் நூற்றாண்டுகளில் சமய, சமூகச் சீர்திருத்தங்களை ஏற்படுத்திய பலருள் சிறப்பாகக் குறிக்கத்தக்கவர் இராஜாராம் மோகன்ராய் அவர் களாவர். இவரை இந்திய மறுமலர்ச்சியின் தந்தை என்றும், இந்து சமயச் சீர்திருத்தவாதிகளின் தந்தை என்றும், பெண்களுக்குச் சம உரிமை கிடைக்கப் பாடுபட்ட பெருந்தகை என்றும், பிற்காலத்தே எழுந்த தேசிய இயக்கங்களுக்கெல்லாம் முன்னோடி என்றும் முறைப்படச் சொல்லுவர்.

இராஜாராம் மோகன்ராய் மேற்கு வங்காளத்தில் பர்துவான் மாவட்டத்தில் ராதா நகர் என்ற ஊரில் 1772-ஆம் ஆண்டு மே மாதம் 22-ஆம் நாள் ஒரு பிராமண குடும்பத்தில் பிறந்தார். இவர் தொடக்கத்தில் பாட்னா நகரத்திலிருந்த ஒரு பள்ளிக்கூடத்தில் பாரசீக மொழியும், அரபு மொழியும் படித்தார். தம்முடைய பதினாறாவது வயதிலேயே இந்துக்களின் விக்கிரக ஆராதனைக்கு மறுப்பு ஒன்றினை எழுதித் துண்டு பிரசுரமாக வெளியிட்டார்.

இதனால் இவருக்குப் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. எனவே வீட்டை விட்டே வெளியேற வேண்டிய நிலைமைக்கு உள்ளானார்.

வீட்டைவிட்டு வெளியேற்றப்பட்ட இவர் பல்வேறு இடங்களுக்குச் சென்றார். அங்கு ஆங்கிலம், இலத்தீன், ஹீப்ரு, பிரெஞ்சு, கிரேக்கம், வடமொழி முதலிய மொழிகளைக் கற்றுத் தேர்ந்தார்.

காசிக்குச் சென்று இவர் பெற்ற வடமொழிப் பயிற்சி வேத நூல்களின் உட்பொருள்களை அறிந்துகொள்ள உதவியது. பௌத்த மதக் கருத்துக்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்பிய காரணத்தால் அச்சமயக் கருத்துக்களை அடங்கிய பாலி மொழியினைக் கற்பதற்காகவென்றே திபெத்து நாட்டுக்குச் சென்றார். இவ்வாறு பல இடங்களுக்கும் சென்று பல மொழிகளையும் கற்றுத் தம்முடைய இருபதாவது வயதில் தம்முடைய வீட்டிற்குத் திரும்பினார். இவருடைய தந்தையாரும் உடன் பிறந்தவர்களும் இறந்துவிட்டனர். எனவே இவருக்குப் பொருள் வருவாய்க்கு இடம் ஏற்பட்டது. தமக்குக் கிடைத்த வருவாயில் தாம் பாரசீக மொழியில் எழுதியிருந்த விக்கிரக ஆராதனை மறுப்பு நூலை அச்சிட்டு இலவசமாக வழங்கினார். இதன் பின்னர் வேதங்களிலும் உபநிடதங்களிலும் தாம் நல்லவை, சிறந்தவை, நாட்டுக்குப் பயன் நல்குபவை என்று எண்ணிய பகுதிகளை மொழி பெயர்த்து வெளியிட்டார்.

இந்த நேரத்தில் கிழக்கிந்தியக் கம்பெனியாரிடம் ஒரு வேலை கிடைத்தது. ஒரு மாவட்டத்தில் வரி வசூல் செய்யும் திவான் வேலையை ஏற்றுக்கொண்டார். அவ்வேலையைப் பத்தாண்டுகள் பார்த்தார். பத்தாண்டு

...க்குப் பின் வேலையை விட்டு நீங்கிக் கல்கத்தாவில் ஒரு வீடு கட்டிக்கொண்டு குடியேறினார். அங்குத் தம்முடைய கருத்துக்களை இடைவிடாது பிரசங்கம் செய்தார். அதிலும் குறிப்பாக இளைஞரிடையே தம் கருத்துக்களைப் பரப்பினார். தம்முடைய கருத்துக்களை ஏற்றுக்கொண்டு தம்மைப் பின்பற்றிய இளைஞர்களையெல்லாம் ஒன்று திரட்டி, 1815-ஆம் ஆண்டில் மத்திய சபை என்பதை அமைத்தார் ஆனால் இச்சபையின் கருத்துக்களை வைதீக பிராம்மணர்கள் வன்மையாக எதிர்க்கவே நாளடைவில் இச்சபை நலிவடையத் தொடங்கியது.

ஆனாலும் இவர் கல்கத்தாவில் வாழ்ந்த பதினைந்து ஆண்டுக் காலத்தில் பல்வேறு துறைகளில் சிறந்த தொண்டாற்றினார் எனலாம். தற்காலப் பிரிட்டிஷ் கல்வி முறை இந்தியர்களுக்குத் தேவை என்று எடுத்துரைத்தார். இந்துப் பெண்கள் ஆண்களுக்குச் சரி சமமாகக் கருதப்பட்டு அவர்களுக்கு வாரிசு உரிமை வழங்கப்பட வேண்டும் என்று வற்புறுத்தினார். அக்காலத்தில் கணவன் இறந்தால் மனைவி வலுக்கட்டாயமாக அவனோடு புதைக்கவோ அல்லது எரிக்கவோ பட்டாள். அக்கொடிய சதி என்னும் சாகமன முறை தடுக்கப்பட வேண்டும் என்று பாடுபட்டார். இவ்வாறான பல சமய சமூக சீர்திருத்தக் கருத்துக்களை அவர் பேசியும் எழுதியும் வந்தார். தம் கருத்துக்களை விளக்கி நூல்களும் எழுதினார். பிரபல பத்திரிகைகளில் கட்டுரைகள் எழுதி வெளியிட்டார். அவர் ஆங்கிலம், வங்காளி, பாரசீகம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளில் தம் கருத்துக்களை விளக்கிப் பேசியும் எழுதியும் வந்த காரணத்தால் சமயத்திலும் சமூகத்திலும் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டது. பத்திரிகைகளுக்குக் கடிதங்கள் எழுதித் தம் கருத்துக்களுக்கு ஆதரவு திரட்டினார்.

இவருடைய கருத்துக்கள் அயல்நாடுகளிலும் சென்று பரவின. அமெரிக்காவிலிருந்தும், இங்கிலாந்திலிருந்தும் அறிஞர்கள் பலர் இவரோடு கடிதப் போக்குவரத்து வைத்துக்கொள்ள முற்பட்டனர். இவருடைய கருத்துக்கள் ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு நூல்களாயின. எனவே இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, அமெரிக்கா முதலிய நாடுகளில் இவருடைய நூல்கள் பிரசுரமாயின. அமெரிக்கப் பேரெழுத்தாளரான எமர்சன், ஹார்வர்டு பல்கலைக்கழகத்தில் மாணவராக இருந்தபொழுது அவருக்கு அவருடைய பிரியமுள்ள அத்தையார், எமர்சன் படிக்கவேண்டிய நல்ல நூல்கள் என்று இராஜாராம் மோகன்ராய் ஆங்கிலத்தில் எழுதிய சில நூல்களை வாங்கி அனுப்பினராம்.

இராஜாராம் மோகன்ராய் அனைத்துச் சமயங்களின் உறுதியான உட்பொருளை அறிந்துகொள்ள வேண்டும் என்று அவாக்கொண்டார். எனவே கிறிஸ்தவ சமய நூல்களை ஆராய்ந்தார், இயேசு பெருமானின் சிறந்த போதனைகளை சிலவற்றை மொழி பெயர்த்து வெளியிட்டார்.

இவர் எல்லாச் சமயங்களிலும் உள்ள சிறந்த அம்சங்களைச் சேர்த்து, ஓர் உருவமற்ற அருவமான பரம்பொருளை வணங்குவதற்கென்று பிரம்ம சமாஜம் என்னும் சமய வழிபாட்டு இயக்கத்தை 1828 ஆம் ஆண்டில் தொடங்கினார்.

பாரத நாட்டு மக்களைப் பெரிதும் நேசித்த இராஜாராம் மோகன்ராய் பாரத நாட்டு மக்களின் வாழ்க்கை முறை உயரவேண்டும் என்று பெரிதும் பாடுபட்டார். ஆங்கிலக் கல்வியின் வாயிலாகவே இந்தியர்கள் பெரிதும் முன்னேற்றம் காணமுடியும் என்று உறுதி

யாக நம்பினார். எனவே இந்துக் கல்லூரி ஒன்றினை ஏற்படுத்தி, ஆங்கிலக் கல்வியினையும் நவீன அறிவியற் கலையினையும் நம் நாட்டு மக்கள் படிப்பதற்கு ஏற்பாடு செய்தார்.

'சம்வாட் கௌமுடி' என்னும் பெயரில் ஒரு பத்திரிகையினைத் தொடங்கி, அதன் ஆசிரியராக அமர்ந்து தம் கருத்துக்களை வெளியிட்டு வந்தார். 1823 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட பத்திரிகை சட்டத்திற்கு எதிராகப் பத்திரிகை உரிமைகளுக்காகப் போராடினார். தலைமை நீதிமன்றத்தின் அப்பத்திரிகைச் சட்டத்தை எதிர்த்துப் போராடிப் பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாக்கப் பாடுபட்டார்.

கணவனோடு உடன்கட்டை ஏறும் சதி என்னும் கொடிய பழக்கம் 17, 18, 19 ஆம் நூற்றாண்டுகளில் இந்தியாவில் நிலவிவந்த கொடிய பழக்கமாகும். பென்டிங் பிரபு இந்தியாவின் வைஸ்ராயாக இருந்த காலத்தில் இந்தப் பழக்கம் உச்சநிலையை அடைந்தது. கணவனுடன் உடன்கட்டை ஏறவிரும்பாத பெண்களையும் பலவந்தப்படுத்தி, கொடுமைப்—படுத்திக் கணவனை எரியூட்டும் ஈமத்தீயில் தள்ளிக் கொன்றனர். நெருப்பில் விழுந்து இறப்பதற்கு அஞ்சித் தப்புவதற்கு முயன்றவர்களைப் பிடித்துக் கயிற்றினால் கட்டி நெருப்பில் தள்ளித் தடியால் அடித்தும் கொன்றனர். இத்தகைய கொடுமையான செயல்களைத்தான் பிரம்ம சமாஜத்தைச் சார்ந்த இராஜாராம் மோகன்ராயும், துவாரகநாத் தாகூரும் கண்டித்தனர். இந்துக்களின் சமய நூல்களில் இந்த உடன்கட்டை ஏறும் வழக்கத்திற்கு ஆதாரம் இல்லை என்று எடுத்துக் கூறினர்.

1829 ஆம் நூண்டில் நவம்பர் மாதத்தில் இந்து விதவைகள் உடன்கட்டை ஏறும் வழக்கத்தைச் சட்டப்படி நிறுத்திவிடுவதற்காகப் பென்டிங் பிரபு சில முன்னேற்பாடு களைச் செய்து டிசம்பர் மாதத்தில், உடன்கட்டை ஏறுவதைத் தடுத்து ஒரு சட்டம் இயற்றினார் அதன்படி இந்தக் கைம்பெண்களை உயிருடன் புதைப்பதும்' எரிப்பதும் குற்றமாகக் கருதப்பட்டன. உடன்கட்டை ஏறுமாறு பிறரை வற்புறுத்துபவர்களுக்குக் கொலைத் தண்டனை விதிக்கப்பட்டது. இந்தச் சட்டம் ஆங்கில ஆட்சிக்குட்பட்ட இந்தியா முழுவதிலும் அமுலுக்கு வந்தது. இந்தச் சட்டத்தை எதிர்த்து ஆயிரக்கணக்கான வங்காளிகள் பென்டிங் பிரபுவிடம் விண்ணப்பம் செய்தனர். அவர், அவர்களைப் பிரிவிக் கவுன்சிலுக்கு முறையிட்டுக்கொள்ளுமாறு சொல்லிவிட்டார். அவர் களும் பிரிவிக் கவுன்சிலுக்கு முறையிட்டுக் கொண்டனர். இதனை எதிர்த்து இராஜாராம் மோகன்ராய் பிரிவுக் கவுன் சிலுக்கு விண்ணப்பம் செய்துகொண்டார். 1832 ஆம் ஆண்டில் வங்காளியர் சிலர் பிரிவிக் கவுன்சிலுக்குச் செய்து கொண்ட மேல் முறையீடு தள்ளப்பட்டது. இவ்வாறு சதி என்னும்கொடிய உடன்கட்டை ஏறும் வழக்கம் அடியோடு அழிந்துபோக இராஜாராம் மோகன்ராய் காரணகர்த்த ராக இருந்தார்.

இராஜாராம் மோகன்ராய்கு டெல்லி அரசர் 'ராஜா' என்னும் பட்டம் வழங்கினார். அவ்வரசருடைய தூதுவ ராக அவர் இங்கிலாந்து நாட்டிற்கு 1830-ல் சென்றார். அங்கு இவர் நன்முறையில் வரவேற்கப்பட்டார். கிழக்கிந்திய கம்பெனியாரும் இவருக்கு நல்ல வரவேற்பு ஒன்று தந்தார்கள். இங்கிலாந்து அரசர் நாலாம் வில்லியம் என்பவரிடம் அழைத்துச் சென்று அறிமுகப் படுத்தி வைத்தனர்.

இவர் இங்கிலாந்தில் தங்கியிருந்தபொழுது இந்திய மக்கள் மேம்பாட்டிற்காகப் பாடுபட்டார். 1833-ல் பிரிஸ்டல் நகரத்தில் இவர் நோய்வாய்ப்பட்டார். ஆங்கில நண்பர்கள் உடனிருந்து இவரை நன்கு கவனித்தும் பயனில்லாமல் அதே ஆண்டில் செப்டம்பர் 27-ஆம் நாள் உயிர் துறந்தார். ஒன்பது ஆண்டுகள் கழித்து இவர் தம் அருமைத் தோழர் துவாரகாநாத் தாகூர் இவர் கல்லறைமீது அழகான ஒரு நினைவுச் சின்னத்தை நாட்டினார்.

சமய, சமூகச் சீர்திருத்தம், பிரம்ம சமாஜத் தோற்றம், சதி ஒழிப்பு என்னும்பொழுது இராஜாராம் மோகன்ராய் அவர்களின் திருப்பெயரும் கட்டாயம் நினைவுக்கு வரும்.

# புரட்சிக்கனல் வ.வே.சு. ஐயர்

இந்த வையத்து நாட்டிலெல்லாம் தாழ்வுற்று விடுதலை தவறிக் கெட்டுப் பாழ்பட்டு நின்ற பாரததேசம் தன்னை வாழ்விக்க வந்தவர்கள் பலர். கட்டுண்டோம் பொறுத்திருப்போம்; காலம் மாறும் என்று நம்பியவர்கள் பலர். ஆயினும் அவர்களில் சிலர் புரட்சிப் பொறியாய் நின்று தாயகம் விடுதலை பெறவேண்டும் என்று வன்முறையில் நம்பிக்கை வைத்துப் பாடுபடும் அளவிற்குத் தங்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள். அவர்களில் ஒருவர் வ.வே.சு. ஐயர் அவர்களாவர். மராட்டிய மண்ணின் மாவீரர் விநாயக தாமோதர சவர்க்கார் அவர்களோடு இலண்டனில் தொடர்பு கொண்டு வ.வே.சு. ஐயர் பழகித் துப்பாக்கிப் பயிற்சியும் பெற்றுப் பின்னாளில் பாண்டிச்சேரியில் திருநெல்வேலி சப் கலெக்டர் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்ற தியாகி வாஞ்சிக்குத் துப்பாக்கிப் பயிற்சி தந்திருந்தாலும்கூட, அவர் வாழ்வில் ஒரு சிறந்த இலக்கியப் படைப்பாளராக விளங்கிய திறத்தினை மறந்து விடுவதற்கில்லை. அதுவும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் முகிழ்த்து வளர்ந்த புதிய இலக்கியத் துறையான சிறுகதைத் துறையின் முதல்வராக வும் விளங்குவது என்றும் நினைவிற்கொண்டு போற்றத் தக்கதாகும். சிறுகதை இலக்கிய வானில் விடிவெள்ளி என்றும், திறனாய்வுத் துறையின் முன்னோடி என்றும் வ.வே.சு. ஐயர் அவர்களை நாம் பாராட்டலாம்.

சங்க காலச் சோனாட்டின் தலைநகராம் திருச்சிராப் பள்ளிக்கு அணித்தேயுள்ள அழகுச் சிற்றூர் வரகனேரியே

...ம் ஐயர் அவர்கள் பிறந்த ஊராகும். வற்றாது வளங் கொழித்து விளையும் வயலுக்குத் தண்ணீரால் உயிரூட்டும் ...ரியாறு, வரகனேரியையும் வளப்படுத்துகிறது. ...ப் பச்சைக் கம்பளம் விரித்தாற் போன்ற நெல் வயல்களையும், வாழைத் தோட்டங்களையும் தென்னந் தோப்புகளையும் கொண்ட திருவிடமாம் வரகனேரியில் ஆங்கிலங் கற்றுக் கல்வித்துறையில் பாங்குற பணியாற்றிய வேங்கடேசையருக்கும் அவரின் அருமைத் துணைவியார் காமாட்சியம்மைக்கும் 2-4-1981 இல் ஐயரவர்கள் பிறந் தார்கள். ஈரோட்டிற்கண்மையிலுள்ள சின்னாளம் பட்டியிற் பிறந்த தாய் காமாட்சியம்மையின் மணிவயிறு வாய்த்த வ.வே.சு. ஐயரவர்களின் பிள்ளைத் திருப்பெயர் வேங்கட சுப்பிரமணியர் என்பதாகும்.

வீட்டில் தொடக்கத்தில் தந்தையாரே கல்வி பயிற்று வித்தார். பின்னர் ஐரோப்பியர் நடத்திய மிஷினரி பள்ளியில் ஆங்கிலக் கல்வி பயின்றார். இலத்தீனை இவர் இரண்டாவது மொழியாக எடுத்துப் படித்தார். கல்வியில் கருத்தூன்றியதோடு மட்டும் அமையாமல் காலையும் மாலையும் கடுமையான உடற்பயிற்சி முறைகளிலும் சிந்தையைச் செலுத்திக் கல்வியால் உள்ளத்தையும் உடற் பயிற்சியால் உடலினையும் கண்ணெனப் ஓம்பிக் காத்து வந்தார். கிரேக்க உரோமானிய வீரர் கதைகளை இளமை நாள்களிலேயே விருப்புடன் படித்தார். 1893ஆம் ஆண்டில் 'மெட்ரிக்குலேஷன்' தேர்வில் சென்னை மாகாணத்தில் ஐந்தாவதாகத் தேறினார், 1894-1896இல் கல்லூரியில் 'எப்.ஏ.' படித்து முடித்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார். கல்லூரியில் ஷெல்வி, பைரன், ஷேக்ஸ்பியர் முதலியோரின் எழுத்தோவியங்களை விருப்பமுடன் கற்றார். எமர்சன் கட்டுரைகளையும், ஜான் ஸ்டூவர்ட் மில்லின் உரிமை மணம் கமழும் எழுத்துக்

களையும் படித்து உரிமைக் காற்றை உள்ளே இழுத்தார். ஆங்கிலம், இலத்தீன், வரலாறு, கணிதம் முதலிய துறைகளில் ஆழப் பயின்று அத்துறைகளில் வித்தகரானார். அக்கலையில் இவரோடு உடன்பயின்றவர் டாக்டர் டி. எஸ்.எஸ். ராஜன் ஆவர்.

இளமையில் மணம்முடித்து வைத்து விடுவது என்பது அந்நாளில் பெற்றோர்கள் மேற்கொண்ட செயலாகும். அம்முறையில் எப்.ஏ. தேறிய ஐயர், பாக்கியலட்சுமி அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். திருமணம் முடிந்து பி ஏ. வகுப்பிற் சேர்ந்து படித்தார். 1899ஆம் ஆண்டில் பி ஏ. தேறினார். பி.ஏ. வகுப்பில் வரலாறு, பொருளாதாரம், இலத்தீன் முதலிய பாடங்களை விரும்பிக் கற்றார் இலத்தீன் பாடத்தில் மாகாணத்தில் முதல்வராகத் தேறினார்.

அந்நாளில் படித்துத் தேர்ச்சி பெற்றவர் அரசாங்கப் பணியில் அமரவே விரும்புவர். இன்றேல் அந்நாளில் அதிக வருவாய் வந்ததும், சுதந்திரமானதுமான வழக்கறிஞர் தொழிலையே பலரும் பெரிதும் விரும்பினர். நம் ஐயரவர்களும் 1901ஆம் ஆண்டில் சட்டத் துறையில் தேர்ச்சி பெற்று 'முதல் கிரேடு பிளீடர்' ஆனார். 1962இல் திரிசிரபுரம் மாவட்ட நீதிமன்றத்தில் தொழில் நடத்தத் தொடங்கினார். நான்கு ஆண்டுகள் அப்பணி தொடர்ந்தது. ஐயருடைய வாழ்க்கைத் துணைவியார் பாக்கியலட்சுமி அம்மையாரின் பெரிய தந்தையார் பிள்ளை பசுபதி ஐயரென்பவர் ரங்கூனில் பெருஞ் செல்வராய் வாழ்ந்து வந்தார். அவர் ஐயரவர்களை ரங்கூனுக்கு அனுப்பி தம் வணிகத்துறை வாழ்க்கையை மேற்பார்வையிடச் சொன்னார். 1907இல் ரங்கூன் சென்ற ஐயரவர்கள் அங்கிருந்த ஆங்கில 'பாரிஸ்டர்'

ஒருவருடன் சேர்ந்து வழக்கறிஞர் தொழில் புரிந்தார். அங்கிருந்த கலையில் உருது மொழியினையும் ஓரளவு தெரிந்துகொண்டார். 'பாரிஸ்டர்' படிப்புப் படிக்க வேண்டும் என்ற எண்ணங்கொண்ட ஐயரவர்கள் தம் மைத்துனர் உதவியால் லண்டனில் ஓர் 'உண்டியல் கடை' அமைத்துக் கொண்டு அங்குச் சென்று படிக்க விரும்பினார் தம் மனைவியையும் மகன் பட்டுவை யும் மைத்துனர் ஆதரவில் விட்டு விட்டு இலண்டன் சென்றார். இலிங்கன் என்னும் செல்வரால் சட்டம் பயிலும் மாணவர்க்கென 14ஆம் நூற்றாண்டிற் கட்டப் பட்ட விடுதியில் ஐயர் சேர்ந்து 'பாரிஸ்டர்' படிப்புப் பயிலத் தொடங்கினார். அங்குத் தங்கிதான் சித்தரஞ்சன் தாசர், காந்தியடிகள் முதலானோரும் சட்டம் பயின்றனர் ஐயரவர்களின் அளவுக்கு மீறிய இலத்தீன் மொழியறிவு அவர் சட்டம் பயிலுவதற்குப் பெருமளவு துணை செய்தது ஐரோப்பியரின் கலை வாழ்வினை விரும்பிய ஐயர் அவர் களின் சமூக வாழ்வினை விரும்பவில்லை. ஐரோப்பிய இசையினையும் நடனத்தினையும் விரும்பிப் பயின்ற ஐயர் அந்நாளிலும் வள்ளுவரையும் கம்பரையும் மறக்கவில்லை. மேலும் ஐயரவர்களுக்கு ஐரோப்பிய உணவுபிடிக்கவில்லை. எனவே இந்திய மாணவர்கள் தங்கி உறைந்த 'இந்திய விடுதி' சேர்ந்தார். அவ்விடுதியில்தான் மராட்டிய சிங்கம் விநாயகதாமோதர சவர்க்கார் என்னும் புரட்சியாளர் வாழ்ந்து வந்தார். அவரோடு ஐயர் நெருங்கிப் பழகினார். "நாட்டு விடுதலைக்காக நாங்கள் எல்லாம் உயர் நோக்கம் கொண்டு உழைத்து வரும்பொழுது நீங்கள் பயனற்று இசை நாட்டியம் பயின்று வாழ்வை வீணாக்கிக் கொள்ள லாமா?" என்று ஐயரவர்களைப் பார்த்துச் சவர்க்கார் கேட்டார். ஐயர் வாழ்வில் ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டது. புரட்சிப் பொறி பட்டு அவரும் தீவிரவாதி

யானார். இசையிலும் நடனத்திலும் ஈடுபட்ட அவர் தம் இளகிய மனம் புரட்சியால் ஈர்க்கப்பட்டு வன்முறையில் திரும்பியது. சவர்க்கார் எழுதிய 'இந்திய உரிமைப்போர்' என்னும் மராட்டி நூலினை ஐயரவர்கள் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். இந்நூல் படிப்பவர் மனத்தில் புரட்சித் தீயை வளர்த்தது. சவர்க்காரும் ஐயரும் இந்திய விடுதியில் உறைந்த மாணவர்கட்கு நாட்டுப் பற்றை ஊட்டினர். மாஜினி, கரிபால்டி ஆகிய புரட்சி வீரர்களின் வரலாறு அவர்களுக்குப் பாடங்களாகப் போதிக்கப்பட்டன அந்த இரண்டு புரட்சியாளர்கள் சென்ற நெறியிலேயே சென்று வன்முறையில் நாட்டை மீட்க வேண்டுமென்று உறுதி செய்தனர். வாரம் ஒருமுறை நடைபெறும் கூட்டத்தில் புரட்சிக் கனல் பேச்சில் தெறிக்கும். படைக்கலப் பயிற்சியும் அவ்விடுதியில் தரப்பட்டது. குறிப்பாகத் துப்பாக்கி சுடும் பயிற்சியும் மற்போர்ப் பயிற்சியும் மேற் கொள்ளப்பட்டன. போர் நூலும் விரும்பிப் பயிலப் பட்டது.

இந்திய விடுதிக்கு ஒருநாள் நாசிக்கைச் சேர்ந்தவரும் சவர்க்காருக்குத் தெரிந்தவருமான கீர்த்திகர் என்பவர் வந்தார். அவர் 'ஸ்காட்லண்டு யார்டு' போலீசாரின் உளவாளியாகத் தங்கி இந்திய விடுதியில் வசிப்போரின் தேச விரோதச்செயல்களைக் கவனித்து ரகசியக் குறிப்பு களைப் போலீசுக்கு அனுப்பி வைத்தார். ஒருநாள் குட்டு உடைந்தது கீர்த்திகரைத் துப்பாக்கி முனையில் வ.வே. சு. ஐயரவர்கள் மிரட்டி, இனி இத்தகைய உளவு வேலை கள் அவருடைய உயிருக்கு ஆபத்தாய் முடிந்துவிடும் என்றும், தாம் எழுதித் தரும் குறிப்புகளையே போலீசுக்கு அனுப்ப வேண்டும் என்றும் வற்புறுத்தினார். பயந்து நடுங்கி ஐயரின் காலைப் பிடித்துக் கொண்ட கீர்த்திகர்

ஐயரவர்களின் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு இசைந்தார். இதுபோன்றே பின்னொரு நாளில் திருவல்லிக் கேணியிலிருந்து வந்த திருமலாச்சாரியாரும் உளவாளியாக இருப்பாரோ என எண்ணினார் ஐயர். அவரை முற்றறிந்தார். புடம்போட்டுப் பார்த்ததில் திருமலாச்சாரியாய சொக்கத் தங்கம் என்று கண்டறிந்தார். திருமலையைத் தாமே உளவாளியாக்கிப் போலீசுக்குத் தகவல் தருவதாகக் கூறவைத்து அதற்கெனப் பணமும் பெற வைத்தார். இவ்வாறு திறமையுள்ள போலீசாரின் கண்களில் மண்ணைத் தூவி. ஐயரவர்கள் துப்பாக்கிகளையும் ரவைகளையும் இலண்டனிலிருந்து பம்பாய்க்கு இந்திய உரிமைச் சங்கத்தின் சார்பில் ரகசியமாக அனுப்பி வைத்தார். மேலும் இராமச்சந்திர தத்தர், விபின சந்திர பாலர், லாலாஜி முதலியோரை இலண்டனில் சந்தித்துப் பேசினார். அவர்கள் ஐயரவர்களின் நாட்டுப் பற்றைப் பாராட்டினர். 1908-ல் கோபாலகிருஷ்ண கோகலேவைக் கண்டார். அவருடைய மிதவாதப் போக்கு இந்தியாவிற்கு விடுதலை வாங்கித் தராது என ஐயரவர்கள் முடிவிற்கு வந்தார் 1908ல் காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து தென்னாப்பிரிக்க இந்தியர்கள் அந்நாட்டிற் படும் துயரினை இலண்டன் பாராளுமன்றத்தில் எடுத்துரைக்க வந்திருந்தார். அவரைப் போய்க் கண்டார் ஐயரவர்கள். எளிமைத் திருக்கோலமும் வன்முறை விரும்பாதஉள்ளமும் கொண்டிருந்த காந்தியடிகள் ஐயரவர்களுக்கு ஒரு விந்தைமிகு மனிதராகவே தோன்றினார். ஏனெனில் ஐயரவர்கள் வலிமைமிக்க ஆங்கிலேயனை வன்முறை ஒன்றாலே மட்டும்தான் இந்தியாவை விட்டு வெளியேற்ற முடியும் என்று எண்ணியிருந்தார். ஆனால் காந்தியடிகளோ "உலகில் என்றும் உண்மையே பெரியது; ஆற்றல் வாய்ந்தது; உண்மையே கடவுள்; கடவுளுக்கு

மேம்பட்ட பொருள் உலகில் எதுவுமில்லை. எனவே உண்மை வெல்லும்; எனவே அவ்வுண்மை அறப்போரால் கிட்டும், என்றும் உண்மையே இறுதியில் வெற்றி பெறும்'' என்று சொன்னார் அறப்போரில் நம்பிக்கை கொள்ளாத ஐயரவர்களையும் மோகனதாஸ் காந்தியின் புன்னகை முகம் ஈர்த்தது. அவரிடம் பெருமதிப்புக் கொண்டார். காந்தியடிகளை விருந்துக்கு அழைத்தார். சைவ உணவு மட்டும் விருந்திற் பரிமாறப்பட்டால் தாம் வருவதாக உடன்பட்டார் அண்ணல் காந்தி. ஒரு சனிக்கிழமையன்று சைவ உணவு தயாரிக்கும் வேலை தொடங்கியது. டாக்டர் ராஜன் உட்பட அறுவர் சமையற்கட்டிற் பணியாற்றினர். மெலிந்த உருவினர் ஒருவரும் தாமாகவே வந்து சமையல் பணியிற் கலந்துகொண்டார். சமையற்பணி முடிந்ததா எனக் காணவந்த வ.வே.சு ஐயர் திடுக்கிட்டார். காரணம் அம்மெலிந்த திருவுருவினர் வேறு யாருமில்லை. காந்தியடிகள்தான் சமையற்கட்டில் உதவி செய்து கொண்டிருந்தார். பின்னர் விருந்து முடிந்தது காந்தியடிகள் வன்முறைக் கிளர்ச்சியை விட்டு அமைதியான வழியிற் போராட்டம் நடத்தி இந்தியாவை மீட்கவேண்டும் என்றார். பின்னர்ப் பேசிய சவர்க்கார் மாறுபட்ட கருத்தைப் புரட்சிப் பொறியென வெளியிட்டார் கூட்டம் முடிந்தது. காந்தியடிகளும் தம் கருத்தை மாற்றிக் கொள்ளவில்லை. ஐயரும் மாற்றிக் கொள்ளவில்லை. 'உண்மையும் விடாமுயற்சியும் உள்ள ஒத்துழையாதார்' என்று ஐயரவர்களைப் பின்னாளில் காந்தியடிகள் 'யங் இந்தியா' இதழிற் பாராட்டி எழுதினார்.

இங்கிலாந்துப் போலீசு ஒற்றர்களின் முற்றுகை மிகுதியானதாலும் அவர்கள் இந்திய விடுதி மாணவர்க்கு நேரடியாகவும் மறை முறைமுகமாகவும் தொல்லைகள் கொடுக்கத் தொடங்கியதாலும், வ.வே.சு ஐயர்

சவர்க்கார், டாக்டர் ராஜன் ஆகியோரைத் தவிர மற்றெல்லோரும் பிரிந்து சென்றனர். அவ்வாறு பிரிந்து போன இளைஞர்களில் ஒருவன் 'மதன்லால் டிங்கார' என்பவன் ஒருவன். "வாய்ப்பேச்சு வேண்டா; செயல் வேண்டும்; அதற்கு எந்த இன்னலையும் ஏற்க வேண்டும்" என்பது புரட்சியாளர் கொள்கை. ஒருமுறை இதனைச் சோதித்துப் பார்க்க ஐயரவர்களே, டிங்கராவின் உள்ளங் கையை மேசையின்மேல் வைத்துக் கொண்டு ஊசியை ஏற்றிக் கையில் ரத்தம் பீறிட்ட நிலையிலும் டிங்கராவின் முகமும் அகமும் நிலையினைக் கண்டார். இந்த டிங்கரா என்னும தேசபக்த இளைஞன் 1909-ல் இந்திய அமைச்சிருக்கு இந்திய அரசியல் செயலாளராக இருந்த சர். கன்ஸன் வைலி ஐ. சி. எஸ் என்ற ஆங்கிலேய அதிகாரியைச் சுட்டுக் கொன்றான். இக்கொலை இலண்டன் ஜிகாங்கீர் ஹாலில் நடந்த விருந்தில் நிகழ்ந்தது. இக்கொலையினைத் தடுக்க முனைந்த லால்காகா என்ற பார்சி செல்வரும் துப்பாக்கிக் குண்டு பாந்து மாண்டார். இலண்டன் கோர்ட்டில் வழக்கு நடந்தது. போலீசாரின் எந்தச் சித்திரவதையாலும் மனம்மாறி எவரையும் காட்டிக் கொடுக்காத மதன்லால் டிங்கரா கோர்ட்டில் "எனக்குக் கன்ஸன் வைலிமேல் தனிப்பட்ட பகைமையேதும் இல்லை. ஆங்கிலேயர் தம் அடக்குமுறையால் இந்தியரைக் கொடுமைப்படுத்து கின்றனர். அதற்குப் பழிவாங்கவே இவ்வாறு செய்தேன். என் நாட்டு விடுதலைக்கு இதுதான் உகந்தவழி என நான் எண்ணுகிறேன்'' என்றான். தூக்குதண்டனை கிடைத்த போதும் "என் நாட்டிற்காக உயிர்விடும் பேறு பெற்றேன்" என்று கூறி முகமலர்ச்சியுடன் தூக்குக் கயிற்றை ஏற்றுக் கொண்டான். இதற்கு வ. வே. சு. ஐயரவர்கள் அவனுக் தந்த பயிற்சியும் நெஞ்சுரமுமே காரணங்களாகும்.

அதுபோழ்தே இந்தியாவில் நாசிக்கில் ஜாக்சன் கொலை நடந்தது. அக்கொலைக்கு விநாயக தாமோதர சவர்க்காரே துப்பாக்கி அனுப்பினார் எனப் போலீசார் அவர் மீது நடவடிக்கை எடுத்தனர். சவர்க்கார் இலண்டன் சிறையில் இரு திங்கள் இ ந்தார். ஐயரவர்கள் சிறைக்குச் சென்று சவர்க்காரைப் பார்த்தார். "நடந்ததை நினையாமல் நடக்க வேண்டியது குறித்துச் சிந்திக்க வேண்டும்" என இருவரும் முடிவு கட்டினர். ஐயர் அவர்களைச் சிறையிலிட முயற்சி நடந்தது. ஐயர் ஏற்கெனவே தாடி வளர்த்திருந்தார். உச்சிக் குடுமி ஆசாமியைத் தேடி அலுத்தனர் போலீசார். பாரிசுக்குப் புறப்பட்ட ஐயர் அகாலியர்போல் வேடம் புனைந்து சென்றார். அவர் கையிலிருந்த பெட்டியின் மேல் வி.வி எஸ். (V S S.) என்று பெயர் இருந்தது. கப்பலிற் செல்லும்போது ஒரு போலீசுக்காரன் அவர்முன் தோன்றி "நண்பர் வி.வி.எஸ். ஐயரே; உமக்கொரு தந்தி" என்றான். ஐயரோ சற்றும் அயராமல் "இந்தத் தந்தி வி.வி.எஸ். ஐயருக்குத்தானே! என் பெயர் வே, விக்கிரம் சிங்கு" என்று இந்துஸ்தானியிலேயே விடையளித்தார். இவ்வாறு போலீசிற்கு 'டிமிக்கி' கொடுத்துப் பாரீசு நகர் சேர்ந்து இந்திய விடுதலைக்கு ஆதரவுகாட்டிய காமா அம்மையார் வீட்டில் சென்று தங்கினார். இந்த நாளில் இலண்டனிலிருந்து சவர்க்கரை விசாரணைக் கைதியாகக் கொண்டு வந்த கப்பல் பிரெஞ்சு நாட்டின் தென் துறைமுகமாக 'மார்செயில்சுக்கு' வந்து நின்றது. சவர்க்கார் காலைக் கடன் முடிப்பதாகக் கூறிக் கப்பலின் கழிப்பறையின் உள்சென்ற சவர்க்கார் அங்கிருந்த பொந்தின் வழியே தப்பிக் கடலில் குதித்து நீந்திக் கரை சேர்ந்தார். ஏமாந்து இங்கிலாந்து போலீசார் அவரைத் துரத்தி வந்தனர். அங்கு ரோந்து வந்து கொண்டிருந்த பிரெஞ்சுப் போலீஸ்காரன் சவர்க்கரைப் பிடித்துக்

கொண்டான். தொலைவிலிருந்து இந்நிகழ்ச்சியைப் பார்த்துக் கொண்டிருந்த வ.வே.சு. ஐயரும் காமா அம்மையாரும் "இது பிரெஞ்சு எல்லை; இவரை இங்கிலாந்துப் போலீசாரிடம் ஒப்படைப்பது சட்டத்திற்கு முரண்பட்டதாகும்" என்று கூறித் தடுத்தனர். ஆயினும் இங்கிலாந்துப் போலீசார் சவர்க்காரைத் தூக்கிச் சென்று, பின்னர் அவரை அந்தமானில் கைதியாகக் காவலில் வைத்தனர். பிரெஞ்சுப் போலீசாரின் அடாத செயலை எதிர்த்து பிரெஞ்சு ஜனாதிபதிக்கு ஐயர் கடிதங்கள் எழுதினார். பயன் விளையவில்லை.

நாட்டுப்பற்று மேலோங்கிய நிலையில் வ.வே.சு ஐயரவர்கள் இண்டனில் தாம்பெற்ற 'பாரிஸ்டர்' பட்டத்தைக் கிழித்தெறிந்தார். காந்தியடிகள் ஆங்கிலம் படித்தவர்கள் ஆங்கிலப்பட்டத்தைத் துறப்பதற்கு முன்வர வேண்டும் என்று வேண்டுகோள் விடுவதற்குப் பத்து ஆண்டுகள் முன்னரேயே தாமாகவே வலுவில் பட்டத்தைத் துறந்தவர் தீரர் வ.வே.சு. ஐயர் அவர்.

ஒருநாள் முகம்மதிய பக்கிரி ஒருவர் பாண்டிச் சேரியில் மண்டயம் சீநிவாசாச்சாரியார் வீட்டின் முன் வந்து நின்றார். வீட்டின் கதவைத் தட்டினார். ஆச்சாரியார் வெளியே வந்தார். "தாந்தே வந்ததோ" என்று வினவினர் பக்கிரி, வினாவினையும் வினாவின் பொருளினையும், வினவியவரின் குரலினையும் உணர்ந்து கொண்டு ஆச்சாரியார் அவரே வ.வே.சு; ஐயரெனத் தெரிந்து அவரைத் தழுவி வரவேற்றார். பாரிலிசிருந்து பார்ச்சி கனவான் வேடத்திற் புறப்பட்டுப் புதுவைக்கு முகமதீய பக்கிரி வேடத்தில் வந்து சேர்ந்த வீரர் வ.வே.சு. ஐயரே ஆவர்.

புதுவையில் மகாகவி பாரதியாருடனும் மகான் அரவிந்தருடனும் நெருங்கிப் பழகினர். இந்திய விடுதலை குறித்து இம்மூவரும் சிந்தித்தனர். இவர்களுடைய செயல் திட்டங்கள் ஆங்கில அரசாங்கத்தைக் கதி கலக்கின. சுதேசிகள் புதுவையில் இருப்பதால் புதுவை நகரையே விலை கொடுத்து வாங்கி விடலாமா என்றும் ஒருமுறை ஆங்கிலேயே அரசு அவாவியதாம். வீட்டாரும் பசுபதி ஐயரும், வ.வே.சு. ஐயர் ஆங்கில எல்லைக்கு வந்து அமைதியாகக் குடும்ப வாழ்க்கை நடத்த வேண்டும் என்று பெரிதும் விரும்பியும்கூட ஐயர் மனம் அதற்கு ஒரு போதும் ஒருப்படவில்லை. தம் மூத்த மகள் பட்டு இடையில் இறந்து போயிற்று. வ.வே.சு. ஐயர் புதுவையில் இளைஞர்களுக்குப் படைக்கலப் பயிற்சி தந்தார். 'வாஞ்சி'க்கு வ.வே.சு. ஐயர் துப்பாக்கி சுடும் பயிற்சி தந்தார். 6.1.1911 முதல் மூன்று திங்கள் ஐயரிடம் பயிற்சி பெற்ற வாஞ்சிநாதன் 17.6.1911 இல் மணியாச்சி ஜங்ஷனில் வ.உ. சிதம்பரம் பிள்ளை, சுப்பிரமணிய சிவா முதலியோரைத் தண்டித்த கலெக்டர் 'ஆஷ்' துரையை ரயிலில் சுட்டுக்கொன்றுவிட்டு உடனே ஓடி ரயில் நிலையத்திலிருந்த கழிப்பறைக்குச் சென்று துப்பாக்கி கொண்டு தன் வாயில் சுட்டுக்கொண்டு மடிந்து போனான். இவ்வாறு தேசபக்தக் கனல்களின் பிறப்பிடமாக வ.வே.சு. ஐயர் அமைந்தார்.

இதனால் ஐயருக்குத் தொல்லைகள் மிகுந்தன. ஒரு முறை ஒற்றற் பிடியிலிருந்து தப்ப பிள்ளையார் கோயிலினுள் சென்று பிள்ளையார் சிலையின் பின்புறம் அமர்ந்து இரவெல்லாம் அங்கிருந்து காலையில் தப்பினார். பிறிதொரு முறை பாடைப் பிணமாகவும் ஐயர் மாறி ஒற்றர் கண்களில் மண்ணைத் தூவித் தப்பினார்.

...தல் சமயத்தில் காலிகளின் கொடுமையிலிருந்து தம் ...ரீரத்தால் உயிர் தப்பினார்; மனைவி மக்களையும் ...பாற்றினார். இத்தகைய வாழ்க்கைப் போராட்டங் ...கிடையிலும் அன்னைத் தமிழை மறவாத ...ரெராம் வ.வே.சு. ஐயர் திருவள்ளுவரின் தெள்ளு ...ழ்க் குறளைத் தெளிந்த ஆங்கிலத்தில் சீரிய மொழி ...யர்ப்பு செய்து நூலாக வெளியிட்டார். ஐயராலும் ...பர்களாலும் நிறுவப்பட்ட 'கம்ப நிலையம்' கம்ப ...ராமாயணம் பாலகாண்டத்தைச் சொற்பிரிவு செய்து வெளியிட்டது. மேலும் மங்கையர்க்கரசியின் காதல், கமல விஜயம், காங்கேயன், குளத்தங்கரை அரசமரம், ...திரொலியாள், அழேன் புக்கேன் முதலிய கதைகளும், சந்திர குப்த சக்கரவர்த்தியின் சரித்திரம், புக்கர் வாஷிங்டன் வரலாறு முதலிய நூல்களும் வெளியிடப் பட்டன. 1917ஆம் ஆண்டு வரை ஐயர் அவர்கள் இத்தகைய இலக்கியப் பணிகளில் ஈடுபட்டுத் தமிழன் னைக்குச் சிறந்த தொண்டாற்றினார்.

1919இல் ஐரோப்பியப் போர் முடிந்தது. 1920-ல் அரசியல் குற்றவாளிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கப் பட்டது. முதலில் ஐயர் புண்ணியத் தலமான காசி சென்றார். பின்னர் தமிழ்நாடு வந்ததும் தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்கள் ஆசிரியராக இருந்து நடத்திய 'தேசபக்தன்' இதழுக்கு 31.7.1920ல் ஆசிரிய ரானார். அப்பத்திரிகையில் ஐயர் அவர்களின் புரட்சிப் பொறிகள் வெடித்தன. நாட்டுப் பற்று கொழுந்து விட்டெரிந்தது. சென்னையில் திருவல்லிக்கேணியில் வாழ்ந்த ஐயருக்குக் கடலோரமாகவே நடந்து சென்று ஜார்ஜ் டவுனில் இருந்த பத்திரிகை அலுவலகத்தை அடையப் பிடிக்கும். அடர்ந்த தாடி, வகிடெடுத்த தலை

முடி, தூய வெண்ணிறக் கதராடை, பூப்போட்ட கதர் மேலாடை, தோளில் தொங்கும் நீண்ட பை, காலில் மிதியடி, நெற்றியில் வெண்மை வீறுடன் துலங்கும் திருநீறு, நடுவிலே சந்தனப் பிறை, அதன் நடுவே குங்குமப் பொட்டு இவைகளே பெருவாழ்வு வாழ்ந்த ஐயரவர்களின் அடையாளச் சின்னங்கள்.

இவ்வாறு ஒன்பது திங்கள் வரை 'தேசபக்தன்' ஆசிரியராக இருந்த ஐயரவர்களை அவர் எழுதாத ஒரு தலையங்கத்திற்காக ஆங்கில அரசு தண்டனை தந்து பெல்லாரிச் சிறையில் தள்ளியது. அங்குப் பிறந்ததே "Kamba Ramayanam-A study" என்னும் ஆங்கிலத் திறனாய்வு நூலாகும்,

காந்தியடிகள் கட்டளையை ஏற்றுத் தாமிரபருணி யாற்றின் தெற்கே மூன்று கல் தொலைவில் சேரமாதேவி யில் ஒரு குருகுலம் அமைக்கப்பட்டது. 'பால பாரதி' திங்கள் இதழ் இங்கிருந்து வெளிவந்தது. 'குரு கோவிந்த சிங்கன்' வரலாறு வெளியிடப் பெற்றது. ஐயர் அவர்கள் குருகுலத்தில் அயராது உழைத்தார். திரிசிரபுத்தில் இருந்த குடும்பத்திற்குத் திங்கள் தோறும் இருபத்தைந்து ரூபாய் அனுப்பினார். மகள் சுபத்திராவையும் மகன் கிருஷ்ணமூர்த்தியையும் ஆசிரமத்திற் கல்வி பயிலச் செய்தார். 'குருகுலம்' இந்தியக் கல்வி முறையிலும் பண்பாட்டின் சூழலிலும் இனிதே வளர்ந்து வந்தது.

குருகுல மாணவர்களை அழைத்துக் கொண்டு வ.வே.சு. ஐயரவர்கள் 3.6.1925ல் பாபநாசம் நீர் வீழ்ச்சியைக் காணச் சுற்றுலா சென்றிருந்தார். கல்யாண அருவியில் மகள் சுபத்திரா கால் தடுக்கி விழ அக்

குழந்தையை மீட்கக் குதித்த ஐயரவர்களும் சுழலில் சிக்கி மாண்டு போனார். கல்யாண அருவி, கலியாணமாகாத கன்னி சுபத்திராவையும், காலமெல்லாம் நாட்டு விடுதலைக் காளையாகவே வாழ்ந்து தம் பெயரை என்றும் ஒளிர நிறுத்த புதிய இலக்கியச் செல்வங்களை வழங்கிய வரகனேரி வெங்கடேச சுப்பிரமணிய ஐயரவர்களை விழுங்கிவிட்டது. ஆயினும் நாட்டுப்பற்று பாராட்டப் பெறும் வரையிலும்' புத்திலக்கியச் செல்வங்கள் போற்றப்படும் வரையிலும் வ.வே.சு. ஐயர் அவர்களுடைய திருப்பெயர் என்றென்றும் ஒளிவீசித் திகழும் என்பது திண்ணம்.

# தமிழ்த்தென்றல் திரு. வி. க.

தமிழ்நாடு செய்த தவப்பயனாய்த் தோன்றிய சான்றோர்கள் பலராவர். காலத்திற்குக் காலம் தமிழ் நாட்டில் தோன்றிவரும் சான்றோர்கள் தமிழ்மொழிக்கும், தமிழ்இனத்திற்கும், தமிழ் நாட்டிற்கும் நிலைத்த தொண்டினை ஆற்றியுள்ளனர். அவர்தம் திருப்பெயர்கள் நாட்டு வரலாற்றில் இடம்பெறும் அளவிற்கு அவர்களுடைய தொண்டு துலங்குவதால் அவர்கள் தமிழ் வாழும் அளவும், தமிழ் இனம் உள்ள அளவும் தமிழ்நாடு நிலைத்திருக்கும் அளவும் நினைவு கூரப்படுவர் என்பதில் ஐயமில்லை. தான் வாழும் ஊரிற் சான்றோர் பலர்—அதிலும் கொள்கைச் சான்றோர் பலர் வாழும் காரணத்தினாலேயே பிசிராந்தையார் என்னும் புலவர் பெருமான் தமக்கு வயது பல கடந்தும் நரையிலவாய்த் திகழ்வதாகச் சொன்னார். இந்த உலகம் தாங்கப்பெற்று வருவற்கே காரணம் சான்றோர் வாழ்வதனாலேயாகும் என்று திருவள்ளுவர் பெருமானும் குறிப்பிட்டுள்ளார்.

சென்ற நூற்றாண்டின் இறுதியில் சென்னையை அடுத்துள்ள துள்ளம் என்னும் சிற்றூரில் திருவாரூர்க் குடும்பம் ஒன்று வாழ்ந்தது. அக்குடும்பத்திற் பிறந்தவரே நம் திரு.வி. கலியாணசுந்தரனார். எளிய குடும்பத்திற் பிறந்து எளிமையிற் பற்றுக்கொண்டு வாழ்ந்த அவர்தம் பேச்சிலும் எழுத்திலும் செயலிலும் வாழ்விலும் உயர்வும் செம்மையும் புலப்பட்டன. அவருடைய பேச்சு இளைஞரையும் கவர்ந்தது; முதியோர்க்கும் விருந்தாயிற்று; அவர்தம் எழுத்து பீடும் பெருமிதமும் நிறைந்து தமிழ்

உரைநடை வரலாற்றில் தனித்ததோர் இடம்பெற்றுத் திகழ்கிறது.

இனி அவருடைய பீடு நிறைந்த பெருவாழ்வினையும், அவர் வாழ்நாளிலே அவர் ஆற்றிய தொண்டுகளையும் காண்போம்.

திரு வி, க. அவர்களின் உரைநடைத் தொண்டிற்கு முன் தமிழ்மொழி ஒலி குன்றி நின்றது. வேண்டாத சந்திச் சேர்க்கைகள், வடமொழிச் சொற்களையும் தொடர்புகளையும் வேண்டுமென்றே பயன்படுத்துதல், கருத்துத் தெளிவிற்கு முதன்மை தராத அலைவுப் போக்கு முதலிய வகைகளில் தமிழ் உரைநடை தடுமாறித் தவித்தது. இந்நிலையில் இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் திரு.வி.க எழுதிய நூல்கள் தமிழ் உரைநடைக்குப் புதுப் போக்கும் பொலிவும் தந்தது எனலாம்: தமிழ் உரைநடை தமிழ்த்தென்றல் திரு.வி.க. அவர்களால் ஊக்கமும் ஆக்கமும் பெற்றது. ஆங்கில உரைநடைக்கு ஒரு டிரைடன் (Dryden) வாய்த்தது போலத் தமிழ் உரைநடைக்கு வாய்த்தவரே திரு.வி,க.

திரு,வி.க. அந்நாளில் ஆங்கிலம் நன்கு பயின்றவர்; அண்ணல் காந்தியடிகள் தென்னாட்டுக்கு வருகை தந்த பொழுதெல்லாம் அவர் சொற்பொழிவாற்றிய கூட்டங்களில் இவர் மொழிபெயர்ப்பாளராக இருந்து உதவியிருக்கிறார். காந்தியடிகள் திரு.வி.க. அவர்களை 'மொழிபெயர்ப்பாளர்' (Translator) என்றே அழைப்பது வழக்கம். காந்தியடிகள் 'ஹரிஜன்' பத்திரிகையில் எழுதிய அரிய கருத்துக்களையெல்லாம் தாம் ஆசிரியராக இருந்து நடத்திய தேசபக்தன், நவசக்தி முதலிய இதழ்களில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். உரைநடை

யில் மூன்றுவகை உரைநடைகள் அவர்தம் எழுத்தில் பொருந்தியதாக அவரே எழுதியுள்ளார்.

> மொழிநடையும் அவரவர் இயற்கைக்கேற்ப வண்ணம் அமையும், இயற்கை அமைவைக் குறித்துப் போராட்டம் எதற்கு? என்னுடைய வாழ்க்கையில் மூவித நடைகள் மருவின. ஒன்று இளமையில் உற்றது; இன்னொன்று சங்க இலக்கியச் சார்பு பெற்றபோது பொருந்தியது; மற்றொன்று பத்திரிகை யுலகை அடைந்த நாளில் அமைந்தது. இறுதியே எனக்கு உரிய தாய்—உடையதாய்—நிலைத்தது. இந்நடை எளியது; சிறுசிறு வாக்கியங்களால் ஆவது. இந்நடையிலும் நூலுக்கேற்ற—காலத்துக் கேற்ற—அமைவுதானே பெறும்.

இவ்வாறாகத் தம் நடை குறித்தே குறிப்பிடும் திரு.வி.க. வின் எழுத்துகள் தமிழில் விளைவித்த மாற்றங்களை ஊன்றி நோக்கவேண்டும்.

திரு,வி.க. அரசியலிற் புகுந்த காலத்தில் அரசியல் மேடைகளில் தமிழ் இல்லை. அன்னைத் தமிழ் அரசோச்ச வேண்டிய இடத்தில் அன்னிய ஆங்கிலம் வீறுகொண்டு விளங்கியது. அரசியலில் ஈடுபட்டவர்களும் மேட்டுக்குடி சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாய்த் திகழ்ந் தார்கள். எனவே ஆங்கிலமே தனி ஆதிக்கம் செலுத்தி வந்த அரசியல் துறையிற் புகுந்து அன்னைத் தமிழ் அழகுடன் வளர அரும்பாடு பட்டார் திரு.வி.க. அவர் அந்நாளில் போகாத ஊர் இல்லை; ஏறாத மேடை இல்லை என்னும் அளவிற்கு அவர்தம் தொண்டு துலங் கியது. காலத்திற்கேற்பத் தேசபக்தியினை அவர்மாட்டும் திறங்கண்டு தெளிவோமாக.

தேசபக்தி என்பது கடவுள் பக்தியில் ஒரு கூறு. கடவுள் பக்தி என்பது ஒருத்தியும் ஒருவனும் கூடி வாழும் இல்லத்தினின்றும் அரும்புவது. பின்னை அது பல வழியில் பெருகிப் பெருகி முடிவில் எவ்வுயிர்க்கும் செந்தன்மை பூண்டொழுகும் ஒரு பெரும் நிலை கூட்டும். எவ்வுயிரையும் தன்னுயிரெனக் கருதித் தொண்டு செய்வது கடவுள் பக்தியாகும். இப்பக்தி பிற தேயங்களைத் துன்புறுத்துவதால் ஒருபோதும் விளையாது. கடவுள் பக்திக்குரிய பல திறப்படி களுள் ஒன்றாகவுள்ள தேசபக்தி, பிற தேசங்களை வருத்துவதற்கெனப் பயன்படுத்தப்பெறின், அது கடவுள் பக்தியில் கூறாகுங்கொல்: பிற தேசங்களிடம் பகைமை கொள்வது, கடவுள் பக்திக்குப் படியாயுள்ள தேசபக்தியாகாதென்பதை ஈண்டு மிக உரமாக வலியுறுத்துகிறோம்:

அரசியலில் தூய்மை காத்து, காந்தியத்தை மக்களுக்கு அறிமுகப்படுத்தியதில் தலையாயபங்கு திரு.வி க.விற்கு உண்டு. காந்தியடிகளுடைய கொள்கைகளைத் தமிழ் மக்களிடையே திரு வி.க. திறம்படப் பரப்பினார். அவருடைய 'மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்' என்னும் நூல் மனித குலம் படித்து உய்யவேண்டிய நூலென்று சொல்லலாம். திரு.வி.க. அவர்கள் குறிப்பிட்ட காலம் காங்கிரஸ் கட்சியில் இருந்து, நாட்டு விடுதலைக்குத் தொண்டு செய்து பின் கட்சி அரசியலிலிருந்து விலகினார்.

அரசியற் பணிகளிலும் சமுதாயப் பணிகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்ட திரு.வி.க. பெண்ணின் பெருமை துலங்க வேண்டும் என்பதற்காகத் தம் வாழ் நாளில் தொடக்கத்திலிருந்து முடியும் வரையிலும் உறுதி யான தொண்டாற்றிவந்தார். பெண்ணின் பெருமையைப்

புலப்படுத்துவதற்கே "பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத் துணை நலம்" என்னும் ஒப்புயர்வற்ற நூலினை எழுதினார். பெண்ணினம் என்றென்றைக்கும் இந்நூல் எழுதியவர் என்பதன் காரணமாக திரு.வி.க. விற்கு நன்றி செலுத்தும் கடப்பாட்டிற்குரியதாகும். 'பெண்மை'யைத் திரு.வி.க. விளக்கும் திறம் பாராட்டற் பாலது

> அடக்கம், பொறுமை, தியாகம், பாநலம், இரக்கம், அழகு, ஒப்புரவு, தொண்டு முதலியன அமைந்த ஒன்று பெண்மை எனப்படும். மண், நீர், காற்று, ஒளி முதலியன சேர்ந்து மரமாதல் போல, அடக்கம் முதலிய குணங்கள் சேர்ந்து பெண்மையாகின்றன. சிறுசிறு நீர்த்துளிகள் கலந்து பரந்த நீர் நிலை என்னும் பெயர் பெறுதல் போலவும், அடக்கம் முதலிய குணங்கள் ஒன்றி, அவை பெண்மை என்னும் பெயர் பெற்றன.

என்று விளக்குவதோடு தமிழ்ப் பெரியார் அவர்கள் நிற்க வில்லை. பெண்ணை எவ்வாறு பெற்றோர் இளமைக் காலந்தொட்டு வளர்த்து வர வேண்டும் என்பதற்கும் விளக்கமாகச் சில செய்திகளைச் செப்பமுறுகின்றார்.

> பெற்றோர் தமது பெண்ணிற்கு இளமையிலேயே இயற்கையைக் காட்டிக் காட்டி, ஆடல் பாடல்களை அறிவுறுத்துவது நல்லது. மரம், செடி, கொடி, மலை, நிலா, ஞாயிறு முதலிய இயற்கைப் பொருள் நினைவு தோன்றும் வழியில் பெண்ணை ஆடுமாறும் பாடு மாறும் பெற்றோர் வளர்த்தல் வேண்டும். தமது நாட்டில் பழைய தாய்மார் பனைப்பாட்டு, மலைப் பாட்டு, நிலாப்பாட்டு, வானப்பாட்டு, பறவைப்பாட்டு

முதலிய இயற்கைப் பாடல்களைப் பாடிப் பாடிக் குழந்தைகளைத் தாலாட்டுவது வழக்கம், இயற்கையைப் பற்றிய பல கதைகள் பாட்டிமார் சொல்வதுமுண்டு. திருடன்கதை, கொலைஞன் கதை, குடியன் கதை, பேய்க்கதை. அச்சமூட்டுங்கதை முதலிய ஆபாசக் கதைகளைக் குழந்தைகட்கு எவருஞ் சொல்லுதலே கூடாது மரஞ்செடி கொடிகள் அழகாக வளர்ந்து காய் கனிகள் தருவதையும், காற்று வீசுவதையும் ஞாயிறு ஒளி உமிழ்வதையும் காட்டி, 'இம்மரஞ்செடியும், காற்றும் ஞாயிறும் ஏதாவது பயன் கருதிக் கடன்களாற்றுகின்றனவா?' என்று பெற்றோர் அடிக்கடி இளம் பெண்ணுடன் பேசிப் பேசிப் பரோபகார சிந்தையை அவள் உள்ளத்தில் பெருக்குவாராக.

இதுபோன்றே மாணவச் செல்வங்கள் கல்வி பயிலத் தாய்மொழி வாயிலாகவே பாடங்களைக் கற்பிக்க வேண்டும் என்ற கருத்தையும் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

ஆங்கிலமென்பது ஒருநாட்டு மொழி. அம்மொழிப் பயிற்சியிலேயே கல்வியறிவுண்டு என்று கருதுவது அறியாமை. கல்வியறிவை எம்மொழி வாயிலாகவும் பெறலாம், கல்வியறிவிற்கு 'இம்மொழி' 'அம்மொழி' என்னுங் கட்டுப்பாடில்லை. ஜெர்மனி, பிரான்ஸ் முதலிய நாட்டிலுள்ளோர் தத்தம் தாய் மொழி விடுத்து. ஆங்கிலம் படித்தா கல்வி அறிவு பெறுகிறார்? புதுவைக்களுள்ள உள்ள தமிழ் மக்கள் ஆங்கிலம் கற்றா மேல்நாட்டுத் தத்துவங்களை உணர்கிறார்கள்? திருவள்ளுவர், இளங்கோ அடிகள், கம்பர்

சேக்கிழாா் முதலியோா் ஆங்கிலம் பயின்றா உலகம் போற்றும் காவியங்களை எழுதினாா்? ஆகவே, 'ஒரு நாட்டு மொழியே கல்விக் குடையது' என்று கொள்ள இயற்கையில் எந்நியதியுமில்லை என்பதை உணர்க. அவரவர் தத்தம் தாய்மொழியிலேயே கல்விபெறலாம். மாணவர்களின் நல்வாழ்வு குறித்துக் கவலை கொண்ட நெஞ்சினராய்த் திரு.வி.க அவர்கள் மாணாக்கா் உண்ண வேண்டிய உணவு குறித்தும் உன்னி உரைப்பனவற்றை நோக்கவேண்டும்.

உணவில் மாணாக்கர் பெருங் கவலை செலுத்தக் கடமைப் படல் வேண்டும், இரண்டு வேளை பொருந்திய உணவு கொள்வது சால்பு. ஒருநாளைக்கு நான்கு ஐந்து முறை சாப்பிடுவது நோய்க்குக் கால் கொள்வதாகும். காப்பி, டீ, ஒவல்டையன், புலால், தீட்டிய அரிசி முதலிய உணவுப் பொருள்கள் பொருந்தியனவல்ல. கைக்குத்தலரிசி, கீரை, மோர், பழம், தேங்காய், வாதுமை, நிலக்கடலை முதலிய வற்றை முறைப்படி அளவாக உண்பது நலன்

இவ்வாறு பெண்ணுலகு மேம்படவும், இளைஞருலகம் ஏற்றம் பெறவும் திண்ணமுற மொழிந்த திரு.வி.க. அவர்கள் சமயவுலகிலே காழ் கொண்டிருக்கும் வழக்குகளை, வேறுபாடுகளை, மாறுபாடுகளை அகற்றக் குறிக் கொள்கிறார். முதலாவதாக மணம், இளமை, கடவுட்டன்மை, அழகு முதலியன கொண்டதோா் பொருளாக முருகனைக் காண்கிறாா். 'முருகு என்னும் அழியா அழகை உணர்ந்தவர்பால் என்றும் மணமே கமழ்ந்து கொண்டிருக்கும்' என்று குறிப்பிட்டு வாழும் நெறியினை வகையற உணர்த்துகின்றார் திரு.வி.க. அது வருமாறு,

வைகறைத் துயிலெழுந்து, காலைக்கடனை ஒழுங்காக முடித்து, தன் புனலாடி, நறுங்காற்றில் மூழ்கி, ஞாயிற்றொளியிற் படிந்து, இயற்கை உணவு கொண்டு புறத்தை அழகு செய்தும், அழுக்காறு, வெகுளி, அவா முதலிய தீ நீர்மைகளைக் களைந்து, அன்பு அருள் அறம் முதலிய நன்னீர்மைகளை மணந்து, அகத்தை அழகு செய்தும் வாழும் ஒருவன் மீது இயற்கை மணங் கமழுமென்பது ஒருதலை, இவ்வாழ்வு பெறாத சோம்பரின் புறத்திலும் அகத்திலும் அழுகல் நாற்றம் வீசும். இயற்கை வாழ்வு நடத்தும் ஒருவனது உள்ளம் புறமும் முருகெனும் அழகு கோயில் கொள்கிறது. அழகுள்ள இடத்தில் புலால் முடைக்கு இடமேது? அழகில் மணமிருத்தல் இயல்பு.

இவ்வாறு முருகன் வழி இயற்கை வாழ்வில் தோய்ந்து இன்புறுதலைத் திரு.வி.க. வற்புறுத்தக் காணலாம். சமரச மனப்பான்மை கொண்ட திரு.வி.க. சமயத் துறையில் பொதுமையும் அறமும் விளங்க ஒரு புதுவழி கண்டவர் எனலாம். எச்சமயத்தையும் தாக்காது அதே நேரத்தில் அனைத்துச் சமயங்களையும் ஒப்பப் புகழும் அவர்தம் உரைத்திறம் கண்டு சாதிச் சழக்கும், சம்பிரதாயப் பிணக்கும், 'உன் தெய்வம் உயர்வு! என் தெய்வம் உயர்வு' என உரைக்கும் வேறுபாடும் நீங்கிப் பொதுமையறங் கண்டு தெளியலாம்; புதுமையறங்கண்டு பொலியலாம். என்று திரு.வி.க. கூறுகிறார்.

சத்தின் மார்க்கமாகிய இயற்கையோடியைந்து வாழ வேண்டுவது மக்கள் கடமை. அக்கடமையினின்றும் வழுவி நிற்பது சன்மார்க்கம் பற்றி நடப்பதாகாது. இந்நாளில் இயற்கை வாழ்வு செம்மை

நிலையில்லை என்பது வெள்ளிடைமலை. இயற்கை வாழ்வு அருக அருகக் கடவுள் நெறியெனுஞ் சன்மார்க்கத்துக்கும், மன்பதைக்குமுள்ள தொடர்பும் அறுந்து கொண்டே போகும். அத்தொடர்பிற்கு ஆக்கந்தேட அவ்வப்போது பெரியோர் தோன்றுவது வழக்கம். நமது தமிழ்நாட்டில் இற்றைக்கு ஒரு நூற்றாண்டுக்கு முன்னர் இராமலிங்க சுவாமிகள் தோன்றிக் காலதேச வர்த்தமானத்துக்கேற்ற முறையில் இயற்கை வாழ்வெனுஞ் சன்மார்க்கத்தை ஓம்பினார்.

இவ்வாறு சமயத் துறையில் பொதுமை கண்ட திரு.வி.க. அவர்கள் சமுதாயத் துறையிலும் ஓர் அமைதிப் புரட்சியை நடத்திக் காட்டினார். தமிழ்நாட்டில் மட்டுமின்றி ஆசியாவிலேயே முதன்முதலில் வாடியா என்னும் அன்பருடன் சேர்ந்து தொழிலாளர் இயக்கம் கண்டவர் திரு.வி.க. அவர்களே ஆவர்,

உலகின் உழைக்கும் சக்தியார். உலக மேம்பாட்டிற்கு உழைக்கும் சக்தியாய் வீறுடன் திகழும் தொழிலாளர் வர்க்கம் உழைத்துழைத்துப் பலன் காணாமற் போய் விடுகிறதே என்று எண்ணி அவர்தம் தொல்லைகள் தீர, துயர் மாய ஓர் இயக்கம் கண்டார். அவ்வியக்க மேம்பாட்டிற்கென அல்லும் பகலும் உழைத்தார். தொழிலாளர் தம் வாழ்க்கைத் தரம் உயர்ந்தால்தான் நாட்டின் வாழ்க்கைநிலை உயரும் என்று கண்டார். எனவே வீட்டுச் சிறை (House Arrested) அதுவும் அன்னிய ஆட்சியில் மட்டுமன்று; சுதந்திர இந்தியர் ஆட்சியிலும் என்னும் நிலைமையிலும் ஓயாதுழைத்தார்.

அடுத்து, அவர் எழுதிய 'வாழ்க்கைக் குறிப்புகள்' தமிழ்நாட்டின் ஐம்பதாண்டுக் காலச் சரித்திரமாய்த்

துலங்குகின்றது. பெரியார் தம் தொண்டினைத் திரு.வி.க. மொழியில் காண்போம்.

> இராமசாமி நாயக்கர் (பெரியார்) ஒத்துழையா இயக்கத்தில் உள்ளும் புறமும் ஒன்றுபடி உழைத்தவர். தமிழ்நாட்டில் கதரைப் பரப்பிய பெருமை அவருக்கே உண்டு. தீண்டாமைப் பேயையோட்ட அவர் பட்ட பாட்டை ஆண்டவனே அறிவன். அவர் வைக்கம் வீரராய் இலங்கியதை நாடறியும். நாட்டின் விடுதலையைக் குறிக் கொண்டு அவர் பலமுறை சிறை நண்ணியவர்.

இவ்வாறு தம் சம காலத்தே வாழ்ந்த முக்கியமான ஒவ்வொருவர் குறித்தும் திரு.வி.க. எழுதி வைத்திருக்கும் குறிப்புக்கள் வரலாற்றுப் பக்கங்கள் எனலாம்

இவ்வாறு பேச்சாளராயும், எழுத்தாளராயும், சமயத் தொண்டராயும், சமுதாய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவராயும், பெண்ணுரிமை பேணியவராகவும், இளைஞருநல கிறகு ஏற்றம் தந்தவராகவும் தொழிலாளர் இயக்கம் கண்ட தலைவராகவும் நாட்டு விடுதலைப் போரிற் பங்கு கொண்ட ஊழியராகவும் விளங்கிய திரு.வி.க. அவர்களிடத்திலே அனைத்திற்கும் மேலாகத் தமிழ் உரைநடையில் ஒரு புதுமை விளைவிக்க வேண்டும் என்ற வேட்கை இருந்தது. நாயன்மார் வரலாறு என்று பெரியபுராணத்தை யொட்டி அவர் எழுதிய நூல் எளிமையும் இனிமையுங் கொண்டு திகழ்கின்றது; பெரியபுராணத்தின் பிழிவாய்த் துலங்குகின்றது.

அவருடைய உரைநடையின் மாட்சியினை ஒரு சிறிது உணர்ந்து கொள்ள வேண்டுமெனிற் பின்வரும் பகுதி அதற்கு அரண் கோலுவதாயுளது.

> செம்பொன்னையுருக்கி வார்த்தாலெனக் காட்சியளிக்கும் அந்தி வான் செக்கரழகும், கொண்டல் கொண்டலாக ஓடும் புயலின் அழகும், அது பொழியும் மழையின் அழகும், அத்தன்புனல் மணற்கற்களை அரித்தோடும் அருவியின் அழகும், பச்சைப் பசேலெனப் பெருங்காட்சியளிக்கும் பொழில்களின் அழகும், அவைகளில் பச்சைப் பாம்பெனப் பின்னிக் கிடக்கும் பசுங்கொடிகளின் அழகும், அவைகளினின்றும் அரும்பியுள்ள நகை மலரின் அழகும், மக்கள் உள்ளத்துள்ள இன்ப ஊற்றைத் திறப்பனவல்லவோ? மயிலாடும் அழகும், மான் நடக்கும் அழகும், நந்தூரும் அழகும் புலவருக்கு விருந்தல்லவோ?

திரு.வி.க. அவர்கள் தம் கண்பார்வை இழந்த பிறகு உரைநடையைக் கைவிட்டுத் தம் கருத்துகளைச் செய்யுளில் வடிக்க முற்பட்டார். 'பொதுமை வேட்டல்', 'உரிமை வேட்கை அல்லது நாட்டுப்பாடல்', 'முருகன் அருள் வேட்டல்', 'திருமால் அருள் வேட்டல்', 'சிவனருள் வேட்டல்', 'கிறிஸ்துவின் அருள் வேட்டல்', 'புதுமை வேட்டல்', 'கிறிஸ்து மொழிக் குறள்' முதலான பல செய்யுள் நூல்களிலும் இவருடைய உயர்ந்த கருத்துக் குவியல்களைக் காணமுடியும்.

முடிவாக, 'தமிழ்ப் பெரியார்' என்றும், 'தமிழ்த் தென்றல்' என்றும், 'சாது முதலியார்' என்றும் 'இராயப்பேட்டை முனிவர்' என்றும் அழைக்கப்பெற்ற திரு.வி.க. அவர்களோடு பேரன்புடனும் பெரு மதிப்புடனும் நெருங்கிப் பழகி மகிழும் கேண்மை பெற்றிந்த பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கள், திரு.வி.க. பற்றிக் குறிப்பிட்டுள்ள கருத்துகளுடன் இப் பணியினை நிறைவு செய்வது பொருத்தமாகும்.

# உழைப்பால் உயர்ந்த அறிஞர்

'மு.வ.' என்ற பெயர் தமிழ்நாட்டில் ஒவ்வொரு தமிழ்க் குடும்பமும் அறிந்த பெயர். 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற வள்ளுவர் வாக்கிற்கு ஒள்ளிய உருவாய்த் தோன்றித் துலங்குபவர் நம் டாக்டர் அவர்களாவர். வடார்க்காடு மாவட்டத்திலே வாலாஜாரோடு புகைவண்டி நிலையத்திற்கு அண்மையிலுள்ள வேலம் என்னும் சிற்றூரே டாக்டர் அவர்களின் சொந்த ஊராகும் பேற்றினைப் பெற்றது. வாலாஜாபேட்டை. திருப்பத்தூர் நகராண்மை உயர்நிலைப் பள்ளிகள் இவர் கல்வி பயின்ற இடங்களாகும். திருப்பத்தூர் நகராண்மைக் கழக உயர் பள்ளியில் பெரும்பள்ளியிறுதி வகுப்புத் தேறினார்கள். நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னர் அப் பள்ளியில் இவர் களுடைய நிழற்படம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இஃதோர் சிறப்பன்றோ?

பள்ளிப் படிப்பைப் பாங்குற முடித்த டாக்டர் அவர்கள் அரசினர் அலுவலில் எழுத்தராகச் (clerk) சேர்ந்தார்கள். தமக்குத் தரப்பட்ட பணியினைச் செவ்வனே விரைவில் முடித்துவிடுவார்கள். கடமையைக் கருத்தோடு கடிதிற் செய்வதுகூட அக்காலை இவர்களுக்குப் பெருந் துன்பத்தினைத் தந்தது. இவர்கள் பணிபுரியும் திறமை இவர்களுக்கு மேலும் வேலைச் சுமையையே தேடித் தந்தது. ஞாயிற்றுக் கிழமைகளிலும், இரவிலும் ஓய்வில்லாத நிலைக்கு ஆளானார்கள். இதன் விளைவு அரசாங்கப் பணிக்கு ஒரு 'கால் கடிதம்' (Resignation letter)

என்று ஆனது. பிற்காலத்தில் தமிழ்த்துறையில் ஒரு பேரறிஞராகும் பேற்றினைப் பெற்ற டாக்டர் அவர்கள் தம் வாழ்வினை அரசாங்கத்தில். ஓர் எளிய பணியாளராகத் தொடங்கினார் எனும் பொழுது வியப்பேற்படுகின்றதன்றோ?

உலகப் போர் உச்சநிலையிலே இருந்த காலம் அது. ஆதலின் அரசினர்க்கும் ஆசிரியர் பணிக்கு ஆட்கள் கிடைக்கவில்லை. எனவே. ஆசிரியர் பணிக்கு வருவோர் ஈராண்டுக்குப் பதிலாக ஓராண்டு பயிலுவதே சாலும் என்று அரசினர் விதிமுறையைச் சிறிது தளர்த்தினர் ஆசிரியர் பணியிலே ஆர்வமும் அக்கறையும் கொண்டிருந்த டாக்டர் அவர்கள் நல்லதொரு வாய்ப்பினை நழுவ விடாமற் பயன் படுத்திக் கொண்டார்கள்; பயிற்சி முடித்த டாக்டர் அவர்கள் பள்ளி ஆசிரியர் பணியினைப் பாங்குற—வண்ண முறச் செம்மையுற ஆற்றினார்கள். அங்கிருந்தே ஊக்கமும் ஆக்கமும் கொண்டு அயராது உழைத்து. 'கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது தூக்கங் கடிந்து 1935ஆம் ஆண்டிலே சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்விலே பல்கலைக் கழகத்திலேயே முதல் மாணவராகத் தேர்ச்சிப் பெற்றுத் திருப்பனந்தாள் மடத்தின் ஆயிரம் ரூபாய் பரிசினைப் பெற்றார்கள். தமிழுலகிற்குத் தம்மை நன்முறையில் அறிமுகப்படுத்திக் கொண்ட நல்ல தொடக்கம் இதுவாக அமைந்தது. பின்னர் டாக்டர் அவர்கள் தமிழாசிரியர் பணியினை ஏற்றார்கள். படிப்படியாகப் பயின்று பீ.ஓ.எல். (B.O.L.) தேர்விலே முதல் வகுப்புத் தேர்ச்சி பெற்றார்கள். இவ்வளவிற்கும் டாக்டர் அவர்கள் குறிப்பிட்ட ஒரு கல்லூரியிலோ, பல்கலைக் கழகத்திலோ பயின்றவர்கள் அல்லர். தனிப்பட்ட முறையிலேயே பயின்று இத்தகு நிலைக்கு வந்துள்ளார்கள்.

யாழ்ப்பாணம் திரு. முருகேசப் பண்டிதர் அக்காலை இலக்கண இலக்கியங்களை நன்கு கற்றுத் துறைபோகிய வராக இருந்தார். அவரிடம் தமிழ் பயின்ற குடும்பத்தைச் சேர்ந்தவர் திரு. முருகைய முதலியாராவர். அன்னாரிடம் பாடங்கேட்கும் வாய்ப்பு டாக்டர் அவர்களுக்குக் கிட்டியது.

பி.ஓ எல். பட்டம் பெற்றதும் டாக்டர் அவர்கள் 1939 ஆம் ஆண்டில் பச்சையப்பன் கல்லூரியில் தமிழாசிரி யராகச் சேர்ந்தார்கள். இப் பணியினை இவர்கள் பெறுவதற்குத் துணைநின்றவர்கள் அதுகாலையில் பச்சையப்பன் அறநிலையக் குழுவிலே உறுப்பினராக விளங்கி இன்று சென்னைப் பல்கலைக்கழகத்தின் சிறப்பினை அவனியெலாம் அறியச் செய்யும் துணை வேந்தர் டாக்டர் இலட்சுமணசுவாமி முதலியார் அவர்களே ஆவர். இவர்கள் தமிழாசிரியராகப் பணி ஏற்ற பிறகே தமிழ்ச் சிறப்பு வகுப்புக்கள், ஆனர்சு வகுப்புக்கள் முதலியனவெல்லாம் இக் கல்லூரியில் தொடங்கப்பெற்றன. காலஞ் சென்ற பேராசிரியர் மோசூர் திரு. கந்தசாமி முதலியார் அவர்கள் அதுபொழுது தமிழ்த்துறைத் தலைவராக விளங்கினார் கள். அவர்கள் டாக்டர் அவர்கள்பால் நிறைந்த அன்புடையவர்கள். கல்லூரிப்பணி முடிந்த பின்னருங்கூட நீண்டநேரம் தம்மோடு இருத்தி இவர்களோடு உரை யாடிக் கொண்டிருப்பார்களாம். அவர்கள் அன்புக் கட்டளையை மீற முடியாமல் தலைக்குத் தலைப்பாகை அணிந்து, நெற்றியில் சந்தனப் பொட்டு இட்டு டாக்டர் அவர்கள் கல்லூரிக்கு வந்திருக்கின்றார்கள். தலைமைக்குச் சிறப்புக் கொடுக்கும் பண்பு டாக்டர் அவர்களிடத்தே எப்பொழுதும். பச்சையப்பன் கல்லூரி பல்வேறு துறை களிலும் இவர்கள் முன்னேற வாய்ப்பினைத் தந்தது. அந்த

நன்றியினை இவர்கள் இன்றுவரையில் மறந்தவர்கள் அல்லர். பச்சையப்பன் உணர்வு, இவர்கள் நெஞ்சில் பசுமையுறத் திகழ்கின்றது.

பல்வேறு பொதுநலப் பணிகளுக்கிடையிலும் டாக்டர் அவர்கள் முயன்று ஆராய்ச்சி செய்து வினைச் சொற்களைப் பற்றியதோர் ஆராய்ச்சிக் கட்டுரையினை எழுதி எம். ஓ. எல். (M.O.L) பட்டம் பெற்றார்கள் அடுத்து, 1948 ஆம் ஆண்டிலே சங்க இலக்கியத்தில் இயற்கை (The treatment of nature in Sangam Literature) என்ற ஆய்வு நூலினை எழுதி 'டாக்டர்' (Ph.D) பட்டம் பெற்றார்கள். சென்னைப் பல்கலைக் கழகத்தில் முதன் முதலில் தமிழ்த் துறையில் டாக்டர் பட்டம் பெற்றவர்கள் நம் டாக்டர் அவர்களே ஆவர். அத் தனிப்பட்ட சிறப்பும் பெருமையும் டாக்டர் அவர்களையே சாரும்.

**"உழைப்பின் வாரா உறுதிகள் உள்வோ?"**

தமிழாசிரியர்கள் என்றவுடனே முன் காலத்தில் பொதுமக்கள் புரிந்துகொள்ள முடியாத பண்டிதத் தமிழிலே எழுதியும் பேசியும் வந்தவர்களே நினைவிற்கு வருவர். எனவே, தமிழாசிரியர்கட்கும் பொதுமக்களுக்கும் இடையிலே ஒரு பெரிய இடைவெளி இருந்துகொண்டு வந்தது. அந்த இடைவெளியினை இல்லையாகச் செய்தார் நம் டாக்டர் அவர்கள். மக்கள் புரிந்து கொள்ளக்கூடிய எளிய இனிய அழகுத் தமிழில் எண்ணற்ற நூல்களை எழுதித் தமிழாசிரியர்களும் மக்களிலே ஒருவர், மக்களுக்காக எழுதுபவர்கள், பேசுபவர்கள் என்கின்ற எண்ணத்தை, உணர்வினைத் தோற்றுவித்தவர்கள் இவர்களே, புது மெருகு கொடுத்துப் புதுவழியினைப் புகுத்திய பெருமைக்குரியவர்கள் இவர்களே.

இதற்குமுன் வாழ்ந்த தமிழாசிரியர்களில் சிலர் இலக்கியப் புலமையிற் சிறந்தவர்களாயிருப்பர்; சிலர் இலக்கணக் கடலுக்கு எல்லை தேர்ந்தவர்களாயிருப்பர்; சிலர் மொழி நூற்றுறையில் முற்றுமறிந்தவர்களாயிருப்பர்; சிலர் இலக்கியத் திறனாய்வில் தேர்ந்தவர்களாயிருப்பர்; சிலர் இலக்கியச் சொற்பொழிவுகளாற்றுவதில் ஈடு இணையற்றவர்களாயிருப்பர்; சிலர் இலக்கிய இன்பத்தை எடுத்து மொழிவதிலே ஏற்றம் பெற்றவர்களாயிருப்பர்; சிலர் ஒரு சில இலக்கியங்களிலே மட்டும் ஈடுபாடு கொண்டு திளைப்பர்; சிலர் ஒரு மொழி மட்டுமே தெரிந்து பிறமொழி இலக்கியங்களின் கீர்த்தியினை அறியமுடியாதவராயிருப்பர்; சிலர் புதியன படைக்கும் ஆற்றல் இல்லாதவராயிருப்பர். இவ்வாற்றல்கள் அனைத்தும் ஒருசேரப் பெற்றவர்களைக் காண்பது அரிதினும் அரிதே. எல்லாத் துறை ஆற்றலும் இணைந்து, நிறைந்த பயிற்சியும் ஆற்றலும் குறைவற அமைந்து, வளர்ந்துவரும் உலகிற்குப் புத்திலக்கியங்களைப் படைத்தளிக்கும் செம்மை சான்ற திறனும் பெற்று நிறைந்தொளிர்பவர் நம் டாக்டர் அவர்கள் ஆவர்.

டாக்டர் அவர்களை நான் மாணவன் என்ற நிலையிலும், அவர்கள்கீழே பணியாற்றிய ஆசிரியன் என்ற முறையிலும் அவர்களை நெருங்கி நன்கு அறிந்துள்ளேன். மாணவனாக நான் அறிந்த சிலவற்றை ஈண்டுக் குறிக்கின்றேன். வகுப்பறையில் டாக்டர் அவர்கள் பாடஞ் சொல்லித் தருகின்றபொழுது, மாணவர்கள், மனம் இப்படியும் அப்படியும் செல்லாத வழி ஒருமுகப்பட்டு, ஒருமனப்பட்டு விருப்புடன் கேட்பர்; 'பகமரத்தாணி யெனப் பதியுஞ்' சொற்களால் செஞ்சொல் விருந்தளிப்பார்கள்; கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி

அவர்கள். இலக்கியச் செவ்வியினை எடுத்து நயம்படக் கிளத்திக் கூறுவதில் டாக்டர் அவர்கள் வல்லவர். சங்க இலக்கியத்தின் சாரத்தைப் பழகு தமிழில் பாங்குற எடுத்து மொழிவார்கள். சங்கப் பாடல்களுக்கு அவர்கள் விளக்கம் சொல்லும்பொழுது மாணவர்தம் மனத்திரையில் சொல்லோவியமாக அவை விரியும். மனம் சங்க காலத்திற்கே பறந்து செல்லும். இலக்கியத்தைத் தாமும் சுவைத்து பிறரையும் சுவைக்கவைப்பார். சங்க இலக்கியப் பாடத்தினைப் பயிற்றுவிக்கும்பொழுது சின்னேரம் தலைவியாகவும், தலைவனாகவும், தோழியாகவும், பாங்கனாகவும், செவிலியாகவும் நின்று கவிதைநலங் கெழுமிய செஞ்சொல்லோவியங்களிலே திளைத்தெழுந்து 'அடிக்கரும்பு அயின்றன்ன' முறையில் சுவை நலத்தை வெளிப்படுத்துகின்றபொழுது அதன் வயப்படாத நெஞ்சமும் உண்டோ? அவர்கள் பேச்சில் செவ்விய சொற்களே அமையும்; கருத்தலைகள் மோதும்; மலையருவியெனக் கொட்டும். கருத்தோட்டத்தில் மாணவர் திக்குமுக்காடலாம்; கருத்தருவியில் நீந்தித் திளைக்கலாம். எப்பொருளையும் நுணுகிக் கண்டு ஆழ்ந்து சிந்தித்துத் தெளிந்த கருத்தினை வெளிப்படுத்தும் பேராற்றல் படைத்த கருத்துச் சிற்பி டாக்டர் அவர்கள் ஆவர், இதற்குக் குறுந்தொகையில் வரும் 'கொங்குதேர் வாழ்க்கை' எனத் தொடங்கும் இறையனார் பாட்டு. கரந்தைப்புலவர் கல்லூரியில் ஒரு முழுப்பேச்சாக ஒரு நூலாக உருவெடுத்துள்ளதனையும், அகநானூற்றின் ஒருபாட்டு 'ஓவச் செய்தி' எனும் அரியதோர் ஆராய்ச்சி நூலாகி அரசாங்கப் பரிசினைப் பெற்றிருப்பதனையும் காட்டலாம்.

டாக்டர் அவர்களுக்குத் தமிழைத் தாழ்த்திப் பேசினால் பொறுக்காது. தமிழைத் தாழ்த்தித் தகாத

முறையிலே பிற மொழிக்கு ஏற்றந் தந்தால் மனம் ஏற்காது; பொறுக்காது; மாறாக மனங் கொதிக்கும். ஒரு முறை வகுப்பில் மொழிநூற் பாடம் நடத்திக்கொண்டு வருகின்றபொழுது 'அன்றியும் தமிழ்நூற் களவிலை ஆயின் ஐந்தெழுத்தால் ஒரு பாடையென்று அறையவும் நாணுவர் அறிவுடையோரே' என்ற இலக்கணக் கொத்து ஆசிரியர் சாமிநாத தேசிகர் பாடல் வந்தது. அவ்வளவு தான்! சீற்றத்தின் எரிமலையானார் டாக்டர் அவர்கள். தமிழ்நாட்டுச் சோறும் பருப்பும் நெய்யும் தின்றுவிட்டுத் தமிழுக்கு மாறாக, தமிழர்க்கு இழுக்குத் தேடும் வகையில் வாழ்ந்த இவரும் தமிழ்நாட்டில் வாழும் இடம் பெற்றாரே என்று அலமந்தார்கள்; மனம் வருந்தினார்கள் அவர்களின் மொழிப்பற்றுத்தான் என்னே!

டாக்டர் அவர்கள் மாணவர்களோடு மனங்கலந்து பேசுவார்கள் அவர்தம் குடும்பக் குறைகளையெல்லாம் கேட்டு ஆறுதல் கூறுவார்கள் இயன்றவரை சொல்லாலும் பொருளாலும் உதவுவார்கள். அவர்கள் உதவியினைப் பெறாத மாணவரே இரார் என்பது திண்ணம். மாணவர் கள் முகத்தைக் கொண்டே அகத்தை அறிவார்கள் ஆவன கூறித் தேற்றுவார்கள். தேர்வுக் காலங்களிலே மாணவர்களைச் சந்திக்க நேர்ந்தால் உடல் நலத்தைக் கண்ணுங் கருத்துமாக ஓம்பவேண்டும் என்று கூறுவார்கள். 'செம்மை சிறக்க அகத்தும் புறத்தும்' என்பதே அவர்களின் விழுமிய கொள்கையாகும்.

டாக்டர் அவர்கள் 'வினையே ஆடவர்க்குயிரே' என்று குறுந்தொகைக் கோட்பாட்டின் வழி நின்றவர்கள். ஒரு செயலை எண்ணித் துணிவர்; துணிந்தபின் செயலாற் றாமல் இருக்கமாட்டார்கள்; செய்வன திருந்தச் செய்வார் கள். ஒரு குறிப்பிட்ட செயலை—கடமையைச் செய்து

முடிக்காமற்போனால் அவர்கள் மனம் அமைதியுறாது; முகத்தில் மகிழ்ச்சி தோன்றாது என்னவோபோல் இருப்பார்கள். கடமை முடிந்த பின்னரே அவர்கள் நெஞ்சில் களிப்பு களிநடம் புரியும். ஷாவின் எழுத்துக்களை, ஆங்கில இலக்கியங்களை விரும்பிப் படிப்பார்கள். தாம் படிக்கின்ற பொழுது இடையே வருகின்ற அரிய கருத்துகளை, சுவையான செய்திகளை அங்கே உடனாசிரியர்கட்கும் படித்துக் காட்டி அவர்களையும் மகிழச் செய்வார்கள். அவர்களைச் சுற்றி எப்பொழுதும் ஆசிரியர் கூட்டம் இருப்பதைக் காணலாம். அவர்களைத் தன்னந்தனியே காண்பதென்பது அருமையிலும் அருமை. அவர்கள் இருக்குமிடம் 'கலகலப்பாக' இருக்கும். அவர்களும் வாய்விட்டுச் சிரிப்பார்கள்; மற்றவர்களையும் மனமகிழச் சிரிக்கச் செய்வார்கள்; சிந்திக்கச் செய்வார்கள். அவர்கள் கருத்தருவியில் நிற்பது 'சீசன்' சமயத்தில் குற்றால அருவியில் குளிப்பதுபோல் இருக்கும். அவர்கள் பேச்சில், ஆழ்ந்த சிந்தனைக்குரிய கருத்துகள் எப்பொழுதும் வந்து விழுந்தவண்ணமாகவே இருக்கும். தோண்டத் தோண்டச் சுரக்கும் நீரூற்றேபோல் அவர்கள் பேச்சில் நெஞ்சாழத்திலிருந்து கருத்துகள் பிறந்து குதித்தோடி வந்த வண்ணமே இருக்கும்.

டாக்டர் அவர்கள் பல்கலைக் கழகங்கள் பலவற்றோடும், தமிழ் வளர்ச்சி நிறுவனங்களோடும், 'சாகித்ய அகாடெமி' யோடும் தொடர்பு கொண்டுள்ளவர்கள். கல்லூரியில் 1939 ஆம் ஆண்டிலிருந்து 1961, ஜூலை 31-ஆந்தேதி வரை ஏறத்தாழ இருபத்திரண்டு ஆண்டுகள் நற்றொண்டாற்றினார்கள். இருபத்திரண்டு ஆண்டுகளில், பதினைந்து ஆண்டுகளில் ஒருநாள்கூட விடுமுறை எடுத்துக் கொண்டதில்லை என்பதை எண்ணிப் பார்க்கின்ற பொழுது நம்மால் வியக்காமலிருக்க முடிவதில்லை. கல்லூரிப் பணிக்குப் பின்னரே பிற பணிகள் என்பதைக்

கருத்திலே கொண்டு அதனைப் பல்லாற்றானும் செயற் படுத்தியவர்கள் டாக்டர் அவர்கள் ஆவர்.

ஐந்தாம் தமிழ்விழா சென்னையில் நடந்தபொழுது 'சங்க இலக்கியம்' எனும் பொருள் குறித்து நம் டாக்டர் அவர்கள் 'சொற்பெருக்காற்றினார்கள். இலக்கிய அரங் கிற்குத் தலைமைவகித்த அந்நாள் இலங்கை அரசாங்க அமைச்சர் திரு. சு. நடேசன் அவர்கள், டாக்டர் அவர் களைத் 'தமிழ்நாட்டின் இலக்கிய நோபெல் பரிசாளர்; என்று அவையோர்க்கு அறிமுகப்படுத்தினார்கள்.

டாக்டர் அவர்களுக்குத் தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்களிடத்தில் மதிப்பு மிகுதி. இளமைதொட்டே அவர்மாட்டுப் பேரன்பு கொண்டு நெருங்கிப் பழகி வந்தார்கள். அவர்கள் பேசும் கூட்டங்களில் இவர்களை முன்வரிசையில் நிச்சயம் காணலாம். எக்கருத்துகளை யும், சிறப்பாக அரசியற் கருத்துகளையும் பழகு தமிழில் எளிமை. இனிமை செறிவோடு பேச முடியும் என்பதை நாட்டுக்கு முதன் முதலில் எடுத்துக்காட்டியவர் திரு வி.க. அவர்கள்தாம் என்பது டாக்டர் அவர்கள் துணிபாகும்.

திரு.வி.க. அவர்களின் நினைவாக இவர்களின் பெரு முயற்சியால் சென்னாய் நகரில் தொடங்கப் பெற்றிருக்கும் திரு.வி.க. உயர்நிலைப்பள்ளியின் நிர்வாகக் குழுவில் ஒருவராக இருந்து திறம்படப் பணியாற்றி வருகிறார்கள்' முன்னர்ப் பொதுக்கூட்டங்களிற் பேசி அதன்மூலம் நன்கொடை வசூலித்துப் பெரும்பொருள் தந்தார்கள், இப்பொழுது தம் வருவாயின் ஒருபகுதியை ஆண்டு தோறும் அளித்து வருகின்றார்கள். அது மட்டுமன்றி. தம் நூல்கள் சிலவற்றின் வருவாயினை அப்பள்ளிக் கென்றே ஒதுக்கி வைத்துள்ளார்கள்.

பெனெடிக்ட் (Benedict) என்பவர் ஓர் யாழ்ப் பாணத்து ஓவியர்; தமிழ்நாட்டில் வாழும் அறிஞர்களையும் கலைஞர்களையும் நேரிற் கண்டு படம் வரைந்து செல்ல வேண்டும் என்று கடல் கடந்தும் வந்தவர். அவரவர் களைப் பார்த்துச் சித்திரங்கள் வரைந்தபொழு அவர்களைப் பற்றித் தாம் கொண்ட எண்ணத்தினையும் அவர் எடுத்தியம்பியுள்ளார். அவர் டாக்டர் அவர்களையும் கண்டார் : சித்திரம் வரைந்தார் : தம்கருத்தையும் கூறியுள்ளார். அது "கிரகித்து உணரும் ஆற்றல் படைத் தவர் வருமாறு : திரு. மு. வரதராசனார். வீர உணர்ச்சி நிறைந்தவராகவும் அதே சமயத்தில் சட்டத்திற்குப் புறம் பாகப் போகாதவராகவும் இருப்பார் இவர் மற்றவர்களை ஆளக்கூடிய தன்மை இவரிடம் புலப்படுகிறது. வாழ்க்கைப் போக்கு சுத்தமாக இருக்கும். கோபம் வெகு வேகமாக வரும்; வெகு வேகமாக மறையும். விவாதம் எழும்போது, விட்டுக்கொடுக்க மாட்டார் இவர் தத்துவக் கருத்துக்களை ஆராய்வதில் ஆர்வமும் திறனும் கொண்டவராக இருப்பார்."

டாக்டர் அவர்கள் இருபது ஆண்டுகளுக்கு முன்னர் எழுதிய கள்ளோ காவியமோ? எனும் நாவல் இன்றும் எத்தனையோ மக்களின் நல்வாழ்வுக்கு உறுதுணையாக நிற்கின்றது. எத்தனையோ மணமக்கள் அதனாற் பெரும் பயன்பெற்றுத் தங்கள் வாழ்க்கையில் செம்மை துலங்குவ தாக அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். கடிதங்களுக்குத் தாமே பதில் எழுதுவார்கள்; பிறர் எழுதித் தாம் கையெழுத்திடுவதென்பது இவர்களிடம் கிடையாது. இவ்வளவு புகழ் பெற்றும் பணிகள் மிகுந்தும் இவர்கள் தமக்கென்று ஓர் உதவியாளரை இதுநாள்வரை வைத்துக்கொள்ளவில்லை. மக்கள் வாழ்விலே எளிமை வேண்டும். அதுவும் அஃது ஆசிரியர் வாழ்விலே பெரிதும்

வேண்டும் என்று எண்ணுபவர்கள் டாக்டர் அவர்கள். இவர்களுடைய எழுத்துக்கள் அற வாழ்வில் நம்பிக்கையை ஊட்டுகின்றன. "தமிழர்கள் நல்லவர்களாக மட்டும் இருந்தால் போதாது; வல்லவர்களாகவும் வாழவேண்டும்" என்பது இவர்கள் கருத்து. தமிழர் தம் சமுதாயத்தினை ஒரு புதுவழியிற் கொண்டு செல்கின்றது. அவர்களுடைய வாழ்க்கையிலே—அறவழியிலே—பெருநம்பிக்கை வைத்து அவர்களுடைய வாழ்க்கையினை ஓர் வழிகாட்டியாகக் கொண்டு எண்ணற்ற இளைஞர்கள் ஆசிரியர்கள், அறிஞர் கள். மக்கள், வாழ்வும் வளமும் பெற்றுவருகிறார்கள். மு வ, என்று அவர்கள் கருத்துகளைப் பின்பற்றும் ஓர் சமுதாயமே வளர்ந்து வருகின்றது. அச் சமுதாயத்திற்கு உடனடி வெற்றியில் நம்பிக்கையில்லை; மெல்ல மெல்ல ஊறி என்ஞான்றும் நின்று நிலவும் வெற்றியிலே—அறத்தின் வெற்றியிலே—வள்ளுவத்திலேதான் உறுதியான நம்பிக்கை அந்த நம்பிக்கை ஒருநாளும் வீண்போகப் போவதில்லை.

டாக்டர் அவர்கள் பேச்சில் விருப்பம் செலுத்துவதில்லை; எழுத்தே அவர் தம் பணி. அவர்கள் பேச ஒப்புக் கொள்வதில்லை என்று பலருக்கு மனக்குறை; "பேச்சு உடனடி உணர்ச்சியைத் தந்து உடனடியாகவே மறைந்து விடுகிறது. எழுத்தோ என்றும் நின்று நிலவுகிறது; எதிலும் உடனடி வெற்றி அவசியம் இல்லை" என்பது டாக்டர் அவர்கள் கருத்து.

டாக்டர் அவர்கள் ஓர் இயற்கை மருத்துவர்; தமக்கு நோய் வந்துற்ற காலையில் மருந்துண்ணார்கள்; இயற்கை முறையினை மேற்கொண்டு நலம் பெறுவார்கள் மற்றவர் நோய்க்கும் சில பரிகாரங்கள் கூறுவார்கள். இவ்வாறு

சின்னேரங்களில் டாக்டர் அவர்கள் உள்ளத்திற்கு மட்டு மன்றி உடலுக்கும் 'மருத்துவ' ராக விளங்குவார்கள்.

டாக்டர் அவர்கள் எழுதியுள்ள நாவல்கள் பலவும் சமுதாயத்தைச் சீர்திருத்தஎழுந்தவைகளாகும். அவற்றில் சம்பவங்களைவிட உரையாடல்களும், மனவியலும், தத்து வங்களும் மண்டிக்கிடக்கும். ஷாவின் எழுத்துக்களிலும் இதனையே காணலாம். 'அல்லி' 'அகல் விளக்கு' எனும் இவர்கள் நாவல்கள் செல்லரித்துப்போன ஆண்கள் சமுதாயத்தினைச் சீர்திருத்த வல்லன; 'பெற்றமனம்' தாய்மை யன்பைத் துலக்குவது; காலஞ் சென்ற கல்கி அவர்கள் நெஞ்சைத் தொட்டது 'மலர்விழி' எனும் நாவல் வாழும் சிறந்த நாவலாசிரியராம் அகிலனின் கருத்தைக் கவர்ந்தது 'கயமை' எனும் நாவலாகும். 'நெஞ்சில் ஒருமுள் மக்கள் நெஞ்சில் நிலைத்து நிற்கிறது. அண்மையில் வெளி வந்துள்ள 'மண் குடிசை' விழுமிய கருத்துக்களைத் தாங்கி நிற்கிறது. இவர்களுடைய நாவல்களைப் பற்றிய தோர் ஆராய்ச்சி அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர் ஒருவரால் ஆராய்ச்சிப் பட்டத்திற்கென்று செய்யப்பெற்று வருகின்றது.

காந்தியடிகளின் வாழ்விலும் தொண்டிலும் டாக்டர் அவர்களுக்கு ஈடுபாடு உண்டு. காந்தியண்ணலின் வாழ்வு கொண்டே திருக்குறளின் அறத்துப்பாலை உணர்ந்ததாக டாக்டர் அவர்கள் கூறுவார்கள். 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்' அதன் விளைவே. இவர்களுடைய 'திருக்குறள் தெளிவுரை' தான் இதுவரையிலே தமிழில் வெளியான நூல்களில் அதிகப் பிரதிகள் விற்பனையான நூலாகும். இதுவரை இரண்டு லட்சத்திற்கு மேலே விற்பனையாகியிருக்கின்றது.

பிறர்வரலாறு (Biography) எழுதுவதிலே ஒரு புது முறையினைப் புகுத்தினார் டாக்டர் அவர்கள். இதனைக் 'காந்தியண்ணல்' 'கவிஞர் தாகூர்' 'பச்சையப்பர்' முதலிய நூல்களில் காணலாம்.

சங்க இலக்கியத்தில் இவர்களுக்கு நிறைந்த பயிற்சி உண்டு. அப்பயிற்சியினை நற்றிணை விருந்து, நற்றிணைச் செல்வம், குறுந்தொகை விருந்து, குறுந்தொகைச் செல்வம், நெடுந்தொகை விருந்து, நெடுந்தொகைச் செல்வம் மணல் வீடு, நடை வண்டி, தமிழ் நெஞ்சம், புலவர் கண்ணீர் முதலிய நூல்களிற் காணலாம்.

இலக்கியத் திறனாய்வுத் துறையில் தமக்கென ஓர் இடம் வகுத்துக் கொண்டவர்கள் டாக்டர் அவர்கள். அவர்களின்' இலக்கியத்திறன்: 'இலக்கிய மரபு; 'இலக்கிய ஆராய்ச்சி' முதலிய நூல்கள் திறனாய்வுத் திறம்பற்றி எழுந்தன. 'ஓவச் செய்தி', 'மாதவி', 'கண்ணகி' 'இளங்கோவடிகள்' இந்நான்கும் திறனாய்வு முறையில் மேலை நாட்டுத் திறனாய்வோடு போட்டியிடக்கூடியன.

மொழியியல் துறையிலும் டாக்டர் அவர்கள் பெருந்தொண்டாற்றியுள்ளார்கள். முதற்கண் தெளிந்த முறையிலே மொழிநூற் கருத்துகளை எழுதினார்கள். 'மொழி நூல்', 'மொழி வரலாறு', 'மொழிநூற் கட்டுரைகள்,' 'எழுத்தின் கதை', 'சொல்லின் கதை', மொழியின் கதை' முதலிய நூல்கள் பின்வந்தோருக்கு அத்துறையில் வழி காட்டிகளாய் அமைந்தன.

சிறுகதைத் துறையில் டாக்டர் அவர்கள் வழி புரட்சியானது; ஒரு சிறு சம்பவம். ஒரு குறிப்பிட்ட சிறு நிகழ்ச்சி இவற்றைக் கொண்டே நெஞ்சைத் தொடும் வண்ணம்— உலுக்கிப் பிழியும் வண்ணம் சிறந்த சிறு கதைகளைப்

படைத்திருக்கின்றார்கள். 'விடுதலையா?' குறட்டை ஒலி' இவற்றில் இவர்களுடைய கைவண்ணத்தைக் காணலாம்.

கடித இலக்கியத் தொடரைத் தோற்றி அதற்கு வாழ்வும் வளமும் தந்தவர்கள் இவர்களே. இவர்கள் எழுதிய 'தங்கைக்கு', 'தம்பிக்கு', 'நண்பர்க்கு', 'அன்னைக்கு' ஆகிய நூல்கள் இன்று பல பத்திரிகைகளில் வரும் கடிதத் தொடருக்குத் தொடக்க விழாச் செய்தன.

நல்ல நாடகங்கள் பல தமிழில் வரவேண்டும் என்பதிலே இவர்களுக்கு ஆர்வம் அதிகம் தமிழ் அத்துறையில் இன்னும் தயங்கிய வண்ணம் உள்ளது என்பது இவர்கள் கொள்கை. எனவே. சொற்பொழிவிற்குச் செல்ல மறுக்கும் இவர்கள். நாடகத்திற்குத் தலைமை வகித்துப் பாராட்டிப் பேசவேண்டும் என்று யாரேனும் அழைத்தால் அதற்கு மட்டும் தயங்காமல் ஒப்புக்கொள்கிறார்கள். இது நாடகத்தமிழ் வளரவேண்டும் என்று இவர்கள் கொண்டுள்ள தண்டாத வேட்கையினை வெளிப்படுத்துகின்றது! 'மனச்சான்று', 'காதல் எங்கே?', 'மூன்று நாடகங்கள்', 'இளங்கோ' முதலிய நாடக நூல்கள் நாடக தமிழிற்கு இவர்கள் வழங்கிய பங்காகும். இவர்களின் நாவலான அல்லி' திரு டி. கே. கணபதி என்பவரால் 'டாக்டர் அல்லி' என்ற தலைப்பில் நாடகமாக்கப்பட்டு நடிக்கப் பெற்றது. டாக்டர் அவர்களின் 'பெற்ற மனம்; தமிழிலும் தெலுங்கிலும் திரைப்படமாக வெளி வந்துள்ளது.

நாட்டுப்பற்றிலும் மொழிப் பற்றிலும் டாக்டர் அவர்கள் தலையாயவர்கள். இதனை அவர்கள் நூலான 'நாட்டுப்பற்று' 'மொழிப்பற்று' என்பவற்றில் காணலாம். 'அறமும் அரசியலும்' 'அரசியல் அலைகள்' 'கி பி. 2000' முதலியன அரசியல் தெளிவை உண்டாக்குவன. 'கல்வி',

'உலகப்பேரேடு' முதலியன கல்வி வளர்ச்சியிலும் சமுதாய வளர்ச்சியிலும் கருத்துகொள்வோருக்கு நல்விருந்து.

டாக்டர் அவர்களுக்குச் சங்க இலக்கியங்கள். திருக்குறள், சிலப்பதிகாரம், தேவாரம், திருவாசம், திருவருட்பா தாயுமானவர் பாடல்கள் இவற்றில் நிறைந்த அளவிற்கு ஈடுபாடு உண்டு. தனியானதோர் இடம்நாடித் தம்மை மறந்து வாய்விட்டு இசையுடன் இந்நூல்களையெல்லாம் படிப்பார்கள். டெல்லிக்குச் சென்று இரயிலில் திரும்பி வர நேர்ந்தால் வட நாட்டு நண்பர்களும் விரும்பிக் கேட்கும் வண்ணம் திருவாசகத்தை இசையோடு ஓதுவார்கள். திருவாசகத்தில் அகவல் பகுதி தவிர மற்ற அனைத்தும் இவர்களுக்கு மனப்பாடம், அண்மையில் இரஷ்யாவிற்கு இந்தியப் பண்பாட்டுக் குழுவில் ஓர் உறுப்பினராகச் சென்ற காலையில் இவர்கள் தம்மோடு எடுத்துச் சென்றது தாயுமானவர் பாடல்களாகும். சுவாமி இராமதீர்த்தரின் 'In the woods of God-realisation' என்ற நூற்றொகுதியில் இவர்கள் விரும்பிப் படிக்கும் நூலாகும். அவர்தம் அறவுரையினை நாள்தோறும்படிப்பார். தெய்வ நம்பிக்கை கொண்டு காலையில் எழுந்ததும் இறைவனை எண்ணிக் கசிந்து பாடியே பிற பணிகளைக் கவனிப்பார்கள். மன அமைதியற்ற நேரங்களிலெல்லாம் தியானத்திலேயே இவர்கள் மனம் பெரிதும் செல்லும். சமயத்தைப்பற்றி இவர்கள் கொண்டுள்ள தெளிவு ஒரு புத்துலகத்தை— புதுச் சமுதாயத்தைப் படைக்க வல்லது. பழமையில் வேர் கொண்டு புதுமையில் கிளைவிட்டுப்படர்வது பெர்ட்ரண்ட் ரஸ்ஸல், (Bertrand Russell). ஜோட், C E M. Joad விநோபாபாவே முதலியோர் கருத்துகளை ஆழ்ந்து படிப்பார்கள். அவர்கள் கருத்துக் கருவூலங்கள் உலகிற்கு உறுதி செய்வன என்பது இவர்களின் உறுதியான நம்பிக்கை.

எதிர்காலத்தில் டாக்டர் அவர்களுக்குச் செய்யுள் நூல்கள் படைக்க வேண்டும் என்ற ஆர்வம் நிரம்ப இருக்கின்றது. டாக்டர் அவர்கள் பண்பாட்டுத் துறையில் தலைசிறந்த இடத்தினைப் பெறுகிறார்கள். அவர்கள் வாழ்வு எளிமையானது; அமைதியானது; எடுத்துக் காட்டானது; செம்மை அகத்தும் புறத்தும் செறிந்து துலங்குவது. அவர்களை 'இலக்கிய மேதை' என்று அழைப்பதனைவிட, எண்ணிப் பார்ப்பதனைவிட, அவர்களைப் 'பண்பாட்டு மனிதர்', 'ஒழுக்கக் குன்று', 'சான்றோர்', 'அறவோர்', என்று கண்டு தெளியும் பொழுது 'திறம் மறந்து செயல் மறந்து' வியக்கத் தோன்றுகின்றது.

தமிழ்ப் பெரியார் திரு.வி.க. அவர்கள் தம்முடைய வாழ்க்கைக் குறிப்பில் இவர்கள் குறித்து வரைந்துள்ள கருத்துகளை ஈண்டு அகழ்ந்து தருதல் இவர்கள்தம் வாழ்வின் உரைகல்லாய் அமையும் செம்மை சான்றது. குறிப்பின் ஒருபகுதி வருமாறு : "வரதராசனார் பேச்சிலும் எழுத்திலும் பர்னார்ட்ஷாவின் கருத்துக்கள் ஆங்காங்கே பொதுளும், அவர் பர்னாட்ஷா நூல்களைப் படித்துப் படித்து ஒரு தமிழ் 'பர்னார்ட்ஷா' ஆனார் என்றும் கூறுதல் மிகையாகாது. பர்னாட்ஷாவைப் பார்க்கிலும் வரதராசனார் ஒரு துறையில் சிறந்து விளங்குகிறார் என்பது எனது ஊகம் பர்னாட்ஷா பலப்பல நூல்களை எழுதி எழுதி முதுமை எய்தியவர். இம்முதுமையில் அவர்க்கு வழங்கும் இக்கால அரக்கப் போர்க்காட்சி "வாழ்க்கைக்குக் கிறிஸ்து வேண்டும்; பைபிள் வேண்டும்" என்னும் எண்ணத்தை அவரிடம் அரும்பச் செய்து வருகிறது. வரதராசனார்க்கோ அக்கருத்து இளமையிலேயே முகிழ்த்தது. 'வாழ்க்கைக்குச் சமயம் தேவை; கடவுள் தேவை' என்று இளமை வரதராசனார் பேசினார்;

எழுதினார். கீழ்நாட்டு இளமை மேல்நாட்டு முதுமையை விஞ்சி நிற்கிறது.

வரதராசனார் தமிழறிஞரா? சீர்திருத்தக்காரரா? அவர் தமிழறிஞர் என்பது வெள்ளிடைமலை. சீர்திருத்தக்காரர் என்பது உள்ளிட்ட விளக்கு. அவரது சீர்திருத்தப் பேச்சுகளை நான் பலமுறை செவிமடுத்துள்ளேன். அவர் வாழ்க்கைச் சீர்திருத்தக்காரர்—சமூகச் சீர்திருத்தக்காரர்—நாட்டுச் சீர்திருத்தக்காரர் என்பதில் ஐயமில்லை. அவரை எனது சீர்திருத்த உலகில் என் உள்ளம் சேர்த்தே இருக்கிறது."

# டாக்டர் மு.வ.வின் நாவல்களில் குடும்ப வாழ்க்கை

'வாழ்க்கை வாழ்வதற்கே' என்பர். சிலர் இப்படித் தான் வாழவேண்டும் என்று சில நெறிகளைப் பின்பற்றிக் குறிக்கோளாடு வாழ்கிறார்கள். பலர் எப்படியும் வாழ லாம் என்று மனம்போனபடி வாழ்கிறார்கள். இவ்வாறு இருதிறத்தாரும் கலந்திருக்கும் சமுதாயத்தில் குடும்ப வாழ்வு குறிப்பிடத்தக்கது. சமுதாய அமைப்பின் பல்வேறு நிலைகளில் ஒருவனும் ஒருத்தியுமாக வாழும் இல்லற வாழ்வு பெருஞ்சிறப்பும் முதன்மையும் கொண்டதாகும்.

பழந்தமிழகத்தில் குடும்ப வாழ்வு பெரும்பாலும் அமைதி பூத்து விளங்கியது. 'பரத்தையர்ப் பிரிவு' என்ற ஒன்று சங்க இலக்கியங்களிற் பேசப்பட்டாலுங்கூடக் குடும்பப் பெண்களின் வாழ்வு எளிமையும் தூய்மையும் எழிலும் கற்பின் திண்மையுங்கொண்டு விளங்கியது எனலாம். தவறாக ஒழுகிவிட்டு ஒருஞான்று தலைமகள் மாட்டு வாயிலாகப் புக்க தலைமகன் ஒருவனிடம் தலைமகள் பின்வருமாறு கூறியதாகக் காணலாம்.

தன்னார் துறைவன் கொடுமை
தம்முள் நாணிக் கரப்பா கும்மே''[1]

''காஞ்சி யூரன் கொடுமை
கரந்தனன் ஆகலின் நாணிய வருமே''[2]

''அவர் நமக்கு, அன்னையும் அத்தனும்
அல்லரோ புலவிய: தெவனோ அன்பிலங் கடையே''[3]

தாயுடன் றலைக்குங் காலையும் வாய்விட்டு
அன்னாய் என்னுங் குழளி போல
இன்னா செயினும் இனிதுதலை யணிப்பினும்
நின்வரைப் பினள்என் தோழி"[4]

என்று குறுந்தொகைத் தொடர்களும் தலைமகளின் மிகச் சிறந்த குடும்பப் பண்பாட்டை விளக்கும்.

## நேர்ந்த மாறுதல்

ஆனால் குடும்ப வாழ்க்கையில் காலந்தோறும் மாறுதல்கள் ஏற்பட்டு வரக்காணலாம். பெரும்பாலான குடும்பங்கள் இன்று பொருளியல் நிலை காரணமாக, பொருளாதாரக் கவலை காரணமாகச் சீர்கெட்டுச் சிறப்பிழந்து வரக் காணலாம். சமுதாய ஒழுங்கும் குலைந்துகொண்டு வருகின்றது. திருமணம் என்பது இரண்டு மனங்களின் அன்புப் பிணைப்பு என்பதுபோய், வணிக நோக்கில் திருமண ஒப்பந்தங்கள் நடைபெற்று முடிகின்றன.

சங்க இலக்கியத்தில் தலைமகன் தலைமகளுக்கு முலைவிலை கிடைத்துப் பரிசமாகத் தலைமகளைக் கொள்ளுவது பேசப்படுகின்றதேயொழியத் தலைமகளுக் குத் தலைமகள் வீட்டார் பொருள் தந்து திருமணத்திற் பெறும் வணிக நோக்கு யாண்டும் சுட்டப்படவே இல்லை.

''முழங்கு கடன் முழவின் முசிறி யன்ன
நலஞ்சால் விழுப்பொருள் பணிந்துவந்து கொடுப்பினும்
புரையர் அல்லோர் வரையலன் இலனெனத்
தந்தையும் கொடாஅன்"[5]

## குறுந்தொகை உணர்த்தும் குடும்ப வாழ்வு

"சொல்லித் திருத்துதல் அரிது; பெரும்பாலும் அது பயன் தருதல் இல்லை. வாழ்ந்து காட்டுதல் பலரைப் பண்படுத்துகிறது" என்றும்,

"அன்பால் ஒன்றுபட்டுக் கணவனுடன் வாழ்ந்து இல்லறம் நடத்தும் மனைவி, அவனிடம் உள்ள சிறு குறைகளை மறந்தும் மறைத்தும் வாழ்தல் இந்நாட்டுக் குடும்பப் பண்பாடுகளில் ஒன்றாகும். குற்றத்தை உடனே எடுத்துரைத்துக் கடிதல் அல்லது தூற்றுதல் உரிமையின் பயனாகக் கொள்ளப்படலாம். ஆனால் அதனைப் பொறுத்தலும் மறத்தலும் மறைத்தலுமே அன்பின் நெறியாகும்" என்றும்,

"தாயின் உணர்ந்து பண்பாடு மகளுக்கு எளிதில் அமைகின்றது. ஆண்டும் அனுபவமும் முதிர்ந்தவள் தாய். விளையாட்டை விட்டு இல்லறம் ஏற்ற இளம் பெண், மகள். அவளுடைய பண்பாடு இவளுக்கு எளிதில் அமைந்தது. அது சொல்லித் திருத்தும் முயற்சியால் அன்று; வாழ்ந்து காட்டிய வழியால் ஆகும். அதனால் தான் குடும்பப் பண்பாடு எளிதில் நீங்காமல் வழிவழியாக வருகின்றது", என்றும் டாக்டர் மு.வ. 'குறுந்தொகைச் செல்வம்' என்னும் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார்.[6] மேலும் அவரோடு தனி குடும்ப வாழ்வில் மு வ அக்கறை உரையாடல்கள் நடத்துகின்ற காலையிலும் குடும்ப வாழ்க்கையின்மேல் அவர் கொண்டிருந்த அக்கறையும் பற்றும் தெள்ளத் தெளிவாக விளங்கின. உறவினர்களையும் நண்பர்களையும் கண்டு அளவளாவும் போதும் தவறாமல் அவரவர்கள் பெற்றோர் உற்றார் குழந்தைகள் நலன்களையெல்லாம் உசாவுவார். குழந்தைகள் படிக்கும் பள்ளிக்கூடம், படிக்கும் வகுப்பு பள்ளிக்குப் போகும் ஏற்பாடு, மதிய உணவிற்கான ஏற்பாடு, படிப்பில்காட்டும் அக்கறை

முதலியன பற்றியெல்லாம் விசாரிப்பார். கடிதங்கள் எழுதும்போதும் குடும்ப நலனைக் கேட்டு எழுதுவார். சான்றுக்கு அயல் நாட்டில் வாழும் தம் மாணவர் ஒருவருக்கு அவர் ஒருஞான்று எழுதிய கடிதத்தின் ஒரு பகுதி வருமாறு:

"வாழ்கை மிகப் பெரிய கலை. இதில் தேர்தல் கடமை. வாழத் தெரிந்தவர்களாக விளங்குதலே சமுதாயத்திற்கு நலம் செய்யத்தக்க நல்ல தொண்டு. எப்படி எனின், நம்மைப் பார்த்துப் பிறர் கற்குமாறு. நாம் ஒரு நூலாகப் பயன்படுவோம்",[7]

"நெடுநேரம் வேறு வேலைகளை மேற்கொண்டு வெளியில் இருக்க வேண்டா, குடும்பத்தில் தங்கியிருக்கும் நேரம் இந்தச் சில மாதங்களில் மிக வேண்டும். திரு. வசந்தாவுக்கு வேலைகள் பெருகாதவாறு உதவி செய்க. குந்தவையின் மகிழ்ச்சியே எனக்குப் பெருவிருந்தாக இருந்தது உமாவின் டுவிஸ்ட் நடனமும், குந்தவையின் கரவற்ற சிரிப்பும் நினைந்து மகிழ்கிறேன் இருவரும் தம்பியுடன் கொஞ்சுகிறார்களா."[8]

"இங்கு எல்லோரும் நலமாக இருக்கிறார்கள். புகழேந்தி துடுக்கு மிகுந்தவனாக மாறி வருகிறான். அடுத்த ஜூனில் பள்ளிக்குச் செல்வான். நம்பி எம்.பி.பி.எஸ். முடித்து விட்டான். பாரி முதலாண்டு எழுதியுள்ளான்.[9]

இதுகொண்டு பிறர் குடும்ப வாழ்வில் அவர் காட்டிய அக்கரையும் விளங்கும்.

## புதினங்களின் கருப்பொருள்

தமிழ்நாட்டு மக்களுக்காக அவர் எழுதிய எழுத்துகளிலும் அவர் குடும்ப வாழ்க்கையைக் குறிப்பிட்டு எழுதாத புதினம் இல்லை எனலாம். குடும்ப வாழ்க்கையின்

சிக்கல்களே அவர் எழுதிய பெரும்பாலான புதினங்களின் கருப்பொருளாயின. அவற்றினைப் படிக்கும் மக்கள் குறிப்பாகக் கணவன் மனைவியர் தம் வாழ்க்கையைத் திருத்திக் கொண்டனர். அவருடைய 'கள்ளோ காவியமோ' என்னும் புதினத்தைப் பிடித்துவிட்டுக் கணவன் மனைவியர் பலர் அவருக்குத் தம் வாழ்க்கை அவர் தம் நூலால் சீர்ப்பட்டதைக் குறிப்பிட்டு எழுதி நன்றி தெரிவித் துள்ளனர்.

'அகல் விளக்கு' என்னும் புதினத்தைப் படித்துவிட்டு, அதில் வரும் 'சந்திரன்' வாழ்க்கைக்காகக் கலங்கியவர் களும் இரங்கியவர்களும் பலராவர். 'நெஞ்சில் ஒரு முள்'ளில் 'வடிவின்' வாழ்வு குறித்து இரக்கம் செலுத்தி யவர் எண்ணற்றவராவர். 'வாடாமலரில்' தானப்பனும் அவன் மனைவியும் தம் குடும்ப வாழ்வை அல்லலுக்குரிதாக ஆக்கிக்கொண்டு இறுதியில் தற்கொலை செய்துகொண்டு மடிவதனையும், 'மலர் விழி'யில் கலெக்டர் செல்வநாயகம் வாழ்வு, வாய்த்த மனைவி காரணமாகப் பட்டுப்போவதை யும், 'கரித்துண்டில்' ஓவியர் மோகனின் வாழ்வு நிர்மலாவின் துரோகத்தால் நசிந்து போவதனையும் முறையே காட்ட லாம்.

## அமைதிக் குலைவு

இன்று அரசியல், பொருளாதார நெருக்கடிகள் சமுதாயத்தைப் பெரிதும் பாதிக்கின்றன. பழங்காலச் சமுதாயத்தில் இருந்த அமைதி, ஏன்? சென்ற தலைமுறை யில் குடும்ப வாழ்வில் காணப்பட்ட அமைதி கூட இந்தத் தலைமுறையில் கிஞ்சித்தும் காணமுடியவில்லை. பெண்ணுரிமையும், பெண்களுக்கு வாக்குரிமையும், சொத்துரிமையும், உயர் கல்வியும், வேலை வாய்ப்பும் ஆண்

களுக்கு வாய்ப்பது போலவே ஏற்பட்டுப் போனபிறகு பெண்கள் பொதுவிடங்களில், பொதுவாழ்வில், பொது நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்வது அதிகமாகிக் கொண்டு வருவதனால் குடும்ப இன்பமும், அமைதியும் பெருமளவு கெட்டுக்கொண்டு வரக் காண்கிறோம்.

"வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்"[10]

என்ற பாடலை பாடிய பெருங்கடுங்கோவின் மொழியும்,

"மலரன்ன கண்ணாள் முகமொத்தி யாயின்
பலர்காணத் தோன்றல் மதி"[11]

என்ற குறள்மொழியும் ஈண்டு ஆழ்ந்து உன்னத்தக்கது.

## பலவகை வாழ்க்கை

இன்று பலருடைய குடும்ப வாழ்க்கை சீர்பட அமையாமைக்குக் காரணம் மனம் பொருந்தாமையே. பொருத்தமான வாழ்க்கைத் துணை வந்து வாய்க்காத காரணத்தால் ஆண்கள் பலரின் வாழ்வு மனம் முறிந்து திசை திரும்பி விடுகிறது. நல்ல கணவர் வாய்க்காமற் போவதனால் பெண்கள் பலரின் வாழ்வு கொடுமைக்கு ஆளாகி சீர்கெட்டுச் சிதைந்து நிற்கிறது. பல குடும்பங்களில் ஏதோ வாழ வேண்டுமே என்கிற காரணத்திற்காக வாழ்ந்து தொலைக்கிறார்கள். ஆனால், பெரும்பாலான குடும்பங்களுக்கிடையில் ஒரு சில குடும்பங்களின் வாழ்க்கை அமைதியாகத் தெளிந்த நீரோடை போன்று செல்கிறது. இவ்வாறு வாழும் குடும்பங்களின் மேல் மு.வ. அவர்களுக்குத் தனிப்பற்று உண்டு தம் வாழ்வில் பலதரப்பட்ட குடும்பங்களைக் கண்டு பழகித் தெளிந்து தேர்ந்த மு.வ. அவர்கள் தாம் கண்ட உண்மைகளைத் தம் படைப்புகளில்

இடம்பெறச் செய்திருந்தாலுங்கூட, அன்பான வாழ்வில் தாம் காட்டிய எல்லையற்ற ஈடுபாட்டினை ஆசிரியர் அறவாழி என்னும் பாத்திரத்தின் வாயிலாகப் (பெரும் பாலும் மு.வ.வே. அறவாழி என்ற பாத்திரமாக வருகிறார் எனலாம்) பின்வருமாறு குறிப்பிட்டிருக்கக் காணலாம்.

"எனக்கு ஆணும் பெண்ணுமாக குடும்பங்கள் அன்பாக வாழ வேண்டும் என்பதில் ஆசை உண்டு. ஏன் என்றால், கணவனும் மனைவியுமாக அன்பாக வாழும் வாழ்க்கை இல்லை என்றால், காட்டில் உள்ளதை விட நாட்டில் கொடுமையான விலங்குத் தன்மை இருக்கும். இந்நாகரிகம் எதுவும் ஏற்பட்டிருக்காது. காட்டை விட மிகுதியான உறுமல் நாட்டில் இருக்கும். அல்லது, உலகத் தில் பாதிப்பேர் பைத்தியக்காரராக இருப்பார்கள். ஆகையால் எப்போதும் நான் காதல் வாழ்க்கையை ஆதரித்து வருகிறேன்...தோட்டத்தில் ஒரு நல்ல முல்லைக் கொடி செழித்து வளர்ந்து பூத்தால் எப்படி மகிழ்ச்சி அடைவேனோ, அப்படி எந்தக் குடும்பத்திலாவது அன்பாக வாழ்க்கை நடத்துவதைப் பார்த்தால் மகிழ்ச்சி அடைவேன்."[12]

இது மட்டும் அல்லாமல் தம் படைப்புகளில் உவமை கள் வாயிலாகவும் தாம் குடும்ப வாழ்வில் காட்டிய ஆர்வத் தினையும் அக்கறையினையும் அனுபவத்தினையும் எடுத்து மொழியக் காணலாம். பின்வரும் அவர் தம் உவமைகள் இக்கருத்திற்கு அரண் செய்யக் காணலாம்.

"மங்கை தாய் வீட்டை விட்டுப் புறப்படுவது போல் கண் கலங்கினாள்"[13]

"கன்னாப்பூருக்கு இதற்கு முன் சில முறை போயிருக் கிறேன். அப்போதெல்லாம் முதல் முறை பள்ளிக்கூடத்தில்

...முழும் சிறுவனைப் போல் ஒருவகை மருட்சியோடு ...ற்றிப் பார்த்திருக்கிறேன். பெரியப்பாவோடு போய்க் கலெக்டர் செல்வநாயகத்தின் அறிமுகத்தைப் பெற்ற பிறகு கணவனுடைய அன்பைப் பெற்ற மனைவி போல் ஆனேன். உத்தியோகம் பெற்றுச் செல்வம் இப்போது அண்ணாப்பூரில் காலடி வைத்தபோது குழந்தை பெற்றவள் கணவனுடைய வீட்டிற்குத் தயங்காமல் செல்வதுபோல் உரிமையோடு நடந்தேன்."[14]

"தாயின் அறிவுரை தமிழனுடைய இட்டலி போல் மென்மை உடையது; தந்தையின் அறிவுரையோ கோதுமைச் சப்பாத்திபோல ஈரமற்றதாக இருக்க முடியும்",[15]

''குழந்தை தூங்குவதற்குத் தாலாட்டு உதவுவது போல், மனம் கற்பனையுலகத்தில் பறப்பதற்குப் பாட்டின் ஒலிநயம் உதவுகிறது."[16]

''புலவர் பெருமக்கள் இந்த நூலின் (நெடுந்தொகையின்) அருமையை நன்கு உணர்ந்து போற்றியிருக்கின்றார்கள். இதனாலேயே செல்லக் குழந்தைக்குப் பல பெயர்கள் வழங்குதல்போல், நெடுந்தொகை, அகநானூறு, அகப்பாட்டு, அகம் என்ற பெயர்கள் இதற்கு வழங்குகின்றன."[17]

அருமையான குடும்பக் காட்சி ஒன்றையும் மு.வ. அழகுற வருணித்துள்ளார்:

''வாசற்படியின் வலப்பக்கம் செல்வநாயகமும் இடப்பக்கம் காஞ்சனையம்மாவும் புன்முறுவலோடு நின்று விடை கூறினார்கள். அப்போது அவர்கள் புன்முறுவலோடு இணையாக்குகின்ற அந்தக் காட்சி மறுபடியும் கூடத்து ஓவியத்தையே நினைவூட்டியது. 'யானும் நீயும்

எவ்வழி அறிதும்' என்ற அந்த மணிமொழியை நினைந்து கொண்டே நடந்தேன்."[18]

## பொருந்தா வாழ்க்கை

இவ்வாறு நல்ல குடும்ப வாழ்க்கையினை நெஞ்சார நினைக்கும் டாக்டர் மு வ. அவர்கள் நிகழ்கால உலகிற்கு வருகிறார். இக்கால உலகில் திருமணங்கள் வியாபார நோக்கில் நடைபெற்று அதன் காரணமாகப் பொருந்தா வாழ்க்கை புகுந்துவிடுவதனைக் காண்கிறார். வியாபார முறையில் அமையும் குடும்பத்தினையும், ஆரவாரமற்ற அமைதிக் குடும்பத்தினையும் பின்வருமாறு ஒப்பிட்டு உரைக்கின்றார் :

'மின் விளக்குகள் வந்த பிறகு குத்து விளக்குகள் என்ன ஆகும்? கலைவிழாக்களில் அழகுக்காகக் கொண்டு வந்து வைக்கப்படும். வியாபார முறையான குடும்பங்கள் வந்தபோது அன்புநெறிக் குடும்பங்கள் தொகையில் குறையும்; மதிப்பில் பெருகும். இது இயற்கை.''[19]

''மண்குடிசை'யில் வரும் மெய்யப்பன் தன் மனைவியைப் பற்றிப் பின்வருமாறு உரைக்கக் காணலாம்:

''நான் உடை கழற்றும்போதோ, கைகால் அலம்பும் போதோ என்னிடத்தில் ஆவலுடன் வந்து உதவி செய்வாள் என்று எதிர்பார்ப்பேன். முகம் அலம்பிக் கொண்டு என் அறையில் நுழைந்து, நாற்காலியில் உட்கார்ந்து களைப்பாறும்போதாவது வருவாள் என்று எதிர்பார்ப்பேன். அப்போதும் பேச்சுத்துணை கிடைத்தால் அவர்களோடு பேசிக்கொண்டிருப்பாள். பேச்சுத் துணைக்கு யாரும் இல்லாதபோதும் சமையலறைக்கோ தோட்டத்துக்கோ ஏதாவது வேலையாகப் போய்விடுவாள். நானாக அழைத்தால் வருவாள். அவளாகவே ஒவ்வொரு

வேளையில் வருவதும் உண்டு. அப்போதும் அவள் முகம் உம்மென்று இருக்கும். தோழியரோடு பேசிய பேச்சின் போது இருந்த மலர்ச்சி இருக்காது. சில நாட்களில் அவளே என்னைத் தேடி வந்தாலும், ஏதாவது குறை சொல்லவே வருவாள்."[20]

"வீட்டிலே இவள் ஒருத்தி எனக்குத் துணையாக இருந்து ஊக்கம் கொடுத்திருந்தால் ஊரார் எவ்வளவு வெறுத்தாலும் பழித்தாலும் அவற்றைத் தாங்கும் மனவலிமை எனக்கு ஏற்பட்டிருக்கும். இந்த அடிப்படையே எனக்கு இல்லாதபோது நான் எப்படி வெளியே தலைகாட்ட முடியும்?"[21]

"என்னிடம் அன்பு செலுத்தக் கடமைப்பட்ட என் மனைவி என் வாழ்க்கைக்குத் துணை என்று வந்த ஒருத்தியின் தீமையை எண்ணுவதற்கும் நோவதற்கும் எவ்வளவு வலிமை வேண்டும்; **எண்ணி எண்ணி நொந்தேன்; நொந்து நொந்து வெந்தேன்**"[22]

"எங்கே யாரும் இல்லையோ? குடி இல்லாத வீடு போல் இருக்கிறதே" என்று கேட்டேன்.

"ஆமாம் யாரும் இல்லை. தாய் வீட்டுக்கு—வழக்கம்போல்."

"வழக்கம்போல் என்றால்..."

"ஏதாவது போராட்டம். புத்தியில்லாத மிருகத்தைக் கட்டிக்கொண்டு என்ன செய்வது?"[23]

"அவனோ மனைவியின் மனம் அறிந்து நடக்கத் தெரியாதவன். நானோ என் மனம் அறிந்து நடக்கத் தெரியாத மனைவியை உடையவன். நான் அவனிடம்

குறைசொல்லிப் பயன் என்ன? குருடனும் செவிடனும் கூத்துப் பார்த்த கதையாக முடியும்.[24]

"ஒரே வீட்டில் இருவரும் இருந்தோம். ஆனால் எங்களுக்கு இடையே எத்தனையோ கடல்களும் மலைகளும் ஆறுகளும் காடுகளும் இருந்தன. அவற்றைக் கடக்க என்னாலும் முடியவில்லை; அவளாலும் முடியவில்லை; அவள் கடக்கவே விரும்பவில்லை; நான் விரும்பினேன்; முடியவில்லை."[25]

"நாளடைவில் என் அன்பைவிட சுற்றத்தாரின் அன்பையே அவள் தேடி அலைந்தாள். என் மதிப்பைவிட வெளியாரின் மதிப்பையே நாடி விரும்பினாள். என் மானத்தைவிடத் தன் புகழையே பெரிதாகக் கொண்டு வாழத் தலைப்பட்டாள். கிடைத்த ஒன்றைப் புறக்கணித்து விட்டுக் கிடைக்காததை நாடி ஏங்கும் குரங்கு மனம் அவளைக் கெடுத்தது. எனக்காகச் செய்யவேண்டிய கடமைகளையும் புறக்கணித்துவிட்டு, ஊரில் உள்ள பெண்களோடு கூடிக் குலாவுவதிலும் அழைத்த வீடுகளுக்கெல்லாம் ஆர்வத்தோடு போய்வருவதிலும் காலத்தைப் போக்கினாள். இவள் தானா வாழ்க்கைத்துணைவி என்னும் வெறுப்பு என் நெஞ்சத்தில் வேரூன்றிவிட்டது. வேறு வழியில்லாமல் இருவரும் ஒரே வீட்டில் தங்கியிருந்தோம் என்று சொல்லலாம்."[26]

## ஏழைக் குடும்பமும் பணக்காரக் குடும்பமும்

வருவாய் குறைவாக இருந்தாலும் மனம் நிறைவுடன் பண்பாடு வளர்ந்தால் ஏழை வீடு அமைதி பொலியும் ஆலயமாக விளங்க முடியும் என்றும், பணக்காரக் குடும்பத்தில் செல்வம் நிறைந்திருந்தாலும் கணவன் மனைவியரின் மனம் பொருந்தாமற் போய்விடுமானால்

அங்கு மகிழ்ச்சிக்கும் அமைதிக்கும் இடமில்லாமல் போய் விடும் என்ற கருத்து டாக்டர் மு.வ. அவர்கள் புதினப் பாத்திரம் ஒன்றின் கூற்றால் விளங்குகின்றது;

"பெரிய வீட்டுக் கதைகள் எனக்கு எவ்வளோ தெரியும் அன்பாக இருப்பது எல்லாம் என்வீடு உன்வீடு போல ஏழை வீடுகளில் தான். நம்ம வீடுகளில் பொன்னும் பொருளும் செல்வமும் இல்லை. அதனால் அன்பைக் கொடுத்தே அன்பை வளர்க்கவேண்டி இருக்கிறது. இவர்களுக்கு அப்படி இல்லை. பொன்னையும் பொருளையும் கொடுத்து இவர்கள் அன்பை வளர்ப்பார்கள் வேளைக்கு மூன்று முறுக்கு முறுக்குவாள். என் பெண்டாட்டி. வாரத்துக்கு நாலு சண்டை இழுப்பாள். ஆனாலும் நான் நோயாகப்படுத்தால் வாயைக்கட்டி வயிற்றைக் கட்டியாவது, பிச்சை எடுத்தாவது என்னைக் காப்பாற்றுவாள். ஏழைகளின் அன்பு என்றைக்கும் மாறாது."[27]

"கணவன்—மனைவி, பெற்றோர், மக்கள், மாணவர்—ஆசிரியர், ஆள்வோர்—ஆளப்படுவோர் இவர்களிடையே ஒருவர்க்கு ஒருவர் நம்பிக்கை இல்லாத அடிப்படையில் தான் இன்றைய சமுதாயம் அமைந்திருக்கிறது"[28] என்று டாக்டர் மு.வ. சமுதாய அமைப்பின் இன்றைய சீரழிந்த நிலையைக் குறிப்பிடுவதோடு நில்லாமல் சமுதாய மருத்துவரான காரணத்தால் நல்ல இம்வாழ்க்கையைப் பின் வருமாறு நயம்பட உரைக்கிறார்.

"ஒழுங்கான வாழ்க்கை உள்ள வீடுகளில்தான் அன்பு ஆட்சி செய்யும். அன்புதான் நல்ல மனத்தை வளர்க்க முடியும். நீர்வளம் இல்லாவிட்டால் பயிர்களுக்கு இயல்பான வளர்ச்சி இருக்க முடியாது. அன்பான சூழ்நிலை

இல்லாவிட்டால் மனத்திற்கு இயல்பான வளர்ச்சி இருக்க முடியாது." [2]

"அன்பு நிரம்பிய இல்வாழ்க்கையில் கணவன் மனைவியிடத்தில் செலுத்தும் அன்புக்கும் மனைவி கணவனிடத்தில் செலுத்தும் அன்புக்கும் ஈடு இல்லை. மனைவி கணவனுடைய இன்ப துன்பங்களையே தன் இன்ப துன்பங்களாக உணர்கிறாள். கணவனுக்காகவே வாழ்கிறாள். அவனுடைய கண்ணீரால் கலங்குகிறாள்."[30]

## திருமண முறைகள்

குடும்ப வாழ்வு திருமணத்தில் தொடங்குகிறது. எனவே திருமணங்கள் எந்த அடிப்படையில் நிகழ வேண்டும் என்பது குறித்துச் சீரிய கருத்துகளை மு.வ. பல விடங்களில் குறிப்பிட்டுள்ளார்:

"பழங்காலத்துத் திருமண இணைப்பு, ஒரே பெரிய மரத்தின் இரண்டு கிளைகளை ஒட்டி இணைப்பது போன்றது. இக்காலத்துத் திருமண இணைப்பு இரண்டு வெவ்வேறு மரத்தின் இரண்டு கிளைகளை ஒட்டி இணைப்பது போன்றது."[31]

## உறவுத் திருமணம்

உறவுக்குள் அமையும் திருமணம் பற்றி மு.வ. கருதும் கருத்து 'பாவை' எனும் புதினத்தில் 'பழநியப்பன்' வாயிலாக வெளிப்படக் காணலாம்.

"குடும்பங்களில் இப்படியெல்லாம் உறவுக்காக கட்டிக் கட்டி கணவனுக்கும் மனைவிக்கும் அன்பே இல்லாமல் போய்விட்டது. பேருக்குக் குடும்பம் என்று ஏற்படுத்தி விட்டுக் கோமாளிக்கூத்தாக இருந்தால் என்ன பயன்? நம்

ஊர்வரைக்கும் எடுத்துக் கொள்ளுங்கள். எத்தனை வீடுகளில் கணவனுக்கும் மனைவிக்கும் அன்பு இருக்கிறது? ஏதோ அருமையாக அங்கொரு குடும்பம், இங்கொரு குடும்பம்; அவ்வளவுதானே! இப்படி வாழ்க்கையில் உண்மை அன்பும் ஊக்கமும் இல்லாதவர்களுக்குப் பிறக்கிற குழந்தைகள் வீரமாக வளர முடியுமா? வீரராக வாழ முடியுமா? குடும்பங்கள் நன்றாக இல்லாத காரணத்தால் தானே நாடே கெட்டுவிட்டது.[32]

## வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் முறை

வாழ்க்கைத்துணை அமைவது என்பது ஒரு பெரும் பேறு. திருவள்ளுவர்,

> **''இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்**
> **இல்லவள் மாணாக் கடை"[33]**

என்று வாழ்க்கைத்துணையின்—இல்லாளின் இன்றியமை யாமையினை எடுத்தோதினார்.

## ஐவகைப் பெண்கள்

பெண்களை ஐந்து வகையினராக மு.வ. காண் கின்றார்.

"பழங்காலத்துத் தமிழ்ப்பெண்கள் போல் குடும்பமே உலகமாய்க் கணவனே தெய்வமாய் அடக்கத்தோடு வாழும் பெண்கள் சமையலறையிலும் குழந்தைத் தொட்டிலிலும் தங்கள் இன்பத்தொழிலைக் காண்பவர் கள், முதல்வகை.

''படிப்புக்கு ஏற்ற தொழில் வேண்டும் என்று தேடி, குடும்பத்தில் பாதிவாழ்வும் தொழில் செய்யும் இடத்தில் பாதிவாழ்வும் வாழ்கிறவர்கள்; ஆனால் மனத்தில் பழங்

காலப் பெண்கள் போல் குடும்ப வாழ்வில் விருப்பம் உள்ளவர்கள்; குடும்பத்தில் பற்றுக்கொண்டு, வெளிவேலையில் தாமரை இலைத் தண்ணீர் போல் பற்றில்லாமல் வாழ்கிற பெண்கள், இரண்டாவது வகை.

''திருமணமாகி விட்டதே. இனிமேல் விலக வழி இல்லை என்று குடும்பத்தில் வாழ்க்கை நடத்தி, வெளி உலகத்தில் ஆர்வம் மிகுந்த பெண்கள். குடும்பத்தில் அவர்கள் தாமரையிலை தண்ணீர்போல் பற்றில்லாமல் வாழ்வார்கள். ஆனால், தொழில் நிலையம், தோழமை உலகம், பொழுதுபோக்குநிலையம் (கிளப்) முதலியவற்றில் ஆர்வமாக இருப்பார்கள். கணவனைப் பெயரளவிற்குக் கொண்டிருப்பார்கள்; அல்லது சட்டத்தின் அளவுக்குச் சட்டை செய்வார்கள். மூன்றாவது வகை.

சில பெண்கள் திருமணம் வாய்க்காமல் வாழ வேண்டியிருக்கிறது சிலர் திருமணம்கூடி வந்தாலும் வெறுத்துத் தள்ளி விடுகிறார்கள். இவர்களில் பலர் உலகப்பழிக்கு அஞ்சிக் கன்னிப் பெண்களாகவே ஒழுக்கத்தோடு வாழ்ந்து சாகிறார்கள். இது நான்காம் சாதி.

இவ்வாறு ஒழுக்கத்தில் பற்று இல்லாத சாதி ஐந்தாம் சாதி".[34]

## பொருந்திய குடும்பம்

குமரவேல் மங்கை நல்லாள் வாழ்வு விழுமியதாய், பண்பட்டதாய் உள்ளது. குமரவேல் தம் குடும்ப வாழ்க்கையைப் பற்றிப் பின்வருமாறு குறிப்பிடக் காணலாம் ;

''குறை இல்லாதவர்கள் உலகத்தில் இல்லை. குறைகளுக்கு இடையே குணத்தைக்கண்டு வாழவேண்டும் முள்ளுக்கு இடையே—முரட்டு இலைகளுக்கு இடையே

மலரைக் கண்டு தேனைத் தேடுகிறது தேனீ. அதுதான் வாழத் தெரிந்தவர்களின் வழி. எங்கள் குடும்பத்திலும் குறைகள் உள்ளன. எங்கள் இருவர்க்கும் தெரியும். அவற்றைப் பொருட்படுத்துவதில்லை. அதனால் அன்பு வளர்ந்துவிட்டது. இனி எங்களை எதுவும் அசைக்க முடியாது. மரம் வேரூன்றிவிட்ட பிறகு பெருங்காற்று என்ன செய்யும்? உங்கள் குடும்பம் தொடக்கத்திலிருந்தே ஒடிக்கப்பட்டும் முறிக்கப்பட்டும் ஆட்டி அசைக்கப்பட்டும் வளர்ந்த மரமாக இருக்கிறது. ஆகையால் இன்னும் ஆழமாக வேரூன்றவில்லை. ஒரு சிறுபுயல் வந்தாலும் அல்லல்படுகிறது."[35]

## பொருந்தாக் குடும்பம்

''என் மனைவி வளர்ந்த சுற்றுப்புறம் வேறு; நான் வளர்ந்த சுற்றுப்புறம் வேறு அவள் பழகுமிடம் வீடு; நான் பழகுமிடம் இந்தத் தென்றல் அவள் நண்பர் வேறு; என் நண்பர் வேறு. அவள் கோயிலுக்குப் போக விரும்புகிறாள்; நான் சினிமாவுக்குப் போக முந்துகிறேன். அவள் மதிப்பவை மக்களும் சோமவார விரதமும்; நான் மதிப்பவை திருக்குறளும் தாயுமானவரும். அவள் அணிய விரும்புவது பட்டும் பொன்னும்; என் உடம்பில் பொன்னே இல்லை. அணிவதெல்லாம் பருத்தியே......ஒன்று அவளுடைய பழக்க வழக்கங்களுக்கு நான் அடிமையாக வேண்டும். அல்லது என் கொள்கைகளுக்கு அவள் அடங்க வேண்டும் ஆனால் இருவர் மனத்திலும் அன்பு இருக்கிறது அன்பு இருக்கும் இடத்தில் அடிமையாகவும் முடியாது; அடக்கி வாழவும் முடியாது. அன்பு இல்லாத குடும்பங்களில்—காதல் இல்லாத வாழ்க்கையில் ஆண் பெண்ணுக்கு அடங்குகிறான் அல்லது பெண் ஆணுக்கு அடிமையாகிறாள். வாழ்க்கை எளிதாக முடிகிறது.''[36]

இதே மனைவியைப் பற்றிப் பின்னால் மருதப்பன் குறிப்பிடுவது பின்வருமாறு

"என்னைவிடக் காதல் குறைந்தவள் என்று அவளை எண்ணியிருந்தேன். அது தவறுதான். அன்று காலையில் இருந்து மாலைவரைக்கும் முப்பது முறை என்னிடம் வந்தாள். முப்பது முறை மேசைமேல் இரண்டு கைகளையும் ஊன்றிக் கொண்டு என்னைப் பார்த்துக் கொண்டு நின்றாள். இரண்டு முறைதான் "போய்விட்டு வரட்டுமா" என்றாள். சமையலறையில் இருக்கும்போது அடிக்கடி அதைவிட்டு என்னுடைய அறையை நோக்கி வந்துவந்து போனாள். ஒருவாரம் பிரிந்திருக்கப் போகிறோம் என்ற உணர்வு அவளை அப்படி அலைத்திருக்கிறது. வாயில் சொல்ல முடியாத உணர்வு மிகுதி தான் காரணம்."[37]

"தாய் வீட்டிலிருந்து வரும்போது கண்ணீர் கலங்கி அழுது வருவாள்; 'அடி பைத்தியமே' என்று சொல்லித் திட்டிக்கொண்டு அழைத்து வருவேன். இங்கிருந்து தாய் வீட்டுக்குப் போவதென்றால் ஆனந்தமாய்ப் புறப்படுவாள். இப்போது ஏடு திரும்பி விட்டது. அங்கிருந்து வரும்போது ஆனந்தமாக வருகிறாள். இங்கிருந்து போகும்போது கலங்குகிறாள்; என்னையும் கலங்க வைக்கிறாள்"[38]

குடும்பங்கள் பல இக்காலத்தே அவல வாழ்வில் அமிழ்ந்து கிடப்பதனை மு.வ. 'செந்தாமரை'யில் மருதப்பன் பாத்திரத்தின் வாயிலாகப் பின்வருமாறு தெளிவிக்கிறார்.

"எதிர்காலத்தில் வாழ்க்கையே யந்திரமாக மாறி விடுமோ? எல்லாம் சூளைதானா? வாய்க்கு எவ்வளவு சுவைகொடுத்தாலும் ஒட்டல் வாழ்க்கை மனத்திற்குச் சுவையாக இல்லையே! காதல் இல்லாத குடும்பங்களும்

இப்படித்தானோ! உடம்பு என்னும் அளவில் இன்பமும் உள்ளம் என்னும் அளவில் துன்பமும் இருக்குமோ."[39]

எனவே ஆண் திருமணத்தில் ஒரு பெண்ணைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால் என்ன முறைகளை மேற்கொள்ள வேண்டும் என்பது குறித்துப் பலவிடங்களில் பல பாத்திரங்களில் கூறியிருக்கக் காணலாம்.

## இரு சாதிகள்

முதலாவதாக 'அல்லி' என்னும் புதினத்தில் ஒரு புதுமையான கருத்தினை வெளியிடுகின்றார். கலப்பு மணத்தை ஆதரிக்கும் மு.வ. அவர்கள் ஒரு புதுமையான கலப்பு மணத்தை வன்மையாக எதிர்க்கிறார். பிறப்பால் அமைந்த சாதிப்பாகுபாட்டைக் கருதாமல், மனத்தால், பண்பால், வாழும் வகையால் வந்தமைந்த வாழ்க்கை நெறியினைக் கொண்டு மனிதச் சாதியை இரு பிரிவுகளாகப் பிரித்துக்காண்கிறார். அதுதான் எப்படியாவது வாழவேண்டும் என்று நெறியற்று, குறிக்கோளற்று மனம் போனபடி வாழும் வாழ்க்கையினர் ஒரு சாதி; நல்ல நோக்கமும் குறிக்கோளும் கொண்டு அறத்தில் பற்றுவைத்து இப்படித்தான் வாழவேண்டுமென்று வாழ்பவர் பிறிதொரு சாதி. மனிதன் படைத்துக்கொண்ட சாதிகளுக்கிடையே கலப்புமணம் நடைபெறுவதனை வரவேற்கும் மு.வ., இந்த இருவகை—எப்படியாவது வாழ வேண்டும்—இப்படித்தான் வாழ வேண்டும்—என்ற இருவகைப் போக்கினர்க்கு இடையில் ஒருநாளும் எந்தக் காரணத்தைக்கொண்டும் கலப்பு மணம் நிகழக்கூடாது என்று வற்புறுத்திக் கூறுகிறார் :

"உன் சாதிப் பெண்ணாகப் பார்த்து மணந்துகொள். முதலில் நீ என்ன சாதி என்று எண்ணிப்பார். இப்படித்தான் வாழ வேண்டும் என்ற சாதியா. எப்படியாவது

வாழ வேண்டும் என்ற சாதியா என்று தெரிந்துகொள். பிறகு அதே சாதியான பெண்ணைத்தேடு"[40] என்று அறிவுரை கூறுகிறார்.

மேலும் வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுப்பது குறித்துக் 'கரித்துண்டு' என்னும் புதினத்திலும் பின்வருமாறு கூறியுள்ளார் :

"நல்ல ஓவியக் கலைஞனைத் தேடும்போது, அவனுக்கு நல்ல கண் பார்வை இருக்கிறதா என்றே ஆராய வேண்டும். செவிநுட்பம் பெற்ற ஒரு குருடனை ஓவியக்கலைக்குத் தேர்ந்தெடுக்க முடியுமா? இசைக்கலைக்குக் கண்பார்வை கட்டாயம் அல்ல. ஆனால் செவிநுட்பம் கட்டாயம் வேண்டும். அதுபோல்தான் இல்வாழ்க்கையும். ஒருநாள் இரண்டு நாள் கண்ணாரக் கண்டு மகிழ்ந்து குலாவுகிற உறவுக்கு—விபசார நட்புக்கு—அழகு கட்டாயம்வேண்டும். ஆனால் வாழ்நாள் முழுதும் பழகும் வாழ்க்கைத்துணைக்கு அன்புதான் முதலில் வேண்டியது".[41]

இதுபோன்றே 'பாவையில்' வரும் பழநியப்பன் தனக்கு வாய்க்கவேண்டிய வாழ்க்கைத்துணை பற்றிக் கீழ்க்காணுமாறு குறிப்பிடுகின்றான்.

"நான் வாழும் வாழ்வுக்கு ஒரு நல்ல துணைவேண்டும் நான் பேசும்பேச்சைக் கேட்பதற்கு ஒரு நட்பு வேண்டும். நான் எண்ணுவதுபோல் சேர்ந்து எண்ணுவதற்கு ஒரு மனம் வேண்டும். அதனால்தான் நான் பாவையைத் தேடுகிறேன். அவர்களைப்போல் ஒருத்தியை விரும்பி ஒருத்திக்குத் துரோகம் செய்ய என்னால் முடியாது இவ்வளவுதான் நான் சொல்ல முடியும். என்னை வற்புறுத்த வேண்டாம். நீங்கள் எல்லோரும் இப்படிப் பேசி என் தாயின் மனத்தை மாற்றாமல் இருந்தால் போதும் அதுதான் நான் உங்களைக் கேட்டுக் கொள்வது".[42]

## பெண்ணுக்கு ஆண்

இதுபோன்றே பெண் தனக்கு ஏற்ற துணையைத் தேடும் பொழுது எண்ணும் எண்ணங்களையும், எண்ண வேண்டிய எண்ணங்களையும் 'அல்லி' என்னும் புதினத்தில் அழகுறக் கூறியுள்ளார்:

"இங்கிருந்து திருச்சிராப்பள்ளிக்குச் செல்ல வேண்டுமானால், பயணத்திற்குத் துணை கிடைப்பார்களா என்று தேடுகிறோம். துணையாக வருகிறவர்கள் நல்லவர்களா என்று ஆராய்ந்து பார்க்கிறோம். ரயில் பயணத்திற்குச் செய்யும் அவ்வளவு முயற்சியும் வாழ்க்கைப் பயணத்திற்குச் செய்வதில்லை யாரோ சொல்வதைக் கேட்டு அப்பா என்னை ஓர் ஆணுடன் கூட்டித் திருச்சிராப்பள்ளிக்கு அனுப்ப மாட்டார். ஆனால் அவரே இன்று வாழ்க்கைப் பயணத்திற்குத் துணைகூட்டி அனுப்பத் துணிந்துவிட்டார். யாரோ சொல்வதைக் கேட்டுத்தான்.[43]

"இன்பத்திற்குத் துணையாக யாராலும் முடியும். ஈ எறும்பாலும் முடியும். தேவையானது கிடைக்கும்போது ஈயும் எறும்பும் நம்மைக் கேளாமலே வந்து மொய்க்கின்றன. அதுபோல், இன்பம் உள்ளபோது யார் வேண்டுமானாலும் வந்து மொய்த்துக் கொள்வார்கள் ஆகையால் இன்பத்திற்குத் துணையாக வல்லவரை நம்பாதே. துன்பத்திற்குத் துணையாக இருக்க வல்லவரைத் தேடு. உறவானாலும் நட்பானாலும் காதலானாலும் இப்படித்தான் தேட வேண்டும்."[44]

இவ்வாறு குடும்பம் அமைய அடிப்படை வகுக்கும் திருமணத்தைப் பற்றி பேசுகின்றார்.

## மூவகை வாழ்வுப்போக்கு

குடும்ப வாழ்வின் போக்கில் மூவகைப் போக்குகளை மு.வ. காண்கிறார். எடுத்துக்காட்டான வாழ்வு நடத்தும் கணவர் மனைவியர். இரண்டாவதாக, பகட்டிலும், செல்வ நாட்டத்திலும், ஆரவாரப் போக்கிலும் அமிழ்ந்து தங்களைத் தாங்களே அழித்துக்கொள்ளும் கணவன் மனைவியர். மூன்றாவதாக ஏதோ திருமணம் நடந்தது, சற்றுப் போராட்டம் இருந்தாலும் வாழ்ந்து முடிய வேண்டும் என்று கடமைக்காக வாழும் கணவன் மனைவியர்.

இனி, இம்மூவகை நிலையினரைச் சிறிது விரிவாகக் காண்போம்.

## எடுத்துக்காட்டான கணவன், மனைவியர்

பொதுவில் கணவன் மனைவியரில் மனைவியர் அன்பும் பண்பும் கடமையுணர்வும் பொருந்தியவராக இருத்தல் இயற்கை. பெரும்பாலும் கணவன்மார் மனைவிமார்களை நோக்க ஏதோ சிற்சிலவிடங்களில்தான் பண்புமிக்கவர்களாகக் காணமுடியும். தமிழ்நாட்டு மகளிரின் தனிச் சிறப்பான பண்பாடே குடும்பம் காக்கும் கடமை உணர்வாகும். கொண்ட கொழுநனை நன்கு ஓம்பி, பெற்ற பிள்ளைகளைப் பேணி வளர்த்து வாழும் பெருந் தியாக வாழ்வு பெண்ணுடையது. அத்தகைய பெண் மனைவியாக வாய்த்தால் அந்தக் குடும்பம் அன்பும் அமைதியும் பூத்துக்குலுங்கும் திருவிடமாகப் போய்விடும். பெண்ணின் பண்பு ஆணையும் திருத்தி நெறிப்படுத்தும் தூய்மை மிக்கது. இத்தகைய அன்புடையோர் வாழ்க்கையினை 'வேலு' என்ற பாத்திரத்தின் வாயிலாகப் பின் வருமாறு மு.வ. குறிப்பிடுகின்றார்.

"காதல் மனைவியிடம்தான் மனிதன் சிறுபிள்ளையாக நடந்து கொள்கிறான். மூப்பு என்பதை உடல் கண்டாலும் உள்ளம் காணாத உலகம் அந்தக் காதல் உலகம் ஒன்று தானே? அன்பான கணவனுக்கும் மனைவிக்கும் வயது அறுபதைக் கடந்தாலும் உள்ளம் இருபதைக் கடப்பதே இல்லை; பத்தைக் கடப்பதும் இல்லை எனலாம்."[45]

நல்ல மனைவி நடந்துகொள்ளக்கூடிய முறைகளைப் பின்வருமாறு தம் புதினத்தில் வரும் பெண்கள் கூற்றாகவே கூறக் காணலாம்:

"கணவன் என்றால் உலகத்தில் பெறமுடியாத பெருஞ்செல்வம் என்பதும், அந்தக் கணவனுக்காக எந்தத் துன்பத்தையும் பொறுத்துத்தான் வாழவேண்டும் என்பதும், அவள் வழிவழியாகப் பெற்ற குடும்ப அறிவு."[46]

## வெற்றிகரமான வாழ்க்கை

வெற்றி நிறைந்த வாழ்வைப் பெற்ற சுடர்விழி, தன் குடும்ப வாழ்வு வெற்றி பெற்றதன் காரணத்தைப் பின் வருமாறு சொல்கிறார்:

"திருமணமான பிறகு கணவரின் விருப்பப்படி, நடக்கிறேன். அதனால் வாழ்க்கை அமைதியாக நடக்கிறது. நீங்கள் கற்றுக்கொடுத்தவழிதான். ஒருவர் விருப்பப்படி, என்றால் வாழ்க்கை நன்றாக நடக்கிறது. இருவர் விருப்பம் என்றால் இரண்டு வழி ஆகிறது. போராட்டம் ஆகிறது. நல்லதோ கெட்டதோ அவர் விருப்பப்படி, நடக்கட்டும் என்று இருக்கிறேன். அவர் படித்தவர். தெரிந்தவர். உலகம் அறிந்தவர். உலகத்திற்குக் கற்டுப்பட்டவர். நான் வீட்டோடு வாழ வேண்டியவள். அதனால் அவர் விருப்பம்தான் பெரிது. அதை உணர்ந்து நடக்கிறேன். ஒரு துன்பமும் இல்லை."[47]

## கணவன் மனைவி வாழவேண்டிய வழி

'வாடாமலர்' என்னும் தாம் இறுதியாக எழுதிய புதினத்தில் கணவன் மனைவியர் எவ்வாறு வாழவேண்டும் என்பதனைப் பின்வரும் உரையாடல்களிலிருந்து தேர்ந்து தெளியலாம்:

"கணவன் மனைவி இருவரும் தனித்தனியே இரண்டு வழியில் நடப்பது நல்லதா? அல்லது ஒரே வழியில் ஒருவர் முன்னே செல்ல, மற்றொருவர் அந்த வழியில் பின்பற்றி நடப்பது நல்லதா? என்று கேட்டாள்"—

"ஏது? பெரிய தத்துவம் பேசத் தொடங்கி விட்டாயே" என்றேன்.

"இருக்கட்டும். சொல்லுங்கள்" என்றாள்.

"ஒரே வழியில் நடப்பதுதான் நல்லது ஆனால் யார் முன்னே நடப்பது என்பதுதான் தெரிய வில்லை."

"உங்களுக்கா தெரியாது? வேண்டும் என்றே என்னை மருட்டுகிறீர்கள்,"

"முன்னே மனைவி நடக்க, பின்னே கணவன் நடந்தால் என்ன?"

"நடக்கலாம். ஆனால் மனைவிக்கு ஊர், உலகம், சுற்றுப்புறம் எல்லாம் தெரிந்து, எல்லாருடனும் பழகி வாழ்க்கை நடத்தத் தெரிந்திருக்க வேண்டும். கணவன் வீட்டோடு இருந்து குழந்தைகளைக் காப்பாற்ற வேண்டும். அப்படி இருந்தால் அது சரிதான்" என்றாள்.

"என் கணவரிடமும் முதலில் பயம் இருந்தது, இப்போது அன்புதான் இருக்கிறது. அன்பினால் அடங்கி

நடக்கிறேன். அவர் சொன்னபடி நடக்கும்போது என் மனத்தில் ஒரு தெம்பு ஏற்படுகிறது. அவர் விருப்பம்தான் எனக்கும் விருப்பமாக இருக்கிறது" என்றாள்.[48]

## ஒத்த உள்ள வாழ்க்கை

"அன்பு நிரம்பிய இல்வாழ்க்கையில் கணவன் மனைவி யிடத்தில் செலுத்தும் அன்புக்கும், மனைவி கணவனிடத்தில் செலுத்தும் அன்புக்கும், ஈடு இல்லை. மனைவி கணவனுடைய இன்ப துன்பங்களையே தன் இன்ப துன்பங்களாக உணர்கிறாள். கணவனுக்காகவே வாழ்கிறாள். அவனுடைய கண்ணீரால் கலங்குகிறாள்",[49] என்ற வரிகளில் நல்லகுடும்ப வாழ்வுப் பண்பினைக் காணலாம்.

## அன்பு வாழ்க்கை

'அந்த நாளில்' வரும் பொன்முடி—ஆறுமுகம் வாழ்வு அன்பு வாழ்க்கைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். பணமும் பகட்டும் பாழ்படுத்தாத—ஆனால் அதே நேரத்தில் அன்பும் பண்பும் அமைந்த அந்தக் குடும்ப வாழ்க்கையைப் பற்றி ஆறுமுகம் கூறுவதைக் கேட்போம் :

'பொன்முடி; எப்படியோ வாழ்ந்தோம்! உலகத்தை வாசற்படிக்கு வெளியே விட்டுவிட்டு வாழ்ந்தோம். உலகப்பற்றை விட்ட இடம்தானே வீடு? நாம் வாழ்ந்த வாழ்வு வீட்டு வாழ்வுதான்! பிறருடைய புகழையும் மதிப்பையும் பொருட்படுத்தாமல் வாழ்ந்தோம், உலகத்தை உள்ளே விட்டிருந்தால் வாழ்க்கை ஒரு பெருஞ்சுமையாகி விட்டிருக்கும். நமக்கோ வாழ்க்கை ஒரு நல்ல விளையாட்டாகவே முடிந்தது. இன்பம் துன்பம் இரண்டிலும் விளையாடினோம். வாடகை வீட்டில்,

குறைந்த வருவாயில், நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தோம். பணம் நிறைந்த வாழ்க்கை இல்லையானாலும் மனம் நிறைந்த வாழ்க்கை வாழ்ந்தோம். போதும்."[50]

## மோகன்—பொன்னி வாழ்வு

காதலில் தோல்வியுற்ற வங்காள ஓவியர் மோகனும், அவர் பிற்கால வாழ்வில் இடம்பெற்ற ஏழைப் பெண் பொன்னியும் வாழ்ந்த வாழ்வைப்பற்றி மோகனே பின்வருமாறு கூறக் கேட்கலாம் :

"என் சின்ன உலகத்தில் வீண் பேச்சு இல்லை; போலி உறவு இல்லை; உதடுகள் அசைந்தால் உள்ளமும் அசைகின்ற உலகம் எங்கள் உலகம். கண்ணீர் கலங்கினால் கருத்தும் கலங்குகின்ற உலகம் எங்கள் உலகம். போதும் எனக்கு இந்தச் சின்ன உலகம் இங்கே என் வாழ்க்கைக்கு வேண்டிய ஆறுதல் உள்ளது. இன்பம் உள்ளது. என் கூடு அவள் வாழும் குடிசை. விட்டுப் பறந்தால் இருவரும் ஒன்றாகவே பறப்போம். புகுந்தால் ஒன்றாகவே புகுவோம். சின்னக் கூடுதான். ஆனால் சமூகத்தில் மதிப்பு மானம் என்னும் தட்ப வெப்பக் கொடுமைகள் தாக்காத வலிய அரண் இது. போதும் எனக்கு இது."[51]

'மண்குடிசை' என்னும் புதினத்தில் பேராசிரியர் கூற்றாக அவர் தம் மனைவியோடு நடாத்திய குடும்ப வாழ்க்கை பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார் :

"எனக்கும் என் மனைவிக்கும் எத்தனையோ நாள் பிணக்கு, கசப்பு உண்டு. ஆனால் மூன்று நாள் என்னைப் பிரிந்திருக்க அவளால் முடியாது. நான் இல்லை என்றால் வயிறாரச் சாப்பிடவும் முடியாது. எனக்காகவே வாழ்ந்தாள். என்னையே தெய்வமாக எண்ணி

வாழ்ந்தாள். என் பக்கத்தில் இருந்தே கடைசி மூச்சையும் விட்டாள். இந்தப் பிணக்கு கசப்பு இவைகள் எல்லாம் என்ன செய்யும்? கணவன் மனைவி என்றால் எதுவும் பிரிக்கமுடியாது. எமன் தவிர யாரும் பிரிக்க முடியாது."[52]

## குடும்ப நலனே நம் நலன் என என்னும் பெற்றியர்:

'கரித்துண்டு' புதினத்தில் திருவேங்கடம் தன் மனைவியைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார் :

"ஒரு நாள் தவறாமல் சமையலறையில் செய்த வேலையையே சலிக்காமல் செய்துகொண்டு, நான்கு மக்களையும் சீர்ப்படுத்திக் காப்பாற்றி, மற்ற வீட்டு வேலைகளையும் விடாமல் செய்து, நேரம் கழித்து வீட்டுக்குத் திரும்பும் எனக்காகக் கண்விழித்து உணவிட்டு, எல்லாப் பொறுப்பையும் சுமந்துவரும் அவளுடைய உழைப்பையும் துன்பத்தையும் நினைந்தேன்."

"எவ்வளவோ பொறுப்பையும் துன்பத்தையும் தன்னந்தனியாக குடும்பமே தானாக ஏற்றுக்கொண்டு என்னை ஒய்வு நிறைந்தவனாக விட்டிருக்கிறாளே என்று எண்ணியபோது, என் நெஞ்சில் அன்புகலந்த நன்றியுணர்ச்சி நிறைந்தது".[53]

மேலும் அவர் தம் மனைவியோடு பேசும் பேச்சில் சிறந்த வாழ்வியல் உண்மைகள் அடங்கியிருக்கக் காணலாம். அது வருமாறு :

"குடும்பப்பொறுப்பினைக் குறைவறக் கவனிக்கும் மனைவியர் : வாரத்தில் ஆறுநாள் என் விருப்பம்போல் விட்டு விடு. ஞாயிற்றுக்கிழமை ஒருநாள் மட்டும் உன் விருப்பம்போல் சொன்னபடி நடக்கிறேன். அன்று ஒரு நாள் மட்டும் நானே சமையல் செய்வேன்; நானே குழந்

தைக்குப் பல் துலக்குவேன்; குளிக்கச் செய்வேன்; உடை உடுத்துவேன்; எண்ணெய் இட்டுத் தலை வாருவேன்; உணவு இடுவேன்; உறங்கவைப்பேன் கடைக்குப்போவேன் வைத்தியரிடம் அழைத்துப்போய் மருந்து வாங்கித் தருவேன்; வருவோர் போவோர்க்குக் காப்பிவைத்துத் தருவேன். தோய்த்து உலர்ந்த துணிகளை மடித்து வைப்பேன். வரவு செலவு கணக்கு எழுதுவேன்'' என்று சொல்லிக்கொண்டே இருந்தேன்.

''சரி...சரி...எழுந்திருங்கள். குடித்தனம் ஆனாற் போல்தான். ஒரு வாரத்துச் செலவையும் ஒரே நாளில் செய்து விடுவீர்கள். ஆறு நாள் அடுப்பில் பூனை தூங்கும் படியாகச் செய்வீர்கள்'' என்று சொல்லிக்கொண்டே சமையலறையை நோக்கிச் சென்று விட்டாள்".[54]

'மலர் விழி' புதினத்தில் செல்வ நாயகம் பற்றி மலர் விழி குறிப்பிடும் செய்தியிலும் இந்த உண்மையினைக் காணலாம்:

''அவர் சம்பளம் முதலிய எதிலும் தலையிட்டதே இல்லை. முதலிலிருந்தே அப்படி நடந்துகொண்டார். அது நல்லதுதான். வீட்டுக்கு வருகிற இளைஞர்களுக்கும் அதே அறிவுரையைத்தான் சொல்லு வார். **'மனைவியிடத்தில் சம்பளத்தைக் கொடுத்து விடு கணக்கு எழுதிவைத்துச் செலவு செய்யச் சொல்'** என்று திருமணமாகி வாழ்த்துப் பெற வந்தவர்கள் பலருக்கு அவர் அறிவுரை சொல்லியதைக் கேட்டிருக்கிறேன்."[55]

### நல்ல மனைவி

'கரிந்துண்டில்' வரும் திருவேங்கடம் தன் மனைவியைப் பற்றி ஆராய்ந்து அளந்து கூறும் கூற்றில் வளமான வாழ்க்கைத் தத்துவம் அடங்கியிருக்கக் காணலாம் ;

"உங்கள் எதிர்கால மனைவியரிடம் குற்றம் காணும் போது குணத்தையும் காணுங்கள். மிகை நாடி மிக்க கொள்ளுங்கள்" என்று ஆசிரியர் சொன்னது, தக்க சமயத்தில் வந்து காத்தது. வழியறிந்து சிக்கனம், துன்பம் வந்தபோது உருகிக் கண்ணீர் விட்டு ஆதரவு தருதல், உறுதியான கற்பு, உலகியல் நடைமுறை, நல்ல வழக்கங்களை விடாமை, கட்டான உடலழகு, கணவனுடைய உயர்வையும் முன்னேற்றத்தையுமே நாடுதல். இத்தகைய நல்ல பண்புகள் நினைவுக்கு வந்தன".[56]

இவ்வாறு ஒத்த பண்பும் உயர் வாழ்வுங்கொண்ட கணவன்—மனைவியர் பற்றி மேற்காணும் செய்திகளைக் காண்கிறோம்.

## ஆடம்பர மோகங் கொண்ட மனைவியர்

பொதுவாகப் பெண்களுக்கு நகை, புடைவைகள், கார், பங்களாக்கள், சொகுசான வாழ்வு இவற்றில் வேட்கை மிகுதி; எளிமைப் பற்றும் ஆடம்பர வெறுப்புங் கொண்ட பெண்கள் எண்ணிக்கையில் குறைவாகவே உள்ளனர்.

'பாவை என்னும் புதினத்தில் கண்ணப்பர் கூற்றாக வரும் பின்வரும் வரிகள் எண்ணத்தக்கன.

> "சுற்றுப்புறத்தில் உள்ளவர்கள் பட்டாடை உடுத்திப் பகட்டாகத் திரிகின்றார்கள் அவளும் அப்படித் திரிய விரும்புகிறாள்; நானோ நூலாடை உடுத்து அழகாக விளங்கலாம் என்கின்றேன், அதற்காக வருந்துகின்றாள். சுற்றுப்புறத்தில் உள்ளவர்கள் கழுத்தொடியக் கைநோகப் பொன்நகைகள்

சுமந்து இறுமாக்கின்றார்கள். தானும் அப்படி இறுமாக்க விரும்புகின்றாள். நானோ அழகைக் காக்கும் எளிய சில நகைகள் போதும் என்கின்றேன். அதற்காக வருந்துகின்றாள். சுற்றுப்புறத்தில் உள்ளவர்கள் வம்பும் துன்புமான பேச்செல்லாம் பேசிப் பொழுதெல்லாம் போக்கி வாழ்நாளைக் கழிக்கின்றார்கள். தானும் அப்படிக் கழிக்க விரும்புகின்றாள். நானோ பாட்டிலும் படிப்பிலும் அறிவெல்லாம் செலுத்திக் கலையெல்லாம் கற்று இன்புறலாம் என்கின்றேன்; அதற்காக வருந்துகின்றாள். சுற்றுப்புறத்தில் உள்ளவர்கள் சடங்கும் சாத்திரமும் பெருக்கி ஒருவரிலும் ஒருவர் மதிப்பை மிகுதியாகப் பெற ஆடம்பரமாக வாழ்கின்றார்கள். தானும் இவ்வாறு வாழ விரும்புகிறாள். நானோ அன்பும் அறமும் வளர்த்துஎல்லோரும் பொது என்றெண்ணி எளிய வாழ்வு வாழலாம் என்கின்றேன். அதற்காக வருந்துகின்றாள். அவள் விருப்புவதெல்லாம் கண்மூடிப் பின்பற்றும் வாழ்வு. நான் சொல்வதெல்லாம் கண்திறந்து எண்ணும் வாழ்வு. அதனால் அவள் வருந்துகின்றாள். அவளுக்காக நானும் வருந்துகின்றேன்."[57]

'வாடாமலர்' என்னும் புதினத்தில் இந்தப் போராட்டம் நன்கு விளக்கப்படுகிறது. கனகா ஆடம்பர மோகங்கொண்டு தன் கணவனையுங் கொன்று தானும் அழிந்து போகிறாள். தானப்பன் தன் மனைவியைப் பற்றிக் கருதும் கருத்து வருமாறு :

"நான் ஒத்த உரிமை தருகிறேன். அவள் மருட்டுகிறாள். நான் அடங்கவும் முடியாமல் அவளை அடக்கவும் முடியாமல் தடுமாறுகிறேன். என் அன்பு நெஞ்சம் அவளிடம் அன்பை எதிர்பார்க்கிறது.

அன்பை விட வேறு எதை எதையோ மதிப்பவளாக இருக்கிறாள் அவள்."

"பெண்களுக்குப் பணமாகக் கொடுத்தால் மட்டும் போதாது, பூ, திண்பண்டம், சோளி, புடவை நகை இப்படி ஏதாவது கொடுத்தால்தான் மகிழ்வார்கள்."

"இயற்கையாக அன்பு வளரட்டும் என்று பொறுத்திருக்காமல், போராடுவோர் உண்டு. இந்தப் போராட்டத்தில் பலர் முயற்சி தோல்வியுறும். மனைவியின் மனத்தை அவளுடைய பற்றுக்களிலிருந்து பிரித்துவிட முயலும் கணவனும் துன்புறுகிறான். கணவனுடைய மனத்தை அவனுடைய பற்றுக்களிலிருந்து பிரித்துவிட முயலும் மனைவியும் துன்புறுகிறாள். இவர்கள் பல ஆண்டுகள் பொறுத்து, அவரவர்களின் பற்றுக்களுக்கு உரிமை தந்து, வாழ்வார்களானால் காலப் போக்கில் இரு சாராருக்கும் மற்றப் பற்றுக்கள் குறைந்து, அவர்களின் குடும்பத்தில் மட்டும் பற்று வளர்ந்து அன்பு பெருகுதலைக் கண்டு மகிழ்வார்கள்".[58]

'கரித்துண்டில்' வரும் ஓவியர் மோகனும், தான் காதலித்துக் கைபிடித்து வாழ்ந்த நிர்மலாவின் செல்லரித்த வாழ்க்கையினைப் பின்வருமாறு வேதனையோடு குறிப்பிடக்காணலாம்.

"நாளடைவில் என் அன்பைவிடச் சுற்றுப்புறத்தாரின் அன்பையே அவள் தேடி அலைந்தாள். என் மதிப்பைவிட, வெளியாரின் மதிப்பையே நாடி விரும்பினாள். என் மானத்தை விடத் தன் புகழையே

பெரிதாகக் கொண்டு வாழத் தலைப்பட்டாள். கிடைத்த ஒன்றைப் புறக்கணித்து விட்டுக் கிடைக்காததை நாடி ஏங்கும் குரங்கு மனம் அவளைக் கெடுத்தது. எனக்காச் செய்ய வேண்டிய கடமைகளையும் புறக்களித்துவிட்டு, ஊரிலுள்ள பெண்களோடு கூடிக் குலாவுவதிலும், அழைத்த வீடுகளுக்கெல்லாம் ஆர்வத்தோடு போய் வருவதிலும் காலத்தைப் போக்கினாள் இவள் தானா வாழ்க்கைத் துணைவி என்னும் வெறுப்பு என் நெஞ்சத்தில் வேரூன்றி விட்டது வேறு வழி இல்லாமல் ஒரே வீட்டில் தங்கியிருந்தோம். என்று சொல்லலாம்"[59]

## அன்பற்ற அமைதியுற்ற கு ம்பம்

கணவர் மனைவியர் உறவு செல்வக் குடும்பங்களில் சீரழிந்த நிலைமையில் புரையோடிப்போயிருக்கும் அவலத்தினைக் கலெக்டர் செல்வநாயகத்தின் வேலைக்காரன் பின்வருமாறு குறிப்பிடுகின்றான்.

'அழகு கெட்ட முகத்தில் மாவு பூசுவது போல, அன்பு இல்லாத வாழ்க்கையானாலும் கணவனும் மனைவியும் கைகோத்துக் கொண்டு திரிவார்கள். பகலில் யாராவது வந்தால் 'அல்லோ குல்லோ' என்று கொஞ்சுவார்கள். யாருமில்லாத வேளையில் எலியும் பூனையுமாக இருப்பார்கள். நாய்மாதிரி ஒருவரை ஒருவர் சீறுவார்கள், மாலையில் எல்லோருடைய கண்ணிலும் தெரியும்படியாகக் கைகோத்துக் கொண்டு உலாவுவார்கள். இணை பிரியாமல் கிளப்புக்கும் சினிமாவுக்கும் போவார்கள். வீட்டிற்கு வந்ததும் ஒருவர் வடக்கே பார்ப்பார்; இன்னொருவர் தெற்கே பார்ப்பார். இப்படித்தான் பெரிய ஆபிசர்

களின் பெண்டாட்டிமார்கள். எல்லாம் எங்களுக்குத் தெரியும்'[60]

இவ்வாறு ஆடம்பர வேட்கையால் அல்லலுற்று மடிந்த குடும்ப வாழ்வுகளும் பேசப்பட்டுள்ளன.

## குடும்ப வாழ்வு சிறக்க வழிகள்

டாக்டர் மு.வ. அவர்கள் சொல்லினும் எழுத்தைப் போற்றுபவர். எழுத்து பயன் விளைக்கும் எனக் கண்டவர். எனவே பலரின் வாழ்க்கையைக் கூர்ந்து நோக்கிப் புலப்படும் குறைகளைக் கூறி, அக்குறைகளைப் போக்கிக் கொள்வதற்குரிய வழிவகைகளையும் குறிப்பிடுகின்றார். 'நோய் நாடி, நோய் முதல் நாடி, அது தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செய்யும்'[61] திறத்தில் வல்லவராய் விளங்குகிறார். மனைவியர் குறைகளைக் காட்டியவர், அடுத்துச் சில ஆண்களின் குறைபாடுகளையுஞ் சுட்டிக் காட்டுகிறார்.

'மணிமேகலை' என்ற பாத்திரத்தின் வாயிலாக 'அகல்விளக்கு' என்ற புதினத்தில் 'கணவர்' பற்றிய கருத்து பின்வருமாறு வெளிப்படுகின்றது.

'கெட்டவர் அல்ல, பிடிவாதக்காரர். உலகத்தில் அங்கங்கே குடும்பங்களில் மனைவியின் விருப்பம் போல் விட்டுவிட்டுக் கணவன்மார் எதிலும் தலையிடாமல் இருக்கிறார்கள். நம் வீட்டில் அப்பா இல்லையா? என் வீட்டுக்காரர் நான் கட்டுகிற புடவை முதல் வாங்குகிற பொருள்கள் வரையில் எதற்கும் இப்படி அப்படி என்று கட்டளை போடுகிறார். பள்ளிக்கூடத்தில் ஆசிரியர்கள் கொடுத்த உரிமைகூட இவர் கொடுப்பதில்லை. சிவப்பு மையில் எழுத வேண்டியதைக் கருப்பு மையில் எழுதினால் ஆசிரியர்

கள் பெரிய குற்றமாகக் கருதுவதில்லை, இரண்டு பக்கம் எழுத வேண்டியதை இரண்டரை பக்கமாக எழுதினால் கோபித்துக்கொள்வதில்லை. ஒருநாள் இரண்டுநாள் படிக்காமலே வந்தாலும் நேரம் கழித்து வந்தாலும் மன்னித்து விடுகிறார்கள். இவருடன் குடும்பம் நடத்துவது பெரிய பள்ளிக்கூடமாக இருக்கிறது பள்ளிக்கூடமோ இராணுவப் பள்ளிக்கூடமாக இருக்கிறது. தாய்வீட்டுக்கு வந்தது சிறையிலிருந்து விடுதலையாகி வந்தது போல் இருக்கிறது"[62]

அதே புதினத்தில் பாக்கியம் அம்மையார் வாயிலாகப் பிறிதொரு வகைக் கணவரைப் பற்றிய சித்திரம் பின் வருமாறு குறிப்பிடப்படுகின்றது.

'உன் கணவர் கொள்கை உடையவர். ஒரு நெறியை நம்புகிறவர். சொல்கிறபடி நடக்கிறவர். ஆகையால் நீ அவரை நம்பலாம். உனக்கு ஒருவழி, அவருக்கொரு வழி என்று நடந்தால், அப்படிப்பட்ட ஆளை நம்பக்கூடாது. சில ஆண்கள் வீட்டிலே சிக்கனம் பிடிக்கச் சொல்லி வெளியே சீட்டு ஆடிக் காசைத் தொலைப்பார்கள். மனைவி மக்கள் வெறுஞ் சோறு உண்ணச்செய்து தாம் மட்டும் ஓட்டலில் சுவையாகத் தின்பார்கள். மனைவி மக்களை வீட்டில் ஏமாற்றிவிட்டுத் தாம்மட்டும் நாடகமும் சினிமாவும் விடாமல் பார்ப்பார்கள். அவர்களுக்கு ஒருநாளும் உண்மையான அன்பு ஏற்படாது. உயிரையே விடுவதுபோல் உருகி உருகிப் பேசினாலும் அவர்களை நம்ப முடியாது; நம்பக்கூடாது. உன் கணவர் அப்படிப்பட்டவரா மணிமேகலை! உனக்குப் பட்டு வேண்டா எனறு சொல்லிவிட்டு அவர் மட்டும் ஆடம்பரமாகத் திரிகிறாரா? திருமணத்தின்போதே

அவர் வெள்ளைக் கதர் தவிர வேறு உடுத்த வில்லையே".[63]

'தாய் தந்தைக்கு அடுத்தபடி கணவர்தான் அன்பு மிகுந்தவர். தன்னலம் இல்லாத ஆளாக இருந்தால் அந்த அன்பு நாளடைவில் வளர்ந்து பெருகும். முதலில் பொறுமையோடு அவர் வழியில் நடந்தால், காலம் செல்லச் செல்ல முழுதும் உன் வழியில் வந்துவிடுவார். உலகத்தில் பார்! பெண்கள் இட்ட கோட்டைக் கடக்காமல் எத்தனை ஆண்கள் வாழ்கிறார்கள்! பயந்து வாழ்கிறவர்களைக் கணக்கில் சேர்க்க வேண்டா. அன்பால் முழுதும் விட்டுக் கொடுத்து வாழ்கிற கணவன்மார் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள்,'[64]

பேராசிரியர் மங்கையர்க்கரசியார் சில வகைக் கணவர் குறித்து இவ்வாறு குறிப்பிடக் காணலாம்

'உன் கணவன் உன்மேல் பேரன்பு காரணத்தாலும் உன்னைவிட்டுப் பிரிய மனமில்லாமல் எந்நாளும் உடன் இருக்கலாம். அல்லது உன்மேல் உள்ள சந்தேகத்தாலும் உன்னைவிட்டுப் பிரியாமல் நிழல்போல் தொடர்ந்து வரலாம். அதைத் தவறாகக் கொண்டு உன்மேல் உள்ள தீராக்காதல் என்று எண்ணிவிடக் கூடாது'[65]

'அடங்கி நடக்கும் மனைவியையே ஒருவன் நாடுகிறான். அடங்கி நடக்கும் கணவனையே ஒருத்தி நாடுகிறாள். என்ன சொன்னாலும் எதிர்த்துப் பேசாமல் பணிவாக நடக்கும் கிளர்க்கையே யாரும் விரும்புகிறார்கள். எதற்கும் இசைந்து நடக்கும் வேலையாளையே எல்லோரும் தேடுகிறார்கள். இது

பொதுவாக மனிதப் பண்பு. மனிதன் தனக்கு உரிமை தேடுகிறான், ஆனால் உரிமை இழந்து தன்னிடம் பழகுகிறவர்களையே நாடுகிறான். பொதுவான மனித இயல்பு இது.'[66]

இவ்வாறு டாக்டர் மு வ. அவர்களின் படைப்புகளில் பலவகை மனப்போக்குக் கொண்ட ஆண்களைக் காணலாம்.

## குடும்ப வாழ்வு சிறக்க இரு பாடங்கள்

வளமான அமைதியான குடும்ப வாழ்விற்குக் கணவன் மனைவியர் கற்கத்தக்க அடிப்படைப் பாடங்கள் இரண்டு என்பதனை மு.வ. வலியுறுத்துகிறார். அவ்விரண்டில் ஒன்று விட்டுக்கொடுத்து நடக்கும் பெருந்தன்மை; பிறிதொன்று, ஒருவர் குற்றம் மற்றவருக்குத் தெரியாத கண்மூடி வாழ்வு. இவ்விரண்டு பண்புகளும் இனிய இல்வாழ்க்கைச் சிறப்பிற்குப் பெருந்துணை புரிவனவாகும். நாலடியாரும் 'ஒருவர் பொறை இருவர் நட்பு'[67] என்று பேசும்.

முதலாவதாக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை அமையவேண்டும் என்பதனைப் பின் வருமாறு குறிப்பிடுகின்றார்.

> 'வீட்டைத் துறப்பது, செல்வத்தை வழங்குவது' உயிரைக் கொடுப்பது இவைகளும் தியாகம்தான். ஆனால் அன்பானவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் தியாகம்தான் பெரிய தியாகம். விட்டுக்கொடுக்கும் அந்தப் பெருந்தன்மை இல்லா விட்டால், கணவன், மனைவி கூடி வாழ முடியாது. எவ்வளவு அறிவு இருந்தாலும் போரும் பிணக்கும்

பொதுவாக மனிதப் பண்பு. மனிதன் தனக்கு உரிமை தேடுகிறான், ஆனால் உரிமை இழந்து தன்னிடம் பழகுகிறவர்களையே நாடுகிறான். பொதுவான மனித இயல்பு இது.'[66]

இவ்வாறு டாக்டர் மு. வ. அவர்களின் படைப்புகளில் பலவகை மனப்போக்குக் கொண்ட ஆண்களைக் காணலாம்.

## குடும்ப வாழ்வு சிறக்க இரு பாடங்கள்

வளமான அமைதியான குடும்ப வாழ்விற்குக் கணவன் மனைவியர் கற்கத்தக்க அடிப்படைப் பாடங்கள் இரண்டு என்பதனை மு.வ. வலியுறுத்துகிறார். அவ்விரண்டில் ஒன்று விட்டுக்கொடுத்து நடக்கும் பெருந்தன்மை; பிறிதொன்று, ஒருவர் குற்றம் மற்றவருக்குத் தெரியாத கண்மூடி வாழ்வு. இவ்விரண்டு பண்புகளும் இனிய இல்வாழ்க்கைச் சிறப்பிற்குப் பெருந்துணை புரிவனவாகும். நாலடியாரும் 'ஒருவர் பொறை இருவர் நட்பு'[67] என்று பேசும்.

முதலாவதாக ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை அமையவேண்டும் என்பதனைப் பின் வருமாறு குறிப்பிடுகின்றார்.

> 'வீட்டைத் துறப்பது, செல்வத்தை வழங்குவது' உயிரைக் கொடுப்பது இவைகளும் தியாகம்தான். ஆனால் அன்பானவர்கள் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து வாழும் தியாகம்தான் பெரிய தியாகம். விட்டுக்கொடுக்கும் அந்தப் பெருந்தன்மை இல்லா விட்டால், கணவன், மனைவி கூடி வாழ முடியாது. எவ்வளவு அறிவு இருந்தாலும் போரும் பிணக்கும்

வளருமே தவிர, அன்பும் அமைதியும் வளர முடியாது. அதனால் கணவனும் மனைவியும் கற்க வேண்டிய முதல் பாடம் விட்டுக் கொடுப்பதுதான். அதுவே கடைசிப் பாடமும் ஆகும்.[68]

'நானும் இனிமேல் விட்டுக்கொடுத்து நடப்பது என்று துணிந்துவிட்டேன். உணவு விடுதியில் எந்த மடையனுடைய உதவிக்கோ காத்திருப்பதுபோல், தொழில் செய்யும் இடத்தில் எந்த அநியாயத்தையும் பார்த்துப் பொறுத்திருப்பதுபோல், தெருவில் அக்கம் பக்கத்தில் கொடுமைகளைக் காதால் கேட்டும் பேசாமல் அமைதியாக இருப்பதுபோல், குடும்பத் திலும் அவள் எப்படியாவது போகட்டும் என்று இருந்துவிடப் போகிறேன்''[69]

## விட்டுக் கொடுத்து வாழும் கணவர்

'அகல் விளக்கில்' வரும் பாக்கியம் அம்மாள் வாழ்க்கை அனுபவம் நிறைந்தவர். எனவே அவர் சந்திரனின் மனைவியிடம் பின்வருமாறு அறிவுரை கூறக் காணலாம்.

'தாய் தந்தைக்கு அடுத்தபடி கணவர்தான் அன்பு மிகுந்தவர். தன்னலம் இல்லாத ஆளாக இருந்தால் அந்த அன்பு நாளடைவில் வளர்ந்து பெருகும். முதலில் பொறுமையோடு அவர் வழியில் நடந்தால், காலம் செல்லச் செல்ல, முழுதும் உன் வழி யில் வந்திடுவார். உலகத்தில் பார்! பெண்கள் இட்ட கோட்டைக் கடக்காமல் எத்தனை ஆண்கள் வாழ் கிறார்கள்! பயந்து வாழ்கிறவர்களைக் கணக்கில் சேர்க்க வேண்டா. அன்பால் முழுதும் விட்டுக்

கொடுத்து வாழ்கிற கணவன்மார் எவ்வளவோ பேர் இருக்கிறார்கள்.[70]

என்றார் பாக்கியம். இரண்டாவது ஒருவர் குறையினை மற்றவர் உணர்ந்து கலங்காத கண்மூடி வாழ்வு கணவன் மனைவியர்க்குள் அமைய வேண்டும் என்பதனைப் பின்வருமாறு புலப்படுத்துகின்றார்.

'எங்களைப் பார்த்து நண்பர் பெருமை கொள்ளு மாறு வாழ்ந்தோம். உள்ளன்பு இல்லாத சுற்றத்தார் பொறாமைகொள்ளுமாறு வாழ்ந்தோம்.'[71]

"காதல் வாழ்க்கையில் ஒருவனைக் கண்மூடி வாழ்வு வேண்டும். குழந்தை போல் வாழ வேண்டும். தொடக்கத்தில்தான் ஆராய்ச்சி வேண்டும். பிறகு ஆயுள் வரைக்கும் ஆராய்ச்சியும் கூடாது. அறிவும் மிகுதியாகக் கூடாது. ஒருவர் குற்றம் ஒருவருக்குத் தெரியாத அன்பு வாழ்வு—கண்மூடி வாழ்வு வேண்டும்."[72]

## குற்றத்திற்கு இடையே குணங் கண்டு போற்றுதல்

மனித வாழ்க்கை குறையுடையது; எவ்வளவு பெரிய சான்றோர்கள் நடத்தும் வாழ்க்கையானாலும் மதிக்கு மரு வாய்த்தாற்போல ஒரு சிறுகுறை இருக்கும். முற்றிலும் நல்லவர் என்றோ முற்றிலும் கெட்டவர் என்றோ வாழ்க்கையில் ஒருவரையும் காண முடியாது. கடவுள் படைப்பில் குறையில்லாத படைப்பு யாண்டும் எப்போதும் காண இயலாது. மேடு பள்ளம் போல, ஒளி இருள் போல நன்மை தீமைகள் வாழ்க்கையில் கலந்தே அமைந்திருக்கக் காணலாம். எனவே வாழ்வின் எல்லாத் துறைகளிலும் கணவனும் மனைவியும் ஒரே கருத்துக் கொண்டவர்களாக

இருப்பார்கள் என்று சொல்லிவிட முடியாது. நூற்றுக்கு நூறு கருத்தொருமித்து வாழ்க்கை நடத்துபவர்களைத் தேடியும் காணல் இயலாது. எனவே கணவர் மனைவியர் தத்தம் கருத்து வேறுபாடுகளுக்கு இடந்தந்து, உள்ள குறைகளை—உள்ளக் குறைகளை உயர்த்திக் காணாததோடு, உள்ள நிறையை—குற்றங்களுக்கு இடையேயும் ஒளிவிடும் குணங்களை எண்ணிப் பாராட்டிப் பெருமிதங் கொள்ள வேண்டும். இதனைப் பின்வருமாறு மு. வ. அழகுறப் புலப்படுத்துவார்.

> "குறை இல்லாதவர்கள் உலகத்தில் இல்லை. குறைகளுக்கு இடையே குணத்தைக் கண்டு வாழ வேண்டும். முள்ளுக்கு இடையே முரட்டு இலைகளுக்கு இடையே மெல்லிய மலரைக் கண்டு தேனைத் தேடுகிறது தேனீ. அதுதான் வாழத் தெரிந்தவர்களின் வழி. எங்கள் குடும்பத்திலும் குறைகள் உள்ளன. எங்கள் இருவருக்கும் தெரியும். அவற்றைப் பொருட்படுத்துவதில்லை. அதனால் அன்பு வளர்ந்து விட்டது. இனி எங்களை எதுவும் அசைக்க முடியாது. மரம் வேரூன்றி விட்ட பிறகு பெருங்காற்று என்ன செய்யும்? உங்கள் குடும்பம் தொடக்கத்திலிருந்தே ஒடிக்கப்பட்டும் முறிக்கப்பட்டும் ஆட்டி அசைக்கப்பட்டும் வளர்ந்த மரமாக இருக்கிறது. ஆகையால் இன்னும் ஆழமாக வேரூன்றவில்லை. ஒரு சிறு புயல் வந்தாலும் அல்லல்படுகிறது."[73]

பேராசிரியர் அருளப்பர் நெஞ்சில் ஒரு முள்ளில் பின்வருமாறு அறிவுரை பகர்கின்றார்.

> "மனைவி பெரிய உத்தமியாக, கண்ணகி போலவும், தமயந்தி போலவும் இருக்கவேண்டும் என்று

எதிர்பார்க்கிறாய். அதுதான் தவறு. நூறாயிரத்தில் ஒருவர், கோடியில் ஒருவர் அப்படி இருக்க முடியும். நாம் அதை எதிர்பார்ப்பது அறியாமை. மனிதப் பிறவியின் குணம் குற்றம் இரண்டும் உடைய ஒருத்தியைத் தான் நீ எதிர்பார்க்கவேண்டும். ஆகவே, குற்றங்களைப் பொறுத்து வாழ்க்கை நடத்து'[74]

## குறள் மணிமொழி

'குணம் நாடிக் குற்றம்நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்'

என்பது குறள் மணிமொழி. இந்தத் தலையாய பண்பினைப் பின்வரும் வரிகளில் மு.வ. வலியுறுத்துகின்றார்.

'இது அரசியலுக்கு மட்டும் அல்ல: குடும்ப இயலுக்கும் கொள்ளத் தக்கது. உங்கள் எதிர்கால மனைவியரிடம் குற்றம் காணும்போது குணத்தையும் காணுங்கள். மிகை நாடி மிக்க கொள்ளுங்கள்'[75]

குறள் மணிமொழியையே தம் உரையில் வைத்துத் 'திருவேங்கடம்' என்னும் மாப்தர் வாயிலாக மு.வ. பின்வருமாறு பேசுகின்றார்.

'உங்கள் எதிர்கால மனைவியரிடம் குற்றம் காணும்போது குணத்தையும் காணுங்கள். மிகை நாடி மிக்க கொள்ளுங்கள் என்று ஆசிரியர் சொன்னது தக்க சமயத்தில் வந்து காத்தது. வழியறிந்த சிக்கனம், துன்பம் வந்தபோது உருகிக் கண்ணீர்விட்டு ஆதரவு தருதல், உறுதியான கற்பு, உலகியல் நடைமுறை, நல்ல வழக்கங்களை விடாமை, கட்டான உடலழகு,

கணவனுடைய உயர்வையும் முன்னேற்றத்தையுமே நாடுதல் இத்தகைய நல்ல பண்புகள் நினைவுக்கு வந்தன'[76]

## கணவரிடம் காணப்படும் குறை

மனைவியிடம் ஓரளவு குறை இருக்குமேயானால் கணவனிடம் பேரளவு குறைகள் இருப்பது இயற்கை. பெற்ற தாய் தான் பெற்ற பிள்ளைகளிடம் காணப்படும் குறைகளை மன்னித்து மறப்பதுபோல, மனைவியும் தன் கணவன் குடிகாரராக இருந்தாலும், குதிரைப் பந்தய ஆசை உடையவராக இருந்தாலும், பெண்களை நாடி அலையும் பித்துமனம் உடையவராக இருந்தாலும், நோயாளியாயிருந்தாலும், அல்லது வாழ்வில் எந்தக் குறை உடையவராயிருந்தாலும் அவரை வெறுத்து ஒதுக்கக் கூடாது. அவசியம் காணப்படும் குறைகளைக் கண்டு அவற்றைக் களைந்து அவரைத் திருத்த முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமேயொழிய அவரை வெறுக்கக்கூடாது. குறைகளை வெறுப்பதோடு நின்றுவிட வேண்டும். அதற்கு மேலும் போய் குற்றங் கொண்டவரையே வெறுக்கக் கூடாது. நாடே நடுங்கும் திருடனாக இருந்தாலும், சமுதாயமே பழித்தொதுக்கி வெறுக்கும் சண்டாளனாக இருந்தாலும், அப் பொல்லாதவனைப் பெற்றெடுத்த தாய் மனம் வெறுக்க முன் வராதது போல, மனைவியின் மனமும் அமையவேண்டும். மனைவிக்குத் தாய் மனம் வந்துவிட்டால் கணவரை வெறுக்கத் தோன்றாமல், தன்னால் முடிந்த அளவிற்கு அவரிடம் உள்ள குறைகளைத் திருத்த—களையத் தோன்றும். கணவனிடத்திற் காணப்படும் குறைகளை முடிந்த அளவிற்குத் திருத்தப் பாடுபட முனையும் மனைவியின் முயற்சி எந்த அளவிற்கு அமையவேண்டும் என்பதனையும் சான்றோர் பெருந்தகை

டாக்டர் மு. வ. 'நெஞ்சில் ஒரு முள்'ளில் இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

> 'கொஞ்சம் போராட வேண்டும். பிறகு விட்டுக் கொடுக்கவேண்டும். அப்படி நடந்தால்தான் ஆண்களைத் திருத்தமுடியும். அளவுக்குமேல் போராடவும் கூடாது; அளவுக்குமேல் விட்டுக்கொடுக்கவும் கூடாது. எதிலும் அளவு வேண்டும். அளவு தெரிந்துகொண்டு நடந்தால், வாழ்க்கை துன்பம் இல்லாமல் போய்விடும்.'[17]

இவ்வளவோடு மு. வ. நிற்கவில்லை. குறைகளுக்கு இடையில் குணத்தைக் கண்டு வாழவேண்டும் என்று வலியுறுத்திய மு.வ. அவர்கள் குடும்ப வாழ்க்கையில் அளவுக்கு மீறிய எதிர்பார்ப்பு ஏமாற்றத்தில் முடியும். அதற்கு இடங்கொடுக்கக் கூடாது என்னும் எச்சரிக்கை செய்கிறார்.

அவருடைய மிகச் சிறந்த மணிமொழியாக—பொன்மொழியாகக் கொள்ளத்தக்க ஒரு தொடர், 'நினைத்தது கிடைக்காதபொழுது, கிடைத்ததைக் கொண்டு திருப்தியடையவேண்டும்' என்பதாகும். இதனை அவருக்கே ஒரு அழகான முறையில் எழில் கொஞ்சும் தமிழ் நடையில் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

> 'உள்ளதைக் கொண்டு மகிழவேண்டும். வியாபாரம், செல்வம் இவற்றில் மட்டும் அல்ல; மனைவியோடு வாழும் வாழ்க்கையிலும் இது வேண்டும். மனைவியிடம் அளவுக்குமேல் பணிவு, அடக்கம், ஒழுக்கம், அழகு ஆர்வம் எல்லாவற்றையும் எதிர்பார்த்தாலும் கடைசியில் ஏமாந்து வருந்த வேண்டி ஏற்படும்'[18]

இரு நெறிகளில் இயைந்த நெறி

இல்லற வாழ்வு என்பது தொடக்கத்தில் ஆணும் பெண்ணும் ஒன்று கலந்து வாழ்வில் தலைப்பட்டு நிற்பதாகும். குழந்தைகள் பிறப்பதற்கு முன்னர் இருவர் உலகமாக அது துலங்குகின்றது. ஆண் பெண் அனைத்திலும் சமம் என்ற கொள்கை வளர்ந்து, பெண்களுக்கு உயர் கல்வியும், வாக்குரிமையும், சொத்துரிமையும் அலுவலகத்தில் பணிபுரியும் வாய்ப்பும் பெருகிவிட்ட பிறகு பெண்ணிற்கு உரிமை கொடுத்தே தீரவேண்டிய கட்டாய நிலையில் ஆண் சமுதாயம் தள்ளப்பட்டு விட்டது. இதனால் பெண்ணுரிமை மிகுந்துவிட்டது இதனைக் 'குமரவேல்' என்ற கதைப் பாத்திரம் வாயிலாக 'மண்குடிசை'யில் மு. வ. பின்வருமாறு குறிப்பிடுகின்றார்,

> 'பழங்காலத்தில் ஆண்களுக்கு உரிமை மிகுதியாக இருந்தது. மனைவி, கணவனைத் தெய்வமாகத் தொழுது வந்தாள். ஒரு பெண் அப்படி வாழ்ந்தால் தான் சமுதாயத்தில் அவருக்கு மதிப்பு இருந்தது. அந்தக் காலத்தில் அதுதான் நாகரிக வழக்கம்—பேஷன் என்று ஆங்கிலத்தில் சொல்வார்களே அது போல். இந்தக் காலத்தில் ஒத்த உரிமை வளர்ந்து வருகின்றது. கணவனும் மனிதன்; வாழ்க்கைக்குத் துணையானவன். ஆகையால் இருவரும் ஒத்துப் போவது நல்லது.'[79]

டாக்டர் மு. வ அவர்களின் புதினங்களில் யார் வழியில் செல்வது என்ற சிக்கல் நன்கு அலசப்படுகின்றது. அதனைப் பின்வரும் பகுதி கொண்டு தெளியலாம்.

> 'கணவன் மனைவிக்கு இடையே தீராத வெறுப்பு ஏற்பட்ட பிறகு விலக உரிமை வேண்டும். அறிஞர்'

ஷா கூறுவது போல், விலகுவதற்குக் காரணம் என்ன என்று கேட்க நீதி மன்றமும் முன்வரக்கூடாது. விலக உரிமை இல்லாமல் கட்டுப்படுத்துவதற்கு மணம் —திருமணம் என்ற பெயரே கூடாது!"[80]

''குடும்பம் என்றால் ஒருவரின் மனக்கவலையை மற்றவர் குறைப்பதற்காக ஏற்பட்டது. ஆனால், உள்ள கவலையை வளர்த்து, மீளாத் துன்பத்தில் வருந்துவதானால், அந்தக் குடும்பத்தைக் கலைத்து விடுவதே நல்லது. முடிந்தால் வாழலாம்; முடியா விட்டால் பிரியலாம். உலகம் பரந்த உலகம். எல்லோருக்கும் இங்கே இடம் உண்டு. அவரவர்கள் தங்களுக்குப் பொருத்தமான இடம் தேடிக் கொண்டு வாழ்வதே நல்லது."[81]

மனைவி கணவன் மனமறிந்து நடந்தால் மனை வாழ்வு சிறக்கும் என்பது மு.வ.வின் நம்பிக்கை. எனவேதான் மேலே கண்டவாறு குறிப்பிட்டார். ஆயினும் சிலவிடங்களில் பெண்ணிற்காக இரங்கும் பெருமனமும், பெண்ணிற்கு உரிமை நல்கவேண்டும் என்ற முற்போக்குக் கருத்தினையும் முறையே வற்புறுத்தியிருக்கக் காணலாம்.

'அகல் விளக்கில்' வரும் வேலு' என்ற கதை மாந்தர் பெண்ணின் வாழ்விற்கு இரங்கிப் பேசுவன வருமாறு :

'பெண் என்றால், கணவன் சொன்னதைக் கேட்டு, வாய் திறக்காமல் பணிந்து நடக்கவேண்டுமே தவிர, கணவன் சீரழியும் நிலையிலும் அன்பான இடித்துரையும் சொல்லக்கூடாது. தன் உரிமையை நிலைநாட்டித் தற்காப்பு முயற்சியும் செய்யக்கூடாது. உரிமையே இல்லாத பெண், கணவன் கெடும்போது

தானும் சேர்ந்து கெடுவது தவிர வேறுவழி இல்லாத வளாக இருக்கிறாள்.'[82]

## மனைவிக்கு உரிமை கொடு

'மலர்விழி' என்னும் புதினத்தில் கலெக்டர் செல்வ நாயகம் தன் மனைவிக்கு அளவுக்கு மீறி உரிமை கொடுத் தவர். அவர் கூறுகிறார் :

'மனைவிக்கு உரிமை கொடு உரிமையால் தீமை நேர்ந்தாலும் கவலைப்படாதே. இரண்டு மூன்று குடும்பம் உரிமையால் கெட்டாலும் சரி, தமிழ்நாடு சீர்ப்படும். ஆங்கில நாட்டைப்பார். அவர்களுடைய முன்னேற்றத்திற்குக் காரணம் அங்கே இருக்கும் குடும்ப உரிமைதான். ஆங்கிலேயன் தன் வீட்டில் ஓர் அறையில் தன் மனைவி இன்னொரு வனோடு பேசிக் கொண்டிருப்பதை நேரில் பார்த் தாலும் சினமோ வெறுப்போ கொள்ளமாட்டான். உள்ளே வரலாமா என்று கேட்டு மனைவியின் அனுமதி பெற்றுத்தான் உள்ளே கால் வைப்பான். அதுதான் நாகரிகம் என்று அங்கே மதிக்கப்படுகிறது. முரட்டுத்தனத்துக்கும் உடல் வலிமைக்கும் மதிப்பு உள்ள வரையில்தான் பெண்ணடிமை இருக்கும். அன்புக்கும் அறிவுக்கும் மதிப்பு ஏற்பட்ட உடனே பெண்ணுக்கு உரிமை பிறந்துவிடும்"[83]

அளவுக்கு மீறிய உரிமையினை மனைவிக்கு தந்து அதனால் செல்வநாயகம் வாழ்க்கை இறுதியில் அழிந்து போனது என்று மு வ. அப்புதினத்தில் விளக்கவும் காண் கிறோம். அதுமட்டுமல்லாமல் ஓவியர் மோகனை உயிர்க்கு உயிராகக் காதலித்து மணந்த நிர்மலா இறுதியில் பண

ஆசையால் காதலனைத் துறந்து மற்றொருவனோடு ஓடிப்போய் விட்ட பிறகு, இறுதியில் தான் இறப்பதற்கு முன் தன் எண்ண அலைகளை எழுத்தாக்கி 'டயரி' எழுதுகிறாள். அதில் நிர்மலா குறிப்பிட்டிருக்கும் கருத்து மிகமிக ஆழ்ந்து எண்ணத்தக்கது.

'வாழ்க்கை தொடங்கிய அன்று முதல் இன்றுவரையில் அந்த அறைக்குள் நீங்கள் எட்டிப் பார்த்ததும் இல்லை. என்ன இருக்கிறது என்று அறிய முயன்றதும் இல்லை. ஐயுற்றுக் கேட்டதும் இல்லை. இவ்வளவு பெருந்தன்மையோடு மனைவிக்கு உரிமை கொடுத்து அந்த உரிமை கெடாமல் நடந்துகொள்ள வேறு ஆண்களால் முடியுமா தெரியவில்லை. இந்தப் பெருந்தன்மையை நோகின்றேன். நோயாளியின் வேண்டுகோளுக்கு இசைந்து, அவனுடைய முதுகில் உள்ள கட்டியைத் தொடாமலே பார்த்துச் செல்லும் மருத்துவர்போல் இருந்தீர்கள். அதனால் கட்டிப் பெரியதாய்ப் புரையோடி, உடலையே சாய்க்கும் அளவிற்கு வளர்ந்து விட்டது'.[84]

இதனால் மனைவிக்கு அளவுக்கு மீறி உரிமை வழங்குவது அடிப்படை வாழ்விற்கே ஆபத்தாக முடிகின்றது என்பதனை மு.வ. வற்புறுத்தக் காணலாம். 'வாடாமலர்' என்ற புதினத்திலும் இக்கருத்து விளக்கப் படுகின்றது.

'நான் ஒத்த உரிமை தருகிறேன். அவள் மருட்டுகிறாள். நான் அடங்கவும் முடியாமல், அவளை அடக்கவும் முடியாமல் தடுமாறுகிறேன். என் அன்பு நெஞ்சம் அவளிடம் அன்பை எதிர்பார்க்கிறது, அன்பைவிட வேறு எதை எதையோ மதிப்பவளாக இருக்கிறாள் அவள்.'[85]

இப்புதினத்திலும் தானப்பன் மனைவி தானப்பனுக்குத் துரோகம் செய்துவிட்டு, வேறு ஒருவனோடு ஓடிப்போய் இறுதியில் திரும்பிவந்து கணவனுக்கு விஷம் தந்து கொன்றுவிட்டுத் தானும் தற்கொலை செய்துகொண்டு மாண்டு போவதைக் காட்டுகின்றார்.

எனவே டாக்டர் மு.வ. அவர்களுக்குப் பெண்களுக்கு அளவுக்கு மீறி உரிமை தரக்கூடாது என்பதும், அவ்வாறு தந்தால் அதனால் அவர்களும் கெட்டுப்போய், உரிமை தந்தவர்களையும் மாய்த்துவிடுகிறார்கள் என்பதும் உண்மை என்று கருதுகின்றார் என்பதனை மேலும் சில விளக்கங்களால் அறியலாம்.

'வாடாமலரி'ல் இடம் பெற்றுள்ள பின்வரும் கருத்து சிந்திக்கத்தக்கது.

> 'திருமணம் என்பது சட்டத்தின் பாதுகாப்பாக இருக்கிறது. அதை ஒரு காவலாக வைத்துகொண்டு, திருமணமான பெண்ணிடத்தில் மற்ற ஆண்கள் தவறு செய்ய முயல்கிறார்கள். திருமணமான சில பெண்களும் அதை அரணாக வைத்துக் கொண்டு, கணவனைப் புறக்கணித்து மற்றவர்களோடு விளையாட விரும்புகிறார்கள். அந்தச் சட்டத்தின் அரண் இல்லையானால், தவறான விளையாட்டில் ஈடுபடுவதற்கு, அஞ்சுகிறார்கள்."[86]

பெண்கள் எளிதில் உணர்ச்சி வயப்பட்டு வாழ்வில் தங்களை இழந்துவிடுகிறார்கள் என்றும், அவர்கள் கூடுமான வரையில் ஆண்களோடு பழகாமல் இருப்பதே நல்லது என்றும், அப்படிப் பழக நேர்ந்தால் அது தவற்றில்

கொண்டுவந்து நிறுத்தி வாழ்க்கையினை அடியோடு அலங்கோலப்படுத்திவிடும் என்றும் மு.வ. அவர்கள் நுட்பமாகத் தம் புதினங்களில் கூறியிருக்கக் காணலாம்.

'அந்த நாளி'ல் இடம் பெற்றுள்ள அடிப்படையான இந்தக் கருத்து வருமாறு,

> 'ஆண்கள் வெண்ணெய் போல. பெண்கள் நெருப்புப்போல. நெருப்பை அணுகிய பின் வெண்ணெய் உருகாதிருக்க முடியுமா? ஆகையால் பெண்கள் கணவன்மாரைத் தவிர எந்த ஆண்களோடும் நெருங்கிப் பழகக்கூடாது.'[87]

இக்கருத்தினையே இன்னும் சிறப்பாக, ஆழமாக 'அல்லி' என்ற புதினத்தில் பின்வருமாறு வற்புறுத்தி உள்ளார்.

'எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும், உடம்பின் உணர்ச்சி உள்ள வரையில் கணவன் மனைவி அல்லாத ஆணும் பெண்ணும் நெருங்கிப் பழகாமல் இருப்பதே நல்லது.'[88]

இவ்வாறு ஆசிரியர் அறவாழி பாத்திரத்தில் மு.வ வே. நின்று பேசுவதை உன்னுக. மேலும் அவர் வாடாமலரில்,

> 'முழுதும் மனைவிக்குக் கட்டுப்பட்டு நடப்பதால், குடும்ப வாழ்க்கை பற்றிய பொறுப்புக் குறையலாம், ஆனால் குடும்பத்தில் மக்கள் முன்னேறுவதற்கு இடையூறு ஆகுமே என்று வருந்தினேன்.'[89]

என்று குறிப்பிட்டிருப்பதும், 'பாவை'ப் புதினத்தில் பாவையின் சித்தியின் கணவரைப் பற்றிப் பின்வருமாறு ஆசிரியர் கூறியிருப்பதும் முதற்கண் ஈண்டுக் குறிப்பிடப்பெற்ற கருத்தையே வலியுறுத்தியிருக்கக் காணலாம்.

> 'யாராவது ஒருவர் விட்டுக் கொடுத்தால் தான் குடும்பத்தில் ஒத்துப் போக முடியும் என்பது அவர் தம்முடைய வாழ்க்கையில் கற்ற ஒரே பாடம். அந்தப் பாடத்தைக் கண்மூடிப் பின்பற்றிப் பின்பற்றி உரிமையெல்லாம் இழந்தார்! உண்ணவேண்டும் என்று மனைவி சொன்னால் உண்பார்; உட்காரவேண்டும் என்று மனைவி சொன்னால் உட்காருவார்; எழு என்று சொன்னால் எழுவார். உறங்கு என்று சொன்னால் உறங்குவார். இந்த அளவில் நின்றுவிட்டால் பசு எனலாம்; ஆடு எனலாம்; யந்திரம் எனலாம்; பொம்மை எனலாம்; கவலை இல்லை. ஆனால் மனைவி அவரைநோக்கி எளிய ஒருவனை உதை என்றால் உதைப்பார்; கொல் என்றால் கொல்லுவார். ஒரு பொருளைத் திருடு என்றால் திருடுவார். இப்படி வாழ்வதால்தான் குடும்பம் குடும்பமாக இருக்கிறது என்பது அவருடைய நம்பிக்கை.'[30]

## கணவன் எவ்வழி அவ்வழி மனைவியர்

கணவன் கருத்திற்கியைய வாழவேண்டுவது மனைவியின் கடமை என்பதே மு.வ. அவர்களின் உறுதியான இறுதியான அடிப்படைக் கொள்கை எனலாம். இதனைப் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கக் காணலாம்.

> 'எப்படி இருந்தாலும் நான் தக்கபடி நடந்து கொள்வேன். நானும் வேண்டுமானால் அவரோடு சேர்ந்து குடிப்பேன் துணையாக வாழப் பிறந்தேன். முடிந்தால் திருத்துவேன். இல்லையானால் எப்படியாவது வாழ்க்கைத் துணையாக இருந்து சாவேன். அவர்குளித்தால் நானும் குளிப்பேன். அவர் சாக்கடையில் விழுந்தால் நானும் விழுவேன். அவர் சந்தனம் விரும்பினால் நானும் சந்தனம் விரும்புவேன். அவர்

சேற்றை விரும்பினால் நானும் சேற்றையே விரும்பு வேன். அதில்தான் இன்பமும் அமைதியும் உண்டு என்பதை இப்போதுதான் உணர்ந்தேன். அன்னத் திற்கு அன்னமே துணை. காக்கைக்குக் காக்கையே துணை, அவர் அன்னம் ஆகாவிட்டால் நான் காக்கை ஆகிவிடுவேன்'.[91]

## உண்மை என்ன

ஆனால் ஆசிரியர் மு.வ.வின் கருத்துதான் யாது? அது பின்வரும் பகுதிகளால் விளங்கும்.

'ஆமாம். ஆமாம். கண்ணகி கண்ணகிதான். முழுதும் கணவனுடைய பொம்மைபோல் நடந்தால் அதுபோல் ஆகிவிடுமே. பெண்களின் துன்பம் ஆண் களுக்குத் தெரியாமலே போய்விடுமே. கொஞ்சம் போராட வேண்டும். பிறகுவிட்டுக்கொடுக்க வேண்டும் அப்படி நடந்தால்தான் ஆண்களைத் திருத்த முடியும். அளவுக்குமேல் போராடவும் கூடாது. அளவுக்குமேல் விட்டுக்கொடுக்கவும் கூடாது. எதிலும் அளவு வேண்டும். அளவு தெரிந்து கொண்டு நடந் தால் வாழ்க்கை துன்பம் இல்லாமல் போய்விடும்'.[92]

'அமாவாசை இருளில் பூஞ்சோலையின் அழகு தெரியுமா? அப்போது கண் இருந்தும் பயன் என்ன? ஆனால் முகரும் புலன்கொண்டும் அப்போதும் அந்தப் பூச்சோலையைப் போற்ற முடியும். வாழ்க்கை யிலும் அப்படித் தான். பிணக்கு வந்தபோதெல்லாம் அறிவு இருந்தும் பயன் இல்லை. ஆனால் அன்பு இருந்தால் போதும் நன்மை உண்டு'.[93]

'வாழ்க்கை! வெறும் விளையாட்டு அல்ல. பெரிய கோட்டை. கட்டுவது அருமை. இடிப்பது எளிமை. அறுபது ஆண்டு ஒற்றுமையாக வாழ்ந்த வாழ்க்கையை ஒரு சிறுமனம், பொல்லாத மனம் பிரித்துப் பாழாக்கி விடும். இந்தக் காலத்தில் அறிவும் ஆராய்ச்சியும் தொத்து நோய் போல் பரவுகின்றன. அவைகள் இருக்க வேண்டிய இடம் வேறே. செலுத்த வேண்டிய செங்கோல் வேறே".[94]

'ஆண் எண்ணுவதுபோல் பெண்ணும் எண்ண வேண்டும். இருவரும் ஒருங்கே உண்பதும் உறங்குவதும் பெருமை அல்ல. ஒருங்கே எண்ணவேண்டும். எண்ணத்தில் ஒத்திருந்தால் அதுதான் குடும்ப இன்பம் எண்ணத்தில் மாறுபட்டிருந்தால் அதுதான் குடும்பத் துன்பம்'.[95]

'பறவைகள் அன்பாக வாழ்கின்றன. அவைகளுக்கு வாய் இல்லை; பேச்சு இல்லை; பிணக்கும் இல்லை. மக்கள் வாழ்க்கையில் வாய்தான் வம்பும் துன்பும் செய்கிறது; பேச்சு வளர்கின்றது'.[96]

'கணவன் என்றால் உலகத்தில் பெறமுடியாத பெருஞ்செல்வம் என்பதும் அந்தக் கணவனுக்காக எந்தத் துன்பத்தையும் பொறுத்துத்தான் வாழ வேண்டும் என்பதும் அவள் வழிவழியாகப் பெற்ற குடும்ப அறிவு',[97]

''திருமணமான பிறகு கணவரின் விருப்பப்படி நடக்கிறேன். அதனால் வாழ்க்கை அமைதியாக நடக்கிறது. நீங்கள் கற்றுக்கொடுத்த வழிதான். ஒருவர் விருப்பப்படி என்றால் வாழ்க்கை நன்றாக நடக்கிறது. இருவர் விருப்பம் என்றால் இரண்டு வழி

ஆகிறது. போராட்டம் ஆகிறது. நல்லதோ கெட்டதோ அவர் விருப்பப்படி நடக்கட்டும் என்று இருக்கிறேன். அவர் படித்தவர். தெரிந்தவர். உலகம் அறிந்தவர். உலகத்துக்குக் கட்டுப்பட்டவர். நான் வீட்டோடு வாழ வேண்டியவள். அதனால் அவர் விருப்பம் தான் பெரிது. அதை உணர்ந்து நடக்கிறேன். ஒரு துன்பமும் இல்லை'.[98]

## பிணக்குவதிலும் பிரிதல் நல்லது

திருமணங்கள் எப்படி நடந்து முடிகின்றன. நல்ல தூய அன்பால் இணைந்தவர்கள் வாழ்க்கையே அன்பை வளர்த்து, குறைகளை மறந்து வாழ நினைக்காதபோது முறிந்து விடுகின்றது. இதனைப் பின்வருமாறு மு.வ. விளக்குகிறார் :

'திருமணத்திற்குப் பிறகுதான் கணவனுக்கும் மனைவிக்குமுள்ள வேறுபாடுகள் புலப்படுகின்றன. அன்பு வேகமாக வளர்ந்தால் வேறுபாடுகளைக் கடந்து நெருங்க முடிகிறது. அன்பு வளராவிட்டால் எங்கள் வாழ்வுபோல் முறிகிறது'.[99]

'வாழ்க்கை அப்பா! வாழ்க்கை! வெறும் விளையாட்டு அல்ல, பெரியகோட்டை, கட்டுவது அருமை. இடிப்பது எளிமை. அறுபது ஆண்டு ஒற்றுமையாக வாழ்ந்த வாழ்க்கையை ஒரு சிறு மனம் பொல்லாத மனம் பிரித்துப் பாழாக்கி விடும்'.[100]

உள்ளம் பொருந்தாதவர்கள் வாழ்வில் ஒன்றுபட்டு விட்டால் அவ்வாழ்வில் போராட்டம் மிகுகின்றது. சமுதாயத்தில் நாளுக்குநாள் நாகரிக முதிர்ச்சி காரணமாகக் கணவன் மனைவியர் வாழ்க்கையில் அமைதி சீர்

குலைகின்றது. இந்த அவல நிலையினை 'மெய்யப்பன்' என்னும் பாத்திரம் பின்வருமாறு எண்ணிப் பார்க்கின்றது

'இன்னாரோடு வாழ்நாள் முழுதும் வாழ்ந்திட வேண்டும் என்ற கட்டாயம் இருப்பதனால், பல குடும்பங்களில் கணவன் மனைவியின் மனம் கெட்டுப் போகிறது என்றும், வாழ்வு கசந்து போகிறது என்றும் ஒரு புரட்சிக் கருத்தை ஒரு முறை படித் திருக்கிறேன். அப்போது அதை நம்பவில்லை. மனைவியின் மனம் அந்தக் கட்டாயத்தால்தான் கெட்டு விட்டதோ? நாயைக் கட்டுப்படுத்தவில்லை; ஆறு ஆண்டுகள் கழித்தபிறகும் என் நன்றியை மறவாமல் அன்பு செலுத்த வேண்டும் என்று வற்புறுத்தவில்லை. அதற்கு உரிமை உண்டு; என்னைப் பார்த்துக் குரைக்கலாம். அல்லது என்னிடம் வந்துட வால் குழைக்கலாம். அதனால் அதன் மனம் கெ வில்லை'.[101]

மேலும் அதே பாத்திரம் தனக்கும் மனைவிக்குமான உறவினைப் பின்வருமாறு விமர்சிக்கின்றது.

'ஒரே வீட்டில் இருவரும் இருந்தோம். ஆனால் எங்களுக்கு இடையே எத்தனையோ கடல்களும் மலைகளும் ஆறுகளும் காடுகளும் இருந்தன. அவற்றைக் கடக்க என்னாலும் முடியவில்லை. அவளாலும் முடியவில்லை அவள் கடக்கவே விரும்ப வில்லை நான்விரும்பினேன். முடியவில்லை.'[102]

## இரு துருவங்கள்

கருத்து வேறுபாடும் சுட்டப்பெறுகிறது, 'கரித் துண்டில்' வரும் ஓவியர் மோகன் தன் மனைவி குறித்துப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'என் கலையுலகத்திற்கு அவள் இடையூறாகத் தோன்றினாள். அவளுடைய ஆடம்பர உலகத்திற்கு நான் இடையூறாகத் தோன்றினேன். விட்டுப் பிரிய வழி இல்லாமல் சட்டமும் சமுதாயமும் குறுக்கே நின்றன. குடும்பம் அப்போது இந்தச் சிறையைவிடப் பொல்லாத சிறையாகத் தோன்றியது'[103]

இவ்வாறு உள்ளத்தில் உறவில்—இரு துருவங்களாக வாழ்பவர்கள் வாழ்நாள் முழுதும் துன்பம் உறுகிறார்கள்.

## வாசற்படிக்கு உள்ளே உலகம்

அன்பு வாழ்வு கெடுவதற்குப் பிறிதொரு காரணம் வாசற்படிக்கு உள்ளே உலகம் வருவதாகும். இதனை மு.வ. 'அந்த நாளில்' அழகுறக் கூறுகின்றார்.

'பழைய வழக்கத்தை எப்படி விடுவது என்று எவ்வளவோ தயங்கினேன். பிறகு உலகம் என்று உலகத்தை எண்ணிக்கொண்டு அன்பான குடும்ப வாழ்க்கைக்கு இடையூறு செய்யக்கூடாது என்று எண்ணினேன். பழைய வழக்கங்களை மாற்றக் கற்றுக்கொள்வதிலே பெருமையும் அஞ்சாமையும் முன்னேற்றமும் இருப்பதை நான் அப்போது உணரவில்லை. உலகத்துக்கு அஞ்சுகின்றவர்கள் இல்வாழ்க்கையில் தோல்வி அடைகின்றார்கள். உலகத்துக்கு அஞ்சாதவர்கள் இல்வாழ்க்கையில் வெற்றி பெறுகின்றார்கள். உலகமும் வேண்டும்; இல்வாழ்க்கையும் வேண்டும். ஆனால் ஒன்று வீட்டுக்கு வெளியே; மற்றொன்று வீட்டுக்கு உள்ளே. வாசற்படிக்கு உள்ளே உலகம் வந்தால் அன்பான மனங்களில் அல்லல் புகுந்துவிடும்.'[104]

## எடுத்த பிறவி

பிறவி எடுத்தோம்; உலகில் பிறந்துவிட்டோம். வாழ்க்கை குறுகியது. அதில் பெரும் பங்கு பிணக்கிலும் போராட்டத்திலும் கழிந்துவிட்டால் வாழவேண்டிய வாழ்க்கை ஆறு வற்றிவிடுகின்றது. வீணான போராட்டம் தன்னையும் கெடுத்துக் குடும்பத்தையும் கெடுக்கிறது. குழந்தையன்பு குறித்தும் காதல் குறித்தும் மு.வ. எழுதுவன பின்வருமாறு :

'குழந்தையன்பு முறிந்தால் உள்ளம் கெடுவதில்லை. உள்ளத்தில் சிறு மாறுதல் நிகழ்கிறது. சில நாட்களே அந்த மாறுதல். பிறகு பழையபடி அந்த உள்ளம், உணர்வு, கடல் எல்லாம் வாழ்கின்றன. மூளைகெட்டு அறிவு திரிவதில்லை.

குழந்தையன்பு, வாழ்க்கையில் சிறு பகுதியையே கவர்கின்றது. காதல் வாழ்க்கை முழுதும் கவர்கின்றது. குழந்தைமேல் செலுத்தும் அன்புணர்வு உள்ளத்தில் ஓர் ஊற்று. காதல் உணர்வோ உள்ளக் கடல். ஊற்று வரண்டால் சிறிய புரட்சி. கடல் புரண்டால் பெரிய அழிவு.'[165]

## விட்டு விலகும் உரிமை

எடுத்த பிறவியை இனிதாகக் கழிக்கவே எவரும் விரும்புவர். இறைவனிடம் இனிய அமைதி வாழ்வு தா என்று வேண்டுவோரே உண்டு. மாறாகத் துன்பத்தைத் தா என்று கேட்பவர் இலர். அழுது அழுது கலங்கும் வாழ்வு அல்லல் வாழ்வு. அந்த வாழ்வால் எவருக்கும் பயன் இல்லை. எனவே மனப் பொருத்தம் இல்லாத கணவன் மனைவியர் வாழ்வைத் திருவள்ளுவர்,

"உடன் பாடிலாதவர் வாழ்க்கை குடங்கரில்
பாம்பொடு உடனொரீஇ யற்று"[106]

என்றார். மனப்பொருத்தம் இல்லாத கணவனும் மனைவியும் ஒரே வீட்டில் இருந்து போராடிக் காலங் கழிப்பதை விட, தனித்தனியே இருந்து அவரவர்க்குரிய வாழ்வை உரிமையோடு அமைத்துக்கொண்டு நாளைக் கழிக்கலாம். இந்தப் புரட்சிக் கருத்தை மு. வ. பலவிடங்களில் பின்வருமாறு வற்புறுத்தியிருக்கக் காணலாம்.

'கணவன் மனைவிக்கு இடையே தீராத வெறுப்பு ஏற்பட்ட பிறகு விலக உரிமை வேண்டும். அறிஞர் ஷா கூறுவதுபோல், விலகுவதற்கும் காரணம் என்ன என்று கேட்க நீதிமன்றமும் முன்வரக் கூடாது. விலக உரிமை இல்லாமல் கட்டுப்படுத்துவதற்கு மணம்—திருமணம் என்ற பெயரே கூடாது.[107]

குடும்பம் என்றால் ஒருவரின் மனக்கவலையை மற்றவர் குறைப்பதற்காக ஏற்பட்டது. ஆனால் உள்ள கவலையை வளர்ந்து மீளாத் துன்பத்தில் வருத்துவதனால் அந்தக் குடும்பத்தைக் கலைத்து விடுவதே நல்லது.'[108]

அன்பற்ற குடும்பங்களைக் கலைத்துவிட்டு, அவரவர் உள்ளத்திற்கேற்ப விழையும் உரிமை வாழ்க்கையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பது மு. வ. அவர்களின் உள்ளக் கிடக்கையாகும்.

## பெற்றோர் —குழந்தை உறவுகள்

மு.வ. அவர்களுக்குக் குழந்தைகளிடத்தில் உயிர். குழந்தையோடு இருக்கும்பொழுது குழந்தையோடு

குழந்தையாக மாறிவிடுவார். 'கு ழ ந் தை த்' என்ற தலைப்பில் தனியொரு நூலினையே அவர் எழுதி இருப்பது கொண்டு அவர்தம் குழந்தை ஈடுபாட்டை உணர்ந்துகொள்ளலாம். அவர் அந் நூலில் குழந்தையின் சிறப்பைப் பெரிதும் கொண்டாடுகின்றார்.

'கள்ளோ காவியமோ' என்னும் நூலில் மங்கைக்கும் அருளப்பனுக்கும் பிறந்த குழந்தை 'தேமொழி', அந்நூலில் முக்கிய இடத்தினைப் பெறுகின்றாள். பம்பாய்க்கு ஓடிப்போன தாயை வெறுக்கிறது குழந்தை. திரும்பிவந்த மங்கை, தன் குழந்தையன்புக்கு ஏங்குகிறாள். அதனைப் பின்வருமாறு குறிப்பிடுகின்றார். மு.வ.

"அப்போது சின்ன குழந்தை. இப்போது ஏழு வயது முடிந்த பெண். அப்படித் தூக்கிக் கொஞ்ச முடியுமா?'' என்றேன்.

"எனக்கு அவள் இன்னும் குழந்தைதான். இப்போது உடம்பில் வலு இல்லை. உடம்பு தேறட்டும் பாருங்கள். அப்படித்தான் கொஞ்சப் போகின்றேன்" என்று கனிந்த குரலில் சொன்னாள்."[109]

குழந்தையன்பு கிடைக்காது கவலையுற்ற மங்கை, அந்தக் குழந்தையன்பு நெருங்கிவந்து கிடைக்கவிருந்த நேரத்தில் அவள் உயிர் பிரிந்து விடுகிறது. இதனைப் பின்வருமாறு உருக்கமாகக் குறிப்பிடுகின்றார். மு வ.

''தேமொழி தாயின் கன்னத்தைத் தொட்டாள்; தடவினாள்; ''அம்மா'' என்றாள். மூடியிருந்த கண்கள் திறந்தன; நன்றாகப் பார்த்தன. என்னையும் பார்த்தன. முகம் மலர்ச்சி பெற்றது.

அந்தக் குடும்ப விளக்கு அணைவதற்கு முன்னே ஒருமுறை அழகாக ஒளி வீசியது."[110]

"குழந்தைகளைப் பெறுகிறார்கள், குழந்தையின்பத்தைப் பெறுவதில்லை"[111] என்று பெற்றோர்களைச் சாடும் மு.வ. அவர்கள், வாடாமலரில் 'குழந்தை'யைப் பற்றிப் பின்வருமாறு சிறப்பாகக் குறிப்பிட்டிருக்கக் காணலாம் :

குழந்தையோடு தொடர்ந்து பழகினாலும் வெறுப்பு ஏற்படாது. ஏன் என்றால், குழந்தையின் மனத்தில் கரவு இல்லை; எதிர்காலத் திட்டம் இல்லை; வாழ்க்கையின் மோதலும் போராட்டமும் இல்லை."[112]

அடுத்து,

"குழந்தையை வளர்க்கும் தாய், தானும் வளர்கிறாள். ஆனால் தாயின் வளர்ச்சி எல்லாம், அன்பில், இரக்கத்தில் நெகிழ்ச்சியில், மென்மையில்" என்று குறிப்பிடும் மு.வ. பேராசிரியர் அருளப்பர் தம் மகள் தேமொழிக்கு எழுதும் கடிதத்தில்,

"வளரும் குழந்தையிடம் கற்றுக்கொள்ள வேண்டிய கல்வி எவ்வளவோ உண்டு. இந்த அருமையான வாய்ப்பை இழக்கவே கூடாது. இது கல்வி மட்டும் அல்ல, இணையற்ற இன்பமும் ஆகும்"[113] என்று குறிப்பிடுவதாகக் கூறியுள்ளார்.

'நெஞ்சில் ஒரு முள்' என்ற நாவலிலும் குழந்தையால் பெற்றோர் பெறும் வளர்ச்சியைப் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கக் காணலாம் :

"குழந்தையை நாம் வளர்ப்பதாகச் சொல்கிறோம். கண்ணழகன் வளர்ந்தபோது எங்கள் மனம் எவ்வளவோ வளர்ந்து, பொறுமை முதலான பண்புகளைப் பெற்றுப் பண்பட்டது. ஆகவே குழந்தைகளால் பெற்றோர்கள்

எவ்வளவோ வளர்ச்சி பெறுகிறார்கள் என்று உணர்ந்தேன்' என்று வடிவு என்ற பாத்திரம் பேசக் காணலாம்.[114]

'வாடா மலர்' நாவலில் கதைத் தலைவன் தானப்பன் குழந்தை நறுமலரிடம் மிக்க அன்போடு குழந்தையோடு குழந்தையாகப் பழகித் தன் நண்பனிடம் இக்குழந்தை பற்றிக் கூறும் கருத்து வருமாறு :

"குழந்தை என்றால் தூய்மையான மழைநீர்போல. இந்த உலகத்து மாசும் அழுக்கும் படாத தூய்மையான நீர் இது. வளர்ந்த நீயும் நானும் உப்பு மண்ணிலும் களிமண்ணிலும் விழுந்த நீர்போல மாறிவிட்டோம். சிலர் அழுக்குச் சாய்க்கடையில் விழுந்த மழைத்துளி போல் கெட்டுவிடுகிறார்கள். தவறான சூழ்நிலைகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், சடங்குகள் முதலானவை நல்ல மனங்களைக் கெடுத்துவிடுகின்றன. நம் நறுமலரின் மனம் குழந்தை மனம், மாசு அறியாத மனம், மலரின் மேல் விழுந்த மழைத்துளி."[115]

டாக்டர் மு வ. அவர்களின் குழந்தை ஈடுபாடு குறித்து மு.வ.வின் மனமறிந்து, மன நுட்பமறிந்து, செம்மையாய் எழுத்தினை வடிக்கும் இளம் நண்பர் பண்பாளர் திரு இரா. மோகன் பின்வருமாறு எழுதியுள்ளார் :

"சிந்தனைகளில் மட்டுமின்றி, மு.வ.வின் கதைகளிலும் குழந்தைக்குச் சிறப்பிடம் உள்ளது; 'பெற்ற மனம்', 'நெஞ்சில் ஒரு முள்' ஆகிய இரண்டு நாவல்களிலும் குழந்தை வளர்ப்பு முதலிடம் பெற, 'கள்ளோ? காவியமோ?'', 'வாடா மலர்' ஆகிய இரண்டு நாவல் களிலும் குழந்தை வாழ்வு முதலிடம் பெறுவதைக் காண்கிறோம். அவரது நாவல்களில் வரும் கதை மாந்தரும்

குழந்தைகளிடம் பேரன்பு செலுத்திப் பழகுவதைக் காண்கிறோம்."[116]

"இவ்வாறு டாக்டர் மு.வ. அவர்கள் குடும்ப வாழ்வின் இன்பத்திற்கு இணையற்ற, செல்வமாய்த் துலங்கும் 'குழந்தை' குறித்து அன்பாய் அமைதியாய், அழகாய்ப் பல செய்திகளைப் புலப்படுத்தியிருக்கக் காணலாம்.

மு.வ. என்ற சான்றோர் பெருமகனார் சான்றாண்மைக்கு ஆழி என விளங்கிய பெரியார் ஆவர். திருவள்ளுவர், திருநாவுக்கரசர், தாயுமானார், இராம தீர்த்தர் இவர்கள் மணிமொழிகளில் உள்ளந் தோய்ந்து நின்ற உரவோர். சிறியன சிந்தியாத சீரியர். பிறர் வாழ்வில் உள்ளம் உவந்து நின்ற உத்தமர். எனவே தமிழ் நாட்டு மக்களுக்கு நல்ல குடும்ப வாழ்வு அமைய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்துடன் சமுதாயத்தின் தாக்குதலில் சிக்குண்டு கிடக்கும் தமிழ்நாட்டுக் குடும்பங்கள் பலவற்றை ஆய்ந்து, குடும்பங்களில் எழும் சிக்கல்களைப் பல்வேறு கோணத்தில் நின்று படம் பிடித்துக் காட்டுகிறார். பிறர் பழிக்காத அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை என்ற தெளிவுடையவர் அவர். எனவே அறனிழுக்கா இல்வாழ்க்கை அமைய வேண்டியதன் அவசியத்தினைத் தம் படைப்புகளில் அழகுறப் புலப்படுத்துகிறார்; ஒவ்வொரு புதினத்திலும் குடும்ப வாழ்வைத் தெள்ளத் தெளிவாக ஆராய்கிறார். உளந்திருந்தி உயர்ந்து பண்படும் வகையில் மணிமொழிகளை—வாழ்வியல் உண்மைகளைப் பொன்மொழியாகப் பொருட்பொருத்தமுறக் கூறிச் செல்கிறார்.

## முடிவுரை

இதுகாறும் கண்டவற்றால் டாக்டர் மு.வ. அவர்கள் குடும்ப வாழ்வு சீர்ப்பட்டுச் சிறக்க நினைக்கும் வழிமுறைகள் புலனாகக் கண்டோம். அவர் தம் படைப்புகளில்

குடும்ப வாழ்வே மையக் கருவாக—தலைமைக் கருவாக அமைந்துள்ளது.

## அடிக்குறிப்புகள்

1. குறுந்தொகை : 9
2. ,, : 10
3. ,, : 93
4. ,, : 397
5. புறநானூறு : 343 10—13
6. குறுந்தொகைச் செல்வம் : ப. 76—80
7. திரு ஈ.ச. விசுவநாதனுக்கு எழுதிய கடிதம் : நாள் : 14-10-1959
8. ,, நாள் : 11-2-1967
9. ,, நாள் : 26-4-1967
10. குறுந்தொகை : 135 : 1—2
11. திருக்குறள் : 1119
12. நெஞ்சில் ஒரு முள் : ப. 387
13. கள்ளோ காவியமோ : ப. 246
14. மலர்விழி : ப. 32
15. நடைவண்டி : ப. 67
16. இலக்கிய ஆராய்ச்சி : ப. 192
17. நெடுந்தொகை விருந்து : முன்னுரை : ப. 6
18. மலர்விழி : ப. 24
19. மண்குடிசை : ப. 220
20. ,, ப. 10
21. ,, ப. 14

22. மண்குடிசை ப. 19
23. ,, ப. 26
24. ,, ப. 28
25. ,, ப. 39
26. கரித்துண்டு : ப. 187—188
27. பெற்றமனம் : ப. 145
28. வாடாமலர் : ப. 227
29. ,, : ப. 222
30. ,, : ப. 233
31. ,, : ப. 235
32. பாவை : ப. 51
33. திருக்குறள் : ப. 53
34. கயமை : ப. 24—26
35. மண்குடிசை : ப. 95
36. செந்தாமரை : ப. 46—47
37. ,, ப. 60
38. ,, ப. 61—62
39. ,, ப. 66
40. அல்லி : 287
41. மலர்விழி : 42
42. பாவை : ப. 60
43. அல்லி : ப. 22
44. அல்லி : ப. 109
45. அகல்விளக்கு : ப. 41
46. கள்ளோ காவியமோ : ப. 6—7
47. வாடாமலர் : ப. 133—134
48. ,, : ப. 134—135
49. ,, : ப. 233
50. அந்தநாள் : ப. 101
51. கரித்துண்டு : ப. 197
52. மண்குடிசை : ப. 218
53. கரித்துண்டு : ப. 32—33

54. கரித்துண்டு : ப. 33—34
55. மலர்விழி : ப. 244
56 கரித்துண்டு : ப 37—38
57. பாவை : ப 170—171
58. வாடாமலர் : 186, 191, 287
59. கரித்துண்டு : ப. 187—188
60. மலர்விழி : ப. 31—32
61. திருக்குறள் ; ப. 948
62. அகல் விளக்கு : ப. 286
63. ,, : ப. 292
64. ,, : ப. 302
65. நெஞ்சில் ஒரு முள் : ப. 154
66. கயமை : ப. 377
67. நாலடியார் : 28
68. கள்ளோ காவியமோ : ப. 134
69. மண்குடிசை : ப. 319
70. அகல் விளக்கு : ப. 302
71. கள்ளோ காவியமோ : ப. 80
72. ,, : ப. 85
73. மண்குடிசை : ப. 95
74. நெஞ்சில் ஒரு முள் : ப. 471
75. கரித்துண்டு : ப. 37
76. ,, : ப. 37—38
77. நெஞ்சில் ஒரு முள் : ப. 231—32
78. அகல்விளக்கு : ப. 397
79. மண்குடிசை : ப. 53
80. அல்லி : ப. 287
81. நெஞ்சில் ஒரு முள் : ப. 480, 485
82. அகல்விளக்கு : ப. 18
83. மலர்விழி : ப. 99
84. கரித்துண்டு : ப. 224
85. வாடாமலர் : ப. 186
86. ,, : ப. 314

87. அந்தநாள் : ப. 58
88. அல்லி : ப. 249
89. வாடாமலர் : ப. 141
90. பாவை : ப. 99
91. நெஞ்சில் ஒரு முள் : ப. 228
92. ,, : ப. 230
93. கள்ளோ காவியமோ : ப. 88
94. ,, ப. 93
95. ,, ப. 104
96. ,, ப. 108
97. ,, ப. 6—7
98. ,, ப. 133—134
99. வாடாமலர் : ப. 296
100. கள்ளோ காவியமோ : ப. 114
101. மண்குடிசை : ப. 36, 37
102. ,, ப. 39
103. கரித்துண்டு : ப. 188
104. அந்தநாள் : ப. 92
105. செந்தாமரை : ப. 68—69
106. திருக்குறள் : 890
107. அல்லி : ப. 287
108. நெஞ்சில் ஒரு முள் : ப. 480—485
109. கள்ளோ காவியமோ : ப. 215
110. ,, ப. 267
111. குழந்தை : ப. 51—52
112. வாடாமலர் : ப. 327
113. பெற்ற மனம் : ப. 151
114. நெஞ்சில் ஒரு முள் : ப. 269
115. வாடாமலர் : ப. 308
116. யான் கண்ட மு.வ. : ப. 112

# அகல் விளக்கு

பெருங்காஞ்சி என்ற சிற்றூரில் சற்று வசதிமிக்க குடும்பத்தினர் சாமண்ணா. அவருக்கு ஏராளமான நிலபுலங்களும் ரொக்கமும் பரம்பரை பரம்பரையாக இருந்து வந்தன. அவருடைய மனைவி நல்லவர்; அழகானவர்; இவர்களுக்கு சந்திரன் என்றொரு மகனும் கற்பகம் என்றொரு மகளும் உண்டு. தாயைப் போலவே சந்திரன் அழகன்; படிப்பில் கெட்டிக்காரன்; கற்பகம் அழகு வாய்ந்தவள்; பண்புகள் நிரம்பியவள். குடும்பத்தில் சாமண்ணாவின் தமக்கை விதவை சிவகாமியும் உண்டு. இவர் பெயர் சிவகாமியாக இருந்தாலும், சிறுவயதில் நோய் வந்து உடல்நலம் குன்றியபோது தலையை மொட்டையடித்துக் கொண்டதால் இவரை மொட்டையம்மாள் என்றே ஊரார் அழைத்து வந்தனர். ஆறாவது வகுப்பில் சேர்வதற்காகச் சந்திரன் பெருங் காஞ்சியை யடுத்த வாலாசாபேட்டைக்கு வருகிறான். சந்திரனின் தந்தை நகர வாழ்க்கையை வெறுத்தவர்; அவர் உடன் பிறந்த தம்பி இப்படித்தான் சிறுவயது தொடங்கியே ஊதாரியாக இருந்து, நில புலன் வேலைகளைக் கவனிக்காமல், அடிக்கடி நகரத்திற்குச் சென்று, ஆடம்பர வழிகளில் தவறாக வாழ்ந்து கெட்டவர். எனவே சாமண்ணா முதலில் தம் மகன் வெளியூர் சென்று படிப்பதை விரும்பவில்லை. பள்ளிக்கூட இன்ஸ்பெக்ஷனுக்கு வந்த இன்ஸ்பெக்டர் சந்திரனுடைய அறிவுத் திறத்தை நேரிற்கண்டும், பிற ஆசிரியர்கள் வழி கேள்விப்பட்டும் சாமண்ணா வீடு சென்று, சந்திரனின் மேல் படிப்பிற்கு வற்புறுத்தவே சாமண்ணா இறுதியில் சம்மதித்

தார். வாலாசாபேட்டையில் மளிகைக்கடை ஒன்றின் உரிமையாளர் ஒருவரின் மகன் வேலய்யன். அவனுடைய தங்கை மணிமேகலை. வேலய்யன் வீட்டிற்கு அருகில் சந்திரனுக்காக ஒரு வீடு வாடகைக்குப் பேசி, அவனுடைய அத்தை மொட்டையம்மாளைச் சமையலுக்கு அமைத்துச் சாமண்ணா ஏற்பாடு செய்துவிட்டுச் சென்றார். சந்திரனும் வேலய்யனும் நெருங்கிய நண்பர்கள் ஆனார்கள். ஒரே வகுப்பில் படித்ததால் படிப்பில் கெட்டிக்காரனான சந்திரன் வேலய்யனுக்கு ஓய்வு நேரங்களில் கணக்குக் கற்பித்து அவனைப் படிப்படியே கணக்கில் நிறைய மதிப்பெண்கள் எடுக்குமாறு செய்தான். வேலய்யனையும் சந்திரனையும் ஒரு சேரப் பார்ப்பவர்கள் பெண்மை அழகு பொலியும் சந்திரனுடைய அழகில் மயங்கிச் சந்திரனைப் பலபடப் பாராட்டினர். அழகிலும் படிப்பிலும் குறை யுடைய வேலய்யனைப் பாராட்டுவார் இல்லை. இது வேலய்யன் மனத்தில் ஏக்கத்தை விளைவித்தாலும் சந்திரன் தனக்குக் கணக்குச் சொல்லிக் கொடுப்பதனாலும், சந்திரனுடைய தங்கை கற்பகம் வேலய்யன் நெஞ்சில் நிறைந்திருந்ததனாலும் வேலயன் ஒருவாறு தேறினான். வாலாசாபேட்டையில் நடைபெறும் திருவிழா மக்கள் ஆரவாரத்தோடு கொண்டாடும் திருவிழாவாக இருந்த படியால் சந்திரனும் வேலய்யனும் அதிற் கலந்து கொண்டு மகிழ்ந்தார்கள். இடையில் விடுமுறையின் பொழுது சந்திரன் ஊர் பெருங்காஞ்சிக்கு வேலய்யன் போய்ச் சில நாட்கள் தங்கி மகிழ்ந்து வந்தான். பெருங்காஞ்சியின் கிராமியச் சூழலும், இயற்கையின் இனிய பின்னணியும் வேலய்யன் மனத்தைக் கொள்ளை கொண்டது. கற்பகத்தின் அழகு முகமும் அடிக்கடி அவன் கண்ணில் தட்டுப்பட்டு மகிழ்வை ஊட்டின. பள்ளி இறுதித் தேர்வில் வேலய்யன் தோல்வியைத் தழுவ, சந்திரன் வெற்றி

[illegible] சென்னைக் கல்லூரி ஒன்றில் இண்டர்மீடியட் [illegible] சேருகிறான். பெருங்காஞ்சியில் முதல் [illegible] பெற்ற நிலை மாறி ஏதோ ஓரளவுக்குத் [illegible] மதிப்பெண்கள் நிலையினைப் பெறுகிறான் [illegible] கல்லூரியில் நாடகம் முதலான துறைகளில் [illegible] கவனம் செலுத்துகிறான் சந்திரன். இமாவதி [illegible] பெண்ணின் தொடர்பு கிட்டுகிறது. அத்தொடர்பு [illegible] நெஞ்சில் காதலாக வளர்கிறது. எஸ்.எஸ்.எல்.சி. [illegible] வேலய்யன் சந்திரன் உதவியோடு, சந்திரன் [illegible] கல்லூரியிலேயே இண்டர்மீடியட் வகுப்பில் சேருகிறான். பள்ளி நாட்களில் நாள்தோறும் சந்திரனைச் [illegible] மகிழ்ந்த வேலய்யன் கல்லூரி நாட்களில் அவனைப் பார்க்கவும் முடியாமற் போனான். சந்திரன் விடுதி அறையில் தங்குவதேயில்லை. எதற்கோ சென்னையைச் சுற்றி வலம் வந்து கொண்டிருந்தான். இந்நிலையில் ஒருநாள் இமாவதியின் திருமணப் பத்திரிகை சந்திரனுக்கு வந்ததும் திடுக்கிட்டுக் கலங்கு கிறான். செய்வதறியாது திகைக்கிறான். வேலய்யனிடம் தன்னை இமாவதி நன்கு ஏமாற்றிவிட்டாள். தன்னுடைய வாழ்க்கையே போய் விட்டது என்று சொல்லிப் புலம்பு கிறான். மறுநாள் சந்திரன் விடுதியில் இல்லை. எங்கு தேடியும் கிடைக்கவில்லை. சாமண்ணா அளவற்ற துயரத்துடன் சென்னை வந்து சந்திரனுடைய பெட்டி படுக்கைகளை எடுத்துக் கொண்டு கிராமத்திற்குச் செல்கிறார். போவதற்கு முன் அவரும் வேலய்யனும் இராயப்பேட்டையில் இருக்கும் இமாவதியைப் போய்ப் பார்க்கிறார்கள். அவள் தான் சந்திரனைக் காதலிக்கவே இல்லையென்றும், சந்திரன் தன் மேற்கொண்ட காதலைத் தன் மனத்திற்குள்ளேயே வைத்திருந்து இவ்வாறு தடுமாறிப் போனானே என்றும் கலங்குகிறாள்.

காலம் கரைகிறது. கற்பகம் குறுக்கெழுத்துப் போட்டி, ஜாதகம் முதலியவற்றில் நம்பிக்கையுள்ள மாலன் என்பவனை மணக்கிறாள். மாலன் வேலய்ய னோடு உடன் பயில்பவன். வேலய்யன் அவனைப் பற்றி நற்சான்று சொன்ன பிறகே அந்தத் திருமணம் ஏற்பாடா கிறது. வேலய்யன் தன் நெஞ்சங் கவர்ந்த கற்பகத்தை மணக்க முடியாமற் போனான். தன் நெஞ்சில் இருந்ததைப் பெற்றோர்க்குத் தெரிவித்துத் திருமணம் செய்து கொள்ளத் தயங்கிவிட்டான் வேலய்யன். எனவே தான் இளமை முதல் வெறுத்த தன் அத்தை மகள் கயற்கண்ணியைத் திருமணம் செய்து கொள்ள நேரிடு கிறது. அவன் தங்கை மணிமேகலை ஏழை ஆசிரியர் ஒருவருக்கு மணம் முடித்து வைக்கப்படுகிறாள். பி.ஏ. தேறிய வேலய்யன் கூட்டுறவுத்துறைத் துணைப் பதிவாள ராகக் கோவையில் வாழ்க்கையைத் தொடங்கிப் பின் ஈரோட்டிற்கு மாற்றலாகி இறுதியில் சென்னைக்கு வருகிறான். முந்நூறு ரூபாய்க்கு மேல் சம்பாதிக்கும் அவன் வாழ்க்கை நன்றாக நடக்கிறது. மாலனுக்கு நூறு ரூபாயில் வேலை பார்த்துத் தருகிறான் வேலய்யன். அது அவனுக்கு நிறைவை அளிக்கவில்லை. தன்னுடைய மனைவி கற்பகத்தைத் தன் தந்தையிடம் சென்று அரிசி ஆலைத் தொழில் தொடங்கப் பணம் வாங்கி வருமாறு தொந்தரவு செய்கிறான். கற்பகத்தின் தந்தை சாமண்ணா ஐந்து ஏக்கரா நிலத்தை அவன் மக்கள் திருவாய்மொழி, திருப்பாவை மேல் எழுதி வைக்கிறாரேயொழிய, ரொக்க மாக மாலனுக்குக் கொடுத்து உதவ முன்வரவில்லை. எனவே கற்பகம் தன் அண்ணன் சந்திரன் பிரிவால் உயிர் துறந்து விட்ட தாயின் வீட்டிற்குத் தந்தையின் நிழலில் தங்கி வாழ வருகிறாள்.

இந்நிலையில் ஒருநாள் சாந்தலிங்கம் என்னும் [illegible] நண்பர் சந்திரனோடு ஒன்றாகக் கல்லூரியிற் படித்தவர் சந்திரனை ஊட்டியை அடுத்த அரவங்காட்டிற் கண்டதாக வேலய்யனிடத்தில் வந்து சொல்கிறார். வேலய்யன் இச்செய்தியைச் சாமண்ணாவுக்குத் தெரியப் படுத்த, சாமண்ணா உள்ளூர் ஆசிரியர் ஒருவருடன் சென்னை வந்து மூவரும் அரவங்காடு செல்கிறார்கள். அங்குத் தேயிலைத் தோட்டத்தில் வேலை செய்யும் ஒருத்தியோடு—கணவன் ஒருவனைக் கொலை செய்து விட்டுச் சிறைக்குச் சென்ற நிலையில்—ஒழுங்கற்ற வாழ்க்கை வாழும் ஒரு கொடுமனக்காரியின் கணவனாக சந்திரன் வாழ்ந்துவருவதை அறிகிறார்கள். சந்திரன் அங்கு ஒரு கம்பெனியில் கணக்கெழுதிப் பிழைத்து வருகிறான். அவனிடம் பக்குவமாக இம்மூவரும் பேசிப் பெருங்காஞ்சிக்கு அழைத்து வருகிறார்கள். சந்திர னுக்குக் குணம் மிகுந்த அடக்கமான பெண் வள்ளியைத் திருமணம் செய்து வைக்கிறார்கள். தாயை இழந்த நிலையில் அன்பற்று வாழும் சந்திரன் ஊரில் கண்டகண்ட பெண்களோடு பழகுகிறான். பல குடும்பப் பெண்களைக் கெடுக்கிறான். தோட்டத்துக் காவல்காரன் மகளைக் கெடுக்கிறான். தந்தையின் அன்போ மனைவியின் பண்போ அவனைச் சிறிதும் மாற்றவில்லை. சாமண்ணா மனம் வருந்தி, ஏற்கெனவே வாழாவெட்டியாக வந்து நிற்கும் தன் மகள் கற்பகத்துடன் வாலாசாபேட்டைக்கு வந்துவிடுகிறார். சந்திரனை இப்போது கண்டிப்பார் இல்லை. அவனுடைய ஒழுக்கம் மேலும் கெட்டு, ஒரு நாள் அதனைக் கண்டிக்க முனைந்த மனைவியையும் தடிகொண்டு தாக்கி விடுகிறான். அவளும் கிணற்றில் விழுந்து தற்கொலை செய்துகொள்கிறாள். சந்திரன் எங்கோ ஓடிப் போகிறான். மருத்துவமனையிற் சேர்ந்து

விட்டதாகவும், சிறிது சிறிதாக அவனுடம்பை அலைத்து அரித்துக் குலைத்துவந்த பெருநோய்—தொழுநோய் முற்றிய நிலையில் நோயின் கடுமை தாங்காமல் ஆஸ்பத்திரியில் சேர்ந்துவிட்டதாகச் சொன்னார்கள். வேலய்யன் சென்னையில் வாழ்ந்து வந்தபொழுது அலுவலகம் முடிந்து வீடு திரும்பும்பொழுது 'வேலு வேலு' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்க்கும் பொழுது சாலையோரத்தில் ஒருவன் விழுந்து கிடக்கிறான். அவனைத் தூக்கிப் பார்த்தபொழுது அவன் சந்திரனாகக் காணப்படுகிறான். தொழுநோய் முற்றிய நிலையில் அவன் அறுவறுக்கத் தக்கவனாக நிற்கிறான். தன் மனைவி வாலாசாபேட்டைக்குச் சென்றிருப்பதால், தன் வீட்டிற்கே சந்திரனை அழைத்துச் சென்று சந்திரன் வேண்டுகோட்படியே தனியிடம் தந்து அவனுக்கு உணவிடுகிறான். சந்திரன் மனங்கரைந்து கலங்கித் தன் கடந்துபோன இழிவான வாழ்க்கையை உருக்கத்தோடு எடுத்துரைக்கிறான். அவனுக்குக் காய்ச்சல் ஏற்படுகிறது. இறுதியில் இறந்துபோய் விடுகிறான். உடல் அடக்கத்திற்கு முன் இடுகாட்டில் செய்தி கேள்விப்பட்டு ஊரிலிருந்து ஓடிவந்த கற்பகம் 'அண்ணா அண்ணா' எனக் கலங்கி அழுகிறாள்.

இவ்வளவோடு சந்திரனுடைய சோகக் கதை முற்றுப் பெறுகிறது.

நாவலாசிரியர் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் இந்நாவலை எழுதியுள்ளார். இந் நூலிற்குச் சாகித்திய அகாதெமிப் பரிசு கிடைத்தது.

வேலய்யன் கூற்றாக இந்நாவல் அமைந்துள்ளது. 406 பக்கங்கள் கொண்ட இந்நாவல், ஒழுக்கக் கேட்டிற்கு

[illegible] செருக்கிச் சீரழியும் இளைஞன் ஒருவனின் கதையை மனக்கண்முன் தோன்ற எடுத்துரைக்கின்றது.

"டேடே, எப்போதும் இதில் வேகம் வேண்டாம்'டா. வேகம் உன்னையும் கெடுக்கும். உன்னைச் சார்ந்தவர்களையும் கெடுக்கும்" என்று சைக்கிளில் செல்பவன் கூறும் மொழிகள் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

"விளையாட்டாக இருந்தாலும், விதிகளுக்குக் கட்டுப்பட வேண்டும், தெரியுமா? நீயே அரசன் என்று எண்ணிக்கொண்டு, உன் விருப்பம்போல் ஆடமுடியாது. தெரிந்துகொள்" என்று பந்தாட்டக்காரன் சொல்லும் சொற்கள் பெரிய அறவுரையாக அமைகின்றன.

சந்திரனைப்போல் நல்ல அழகும் கூரிய அறிவும் பெற்று அதனால் செருக்கடைந்து சீரழிந்து தாமும் கெட்டுப் பிறர்க்குச் சுமையாக வாழ்வதைவிட, வேலய்யனைப்போல் அறிவு குறைவாக இருந்தாலும், சிறந்த பண்புகளைப் பெற்று அடக்கமான வாழ்வு வாழ்ந்தாலே போதும் என்ற உயர்ந்த வாழ்க்கைக் குறிக்கோள் இக் கதையைப் படிக்கின்றவர்கள் உள்ளத்தில் உருவாகும்.

சந்திரன் வாழ்க்கை அரளிச் செடி போன்றது; பித்தளை விளக்குப் போன்றது; வேலய்யன் வாழ்க்கை துளசிச் செடி போன்றது; அகல் விளக்குப் போன்றது.

நாவலாசிரியர் மு. வரதராசனார் இந் நாவலில் வாழ்க்கைக்குத் தேவையான ஓர் உயரிய படிப்பினையை வழங்கியுள்ளார்.

# ஆசிரியரின் பிற நூல்கள்

1. தமிழ் இலக்கிய வரலாறு
2. உருவும் திருவும்
3. கட்டுரை வளம்
4. காரும் தேரும்
5. மனோன்மணீயம் (பதிப்பு)
6. முருகன் காட்சி
7. வாழையடி வாழை
8. இலக்கிய அணிகள்
9. இலக்கியக் காட்சிகள்
10. நல்லோர் நல்லுரை
11. நெஞ்சின் நினைவுகள்
12. மலர் காட்டும் வாழ்க்கை
13. சான்றோர் தமிழ்
14. சங்க கால மகளிர்
15. ஆண்டாள்
16. சேரநாட்டு செந்தமிழ்இலக்கியங்கள்
17. புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன்
18. அறவோர் மு.வ.
19. பெருந்தகை மு.வ.
20. கவிச் சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர்
21. திருவெம்பாவை விளக்கம்
22. மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்
23. சங்க இலக்கியம்—சில பார்வைகள்
24. பாரதியும் பாரதிதாசனும்
25. வாழ்வியல் நெறிகள்
26. பாவைப் பாட்டு
27. சமயந்தொறும் நின்ற தையலாள்
28. அலை தந்த ஆறுதல்
29. பாட்டும் தொகையும் ஓர் அறிமுகம்
30. அறநெறி
31. இலக்கிய ஏந்தல்கள்
32. papers in Tamil Literature
33. The Status of women in Tamilnadu during the Sangam age
34. A Study of the Literature of the Chera Country
35. A Critical Study of Kuruntokai



**சி. பா.**

தேசிங்கு ஆண்ட செஞ்சியில் பிறந்தவர் (3-5-1935) இந்தச் செந்தமிழ்ச் செல்வர். காஞ்சிபுரமும் திருவண்ணாமலையும் இந்த இலக்கியப் பொழில் கற்ற இடங்கள். பைந்தமிழ் வளர்க்கும் பச்சையப்பன் கல்லூரிப் பாசறை மறவருள் ஒருவர். அன்னைத் தமிழில் பி.ஏ.ஆனர்சு. அங்கு முதல் வகுப்பில் தேறிய முதல்வர், 'குறுந்தொகை' பற்றிய ஆய்வுரைக்கு 1963-ல் எம்.லிட்., பட்டமும், சேரநாட்டு செந்தமிழ் இலக்கியங்கள்' பற்றிய ஆய்வுரைக்கு 1970-ல் டாக்டர்(பிஎச்.டி,) பட்டமும் சென்னைப் பல்கலைக் கழகத்தில் இவர் பெற்ற சிறப்புகள், நல்ல நடை கொண்ட இந்த நாகரீகர் பேர் சொல்ல நாளும் மாணவர் படை உண்டு நாட்டில்! சென்னைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகச் சேர்ந்தவர் பேராசிரியராகத் துறைத் தலைவராகச் சிறந்திருக்கிறார். முன்னால் தமிழக ஆளுநருக்குத் தமிழை முறையாகப் பயிற்றுவித்த ஆசிரியர், இந்த முற்றிய புலமையாளர், தற்போது தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தருமாவார்.

முப்பது நூல்கள் படைத்துள்ள இவர் ஒப்பருந் திறனுக்கும் உயர் தமிழ் அறிவுக்கும், 'தமிழ் இலக்கிய வரலாறு ஒன்றே சான்று! அண்மையில் வந்துள்ள அணிகலன். சங்க இலக்கியம் சில பார்வைகள் ஆங்கிலத்தில் ஒரு நூல். 'சங்ககால மகளிர் நிலை' பற்றிய ஆராய்ச்சி. 'இலக்கிய அணிகள்' என்ற நூல் தமிழக அரசின் இரண்டாயிரம் உருபா முதல் பரிசை பெற்றது. படித்துப் பல பட்டம் பெற்ற இந்தப் பைந்தமிழ் வேந்தர்க்குப் பலரும் கொடுத்துள்ள புகழ் மகுடங்கள்: புலவரேறு (குன்றக்குடி ஆதீனம்) செஞ்சொற்புலவர் (தமிழ்நாடு நல்வழி நிலையம்) சங்கநூற் செல்வர் (தொண்டை மண்டல ஆதீனம்).

பெருந்தகை மு.வ.வின் செல்லப்பிள்ளை சி.பா. அவர் புகழ்பாடும் அருந்தமிழ்த்தும்பி; அயராது உழைக்கும் அருஞ்செயல் நம்பி! இலக்கியப் பேச்சில் இன்ப அருவி! எழுத்தில் நல்ல இலக்கியப் பிறவி!

சி.பா. இந்த ஈரெழுத்து ஒரு மொழி, இளைஞர்க்குச் சொல்வது சிறக்கப் பாடுபடு!

—மா.செ.